# தமிழரசு

திங்கள் இருமுறை சன 16-1972, 35 காசு



# இன்றையப் பிரச்சினைகளை மட்டுமல்ல!

எதிர்காலத்தையும்
எண்ணிப்பாருங்கள்

எத்தனை எத்தனை
வெற்றிகள் குவிந்தாலும்
இடர்ப்பாடுகள் தொடர்வது
ஏன்?



அடுத்தகுழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப்பிறகு எப்போதும் வேண்டாம்



# தமிழரசு

மலர் 2] 16—1—1972 [இதழ் 14

## இந்த இதழில்

தருமபுரி மாவட்டச்
சிறப்புக் கட்டுரைகள்

எழுநிலை மாடம்

ஏன் இந்தக் காதல் ?
(தொடர் கதை)

போக்குவரத்துத் துறையில்
புதிய வரலாறு

வெண்பாப் போட்டி

விடுதலை இயக்கத்தின்
விடிவெள்ளி

முதல்வரின்

நாடு காக்கும் விரர்க்கு
நம்பிக்கை தரும் காணிக்கை

முகப்பில்

ஒசூர் கால்நடைப் பண்ணையில்
ஒரு காட்சி





சொல்லுமே
செய்தி!
போரில் வீர மரணம் அடைந்த ஆறுமுகத்தின் மனைவிக்கு 3 ஏக்கர் நிலமும் ஐயாயிரம் ரூபாயும் அரசு கொடுக்க இருக்கிறது. முதல் தவணையாக ரூ.500 கொடுக்கப்பட்டிருக்கிறது.
பதவிக் காலத்தில் நேராதவாறு ஓட்டும் ஓட்டுநர்களின் ஓய்வு பெறும் வயது ஓராண்டு நீட்டிக்கப் பெறுகிறது
1972
அரசு
ரூ.41 கோடி
தமிழ்நாட்டுச் சாலை மேம்பாட்டுக்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ.41 கோடி செலவிடப்படவிருக்கிறது.
1 லட்சத்து 60 ஆயிரம் ஏழைக் குழந்தைகளுக்கு மத்திய அரசின் உதவியுடன் வழங்கும் சத்துணவுத் திட்டத்திற்குத் தமிழக அரசு ரூ.66 லட்சம் செலவு செய்து வருகிறது.
இந்தியாவிலேயே குடும்பநலத் திட்டத்தைச் சிறப்பாக அமல்படுத்தி ருப்பது தமிழ்நா
கோப
தமிழகம் முழுவதுமுள்ள பெரிய மருத்துவமனைகளில் எல்லா நோயாளிகளுக்காக 16 எம்.எம். திரையரங்குகள் விரைவில் அமைக்கப்படும்.




மின்சார வாரியத்தில் பணியாற்றும் நீங்கள், நாடும் நானும் மகிழ்ச்சியடையும் வகையில் நாட்டுப் பாதுகாப்பு நிதியாக ஐந்து இலட்சம் ரூபாய் அளித்திருக்கிறீர்கள்.

வாரியத் தலைவர் ரங்கபாஷ்யம் அவர்கள் பேசும்போதும், மின்சாரத் துறை அமைச்சர் இராமன் அவர்கள் பேசுகிறபோதும், நாட்டின் நற்காரியங்கள் அனைத்துக்கும் தங்களாலான நிதியை அளித்து வருவதாகக் குறிப்பிட்டார்கள்.

அமைச்சர் இராமன் அவர்கள் பேசுகையில் நாட்டுப் பாதுகாப்புக்கு மாநில அளவில் ஒரு துறையின் சார்பில் முதன் முதலாக நிதியளிக்கும் துறை—மின்சாரத் துறைதான் எனக் குறிப்பிட்டார்.

இத்தகைய ஒரு வாய்ப்பு உங்களுக்கு அளிக்கப்பட்டது என்பதுதான் உண்மை.

காவல் துறை—அறநிலையத் துறை—கல்வித் துறை போன்ற துறைகளின் சார்பில் மாநில அளவில் நாட்டுப் பாதுகாப்பு நிதியளிக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டபோது-மாவட்ட அளவில் தந்து விடுங்கள்; மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தந்து விடுங்கள் என்று நான் கூறிவிட்ட காரணத்தால், அவர்களும் அவ்விதமே மாவட்ட அளவில் நிதியினைத் தந்ததால் உங்களைப்போல் மாநில அளவில் நிதி தந்தோம் என்று பெருமைப் பட்டுக் கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்படவில்லை.

மின்சாரத் துறையைப் பொறுத்த வரை எல்லா விஷயத்திலும் தனிச் சலுகை அளித்து வருகிற நான் இந்த விஷயத்திலும் தனிச் சலுகை அளித்திருக்கிறேன்.

மின்சாரம், நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் உற்பத்திக்கும் வேளாண்மைப் பெருக்கத்திற்கும் உதவும் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை உணர்ந்து நீங்கள் பணியாற்றி வருகிறீர்கள்.

அதிலும் நாட்டில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ள இந்தத் தருணத்தில் உங்கள் பணி எப்படி இருக்கவேண்டும், உங்கள் பணியை எப்படி நிறைவேற்றிட வேண்டும் என்று யாரும் சொல்லாமலேயே நீங்கள் பணியாற்றுகிறீர்கள்.

நாட்டு நிலையை—நெருக்கடி நிலையை உணர்ந்து கடமையுணர்வோடு பணியாற்றும் உள்ளம் கொண்டவர்கள் தமிழ் நாட்டுத் தொழிலாளர்கள்—ஒரு சிலரைத் தவிர!

கடமையுணர்வோடு பணியாற்றும் உங்கள் மின்சாரத் துறை, போற்றிப் பாராட்டத் தக்க துறையாகும்.

1972-க்குள் அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சாரம் தந்துவிட வேண்டும் என்ற திட்டம் நிறைவேற்றப்படுகிறது என்றால்-அந்தப் பெருமை, அதுபற்றிச் சிந்தித்துத் திட்டம் தீட்டிய எனக்கோ, மின்சாரத்துறை அமைச்சருக்கோ அல்ல! அந்தப் பெருமை முழுவதும் அல்லும் பகலும் அயராது பாடுபட்டுத் திட்டத்தை நிறைவேற்றும் தொழிலாளர்களாகிய உங்களையே சாரும்!

இந்தத் துறையில் பணியாற்றும் பொறியாளர்களும்-கணக்காயர்களும் தொழிலாளர்களும் பாட்டாளித் தோழர்களும் கடமையுணர்ச்சியுடன் காரியமாற்றியதால்தான் நாங்கள் நினைத்ததைச் செய்ய முடிகிறது.

ஏழு மாவட்டங்களில் மின் இணைப்பு பூர்த்தியாகிறது, இன்னும் சில மாதங்களில்—என்று அமைச்சர் அறிவிக்கிறார் என்றால் அதற்குப், பெருமைக்குரிய காரணமாக விளங்குவது நீங்கள்தான்.

1972-க்குள் தமிழகம் முழுவதும் மின் இணைப்பு ஏற்பட்டுவிடும் என்று நாங்கள் அறிவிக்கிறோம் என்றால் அதற்கும் நீங்கள்தான் காரணம்! இந்தியாவிலேயே இவ்வளவு பெரிய மாநிலத்தில் முதன் முதலாக எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்புத் தரும் மாநிலம் நமது மாநிலம் தான்!

ஆனால் சிலர், அரியானா மாநிலம் அதைச் செய்து முடித்துவிட்டது என்று கூறக்கூடும்.

இதற்கும் நான் முன்பே பதில் தந்திருக்கிறேன்; அரியானா என்பது சென்னை-செங்கற்பட்டு ஆகிய இரு மாவட்டங்களின் பரப்பளவே உள்ள ஒரு சிறு நிலப்பரப்பு. மாநிலக் கணக்கு என்ற வகையில் வேண்டுமானால் அது சரியாக இருக்கலாம். ஆனால் பெரிய மாநிலங்களில் ஒன்றான—14 மாவட்டங்கள் கொண்ட தமிழ்நாட்டில் எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்புத் தந்தோம் என்ற பெருமைக் கொடியை—வெற்றிக் கொடியை உயர்த்தப்போவது நம் தமிழ்நாடு! அதற்குக் காரணம் நீங்கள் தான்!

இத்துறையிலுள்ள உங்களது சங்கடங்களையும் முறையீடுகளையும் ஏற்றுக்கொண்டு பரிசீலிப்பதில் நாங்கள் என்றுமே பின் வாங்கியதில்லை.

84 ஆயிரம்பேர் உள்ள இந்தத் துறையில் எத்தனையோ குறைகள் இருக்கலாம். ஆனால் அந்தக் குறைகள் பற்றிய முறையீடுகள் வந்த போதெல்லாம் அவற்றை ஏற்று, எவ்வளவோ தொல்லைகளுக்கிடையே அந்தக் கோரிக்கைகளை இந்த அரசு நிறைவேற்றித் தந்திருக்கிறது என்பது நீங்கள் அறியாததல்ல.

அதனால் உங்களுக்கு உற்சாகம் ஏற்பட்டு, அதனால் ஊக்கம் பிறந்து, அதனால் உழைப்புப் பெருகி, அதனால் முன்னேற்றம் கண்டிருக்கிறோம் என்பதை நாடு மறந்துவிடாது.

# முதல்வர் கலைஞர்

உள்ளம் நிறைவு பெற்றால் உழைப்புப் பெருகும். உரிமை பாதுகாக்கப்பட்டால் கடமையை முழு மனத்தோடு செய்வீர்கள் என்பதை உணர்ந்த அரசு—தட்டிக் கழிக்காமல் குறைகள் களையப்பட எப்போதும் உங்கள் பக்கம் இருக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

'முதலமைச்சர் கூறிவிட்டார்; ஆகவே, நாளைக்கே கோரிக்கைகள் தரலாம்' என்று தொழிற்சங்கத் தலைவர்கள் இன்றிரவே திட்டம் தீட்டிட எண்ணம் கொள்ள மாட்டார்கள் என நம்புகிறேன்.

இங்கே நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு ஐந்து இலட்சம் தந்தார்கள். அதோடு அருணா நமச்சிவாயம் என்ற நண்பர், போரிலே கண் இழக்கும் வீரருக்குத் தமது கண்களில் ஒன்றைத் தானமாகத் தருவதாக உறுதியளித்திருப்பதோடு—ஒரு மாத ஊதியத்தையும் பாதுகாப்பு நிதிக்குத் தருவதாக வாக்களித்திருக்கிறார்.

இத்தகைய பரந்த உள்ளங்கள்—தியாக உள்ளங்கள்-தேசப் பற்றோடு மிளிர்கின்ற உள்ளங்கள் ஏராளம்! ஏராளம்!!

டில்லிக்கு நான் சென்றிருந்தபோது அங்குள்ள மருத்துவ மனையில் சிகிச்சை பெறும் இராணுவ வீரர்களைப் பார்த்தேன்.

கரமிழந்தவர்கள், கால் இழந்தவர்கள், தவிர எதிரியின் தாக்குதலால் கண்கள் பாதிக்கப்பட்டுக் கரு விழியும் வெண் விழியும் குண்டு பட்டுக் குலைந்து அழிந்து போயிருக்கும் வீரர்களையும் நான் கண்டேன்.

அத்தகைய வீரர்களுக்கு உதவும் வகையில் கண்களைத் தானம் தருகிற அளவுக்கு இந்த நாட்டின் மீதும், இந்த மண்ணின் மீதும், பற்றும் பாசமும் கொண்ட நல்லுணர்வுகளைப் போற்றிப் பாராட்டுகிறோம்!

எங்கோ பனிமலைப் பாறைகளுக்கப்பால் — கடுங்குளிர்ப் பகுதிகளில்—நமது நாடு காக்க எல்லை ஓரங்களில் அணிவகுத்து நின்று பகைவரை எதிர்க்கிறார்கள் நமது வீரர்கள் என்றால், எந்த நம்பிக்கை அவர்களுக்கு உற்சாகம் ஊட்டுகிறது?

### திட்டமிடுக!

என்னென்னவோ திட்டமிடுகின்றோம்; எந்த ஊரில் வேலையிருந்தால் உற்றார் உறவினர்களோடு வாழ முடியும்—எந்த அளவுக்கு வாடகை இருந்தால் நன்றாக இருக்கும்? அந்த வீட்டைப் படிப்படியாக, கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் செலுத்தி, எப்படி நிரந்தரமாக்கிக் கொள்ளலாம் என்றெல்லாம் திட்டமிடுகிறோமே—நமக்கு வாரிசுகளாக எத்தனை குழந்தைகள் இருக்க வேண்டும் என்று திட்டமிட வேண்டாமா? அப்படித் திட்டமிட்டால்தான் சமுதாயத்துறையில்—பொருளாதாரத் துறையில் நல்ல மாற்றத்தைக் காணமுடியும்!

—முதல்வர்

போர்க்களத்தில் சமர்புரிந்து அந்த வீரர்கள் சாய்ந்து விட்டாலும், தன்னந் தனியாகப் பிணமாய் வீழ்ந்து விட்டாலும் தம்மை எடுத்துப் புதைக்கும் அளவுக்கு வாய்ப்பில்லாமல் போய் விடும் என்பதை அவர்கள் உணர்ந்து போரிடுகிறார்கள் என்றால், எந்த நம்பிக்கை அவர்களுக்கு உற்சாகம் ஊட்டுகிறது?

தாம் களத்திலே வீழ்ந்தாலும்— நாட்டிலே தம்மைப் புகழும் மக்கள்—தமது புகழ் பாடும் மக்கள்—புதிய புறநானூறு தயாரித்து, அதில் தமது பெயரைப் பொறிக்கும் கோடானு கோடி மக்கள் தம் நம்பிக்கைதான் அந்த வீரர்களுக்கு உற்சாகம் ஊட்டுகிறது.

போர் முடிந்து விட்டது என்று நாம் உறுதியாகச் சொல்ல முடியாது; பகைவர்கள் பேச்சு நேற்றைக்கு ஒன்று—இன்றைக்கு ஒன்று என்ற ரீதியில் இருக்கிறது. ஆனால், அப்படிப்பட்ட பேச்சுக்கும் இடையிலே கூட வாரியத் தலைவர் வரவேற்புரையில் குறிப்பிட்டது போல, இன்று கிடைத்திருக்கிற செய்தி—வங்க தேசத் தலைவர் முஜிபுர் ரகிமான் விடுதலை செய்யப்படுவார் என்ற செய்தியாகும்.

ஏறத்தாழ 14 ஆண்டுகள்—தொடர்ச்சியாக இல்லாவிட்டாலும் பலமுறை சிறைக்கோட்டத்தில் அடைப்பட்டு—கிழக்கு வங்கத்தின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகக் குரல் எழுப்பி—மாநில உரிமையிலே பாகிஸ்தான் மத்திய அரசு தலையீடு காரணமாகப் போர்க் கொடி உயர்த்தி, உரிமை கேட்டவர்-அந்த நாட்டிற்குச் சுதந்திரமே பெற்றார் என்ற அளவிற்கு வளர்ந்திருக்கிறார் என்றால் இது செய்தி மாத்திரமல்ல!

ஒரு மாநிலத்தின் மீது ஒரு தலைப் பட்சமாக ஆதிக்கம் செலுத்தலாம் என்று எண்ணுகிற பேரரசுகள் எதுவாக இருந்தாலும், அதற்குப் போதிக்கப்படுகிற பாடம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது!

அப்படிப்பட்ட ஒரு வெற்றியின் உருவாகத் திகழ்கின்ற முஜிபுர் ரகிமான் விடுதலை பெறுகிறார் என்ற நல்ல செய்தி இன்று கிடைத்திருக்கிறது.

போர் நிதி அளித்திருப்பதால் ஏற்படுகின்ற மகிழ்ச்சியும், பெருநிதியாம் வங்கத்துச் சிங்கம் விடுதலை பெறுகிறார் என்ற மகிழ்ச்சியும் ஒன்றோடொன்று இணைகின்ற பேரானந்தத்தோடு நீங்கள் தந்த காணிக்கைக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

[4—1—1972 அன்று நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு மின்வாரிய ஊழியர்கள் தங்களின் ஒரு நாள் ஊதியத்தை அளித்த போது முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை]

# ஒளிப் பூக்கள்



பூந்துகி லுடுத்த புதுநில வழகி
நீந்தித் திரியும் நீலப் பட்டில்
வைத்துப் பின்னி வண்ணங் கூட்டித்
தைத்துத் தொடுத்த தங்கச் சிமிழ்கள்
சற்றே நகைத்துச் சாகசம் புரிந்தே
உற்றுப் பார்க்கும் ஒளியின் பூக்கள் !
பொன்னிமை தன்னைப் பூப்போல் அசைத்துக்
கண்களை ஆட்டும் கன்னியர் கூட்டம் !
சித்திரப் பூக்கள் செம்பலா ஈக்கள்
நித்திலச் சுடராம் நிலவுக் கன்னி
அறுத்துப் போட்ட ஆரச் சிதறல்
கருத்துப் பொதிந்த கவிதைக் காடு !
மேக அலைக்குள் மிதந்து கிடந்து
மோகப் பாட்டு முழக்கும் மீன்கள்!
அல்லிப் பூக்கள் அழகாய் இரவில்
நல்லிதழ் அவிழ்க்கும் நாட்டியம் அதனைப்
பார்த்துப் பார்த்துப் பன்முறை நகைப்பைச்
சேர்த்துச் சிந்தும் செந்தித் துண்டுகள்
இயற்கைக் கன்னி என்னைக் கொஞ்சம்
மயக்க எண்ணி மையிருள் வானில்
அள்ளித் தெளித்த ஆடகப் பூக்கள்
சொல்லிக் கொடுத்த சுவைமிகு பாக்கள்.
வட்ட நிலாவின் வயிற்றுப் பிள்ளைகள்
கொட்டிக் கிடக்கும் கொடியிலா முல்லைகள்.
பூக்களைப் போலப் புதுநா ரெடுத்துக்
கோக்க முடியாக் கோமள இதழ்கள்
நிலவுக் கன்னி நீள்வான் மீதில்
உலவும் போதில் உவகை கொண்டு
காணரும் கோலம் களிப்பொடு தீட்ட
வான வாசலில் வைத்த புள்ளிகள்!
தேங்கிய கடலின் சிப்பியை வானம்
வாங்கிய நிலையால் வந்த பேரெழில்
எண்ணிப் பார்க்க எண்ணிப் பார்த்தேன்
எண்ணுவ தெப்படி? என்னைப் பார்த்தேன் !



இரா. வைரமுத்து

# வெற்றிக்குப் பெயர் 'விக்ராந்த்'



எதையும் தாங்கும் வலிமை மிக்க விமானந்தாங்கிக் கப்பல் ஐ.என்.எஸ். விக்ரந்த், அண்மையில் சென்னை மாநகரின் முதல் வரவேற்பைப்பெற்று மகிழ்ந்தது.

பாகிஸ்தான் போர்க்கப்பல்களையும், நீர் மூழ்கிக் கப்பல்களையும், துறைமுகங்களையும் கடுமையாகத் தாக்கித் தூள் தூளாக்கி வெற்றிவாகை சூடியது வீக்ரந்த்.

இந்தியக் கப்பற்படையின் மிகப் பெரிய விமானந் தாங்கிக் கப்பலான விக்ரந்தின் மொத்த எடை 20 ஆயிரம் டன். இதன் நீளம் 705 அடி. அகலம் 128 அடி. உயரம் 166 அடி. இது 26 அடி நீரிலும், 140 அடி நீருக்கு மேலும் இருக்கிறது. இதில் 1,650 கடற்படை வீரர்களும், 150 கடற்படை அதிகாரிகளும் இருக்கிறார்கள். இந்தக் கப்பலில் ஒரே சமயத்தில் 35 விமானங்களை நிறுத்தி வைக்க முடியும்.

''நமது கப்பல் படை உலகத்திலுள்ள மற்ற நாடுகளின் கப்பல் படைக்கு எந்த விதத்திலும் குறைந்தது அல்ல. இந்தக் கப்பலைக் கையாளுவது என்பது எளிதான காரியம் அல்ல. இதில் பலவிதப் புதிய கருவிகள் பொருத்தப் பட்டுள்ளன. இதனை இயக்கும் விதத்தை நமது கப்பல் படை வீரர்கள் நன்றாகப் புரிந்து கொண்டு திறமையாகச் செயலாற்றினார்கள். அதனால் தான்,வங்காள தேசத்தை இவ்வளவு எளிதில் விடுவிக்க முடிந்தது'' என்று கூறும் கப்பல் படை கேப்டன் பிரகாஷ் வீரச்சக்கரம் விருது பெற்றிருக்கிறார். லெப். கமாண்டர் குப்தாவுக்கு மகாவீர் சக்கரமும், மற்ற 10 பேர்களுக்கு வீரச் சக்கரமும் வழங்கப்பட்டிருக்கிறது.

இக்கப்பலைச் சேர்ந்த வீரர்களில் யாரும் உயிரிழக்கவில்லை; இக்கப்பலுக்குச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. போரின் போது விக்ரந்த் தனது போர் விமானங்களில் ஒன்றைக்கூட இழக்கவில்லை. இத்தனைச் சிறப்புக்குரிய இந்தக் கப்பலில் தமிழ் நாட்டைச் சேர்ந்த வீரர்கள் அதிகமாகப் பணியாற்றுகிறார்கள். சென்னையைச் சேர்ந்த ராம்சேகர் என்ற வீரரும் இதில் இருக்கிறார்.

கப்பலின் மேல் தளம் பரந்து விரிந்து, விமானங்கள்வந்து இறங்கவும், போகவும் வசதியுள்ளதாக இருக்கின்றது. மேல் தளத்தில் உள்ள விமானங்களைக் கப்பலின் உட்புறத்தில் கொண்டு போய் வைக்க 'ஹைடிராலிக்' முறையில் இயங்கும் 'லிப்ட்' ஒன்றும் உள்ளது. இப்படி எல்லா விமானங்களையும் கப்பலுக்குள்ளேயே நிறுத்தி வைப்பதற்கான வசதி விக்ரந்தில் இருக்கிறது.

எதிரி விமானங்களைத் தாக்கக் கூடிய விமான எதிர்ப்புப் பீரங்கிகள் மேலே பொருத்தப் பட்டுள்ளன. இரட்டைப் பீரங்கிகள், கப்பலின் நான்கு பக்கங்களிலும் இருக்கின்றன. இந்தப் பீரங்கிகளால், ஐந்து ஆயிரம் அடிக்கு மேலே வரும் விமானத்தைக் கூடக் குறி வைத்துத் தாக்க முடியும்.

'டார்பிடோ' குண்டு சாதனங்கள் உள்ள விக்ரந்தில், கப்பலுக்கு அடியிலும் பீரங்கிகள் பொருத்தப்பட்டுள்ளன. நீர் மூழ்கிக் கப்பலைத் தாக்கி அழிக்க இவை பயன்படும். 14 துறைமுகங்களையும், 5 விமான நிலையங்களையும் தாக்கிய விக்ரந்த், போரில் கலந்து கொண்டது இதுவே முதல் தடவை!

''எந்த வித நீர் மூழ்கிக் கப்பல் வந்தாலும் சமாளிக்கக் கூடிய திறமை நமது கடற்படைக்கு உண்டு. நமது கடல் பகுதி நீண்டு கிடப்பதால் நமக்கு இன்னும் கப்பல்கள் தேவைப் படுகின்றன'' என்று கூறும் கேப்டன் பிரகாஷ், பஞ்சாப் மாநிலம் ஜலந்தரைச் சேர்ந்தவர். இவர் அமெரிக்காவில் இராணுவப் பயிற்சி பெற்றவர்.

வெற்றி குவித்துச் சென்னைக்கு வந்த விக்ரந்த்துக்குச் சென்னை மாநகராட்சி சிறப்பான வரவேற்பு தந்தது. புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., எம்.எல்.ஏ. அவர்கள் வீரர்களுக்குக் கலை நிகழ்ச்சியும் விருந்தும் கொடுத்து மகிழ்வித்திருக்கிறார். கப்பலைச் சுற்றிப்பார்த்த முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கேப்டன்கள் பிரகாஷ், திவாரிஆகியோருக்குக் காந்தியடிகள், அறிஞர் அண்ணா சிலைகளைப் பரிசு தந்து தம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.




மத்திய நிலஅளவை அலுவலகம், சென்னை

# அதியமான் முதல் ஆங்கிலேயர் வரை

தமிழகத்தே இன்று தனித்ததொரு மாவட்டமாக விளங்கும் தருமபுரி பழந்தமிழ் இலக்கியத்தே காணப்படும் தகடூராகும். இவ்வூர் அதியமான் நெடுமான் அஞ்சியின் இருப்பிடமாய்ப் பொலிந்தது; அஞ்சியும் அவன் மைந்தன் பொகுட்டெழினியும் புலவர்களைப் புரந்தவர்கள்; அறமுரைத்த அவ்வையை ஆதரித்தவர்கள்; பல்லாண்டு இளமையுடன் வாழ வைக்கும் கருநெல்லிக் கனியைப் புலவர் பெருமாட்டியாகிய அவ்வையார்க்கு அளித்த வள்ளல் அதியமான் என இலக்கியங்கள் பேசுகின்றன.

வள்ளலும் கொடை மன்னனுமாக விளங்கிய இவனு



டன் பெருஞ்சேரல் இரும்பொறை என்பான் போர் தொடுத்தான். தகடூர்க் கோட்டையை முற்றுகையிட்டான். தகடூரைத் தகர்த்தெறிந்தான்; இம்மாபெரும் போரில் எழினியும் அவன் வீரர்களும் காட்டிய வீரம், என்றும் போற்றத்தக்கது; எனினும், இறுதியிலே தகடூர் வீழ்ந்தது; தகடூரை நோக்கிச் சேரன் சென்ற பயணமே 'தகடூர் யாத்திரை' என்னும் அரிய இலக்கியமாகும்.

சேரர் ஆட்சிக்குப் பின்னர், தகடூரை நுளம்பர், சோழர், ஹொய்சாலர், விசய நகர மன்னர் ஆகியோர் ஆண்டனர்.

தருமபுரியின் பழங்கல்வெட்டுகளாகக் கருதப்படுபவை ஒன்பது—பத்தாம் நூற்றுண்டைச் சார்ந்தவை. இவை மகேந்திராதி இராசன் தலைமையில் நுளம்பப் பல்லவர்கள் ஆட்சிக்கு வந்தமையைக் குறிப்பிடுகின்றன. இவர்கள் நான்கு தலைமுறையாகத் தகடூரை ஆண்டனர். இவர்தம் ஆட்சியை முறியடித்து 'நுளம்ப குலாந்தகன்' எனப்பட்ட கங்கபோன நரசிங்கன் ஆட்சிக்கு வந்தான். மல்லிகார்ச்சுன ஆலய மண்டபத்தே சில கல்வெட்டுக்கள் உள்ளன; இவை நீதியண்ணன், சாண்டியண்ணன் என்பார் கட்டிய கட்டடங்கள் பற்றிக் கூறுகின்றன. கோட்டையிலுள்ள மாரியம்மன் ஆலயத்தே கல்வெட்டொன்றும் காணப்படுகிறது; இதில் சிவநெறி போதித்த ஆசிரியர் ஒருவருக்கு மருதனேரி என்னும் குளத்தை நன்கொடையாக வழங்கிய செயல் கூறப்பட்டுள்ளது.

பின்னர்ச் சோழரது ஆட்சி, தகடூரிலே ஏற்பட்டது; அதுகாலை நீலகிரிச் சோழ மண்டலத்தின் பகுதியாகிய கங்கநாடும் பெருமலை நாடும் தகடூருடன் இணைந்தன. மூன்றும் குலோத்துங்கச் சோழன் காலத்தியதாய் அம்மன்னனின் ஆட்சிக் காலத்தே எழுந்த கல் வெட்டுக்கள் கோட்டையிலுள்ள காமாட்சியம்மன் ஆலயத்தே காணப்படுகின்றன; இவை சோழராட்சியை நிலை நாட்டுகின்றன. இவற்றுள்ளே ஒன்று அதியமானின் பெருமை பற்றிப் பேசுகின்றது. இந்நாளில் தருமபுரியைத் தலைநகரமாகக் கொண்ட சோழராட்சி வடஆர்க்காட்டிலேயுள்ள திருமலை சேங்கம் வரையிலும் பரவியிருந்தது.

அதமன் கோட்டைக் கல்வெட்டுக்கள் ஹொய்சாலருடைய ஆட்சி பற்றி விளக்குகின்றன. தருமபுரியிலிருந்து ஆறுமைல்கட்கப்பாலுள்ள மோடூரிலுள்ள 'சாமுண்டி அம்மன் மண்டு' என்னுமிடத்தில் தமிழ்க் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. அதிலிருந்து தகடூர் நாட்டிலே திருமண வரி வீதிக்கப்பட்டதாய்த் தெரிகிறது; மைசூர் மாநிலத்தேயுள்ள சாமுண்டி மலையிலுள்ள துர்க்கை திருவுருவத்தோடு கூடிய சிங்கப் பெருமாள் ஆலயத்திகு வீரசோழ தேவன் என்பான் சிற்றூரொன்றை வழங்கிய செய்தி காணப்படுகிறது.

விஜயநகர் ஆட்சியின் போது ஏரிக்கரைகளை உறுதிப்படுத்திக் காக்க நிலக்கிழார்கள் தம் வருவாயில் குறிப்பிட்ட ஒரு பகுதியை வழங்க இசைந்தமையை அந்



நாளையக் கல்வெட்டு அறிவிக்கின்றது.

போர்ப்பலம் பொருந்தியதாய்த் தருமபுரி என்றுமே இருந்ததில்லை. 17-ஆம் நூற்றுண்டின் துவக்கத்தில் கந்தர்வ நரச ராஜாவாலே அது கவரப்பட்டது. 1688-ல் சிக்க தேவராயனுலே மீண்டும் அது வெல்லப்பட்டது. பின்னர் மைசூர் ஆட்சியே 1768 வரையிலும் இருந்தது; 1768-ல் பிரிட்டிஷ் கர்னல் உட் என்பான் தமது படைகளைக் கொண்டு அதைத் தாக்கினுன்.

இவ்வாறு அதியமான் காலம் முதல் ஆங்கிலேயர் காலம் வரை களங்கள் பல கண்டது தகடூர்.

ஆங்கிலத் திரைப்படங்களில் பார்ப்பது போன்று அந்தக் காட்சிகள் உள்ளன.

கண்ணுக்கு எட்டியவரை மூன்று அடிக்குமேல் வளர்ந்த புல்வெளி.

அதன் நடுவே குறுக்கு நெடுக்காகச் செல்லும் சாலைகள்.

அந்தச் சாலை ஒன்றில் ஜீப்பில் செல்கிறோம்.

தொலை தூரத்தில் மந்தை மந்தையாக மாடுகள்...

சாலை வளைவில் திரும்பி வேறு பக்கம் செல்கிறோம்.

அங்கே ஆட்டு மந்தைகள்..

அருகே நீரோடை....

கண்ணெதிரே தெரியும் காட்சிகள்...

நம் நாட்டில் உள்ளோமா? மேலை நாட்டில் உள்ளோமா?

இயற்கையாகவே இந்த ஐயம் எல்லாருடைய உள்ளத்திலும் எழும்.

சில்லென்று அடிக்கும் குளிர் காற்று வேறு, நம்நினைப்பை உறுதிப் படுத்துகிறது.

உண்மை அதுவா?

இல்லை, இல்லை!

தமிழ் நாட்டில் உள்ள ஓர் இடம்தான். அங்குள்ள மேனாட்டின் தட்ப வெப்ப நிலை நம்மை அப்படி எண்ணச் செய்கிறது. ஆங்கிலேயர்காலத்திலிருந்து உருவானதல்லவா அந்த இடம்!




* * *

சென்னையிலிருந்து பெங்களூர் செல்லும் பாதையிலே பயணம் செய்ய நேர்ந்தால், கிருஷ்ணகிரி அடைந்து, பின்பு அதனின்றும் 17 மைல் தொலைவில் உள்ள சூளகிரியின் பக்கம் அடைந்தவுடனே ஒரு மாற்றத்தைக் காணமுடியும்.

சில்லென்ற காற்று நம்மேனியைத் தழுவிச் செல்லும். வானுயர் மரங்கள், மலைகள் சூழ்ந்த இடங்கள், கண்ணுக்கினிய காட்சிகளைத் தரும். இன்னும் போகப் போக நாம் ஊட்டிக்கோ, கொடைக்கானலுக்கோ செல்லுகின்ற ஓர் உணர்வு அடைய முடியும். நாம் அப்பாதை வழியே சென்று ஒசூரை அடைகிறோம். பஸ் நிலையம் வந்ததும், அங்கு ஓர் வழிகாட்டிப் பலகை நமக்கு வழிகாட்டத் தயாராக நிற்கும். கால்நடை ஆராய்ச்சி நிலையம் 7 கி.மீ. என்றும் தெற்கு முகமாகச் செல்ல வேண்டுமென்றும் வழிகாட்டி சொல்லும் திசைநோக்கிச் செல்கிறோம்.

நேராக 7 கி. மீ. தொலைவில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைக்கு வருகிறோம். அங்கு வண்ண மயில்கள் நம்மை ''வா'' வென வரவேற்கின்றன. மனங் குளிர் விருந்தினர் மாளிகை நோக்கிச் செல்கிறோம்.

விருந்தினர் மாளிகையைச் சுற்றியுள்ள இடங்களின் எழிலான தோற்றங்கள்; பல வண்ணங்களில் பூத்திருக்கும் ரோஜாப்பூக்கள். இருநூறு வயதான ஆலமரம், விழுதுகள் சுற்றியுள்ள பகுதிகளில் படரக் கல் தூண்கள் நடப்பட்டிருக்கின்றன. இதுவே முதலில் நம்மைக் கவர்ந்து விடுகிறது.

* * *

விருந்தினர் மாளிகையின் முன்னால், பண்ணையின் மாதிரிப் படம் ஒன்று பெரிய அளவிலே காட்சி தருகிறது. கண்காணிப்பாளர் அவர்கள் கையிலே நீண்ட கோலொன்றை ஏந்தி அந்த மாதிரிப் படத்தில் விருந்தினர் மாளிகையிலிருந்து தொடங்கி ஒவ்வொரு இடமாகச் சுட்டிக் காட்டுகிறார். அவருக்கு அது, மிகப் பழக்கமான ஒன்று. நமக்கு உடனே புரிந்து விடுகிறது. எத்தனை எத்தனையோ பார்வையாளருக்கு எவ்வளவோ தடவைகள் சொல்லிச் சொல்லிப் பழகிப் போனவர். பேச்சிலே தடங்கலின்றி அழகாகச் சொல்கிறார்.

" பண்ணை 1,646 ஏக்கர் அளவில் உள்ளது. கடல் மட்டத்தினின்றும் 3,015 அடி உயரத்தில் அமைந்துள்ளது. அதிக பட்ச வெப்பம் 30°; குறைந்த பட்ச வெப்பம் 15° சென்டிகிரேடு. மொத்தப்பரப்பில் 900 ஏக்கர் புல் வளர்க்கப் பயன்படுத்தப்படுகிறது; ஆண்டின் சராசரி மழை, 84 சென்டிமீட்டர். இப்பண்ணையில் 5 ஏரிகள் உள்ளன; 7 துளைக் கிணறுகள் உள்ளன; 3 பெரிய கிணறுகள் உள்ளன" எனச் சொல்லத் தொடங்கியவர் ஒசூர் கால்நடைப் பண்ணையைப் பற்றிச் சுருக்கமாக விளக்குகிறார்.

* * *

நாம் முதன் முதல் செல்லும் இடம் மத்தியப்பிரிவு எனப்படும் பகுதி. இந்த மத்தியப் பிரிவில் பொலி காளைகள் அல்லது வித்துக் காளைகள் வளர்க்கப்படுகின்றன. உயர்ந்த இனங்களான சிந்தி, ஜெர்ஸி, ப்ரீஷியன் முதலிய இனக்காளைகள் கண்கவர் வனப்புடன் கம்பீரமாக நிற்பதைக் காணுகிறோம். குதிரைகள், நல்ல வாட்டசாட்டமானவை—சிற்சில வளர்க்கப்படுகின்றன.

மத்தியப்பிரிவின் மேற்புறத்தில் திட்டுத்திட்டாக மண்மேடுகள் உள்ளன. அவை என்னவென்று கேட்டால், அவை 'சைலேஜ் குழிகள்' எனப் பதில் கிடைக்கும்.

மிஞ்சிய பச்சைத் தீவனங்கள், வெல்லப்பாகு முதலியனவற்றை மண்ணில் புதைத்து வைத்துச் சுமார் ஓராண்டுக்குப் பின்பு எடுத்து மாடுகளுக்குக் கொடுப்பார்களாம். இதை மாடுகள் யாவும் மிகவும் விரும்பிச் சாப்பிடுகின்றன. இந்த வேலை, விவசாயப் பிரிவைச் சார்ந்தது. விவசாயப் பிரிவுக்கு இரு மேலாளர்களுண்டு. இவர்கள் மாடுகளுக்குத் தேவையான புற்கள், தானியங்கள் முதலியன பயிரிட்டு விநியோகிக்கிறார்கள். இதைப் போன்றே புல்வெளிப்பிரிவுமேலாளரும் மாடுகளுக்கான புல் சுமார் 900 ஏக்கர் நிலத்தில் வளர்த்துச் சேகரித்து வைத்துக் கொள்கிறார்.

இந்தப் பண்ணையின் ஒரு சிறப்பு என்னவெனில் மற்றப் பண்ணைகளில் வைக்கோல் புல் வாங்கப்படுவது போன்று இங்கு வைக்கோல் வாங்கப்படவேண்டிய தேவையில்லை.

1828 முதல் ஆங்கிலேயராலும் 1924 முதல் வேளாண்மைத் துறையாலும், 1938 முதல் கால்நடைப் பராமரிப்புத் துறையாலும் பராமரிக்கப்பட்டு வரும் இப்பண்ணை, சமீபத்தில் இதற்கு முன்பு கண்காணிப்பாளராக இருந்தவர்கள் காலத்தில் மட்டும் சுமார் 7 லட்சம் ரூபாய்க்கு வைக்கோல் வாங்கப்பட்டதைத் தவிர வேறு ஒரு காலத்திலும் வைக்கோல் வாங்கியதில்லை எனப் பணியாளர்கள் சொல்கின்றனர்.




பின்பு நேராகக் கோழிப்பிரிவுக்குச் செல்கிறோம். எங்குப் பார்த்தாலும், வெள்ளை லக்கான், சிவப்பு போந்தா கோழிகளின் இரைச்சல் காதைத் துளைக்கின்கின்றது. குஞ்சு பொரிக்கும் இயந்திரம் (இங்குபேட்டர்) சுமார் 8 உள்ளன.

அப்போதுதான் முட்டையிலிருந்து வெளி வந்த குஞ்சுகள் பந்து போல், பஞ்சுபோல், பார்ப்பதற்கு மிகமிக அழகாக உள்ளன. இந்தக் கோழிப் பிரிவின் கிளையொன்று பண்ணையின் வேறோர் இடத்திலும் இருக்கிறதென்றும், அங்கும் இரு கால்நடை மருத்துவர் பணியாற்றுகின்றனர் எனவும் சொல்லக் கேட்டோம். கோழிப்பிரிவை அடுத்து இருப்பது, பன்றிப் பிரிவு. இங்கு வெள்ளைநிறப் பன்றிகள் வெள்ளை யானைகள் போன்று காட்சியளிக்கின்றன. ஒரு பன்றி, 28 குட்டிகள் கூடப் போடுவதுண்டாம்.

பன்றிப் பிரிவை அடுத்துப் பண்ணையைச் சுற்றி வருகிறோம். வழிநெடுகிலும் இரு மருங்கிலும் சந்தன மரங்கள், சீசமரங்கள் காட்சியளிக்கின்றன. எங்கெங்குப் பார்த்தாலும் பச்சைப் பசேலென மரகதக் கம்பளம் விரித்தாற் போன்ற காட்சி. ஓர் ஏரி தென்படுகிறது. அந்த ஏரியின் மையப்பாகம் தீவு போல் அழகாகக் காட்சியளிக்கிறது. இந்த ஏரியைப் புல்டோசர் மூலம் ஆழமாக்கியதிலிருந்து எடுக்கப்பட்ட கழிவு மண்ணைக் குவித்துத் தீவாக்கியுள்ளனர். இந்தத் திட்டுக்குப் போய்வரத் தோணிகள் வாங்கும் திட்டம் ஒன்று உள்ளது.

கொஞ்ச தூரம் சென்றதும் ஆடுகள் மந்தை மந்தையாக நிற்கும் காட்சி; சுமார் 1,000 ஆடுகள் வரையுள்ளன ; இவை மாண்டியா இன ஆடுகள். இவைகள் கொழு கொழுவென இருக்



கின்றன. இங்கு ஆடுகள் 'விரைவுத் திட்டம்' எனும் திட்டத்தின் மூலம் வளர்க்கப் பெறுகின்றன. இந்த ஆட்டிறைச்சி மிகவும் சுவை உடையதாம்.

பின்பும், பண்ணையின் வழி வருகிறோம். வழியிலே ஏரிகள், துளைக்கிணறுகள், பெரியகிணறுகள் காட்சியளிக்கின்றன. ஒரு சில கிணறுகள் இன்னும் வேலையாகிக் கொண்டிருக்கின்றன. ஒரு பக்கம் டிராக்டர்கள் உழுது நிலத்தைச் செப்பனிடுகின்றன.

பண்டகச் சாலை வழியே வருகிறோம். பண்டக சாலையின் உள்ளே நுழைகிறோம். அங்கே மற்றொருபுறம் இரும்பை அடிப்பதும், மரத்தை அறுப்பதுமான வேலை நடக்கிறது. கேட்டோம் ; பண்ணைக்கு வேண்டிய முக்கிய சாமான்கள், பழுதடைந்த பொருட்களைப் புதுப்பித்தல் முதலிய வேலை இங்கு நடைபெறுகிறது. 'இது பட்டறைப் பிரிவு எனப் பதில் கிடைத்தது. ஒருபுறம் மாடுகளின் தீனியான பிண்ணாக்கு, பருத்தி விதை, மக்காச் சோளம், ராகி, கொள்ளு முதலியவற்றை மூட்டை மூட்டையாக அழகுற அடுக்கி வைத்துள்ளனர். தினமும், மற்றப் பிரிவுகளுக்கான தேவையை அன்றாடம் இங்கிருந்து விநியோகிக்கின்றனர்.

கடந்த மூன்று ஆண்டுகளாகக் கால்நடைத் தீவனங்கள் வாங்குவதில் மிகமிகச் சிக்கனத்தைக் கையாண்டுள்ளனர். 1965—66-ல் பத்து லட்சத்துக்குமேல் வாங்கப் பட்ட கால்நடைத் தீவனம் தற்போது ஐந்து அல்லது ஆறு லட்சத்திற்குத் தான் வாங்கப்படுகிறது. இன்னும் சில ஆண்டுகளில் சோளம், கொள்ளு முதலியன மிகுதியாகப் பயிரிடப் பட்டு, தன்னிறைவை எட்டும் முயற்சியில் வெற்றி பெற்று விடுவார்கள்.

அடுத்து நேராகக் கால்நடை மருத்துவமனையைக் கடந்து பாற் பண்ணைக்குச் செல்கின்றோம்.

ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டு அண்மையில் கட்டப்பட்ட பால் பண்ணை அது; இரு பக்கங்களிலும் பசுக்கள் கறவைக்குத் தயாராக நிற்கின்றன.

சிந்திப் பசுக்கள்தான் மிகுதியாக உள்ளன. ஜெர்ஸி, ப்ரீஷியன் பசுக்களும் சிற்சில உள்ளன. சிந்திப் பசுக்கள் தினமும் சராசரி 6 முதல் 6½ லிட்டர் வரை பால் கறக்கின்றனவாம் ; ப்ரீஷியன் தான் பால் கறவையில் முதன்மை பெற்று விளங்குகிறது. அது சராசரி 12 லிட்டர் வரை கறக்கிறது. அதன் உடலில் சில இடங்கள் கறுப்பாகவும் சில இடங்கள் வெண்மையாகவும் பட்டுப்போல் இருக்கின்றன ; பசுக்கள் நல்ல முறையில் வளர்க்கப்படுகின்றன.

நாள் தோறும் சுமார் 800 லிட்டர் பால் உற்பத்தி ஆகிறது. சுற்று வட்டாரத் தேவைக்கான பால் விநியோகித்து மிஞ்சிய பால் சென்னைக்கு நாள்தோறும் எடுத்துச் செல்லப்படுகிறது. சென்னைக்கு அனுப்பப்படும் பால் குளிர்சாதன அறையில் வைத்துக் குளிர்விக்கப்பட்டபின்பு எடுத்துச் செல்லப்படுவதால் பால் கெடுவதில்லை. மிஞ்சிய பாலிலிருந்து மிகக் குறைவான அளவில் வெண்ணெய்யும் எடுக்கின்றனர். வெண்ணெய் இள மஞ்சள் நிறத்தில் உள்ளது. மிகச் சுவையாக உள்ளது.

1971-ஆம் ஆண்டு சனவரி 19-ஆம் நாள் முதல் பெரிய அளவு கோழிக் குஞ்சு பொரிப்புத் திட்டம் என்ற ஒரு திட்டம் செயல் முறைக்கு வரத் தொடங்கிற்று. இத்திட்டத்தின் மூலம் மாதந் தோறும் 20,000 குஞ்சுகள் கோழியின் விரிவாக்க நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. கால்நடை மருத்துவர்களுக்கு இயற்கை, செயற்கை முறைகளில் குஞ்சுகள் வர்க்கம் பிரித்தல் தெளிவாகச் சொல்லித் தரப்படுகின்றன. கடந்த ஆண்டுகளில் 2,62,323 குஞ்சுகளும், 12,78,527 முட்டைகளும் உற்பத்தி செய்யப் பட்டுள்ளன. 3,04,026 முட்டைகள் இன விருத்திக்காக விற்கப் பட்டன. 67,904 கோழிகள், 1,27,862 குஞ்சுகள் இனவிருத்திக்காக விற்கப்பட்டன. மேலும் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் இந்தியவிவசாய ஆராய்ச்சிக்கழக மாணவர்கள், பல்வேறு கல்லூரி மாணவர்கள் இங்கு நேரில் வந்து பயிற்சி பெற்றுச் செல்கின்றனர். தற்போது பராமரிக்கப்பட்டு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை இதுதான் :

| | | |
|---|---|---|
| 1. | மாடுகள் | 969 |
| 2. | ஆடுகள் | 968 |
| 3. | பன்றிகள் | 229 |
| 4. | கோழிகள் | 10,648 |
| 5. | குதிரைகள் | 10 |

இப்பண்ணை கடந்த 29 ஆண்டுகளாகத் தமிழகப் பொருளாதார முன்னேற்றத்தில் பெரும் பங்கை வகித்து வந்துள்ளது. இங்கு உற்பத்தியாகும் பால், முட்டை, இறைச்சி ஆகியவைகள் இப்பண்ணையை அடுத்துள்ள பகுதிவாழ் மக்களுக்கு நல்ல சத்துணவாகி, அம்மக்களின் ஆரோக்கியத்தைப் பெருக்கியுள்ளதுடன், உணவுப் பற்றுக்குறையை நீக்கத் தற்பொழுதுள்ள நெருக்கடியான நிலையில் தன் பங்கைச் செவ்வனே ஆற்றி வருகின்றது.

தமிழகத்தின் தலைசிறந்த கால்நடைப் பண்ணைகளில் இப்பண்ணை முதன்மை

பெற்றுச் சிறந்து விளங்குகின்றது. இதன் வரலாறு இந்நாட்டின் சரித்திரத்துடன் பிணைந்துள்ளது. மைசூர் பேரரசின் மன்னன் திப்பு சுல்தானால் அவன் படைகளுக்குத் தேவையான குதிரைகளை உற்பத்தி செய்யத் தொடங்கப் பெற்றுப் பின்னர் 1828-ல் வெள்ளையர்களால் கைப்பற்றப்பட்டு, இராணுவக் குதிரைகள் வளர்க்கப்பட்டு வந்தன. 1924-ல் தமிழக விவசாயத் துறையினரின் கீழ்க் கால்நடைகள் பராமரிக்கப்பட்டுப் பின்னர் 1938-ல் இப்பண்ணை கால்நடைப் பராமரிப்புத் துறையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இயங்கி வருகிறது.



தீவனம் தின்ற மாடுகள் சோம்பிக் கிடக்காமல் தேகப் பயிற்சி செய்யும் சீரான காட்சி இது

1. உயர்ரகப் பொலிகாளைகள் மாநிலமெங்கும் விநியோகித்தல்.

2. உயர்ரக மாடுகளான சிந்தி ஜெர்ஸி, ப்ரீஷியன் இவைகளைப் பெருக்கி வளர்ச்சியடையச் செய்தல்.

3. மாண்டியா இன ஆடுகளை நவீன முறையில் பராமரித்து நல்ல ரக ஆடுகளை விநியோகித்தல்.

4. உயர் ரகக் கோழிகளான வெள்ளை லக்கான், சிவப்புப் போந்தா, ஆஸ்டிரலாப் முதலியவற்றை நல்ல இயந்திர சாதனங்கள் மூலம் உற்பத்தி செய்து மாநிலத்தின் பல பகுதிகளிலும் விநியோகித்தல். கோழிக்குஞ்சு பொரிப்புத் திட்டத்தின் கீழ் மாதம் 20,000 குஞ்சுகள் (எம்லேன் ஆஸ்டிரலாப்) உற்பத்தி செய்து கோழி இன விரிவாக்க நிலையங்கள் மூலம் கோழி வளர்ப்போருக்கு விநியோகித்து நல்லரகக் கோழிகள் நாடெங்கும் பரவ அதன் மூலம் நல்ல சத்துள்ள உணவு, முட்டைகள் உற்பத்தி செய்ய வழி வகுத்தல்.

5. உயர்ரகக் குதிரைகள் சிறு அளவில் பராமரிக்கப்பட்டுச் சுற்றியுள்ள குதிரைகளின் தரத்தை உயர்த்தல்.

6. விவசாயிகளுக்கு உயர் ரகப் புல்நாற்றுகள் விற்றல்.

7. கால்நடை மருத்துவத் துறைப் பட்டப்பயிற்சி பெறும் மாணவர்களுக்குச் செயல்முறை விளக்கங்கள் கொடுத்தல்.

இந்த இலட்சியங்களோடு இயங்கும் ஒசூர் கால்நடைப் பண்ணை இந்தியாவிலேயே சிறந்த கால் நடைப் பண்ணைகளில் ஒன்றாகும்.

இங்கு உள்ள சிறந்த சிந்தி மாடுகள் போன்று வேறு எங்கும் கிடையாது. இங்கிருந்து சிந்தி மாடுகள் வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

இந்தக் கால்நடைகள் போன்று அளவின்றிப் பெருகினால் ஆரோக்கியமான வாழ்வு மட்டுமல்ல, நம் நாட்டுச் செல்வமும் பெருகும்.

## வெண்பாப் போட்டி-27

முறிப்படி : காரைத் தொழுவீர் களித்து

முடிவுத் தேதி : 1—2—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு: அஞ்சலட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

## முன்னேற்றத்திலும் செழிப்பிலும் எமது பங்கு

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

# TANSI

### தொழில்

* கட்டுமான கட்டமைப்புகள்
* தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
* எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
* மின் தடுப்புச் சாதனங்கள்
* விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
* இனமல், டிசிசி கம்பிகள்

### விவசாயம்

* வேளாண்மைக் கருவிகள்
* பயிர் பாதுகாப்பு கருவிகள்
* டிராக்டர் தொடர்பு வண்டி
* மோட்டார் விசை யேற்றங்கள்
* கரும்பாலை
* வடிமுனைக் குழாய்கள்

### அன்றாட உபயோகப் பொருட்கள்

* எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
* மருத்துவமனை சாமான்கள்
* கதவுகளுக்கான பூட்டு
* தாழ்ப்பாள்கள்
* சுகாதார வசதி பொருட்கள்
* பீங்கான் பொருட்கள்
* காலணிகள்
* தோலணிப் பொருட்கள்

### ஏற்றுமதி

* பல வண்ண சாதாரண தோல்கள்
* நீலநிற ஈரமான குரோம் தோல்கள்
* கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

# பட்டொளி வீசும் பட்டுத் தொழில்



எவ்வளவோ பின் தங்கிய மாவட்டமாக இருந்தாலும் தருமபுரி மாவட்டம் பட்டுத் தொழிலில் பட்டொளி வீசிப் பறக்கிறது. காரணம் ஒசூரின் தட்ப வெப்ப நிலைதான்.

இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் விவசாயி ஒருவரைச் சந்தித்துச் சில கேள்விகளைக் கேட்கிறோம். அவர் தன்னுடைய பதில்களை முழுமூச்சில் சொல்கிறார்.

“நான் ஆற்றோரத்தில் புறம்போக்கு நிலத்திலே பட்டுச் செடி நட்டு இருந்தேன். 5, 6, பட்டுக் கூண்டு அறுவடை கூட நல்லபடி எடுத்தேன். அதனாலே அந்த நிலத்தையே இப்போ எனக்கு அடமானம் செய்து கொடுக்கறாங்க.

“பட்டுச்செடியின்னா உங்களுக்குத் தெரியுமா? அது தான் முசுக்கொட்டைச் செடி. அதைக் கம்பளிச் செடின்னும் சொல்லுவாங்க. பட்டுப்புழு வளக்கறதுக்கு அதுதான் ஆதாரம். குச்சி வள்ளிக்கிழங்கு நடறதுக்கு எப்படி நிலத்தை உழுது பண்படுத்துறோமோ அதுமாதிரி செய்து, பட்டு விதைக்குச்சிகளை 6 அங்குலத்திற்குத் துண்டு துண்டா வெட்டி ஒன்றரை அடிக்கு ஒரு அடி என்ற அளவுக்குக் குச்சிகளை நடவேண்டும். நட்ட நான்கைந்து மாதங்களில் பட்டுச் செடி, இலை பறிக்கிற அளவுக்கு வளர்ந்து விடும்.

“பட்டு இலாகா அதிகாரிங்க அடிக்கடி நம்மகிட்டே தொடர்பு வெச்சுக்கிட்டுத் தோட்டத்தை அப்பப்போ பாத்துக்கிட்டிருப்பாங்க. இலை நல்லா வந்த சமயம் பார்த்து அதுக்குத் தேவையான அளவு முட்டைகளைச் சகாயவிலைக்குத் தருவிச்சுக் கொடுப்பாங்க. அவங்களே முதல் இரண்டு மூன்று பட்டுக்கூண்டு அறுவடைகளை, கூட இருந்து கவனிச்சு நமக்கும் சொல்லிக் கொடுப்பாங்க. அதற்குள்ளே நாமும் பட்டுப்புழு வளர்ப்பது எப்படின்னு நல்லபடி தெரிஞ்சுக்கலாம்.

“பட்டுப்பூச்சி, முட்டை குஞ்சு ஆனதுல இருந்து ஒரு நாளைக்கு ஐந்து முறை தீனி கொடுத்து வளர்த்தால் பட்டுக் கூண்டு அறுவடை செய்ய 25 நாளாகும்.

“நெல்லு பயிரிடறோம்; ராகி பயிரிடறோம்; அதுக்கு வருஷம் பூரா வேலை செய்ய வேண்டிய அவசியம் இருக்காது. அப்படி விவசாய வேலை இல்லாத நாட்களில் வீட்டிலுள்ள பிள்ளைகளும், பெண்களும் ஏன், நாம் கூட சும்மாதான் சோம்பலா இருக்க வேண்டி இருக்கும். இதுபோன்ற சமயத்திலெல்லாம் நாம் இந்தப் பட்டுத்தொழிலை உபதொழிலாகச் செய்யலாமே! இதுக்கு வேலை அதிகம் கிடையாது. சிறுவர், சிறுமிகளும் ஓய்வு நேரங்களில் இந்த வேலையைச் செய்யலாம். மற்றப் பயிர்த் தொழிலில் ஒரே தரமாக வருமானம் கிடைப்பது போல் இதில் கிடைக்காமல் வருடம் பூராவும் இரண்டுமாதங்களுக்கொருமுறை வீதம் கிடைப்பதால் இந்தப் பணத்தை மற்றப் பயிர்ச் செலவுகளுக்குக் கடன் வாங்காமல் நாம் ஈடுசெய்து கொள்ளலாம்.

''சொல்லப்போனால் பட்டுத் தொழில் நமது வருவாயை உயர்த்தும் குடிசைத் தொழில். பட்டுத் தொழிலை மற்ற விவசாயத் தொழிலோடு செய்வதால் மற்ற தொழில்கள் எந்த வகையிலும் பாதிக்காது. காரணம், பட்டுத் தொழிலில் உழைப்பு மிகவும் குறைவு. மேலும் பட்டுச்செடி ஒரு தடவை நட்டால் 20 வருஷங்களுக்கு இருக்குமாம். வளர்ந்த குச்சியை வருஷமிரண்டு முறை அறுக்க வேண்டியிருக்கும். அறுத்த அந்தக் குச்சிக்கு வண்டி பாரத்திற்கு 20 ரூபாய் வீதம் கொடுத்து அதையும் அரசாங்கம் வாங்கிக் கொள்ளும். புழு வளர்ப்பின் கழிவெல்லாம் மாடுகளுக்குத் தீனியாகும், வயலுக்கு நல்ல உரமுமாகும்.''



நீண்ட நேரம் பேசி வந்தவர் இப்பொழுதுதான் நிறுத்துகிறார். இன்னும் கொஞ்சம் கேட்டால் நம்மைத் தருமபுரி மாவட்டத்திலேயே தங்கிப் பட்டுத்தொழிலில் ஈடுபடும்படிச் சொல்லிவிடுவார். அவ்வளவு ஆர்வம் அவருடைய பேச்சில் தெரிகிறது. அவருடைய ஆர்வத்திற்குக் காரணம் அந்த அளவுக்கு அரசாங்கம் உதவி செய்து வருவதுதான்.

அவரிடம் மகிழ்ச்சியுடன் விடைபெற்றுக் கொண்டு ஓசூரில் தொழில் வணிகத் துறையின் பட்டுப் பண்ணைக்குச் செல்லுகிறோம். அங்கே உள்ள பட்டு வளர்ப்புப் பகுதிகளைப் பார்வையிடுகிறோம்.



இந்தப் பட்டுப் பண்ணையிலிருந்து பட்டுப் பூச்சி முட்டைகளை கோவா, ஜம்மு—காஷ்மீர், மேற்கு வங்காளம் போன்ற வெளி மாநிலங்களும் விரும்பி வாங்கியுள்ளன.

அங்கே நாம் கண்டும், கேட்டும், அறிந்த செய்திகளின் தொகுப்புக் கீழே தரப்படுகிறது.



பட்டுத்தொழில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. பட்டுத்தொழில் குறைந்த முதலீட்டில் நிறைந்த வருவாயைத் தருகிறது. ஆண்டுக்கு ஆறுமுறை வருவாய் தரக்கூடிய ஒரே தொழில் பட்டுத் தொழிலே! பட்டுத் தொழில் விவசாயிகளுக்கும், வீட்டிலுள்ள பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் முழு நேர வேலை வாய்ப்பை உண்டாக்கிக் கிராம வளர்ச்சிக்கு உதவுகிறது.

குறுகிய காலத்தில் தொழில் துறையில் முன்னேற்றமடைந்த ஜப்பான் நாட்டில், பட்டுத் தொழில் மிகவும் வளர்ச்சி யடைந்த நிலையில் இருக்கிறது. உலகப் பட்டு உற்பத்தியில் இந்தியா நான்காவது இடத்தைப்

பெற்றுள்ளது. தொன்றுதொட்டு தமிழ்நாட்டுப் பட்டு வெளிநாடு களுக்கு அனுப்பப்பட்டு வந்திருக் கிறது. 1956-ஆம் ஆண்டு வரையில் பட்டு உற்பத்தியில் முன்னணியில் இருந்த தமிழ்நாடு மொழிவழி மாநிலப் பிரிவினையின் போது 22,000 ஏக்கர்களில் முசுக் கொட்டைச் செடி சாகுபடி செய்யப்பட்ட கொள்ளேகாலம் பகுதி மைசூர் மாநிலத்தில் சேர்ந்ததால் பின்னிலை அடைய நேர்ந்தது.

அதற்குப் பின்னர் பட்டுத் தொழில் வளர்ச்சி அடையமூன்று திட்ட காலங்களில் பலவித முயற்சிகள் செய்யப்பட்டன. அண்மைக் காலத்தில் தமிழக அர சின் தீவிர முயற்சிகளால் பட்டுத் தொழில் வேகமாக முன்னேற் றம் அடைந்து வருகிறது.

தமிழ்நாட்டுப் பட்டு உற்பத்தி யில் தருமபுரி மாவட்டம் அதிலும் ஓசூர் வட்டம் தனியிடத்தைப் பெற்று இருப்பது குறிப்பிடத் தக்கது.

பொருளாதாரத்தில் மிகவும் பிற்பட்ட ஓசூர் பகுதியின் பருவ நிலையும், சமூகப் பொருளாதார நிலையும், பட்டுத் தொழிலின் வளர்ச்சிக்குச் சாதகமாக உள்ளன. பட்டுச் செடி ஒரு முறை நடவு செய்தால் 20 ஆண்டுகள் தொடர்ந்து பயனளிக்கும்.

சாதாரணமாக முசுக்கொட் டைச் செடி மூன்றாவது ஆண்டில் முழுப்பயனைத்தர ஆரம்பிக்கின்றது.

முசுக்கொட்டைச் செடிகளைப் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு நன்செய் நிலத்தில் ஏக்கருக்கு ரூ. 2,000 முதல் 4,000 வரை யும், புஞ்சையில் ரூ. 500 முதல் 800 வரையும் நிகர வருமானம் கிடைக்கின்றது. பாப்பாரப்பட்டி யைச் சேர்ந்த திரு வெங்கட் ராமன் என்ற விவசாயிக்குப் பயிர் நட்ட முதலாண்டே நன்செய் நிலத்தில் ரூ. 5,000 வருமானம் இவ்வாண்டு கிடைத் திருக்கிறது. இதன் காரணமாக 1967-ஆம் ஆண்டில் 300 ஏக்கரில் சாகுபடி யாகியிருந்த முசுக் கொட்டை விவசாயம், இந்த ஆண்டில் 1,800 ஏக்கர்களாக உயர்ந்துள்ளது. இத்தொழிலால் தற்பொழுது ஓசூரில் 2,500 குடும்பங்கள் நேரடியாகப் பய னடைகின்றன.

# புளியோ புளி!



தருமபுரி மாவட்டம் புளிக்குப் பெயர் பெற்றது.

மாவட்டம் முழுவதும் ஏராளமான புளிய மரங்கள் உள்ளன. ஐதரலி, திப்பு சுல்தான் காலத்திலேயே ஏராளமான புளிய மரங்கள் பயிரிடப்பட்டதாகவும், சாலையின் இரு மருங்கிலும் புளிய மரங்களை வளர்க்க வேண்டும் என்று மக்கள் கட்டாயப்படுத் தப்பட்டார்கள் என்றும் சொல்கிறார்கள்.

சேலத்திலிருந்து தருமபுரி மாவட்டத் திற்கு நுழையும் வழியில் தருமபுரியின் எல் லையில் உள்ள ஊர் தொப்பூர்.

இவ்வூருக்கு அருகே உள்ள தொப்பூர் கணவாய்ப் பகுதியில் கிராமப்புறச் சிறப்புத் திட்டத்தின் கீழ்—வன வளர்ப்புக்காக 35,000 புளியங்கன்றுகள் பெரு நாற்றங் காலில் பயிரிடப்பட்டுள்ளன.

இவை தருமபுரி மாவட்டத்திலுள்ள காட்டுப் பகுதிகளில் நடப்படும்.



# கருங்கல்லுக்கும் மெருகிடலாம்

கருங்கல்லுக்கும் மெருகிடலாம் தெரியுமா? நம்ப மறுக்கிறீர்களா? நம்புங்கள், கருங்கல்லுக்கும் மெருகிட்டுப் பளபளப்பாக்கலாம்.

சென்னை அண்ணு சதுக்கத்திலுள்ள நினைவுத் தூண், அண்ணு மீளாத்துயில் கொண்டுள்ள இடத்தின் மேடை முதலியனவும் மெருகு ஏற்றிய கருங்கற்களால் ஆனவையே. அவை, தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியிலுள்ள கருங்கல் மெருகிடும் நிலையத்தில் மெருகிடப்பட்டுச் சென்னைக்குக் கொண்டுவரப் ட்டவை.

மெருகிடுவதற்கு ஏற்ற கருங்கற்களைக் கொண்ட குன்றுகள் தென்னுட்டிலே தருமபுரி மாவட்டத்தில்தான் உள்ளன.

ஏறத்தாழ நாற்பத்தைந்து குன்றுகள் மெருகிடுவதற்கு ஏற்ற கற்களை உடையனவாக உள்ளன.

தமிழ்நாட்டில் தொழில் வணிகத் துறையின் பொறுப்பில் இயங்கும் ஒரே ஒரு கருங்கல் மெருகிடும் நிலையம், கிருஷ்ணகிரியில் உள்ளது. இந்தக் கருங்கல் மெருகிடும் நிலையம் தொடங்கி இரண்டு மூன்று ஆண்டுகள்தான் ஆகின்றன.

ஆனுல், ஆந்திர மாநிலத்திலுள்ள குப்பத்தில் பத்துப் பதினைந்து கருங்கல் மெருகிடும் நிலையங்கள் உள்ளன. இவை அனைத்தும் தனியார் பொறுப்பில் இயங்குபவை. இந்த மெருகிடு நிலையங்களுக்குத் தருமபுரி மாவட்டங்களிலுள்ள குன்றுகளிலிருந்துதான் கருங்கற் பாறைகள் எடுத்துச் செல்லப்படுகின்றன.

கருங்கல்லுக்கு மெருகிடும் தொழில் நாளுக்கு நாள் வளரக் கூடிய-வளர்ந்து வரும் தொழில். இப்பொழுது வெளிமாநிலங்களிலிருந்தும் மெருகிட்ட கருங்கற்கள் தேவை என்று கேட்கின்றனர்.

கருங்கல் மெருகிடுவது எப்படி என்று முதலில் பார்ப்போம்:

மெருகிடுவதற்குத் தகுதியாக உள்ள குன்றுகளிலிருந்து பாறைகள் தேவையான அளவில் வெட்டப்படுகின்றன. அங்கிருந்து அப்பாறைகள் மெருகிடும் நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டுப், பயன்படுத்தக் கூடிய அளவுக்கு உளியைக் கொண்டு செதுக்கப்படுகின்றன.

செதுக்கப்பட்ட கற்கள், படத்தில் காட்டப் பட்டுள்ள இயந்திரத்தில் வைக்கப்பட்டுக் கனமான இரும்புத் தூள்கள் மேலே தூவப்பட்டு அரைக்கப் படும். இதுபோன்று மேற் பரப்பு ஆறு வகைத் தூள்கள் போட்டு அரைக்கப்படுகின்றது.

முதலில் சொரசொரப்புக் கொஞ்சம் குறைகிறது. பிறகு படிப்படியாகக் குறைகிறது. முதலில் கனமான இரும்புத் தூள்களால் மேற் பரப்பு அரைக்கப் படுகிறது. பின்னர் மெல்லிய இரும்புத் தூள்களால் மேற்பரப்பு அரைக்கப்படுகிறது. அதன் பின்னர் சில இரசாயனத் தூள்களைக் கொண்டு தேய்க்கின்றனர். கருங்கல் மிகப் பளபளப்பாகி விடுகிறது.

கருங்கல்லின் ஒரு பக்கத்தை மட்டுமின்றி எல்லாப் பக்கங்களையுமே இப்படிப் பளபளப்பாக்கி விடலாம்.





கிடைக்கும் மெருகு ஊட்டு வதற்கு ஏற்ற கற்கள் ராஜஸ்தான் மாநிலத்திலும் கிடைக்கின்றன என்றாலும், அவை சிவப்பு வண்ணங்களில்தான் கிடைக்கின்றன. தருமபுரி மாவட்டத்தில் கிடைப்பது போன்ற கருங்கற்கள் அல்ல.

கருங்கல் மெருகிடும் தொழில் பற்றியும், கருங்கற்களில் மெருகிட்டுச் செய்யப்படும் பொருள் பற்றியும் எல்லாருக்கும் தெரியுமளவில் இப்பொழுதுதான் விளம்பரமாகி வருகிறது. இந்நிலை வளர வளர இப்பொழுது



கிருஷ்ணகிரியிலுள்ள கருங்கல் மெருகிடும் நிலையத்திலிருக்கும் இயந்திரங்கள் இறக்குமதியானவை அல்ல. அவை உள்நாட்டிலேயே தயாரானவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மெருகிடப்படும் கருங்கற்களால் நினைவுக் கற்கள், தூண்கள், மாளிகையின் அலங்காரக் கற்கள், பெயர்க்கற்கள், திறப்புவிழா, கால்கோள் விழாக் கற்கள் மற்றும் பல்வகையான கற்களைத் தயார் செய்யலாம்.

ஒருமுறை மெருகிடப்பட்ட கருங்கல், பளபளப்புக் குறையாமல் இருநூறு ஆண்டுகள் வரை இருக்கும்.

ஆனால், கடப்பைக் கல்லில் மெருகிடுவது மிக விரைவில் பளபளப்புக் குன்றிவிடும். இந்த உண்மை எல்லாருக்கும் தெரியத் தொடங்கினால் கருங்கல் மெருகிடும் நிலையத்தின் வளர்ச்சி வியக்கத் தக்க வகையில் பெருகும்.








கிருஷ்ணகிரியிலுள்ள கருங்கல் மெருகிடும் நிலையத்தைப் போன்று தொழில் வணிகத் துறையின் சார்பில் மேலும் பல நிலையங்கள் தோன்ற முடியும்!

## நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670 - 52671
52672 - 52673

தந்தி : MONARCH

Sarath



CHETTINAD BRAND

உறுதிக்கும்
உழைப்பிற்கும்

## செட்டிநாடு சிமெண்ட்

எங்கும் கிடைக்கிறது.

தயாரிப்பாளர்கள் :

செட்டிநாடு சிமெண்ட்
கார்ப்பரேஷன் லிமிடெட்

6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1.
தந்தி : 'BESTCEMENT' போன் : 27256
பாக்டரி : புலியூர் (கரூர்), திருச்சி மாவட்டம்.
தந்தி : 'CEMENT' போன் : 144.



# நெய்வேலியும்...நமது நாடும்

**நெய்வேலி யூரியா:**
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரொஜன் கூட்டப்பட்ட உரம் தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைடு போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

**மின்விசை:**
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.

**கட்டிக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லிக்கோ**
வீடுகள், ஓட்டல்கள், பல்வேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகைவாத இந்தக் கரி சிக்கனமானது, திறம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.



**தார்ப்பொருள்கள்**
பல ரசாயன, பிளாஸ்டிக தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால், ஸைலினால், பாலிவாலெண்ட் உள்ளிட்டவை.

**நெகோலின்:**
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்த சக்தி மின்விசையையும் ஏற்கத் தக்க இன்சுலேட்டர்கள் முதலியவற்றை உருவாக்க ...

நெய்வேலி லிக்னைட்
கார்ப்பொரேஷன் லிமிடெட்,
நெய்வேலி—1

# செலவைக் குறைக்கும் உழவுக் கருவி—3



புன்செய் நிலக் களையெடுக்கும் பொறி

"இந்தா புள்ளே செங்கமலம் பருத்திக் காட்டுக்குக் களையெடுத்திட்டியா?'' என்று அதிகாரத்தோடு கேட்டார் சிறுநிலக்கிழார் சின்னசாமி.

''நாலு நாளா வெளியூரில் திரிஞ்சிப்புட்டு, வந்ததும் வராததுமா அதிகாரம் பண்ணுறியே மச்சான்?'' என்றாள் செங்கமலம்.

''அதிகாரம் பண்ணலே புள்ளே! காலத்தில் களையெடுக்கலேன்னா, கண்டு முதல் கொறஞ்சு போகும். அதனால் தான் கேக்கறேன்?''

''களையெடுக்கறதுக்குக் கூலியாள் கிடைக்கலே மச்சான்!''

''ஏனாம்?''

''கூலிக்கு வேலைக்கு வர்ர பொம்பளைங்கெல்லாம் சோளம், கம்பு, வரகு அறுவடைக்குப் போயிடுறாங்க. அந்த வேலைக்கு அதிகக் கூலி கிடைக்குதாம். அதுபோலக் கூலி கொடுத்தாத் தான் களையெடுக்க வருவாங்களாம்.''

''என்னா புள்ளே! அறிவில்லாமெ பேசறே! அதே கூலியை நீ கொடுத்துக் களையெடுக்கறது தானே!''

''களையெடுக்க ஒரு ஆளுக்கு ஒரு நாளைக்கு ஒண்ணரை ரூபா கூலி கேக்குறாங்க. ஒரு ஏக்கருக்கு 12 கூலியாள் வச்சுக் களையெடுக்கப் பதினெட்டு ரூபா வேணுமே! நீ கொடுத்துட்டுப் போனது பத்து ரூபா தானே!''

''ஒன்பது ரூபாயெக் கொண்டு அரை ஏக்கரில் களையெடுத்து இருக்கலாமே! உனக்கு அறிவே இல்ல புள்ளே!''

''இந்தா மச்சான்! எனக்கு அறிவில்லேன்னு அடிக்கடி சொன்னே, நான் எங்க அம்மா வூட்டுக்குப் போயிடுவேன்!''

''போவடி போவே!''

''பின்னே என்ன மச்சான்! நாலு நாளா நானே பருத்திக் காட்டுக்குக் களையெடுத்து அரை ஏக்கரை முடிச்சுட்டேன். என் கைகளைப்பாரு மச்சான்!'' என்று கூறிவிட்டுச் சின்னசாமியின் முன்னால் செங்கமலம் தன் கைகளைக் காட்டினாள்.

செங்கமலத்தின் கைகளில் கொப்புளங்கள் சிவந்து காணப்பட்டன. அதைக் கண்டதும் சின்னசாமி ''அடிப்பாவி! உனக்கேண்டி இந்த வேலை? கூலியாள் வைத்துக் களையெடுக்கச் சொன்னா, நீயேன்டி களையெடுத்தே?'' என்று வருத்தத்துடன் சொன்னார்.

''நாலா நாளு ரேடியோவிலே நம்ம கலைஞரு பேசினாரு! எல்லா வகையிலும் செலவைக் கொறச்சு சிக்கனப்படுத்துங்கன்னு. சேமிப்பில் ஒரு பகுதியை நாட்டுப் பாதுகாப்புக்கு மனமுவந்து கொடுங்கன்னு சொன்னாரு! அதனாலே நானும் இப்படிச் சிக்கனப்படுத்தினேன். அதைப் பாதுகாப்பு நிதிக்கு அனுப்பி வைக்கணும் மச்சான்!''

''பரவாயில்லே புள்ளே! உனக்குக் கூடப் புத்தி வந்துட்டுதே!''

''போ மச்சான்! கிண்டல் பண்றியே!''

''உண்மையாகத்தான் புள்ளே சொன்னேன்!''

''அது கிடக்கட்டும் மச்சான்! நீ போய் மீதி அரை ஏக்கரையும் களையெடுத்துட்டா, துட்டு மிச்சமாகும் மச்சான்! அதையும் பாதுகாப்பு நிதிக்கு அனுப்பிடலாம்''.

''கவலைப்படாதே புள்ளே! களையெடுப்பதற்காகவே ஒரு பொறி வாங்கியாந்துட்டேன். திண்ணையிலே இருக்கு, வா காட்டுறேன்'' என்று கூறிவிட்டு, வீட்டின் உள்ளே இருந்து திண்ணைக்கு வந்தார் சின்னசாமி.

அவரைத் தொடர்ந்து செங்கமலம் வெளியே வந்தாள். சின்னசாமி தான் வாங்கி வந்து வைத்திருந்த பொறியை எடுத்துப் ''பாத்தியா புள்ளே! இதுதான் புஞ்சை நிலக் களையெடுக்கும் பொறி'' என்றார்.

''இதென்ன மச்சான் இவ்வளவு உயரம் இருக்கு?''

''களைக்கொத்து வச்சுக்கிட்டு நீ முதுகு ஒடியக் குனிஞ்சுக்கிட்டே களையெடுக்க வேண்டியதில்லே! இனிமே இந்தப் பொறியைக் கொண்டு, நின்னுகிட்டே சுலபமா களையெடுக்கலாம்!''

''வேடிக்கைப் பேச்செல்லாம் வேண்டாம் மச்சான்! விளக்கமா சொல்லு!''

''வேடிக்கையுமில்லே! ஒன்னுமில்லே! உண்மையைத்தான் சொல்லுறேன். கேட்டுக்கபுள்ளே!

''சரி! சரி! சொல்லுமச்சான்!''

''இதோ பாரு! இந்தக் கைப்பிடிகளைப் பிடிச்சுக் கிட்டுப் பொறியை முன்னே தள்ளினு, பிறைவடிவத்தில் உள்ள மூன்று சக்கரமும் சுத்திச்சுத்தி முன்னே போகும். சக்கரத்திற்குப் பின்னுடி 2 முக்கோண வடிவக் கத்திகள் இருக்குப்பாரு. அவை நிலத்தையும், களைகளையும் கிளறி விடும். அந்தக் கத்திகளுக்குப் பின்னுடி பட்டையா கத்தி மாதிரி இருக்குதே, அதுக்குக் ''குண்டகா கத்தி'ன்னு பேரு. அது களைகளை வேரோடு செதுக்கிச் செதுக்கித் தள்ளிவிடும்.''

''அதுசரி மச்சான்! அந்தக் கத்தி பயிரை வெட்டிப் போடாது?''

''புத்திசாலித்தனமானகேள்வி கேட்டெ புள்ளே! இந்தப் பொறியை வரிசை வரிசையாக வெதச்சிருக்கிற வயலில் தான் பயன்படுத்தலாம். நாட்டு முறையிலே கையால் விதைகளை விசிறி வெதச்சிருக்கிற வயலில் இதைப் பயன்படுத்த முடியாது புள்ளே!''

''இதைக் கொண்டு ஒரு நாளைக்கு எவ்வளவு நிலத்திலே களையெடுக்கலாம்?''

''8 மணி நேரத்திலேகொறஞ்சது கால் ஏக்கரில் களையெடுத்திடலாம். கவுடு சூது இல்லாமெ, உண்மையா உழச்சா, இந்தப் பொறியைக்கொண்டு 8 மணி நேரத்தில் அரை ஏக்கரில் கூடக் களையெடுத்திடலாம். இதைச் சும்மாண்ணு நினைக்காதே புள்ளே! செலவைக் குறைக்கும் சிக்கனக் கருவி!''

''இதையெல்லாம் எப்படி மச்சான் தெரிஞ்சுகிட்டே!''

''கோயம்புத்தூர் போனேன் புள்ளே! அங்கே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்'ணு ஒண்ணு இருக்கு. என் சிநேகிதன் கூட, அதைப் பார்த்துட்டு வருவோமுன்னு போனேன். அங்கே ஒரு வயலில் இந்த மாதிரி பொறியைக் கொண்டு பருத்திக்குக் களையெடுத்துக்கிட்டு இருந்தாங்க. விசாரிச்சு வெவரம் தெரிஞ்சுக்கிட்டு, இதை வாங்கியாந்துட்டேன்''.

''இது எம்மா ரூபா மச்சான்?''

''அம்பது ரூபாய்!''

''ஏது மச்சான் அவ்வளவு பணம்?''


# பசுமைப் புரட்சிக்கும் பச்சைச் சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனுக உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியாவின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை, தொழில், போக்குவரத்து ஆகிய துறைகள் வளம் பெற அரும்பணி ஆற்றும் நிறுவனம் என்பீல்டு இந்தியா.



**தி என்பீல்டு இந்தியா லிமிடெட்**
**சென்னை-19**

FDSEI-15 TM

''பருத்தி வித்துப் பணம் இருந்தது. வாங்கியாந்துட்டேன்''.

''பணத்தைத் தெண்டம் பண்ணிபுட்டே மச்சான்! அம்பது ரூபாய்க்கு இதுவேலைசெய்யுமா?''

''என்னு புள்ளே! அப்படிக் கேட்டுப் புட்டே! வேணுமின்னு இப்பவே வா! வயலுக்குப் போய் களையெடுத்துக் காட்டுறேன்!'' என்று சின்னசாமி திண்ணையிலிருந்து எழுந்தார்.

''சரி வா மச்சான்! சந்தேகம் எதுக்கு? நேரிலேயே பாத்துடலாம்!'' என்று கூறிக் கதவைப் பூட்டிக்கொண்டு, செங்கமலம் வயலுக்குப் புறப்பட்டுவிட்டாள்.

துப்பாக்கியைத் தோளில் ஏந்திக்கொண்டு, எதிரியைத் தாக்க விரைந்து நடைபோடும் போர் வீரனைப் போல், சின்னசாமி, களையெடுக்கும் பொறியைத் தோளில் வைத்துக்கொண்டு கம்பீரமாக நடந்து கொண்டிருந்தார். அவரைப் பின் தொடர்ந்து செங்கமலம் சென்று கொண்டிருந்தாள்.

சின்னசாமியும், செங்கமலமும் பேசிக்கொண்டதைக் கேட்டுக்கொண்டிருந்த அக்கம் பக்கத்து வீட்டுக் காரர்களும், வேடிக்கை பார்ப்பதற்காக, அவர்களைப் பின் தொடர்ந்து சென்றனர்.

பருத்தி வயலை அடைந்தவுடன் திரும்பிப் பார்த்தார் சின்னசாமி. அப்பொழுதுதான் அவரைப் பின் தொடர்ந்து பலர் வருவதைக் கண்டார்.

புதுமையைச் செய்யப் போகிறோம் என்ற புத்துணர்வுடன், புன்செய் நிலத்தைக் களையெடுக்கும் பொறியின் கைப்பிடிகளைப் பிடித்துக் கொண்டு முன்னுக்குத் தள்ளினர். அப்பொறி முன்னேக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

துப்பாக்கிக் குண்டுகள் பட்டுத் துடித்து விழும் பகைவர்கள் போல், மண்ணில் வேரூன்றி நிலைத்திருந்த களைகள் வேருடன் செதுக்கப்பட்டு நிலைகுலைந்து விழுந்தன. சற்று நேரத்திலேயே பதினைந்து பருத்தி வரிசைகளில் களையெடுத்துவிட்டார்.

செங்கமலமும், மற்றவர்களும் களையெடுக்கப்பட்ட இடங்களில் களைகளைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தனர். களைகள் வேருடன் செதுக்கப்பட்டுக் கிடப்பது கண்டு வியந்தனர். தன் மச்சான் செலவைக் குறைக்கும் சிக்கனக் கருவியே வாங்கி வந்துள்ளார் என்று எண்ணிச் செங்கமலம் சிந்தை மகிழ்ந்து கொண்டிருந்தாள். அப்பொழுது சின்னசாமி செங்கமலத்தின் அருகே வந்து, ''களை எப்படி வெட்டப்பட்டிருக்குன்னு பாத்தியா புள்ளே! நம்ம வேலை முடிந்த பிறகு இதை வாடகைக்கும் கொடுத்துச் சம்பாதிக்கலாம் புள்ளே ! பணத்தைத் தெண்டம் பண்ணிப் புட்டேன்னு சொன்னியே! இப்ப என்ன சொல்றே?'' என்று கேட்டார்.

''நல்லாத்தான் களையெடுத்திருக்கு, ஆனு வரிசையா விதைச்சிருந்தா தானே இதாலே களையெடுக்கலாம் போலிருக்கு?'' என்ருள் செங்கமலம்.

''ஆமாம் புள்ளே! வரிசையில் விதைக்கணும் அல்லது நடணும். இல்லாட்டி இது பயன்படாது''.

''சரி வா மச்சான்! சாப்பிட்டு வந்து களையெடுக்கலாம்''.

''நீ போ புள்ளே! அரைமணி நேரத்தில் மீதியுள்ள வயலிலும் களையெடுத்துட்டு வந்துடுறேன்''.

''நாலைந்து பேரு சேர்ந்து கூட இதை வாங்கிப் பயன்படுத்தலாம் 'போலிருக்கே'' என்ருர் குறுநிலக்கிழார் குருசாமி.

''ஆமாண்ணே! அப்படியும் செய்யலாம்'' என்ருர் சின்னசாமி.

அதுவரை பேசாமல் கவனித்துக் கொண்டிருந்த பண்ணையார் பரமசிவம், 'ஏன் தம்பி! இது மாதிரி பொறி எனக்கு ஒண்ணு வேணுமே! யாருக்கு எழுதணும்?'' என்ருர்.

''உதவி வேளாண்மைப் பொறியாளர் (ஆராய்ச்சி), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-3 என்னும் விலாசத்துக்கு எழுதுங்க ஐயா! ஸ்டாக் இருந்தால் பணம் கட்டச் சொல்லுவாங்க. இல்லாட்டிப் பொறுத்திருக்கச் சொல்லுவாங்க. புதிதாச் செய்து கொடுப்பாங்க.''

''இப்பவே போய் எழுதுறேன் தம்பி!'' என்று கூறிவிட்டுப் பண்ணையார் பரமசிவம் விரைவாக வீட்டிற்குத் திரும்பினர். அவர் பின்னலேயே கூட்டமும் திரும்பியது. சின்னசாமி மீண்டும் களையெடுக்கும் பொறியைக் கொண்டு களையெடுத்துக் கொண்டிருந்தார். காலை வெய்யிலில், களைப்புடன் களையெடுத்துக் கொண்டிருக்கும் தன் மச்சானுக்குக் கஞ்சி கொண்டுவரச் செங்கமலம் வீடுநோக்கி விரைந்தாள்.

**அழகு வாய்ந்த அணை**

கிருஷ்ணகிரி வட்டத்தை வளப்படுத்த 1957-ல் தென்பெண்ணை ஆற்றுக்குக் குறுக்கே கட்டி முடிக்கப்பட்ட கிருஷ்ணகிரி அணை 3251 அடி நீளம் உள்ளது. அதில் 2340 அடி மண் அணை; 911அடி கல் கட்டட அணை; கொள் அளவு 241 கோடி கன அடி

மற்ற அணைக் கட்டுகளுடன் ஒப்பு நோக்க இது மிகப் பெரிய அணை அல்ல ; என்றாலும் அழகான அமைப்புடன் உறுதியாகக் கட்டப்பட்டுள்ளது.



## தருமபுரிக்கும் தாமஸ்மன்றோவுக்கும் உள்ள தொடர்பு!

தீவுத்திடலில் குதிரை மீது சிலையாக அமர்ந்துள்ள சர் தாமஸ் மன்றோவுக்கும் தருமபுரிக்கும் என்ன தொடர்பு? ஐதர் அலியின் காலத்தில் தருமபுரிப் பகுதிகள் மைசூர் ஆட்சியின் கீழ் இருந்தன. அதற்குப் 'பாரமகால்' பகுதிகள் என்று பெயர். கிழக்கே உள்ள கருநாடகப் பகுதிகள் மீது ஐதரின் படைகள் இவ்வழியாக அடிக்கடி படையெடுத்து வந்தன.

மைசூர்ப் போர்களின் முடிவில் 'பாரமகால்' சேலம் பகுதிகள் ஆங்கிலேயரின் ஆட்சிக்குள் வந்தன. அப்பகுதிகளின் ஆளுநராக ரீட் என்பவர் நியமிக்கப்பட்டார். அவருக்கு உதவியாளராக மன்றோ நியமிக்கப்பட்டார்.

பிரிட்டிஷ் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் எதேச்சாதிகாரமும், அகம்பாவமும் கொண்ட அதிகாரிகளே அதிகம். அவர்களில் மன்றோ மாறுபட்டு விளங்கினார். உள்நாட்டு மக்களிடம் அன்பும், பரிவும், மதிப்பும் காட்டி நேர்மையான நிருவாகம் புரிந்த ஒருசில பிரிட்டிஷ் அதிகாரிகளில் மன்றோவும் ஒருவர். மன்றோ தருமபுரியைத் தலைமையிடமாகக் கொண்டு சுமார் ஏழு ஆண்டுக்காலம் உதவி ஆளுநராகப் பணியாற்றினார். ரயத்துவாரி நிலச் சீர்திருத்தம் மன்றோவால் இங்குதான் முதன் முதலில் கையாளப்பட்டது.

தருமபுரியின் இயற்கை எழிலும், தட்ப வெப்ப நிலையும் மன்றோவை வெகுவாகக் கவர்ந்ததாகத் தெரிகிறது. மன்றோ தனது குறிப்புரை ஒன்றில், தருமபுரியில் தான்வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது நமக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய ஒன்றாகும்.

'' ஒரு பக்கம் அழகிய மலைக் காட்சி; இன்னொரு பக்கம் மாந்தோப்பு; இடையே நான் அமைத்த தோட்டம்; அங்கே நூறு அடி நீள அகலத்தில் என்னால் உண்டாக்கப்பட்ட அழகான குளம்; அதில் பத்துப் பன்னிரண்டு அடி ஆழத்தில் எப்போதும் தெளிந்த நீர்; புனலாடி மகிழ ஏற்ற குளம்; நான் வைத்த மா, ஆரஞ்சு முதலிய மரங்களில் கனிகுலுங்கும் காட்சி; தருமபுரியில் இருக்க நேரும் போதெல்லாம் தினமும் இந்த இடத்தில் ஒரு மணி நேரமாவது தங்கி மகிழ்வேன்; இந்த இடத்தை விட்டுப் பிரியும்போது, நெஞ்சாரப் பழகிய ஒரு பழைய நண்பனை விட்டுப் பிரியும் உணர்வு தான் ஏற்படுகிறது''.

தருமபுரிக்கும் மன்றோவுக்குமுள்ள தொடர்பின் நினைவுச் சின்னமாகத் தருமபுரியில் ஒரு கல்தூண் நாட்டப்பட்டுள்ளது. அதில் உள்ள கல்வெட்டில் மன்றோ பாரமகாலில் வருவாய்த் துறைக் கண்காணிப்பாளரின் உதவி அதிகாரியாக 1792 ஏப்ரல் முதல் 1799 மார்ச்சு வரை பணியாற்றியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்றோ, பின்னர் சென்னையில் புகழ் மிக்க ஆளுநராக ஆன போதும் தருமபுரியை அவர் மறக்கவேயில்லை. அதன் இயற்கை எழில் அவரை வெகுவாகக் கவர்ந்திருந்ததே அதற்குக் காரணம்!

### நான்கு மொழிகள் வழங்கும் நகரம்

தருமபுரி மாவட்டத்தின் வட கோடியில் உள்ள ஓசூர் பிரிட்டிஷ் ஆட்சியின் தொடக்கக் காலத்தில் இராணுவத் தளமாக இருந்தது. 1864 வரை ஓசூர், சேலம் மாவட்டத்தின் தலைநகராகவும் இருந்து வந்தது. ஓசூர் என்பது கன்னடச் சொல். புதிய ஊர் என்று அது பொருள்படும். இவ்வூர் பெங்களூரைப் போலவே தட்ப வெப்ப நிலை கொண்டது. வெய்யிலின் கொடுமை தெரியாது.

தமிழ், தெலுங்கு, கன்னடம், உருது ஆகிய நான்கு மொழிகளும் பயன்படுத்தப்படும் பகுதி ஓசூர்.

# ஜவ்வரிசித் தொழில்





**வே**றெந்த மாவட்டத்தைக் காட்டிலும் அதிகமாகச் சேலம், தருமபுரி மாவட்டங்களில் காணப்படும் தொழில் ஜவ்வரிசித் தொழில் ஆகும்.

கிராம மக்களுக்கு நல்ல வேலைவாய்ப்புக்களை அளிக்கக்கூடியதாக இத்தொழில் உள்ளது.

அரூரில் உள்ள ஒரு ஜவ்வரிசித் தொழிற்சாலையைப் போய்ப் பார்க்கிறோம். சின்னஞ் சிறிய தொழிற்சாலையாகக் கண்ணுக்குத் தெரிந்தாலும் ஏராளமான பேர் வேலை செய்வதால் அதைப்பற்றித் தெரிந்து கொள்வதில் இப்பொழுது நமக்கு ஆர்வம் அதிகமாகிறது. ஜவ்வரிசி செய்வதை முதல் கட்டத்திலிருந்து தெரிந்துகொள்ளத் துடிக்கிறோம்.

அந்த மாவு மில் உரிமையாளர்களும் நம்மை அழைத்துச்சென்று முதல் நிலையில் இருந்து கடைசி நிலைவரை ஒவ்வொன்றாகக் காட்டுகிறார்கள்.

சேலம், தருமபுரி மாவட்டங்களில் இத்தொழில் அதிகமாகக் காணப்படுவதற்குக் காரணம் அந்த மாவட்டங்களில் விளையும் குச்சிக் கிழங்குதான்— அதாவது மரவள்ளிக் கிழங்கு.

அங்குக் குச்சிக்கிழங்கு என்று சொல்லப்படும் மரவள்ளிக் கிழங்குதான் ஜவ்வரிசி செய்வதற்கு ஆதாரமானது.

செய்திருக்கும் குச்சிக் கிழங்கை ஜவ்வரிசி ஆலைக்குக் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். அவற்றை எடை போட்டு வாங்கிக் குன்றுகள் போலக் குவித்து வைக்கிறார்கள்.

கிராமப் பெண்களும், சிறுமியரும் கையில் கத்தியை வைத்துக் கொண்டு மரவள்ளிக் கிழங்கின் தோலைச் சீவுகிறார்கள். தோல் நீக்கப்பட்ட கிழங்குகளைப் பெரிய தொட்டியில் போட்டுத் தண்ணீரை ஊற்றி அவற்றின் மீதுள்ள அழுக்குகளை நீக்குகிறார்கள். அழுக்கு நீக்கப்பட்ட கிழங்குகள் இயந்திரங்களில் இட்டு அரைக்கப்பட்டுச் சாறாக எடுக்கப்படுகிறது. இப்படி மூன்று நிலைகளில் சாறுகள் எடுக்கப்படுகின்றன.

தோல் சீவ முடியாத சின்னஞ்





சிறிய குச்சிக்கிழங்குகளைக் கழுவி விட்டு நேரடியாகவே இயந்திரத்தில் கொடுத்துவிடுகிறார்கள். இப்படி இயந்திரத்தில் கொடுக்கப்பட்டு அரைக்கப்படும் கிழங்குகளின் பால் தனியாக வடிகட்டப்படுகிறது. வடி கட்டிய பால் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்கிறார்கள். அந்தப் பால் தனித் தனியாக உள்ள தொட்டிகளில் நிரப்பப் படுகின்றது.

மூன்று நாட்கள் கழித்து, வடிகட்டிய குழம்புகளைச் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபடுகிறார்கள். அந்தக் குழம்புகளில்உள்ள அழுக்குகளை நீக்கக் காலாலும் குச்சியாலும் கலக்கிவிடும் முறை இப்போது இல்லை. இதற்கு இயந்திரங்களையே இப்போது பயன்படுத்துகின்றனர். இப்படிக் கலக்குவதால் தண்ணீரின் மேலே அழுக்குகள் வந்து விடுகின்றன. அந்தக் குழம்புகளில் உள்ள மாவுப் பொருள்கள் மட்டும் அடியில் தங்கிவிடுகின்றன.

—இப்படி அழுக்கு நீக்கி, தண்ணீரையெல்லாம் வடிகட்டிய பின்னர், தொட்டியின் அடிப்பாகத்தில் குழம்புகளில் உள்ள மாவு பாறை பாறையாகப் படிந்து காணப்படுகிறது. அதை வெட்டி எடுத்துக் கொண்டு போய் மாவு அரைக்கும் இயந்திரங்களில் கொடுத்துப் பொடிப் பொடியாக அரைக்கிறார்கள். அரைத்து வரும் மாவுகளைச் சல்லடைக் கண்போல் உள்ள தட்டுகளில் விட்டுத் தேவைக்கேற்ற அளவில் பெரிய உருண்டைகளாகவும் அதாவது ஜவ்வரிசி வடிவமைப்பு பல்பு போன்றும் அதை விட மிகச் சிறிய அமைப்பிலும் தயார் செய்யப்படுகிறது. இந்த இரண்டு நிலைக்கும் உட்படாத மாவு வெளியே வருகின்றது.

இப்படி எடுக்கப்பட்ட ஜவ்வரிசி உருண்டைகளை, அடுப்பில் பெரிய இருப்புச் சட்டிகளை வைத்து வறுக்கிறார்கள். வறுத்த பின்னர் வெய்யிலில் காயவைக்கப் படுகிறது. காய வைத்தவுடன் எடுக்கப்படுவதுதான் முழுமையான ஜவ்வரிசி.

ஜவ்வரிசியைத் தேவையான மாநிலங்கள் அனைத்திற்கும் அனுப்பப்படுகின்றன. குறிப்பாக மேற்கு வங்கத்துக்கு ஏராளமாக அனுப்பப்படுகிறது. அங்குதான் ஜவ்வரிசியை விட மிகச் சிறிய அளவில் இருக்கும் ஜவ்வரிசிக் குருணைகளை உப்புமா செய்யவும். வேறு பலகாரங்கள் செய்யவும் பயன் படுத்துகிறார்கள்.

ஜவ்வரிசி செய்யப்படும்போது மீதப்படும் மாவைத் துணிஆலையினர், வாங்கிக் கொள்கிறார்கள். அது துணிகளுக்குக் கஞ்சிபோடப் பயன்படுகிறது.

ஜவ்வரிசி ஆலை குறிப்பிட்ட காலங்களில் மட்டும் இயங்குவதில்லை. ஆண்டு முழுவதும் இயங்குகின்றது. எல்லாப் பருவத்திலும் குச்சிக் கிழங்கு கிடைப்பதே இதற்குக் காரணம்.
இந்த ஜவ்வரிசி ஆலைகளால் சுற்று வட்டார விவசாயிகளுக்கும் அப்பகுதி மக்களுக்கும் ஆண்டு தோறும் வேலைவாய்ப்புக் கிடைக்கின்றது.

இப்படி எல்லாருக்கும் எல்லா வகையிலும் பயன் உள்ளதாக அமைந்துள்ள இத்தொழிற்சாலைகளில் பொருந்தப்பட்டிருக்கும் இயந்திரங்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியானவை அல்ல. நம் நாட்டிலேயே தயாரானவைதான்.

பார்ப்பதற்குக் கிராமக் கைத்தொழில் போன்று தோன்றினாலும் இது ஒரு பெரிய தொழில் என்பதில் ஐயமில்லை!

---

# தர்மபுரி மாவட்டத்தின் கனி வளங்கள்

தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் தமிழக அரசின் நிறுவனமாகக் கருங்கல் மெருகிடும் தொழிற்சாலை ஒன்று நல்லமுறையில் நடந்து வருகின்றது.

மூக்கனூர் செம்மனப்பள்ளியில் தனியார் துறையில் நடத்தப்படும் கருங்கல் மெருகிடும் தொழிற்சாலையில் தயாரான கற்களை மேலை நாடுகளில் பல்வேறு பணிகளுக்கும் பயன்படுத்துகிறார்கள். இதன் மூலம் அந்நியச் செலாவணி நம் நாட்டுக்குக் கிடைக்கிறது.

மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள இடங்களும், அப்பகுதிகளில் கிடைக்கும் கனி வளங்களும் பின்வருமாறு :—

**ஓசூர்** : இங்கு இயந்திரத்தின் மூலமாகத் தயாரிக்கப்படும் செங்கல் தொழிற்சாலை நிறுவ வாய்ப்புள்ளது. அதற்கு வேண்டிய களிமண் இப்பகுதியில் கிடைக்கிறது.

**தீர்த்தமலை**: இங்கு இரும்புக்கனிகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. சேலம் இரும்புத் தொழிற்சாலையைக் கஞ்சமலைப் பகுதியிலிருந்து விரிவுபடுத்தித் தீர்த்தமலை வரையில் கொண்டு வர வாய்ப்பினை ஏற்படுத்தல்.

கெலமங்கலம் : அஞ்செட்டி அதைச் சார்ந்த பகுதிகளில் உள்ள காடுகளில் உள்ள மூங்கில் மற்றும் மரப்பொருள்களைப் பயன் படுத்திக் காகிதத் தொழிற் சாலை தொடங்க வாய்ப்புள்ளது.

**பாரூர் அரசம்பட்டி மற்றும் மாரண்டஹள்ளிப் பகுதி** : இப்பகுதியில் தென்னை மரங்கள் அதிகம் உற்பத்தியாகின்றன. இவைகளைப் பயன் படுத்திக் கயிறு உற்பத்தி, மற்றும் தேங்காய் எண்ணெய், அதனைச் சார்ந்த வாசனைப் பொருள் தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க வாய்ப்புள்ளது.

போச்சம்பள்ளி : பழவகைகள்—குறிப்பாக மாம்பழம் மற்றும் திராட்சை உற்பத்தியாகின்றன. இவைகளைப் பதப்படுத்தி ஒரு பழ கைத்தொழிற்சாலை நிறுவலாம்.

**தனி மற்றும் டெங்கனிக்கோட்டைப் பகுதிகள் :** காப்பி, தேயிலைத் தோட்டங்களை உருவாக்க வாய்ப்புள்ளது.

ஓசூர்: பட்டு உற்பத்தியை மற்ற மாநிலங்களுக்கு விநியோகிக்கும் அளவுக்கு விரிவாக்க வாய்ப்புள்ளது.

கிருஷ்ணகிரியில் காந்தம், கன்கர் கல் வகைகள்; அரூரில் மாக்னடைட் காந்தம்; தருமபுரிப் பகுதியில் கொரண்டம் ஆகியவை குறிப்பிடத்தக்க கனிப்பொருட்களாகும்.

ஓசூரில் புகையிலை மற்றும் ஒயின் தொழிற்சாலைகள் நிறுவ வாய்ப்புகள் உள்ளன.

தருமபுரி மாவட்டத்திலேயே பெரிய ஏரி பாரூர் ஏரி; இது பாரூரில் உள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் மட்டுமல்ல; பிரிக்கப்படாத சேலம் மாவட்டத்திலும்—அதாவது சேலம் தருமபுரி மாவட்டங்களிலேயே பெரிய ஏரி இதுதான்.

சேலம் மாவட்டத்தில் மேட்டூரில் காவிரியில் அணை கட்டப்படுவதற்கு முன்னர் அதிகப் பரப்பளவில் தண்ணீரைக் கொண்டிருந்த ஏரி இதுதான்.

# தருமபுரி மாவட்டத்தில் மிகப் பெரிய ஏரி!



பாரூர் ஏரியைச் சுற்றியுள்ள இடங்களை மட்டும் பார்த்தவர்கள், தருமபுரி மிக வளமான மாவட்டம் என்பார்கள். அவ்வளவு வளமானது இப்பகுதி. காரணம் இந்த ஏரிதான்!



## ஆட்சித்தலைவர் உருவாக்கிய அழகு மாளிகை

சேலம் மாவட்டத்தின் கலெக்டராக ஓசூரில் இருந்து நிருவாகம் நடத்தி வந்த 'பிரிட்' என்ற பிரிட்டிஷ்காரர், இங்கிலாந்திலிருந்து தன் காதல் மனைவியை வரவழைப்பதற்காகக் கட்டிய கவின் மிகு மாளிகை பற்றிய செய்தி, சுவையானது.

பிரிட், தனது மனைவியை, ஓசூருக்கு வருமாறு அழைத்தபோது ''கெனில்வெர்த் போன்ற மாளிகை அங்கிருந்தால் வருவேன்'' என்று மறுமொழி தந்தாள் அந்த மங்கை. எப்படியும் தனது மனைவியை வரவழைக்க விரும்பிய கலெக்டர் அவ்வாறே ஒரு மாளிகை கட்டினார்.

'கெனில்வெர்த்காசில்' என்பது இங்கிலாந்திலேயே மிகப் பெரிய மாளிகைகளில் ஒன்று. ஏழு ஏக்கர் பரப்பில் அமைந்திருந்த அம்மாளிகை 12-ஆம் நூற்றாண்டில் உள்நாட்டுச் சண்டையின்போது அழிக்கப்பட்டது. அந்த மாளிகையின் எழிலான அமைப்பைக் குறித்து சர் வால்டர் ஸ்காட் தமது நாவலில் விரிவாக எழுதியிருக்கிறார். நாவலில் இருந்த வருணனைகளை வைத்து, பிரிட், அழகிய மாளிகையைக் கட்டி, இத்தாலிய பாணியில் கூரை போட்டு, சுற்றிலும் அகழி அமைத்தார். 1861 முதல் 1864 வரை நான்கு ஆண்டுக் காலம் கட்டட வேலை நடைபெற்றது. கட்டடம் முடிவடைந்த நேரத்தில் மாவட்டத் தலைநகர் சேலத்துக்கு மாற்றப்பட்டது. கலெக்டர் பிரிட், சேலம் செல்ல நேர்ந்தது. அவர் மனைவி வரவேயில்லை.

கவனிப்பாரற்றுக் கிடந்த இந்த மாளிகை 1950 வாக்கில் மாநில அரசினரால் ஏலம்போடப்பட்டது. டாக்டர் ப. வரதராஜுலு நாயுடு அதை ஏலத்தில் வாங்கி இரும்பு, மர வேலைப்பாட்டுப் பொருட்கள் ஆகியவற்றை விற்றுவிட்டார். கவின் மிகு மாளிகையின் எஞ்சிய பகுதி இடிந்த சுவராக நிற்கிறது.

புதிய

# MF நல்ல சேதி வந்துவிட்டது!

# காம்ப்ளெக்ஸ்

# 17-17-17




MF காம்ப்ளெக்ஸ் 17-17-17 எல்லா பயிர்களுக்கும் ஏற்ற சிறந்த உரம்.
MF காம்ப்ளெக்ஸ் 17-17-17ல் உள்ள சத்துக்கள் முழுதும் தண்ணீரில் கரையக் கூடியவை.
MF காம்ப்ளெக்ஸ் 17-17-17 சென்னைக்கு அருகில் மணலியில் உள்ள மதராஸ் பெர்ட்டிலைசர்ஸின் புதிய நவீன உரத் தொழிற்சாலையில் தயாராகிறது.
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் 14-28-14 MF காம்ப்ளெக்ஸ் யூரியாவையும் கூடத் தயாரிக்கின்றனர்.

**MF காம்ப்ளெக்ஸ் உரங்களும் யூரியாவும் கிடைக்கும் இடங்கள்:**

- ஷாவாலஸ் & கம்பெனி லிமிடெட்
- E.I.D.-பாரி லிமிடெட் ஆகியோரின் உர வியாபாரிகள்
- கூட்டுறவுச் சங்கங்கள்

**மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்**
மணலி, சென்னை



# ஒப்பில்லாத ஒகேனக்கல்

அகன்று விரிந்து, துள்ளிக் குதித்துத் தமிழகத்தில் பாயப் புகுகிறேம் என்னும் பூரிப்பில் வரும் காவிரியை 'வா'வென வரவேற்கும் பெருமை தருமபுரி மாவட்டத்திற்கு உண்டு. தமிழகத்தின் தொடக்கத்திலேயே காவிரி, காணக்காணத் தெவிட்டாத அழகுமிகும் அருவிகளை அமைத்துக் கொண்டது. அதுவே 'ஒகேனக்கல்' அருவியாகும்.

காவிரிக்குப் 'பொன்னி' என்ற பெயரும் உண்டு. அந்தப் பொன்னி அகமகிழ்ந்து 'கலகல'வெனச் சிரிக்கும் ஒலியை ஒகேனக்கல்லில் கேட்கலாம்; களிநடம் புரியும் அழகைக் கண்டு ரசிக்கலாம்.

'குற்றாலம்' என்று கூறும் போது அதன் 'அருவி'யே நம் கண்முன் காட்சி அளிக்கும். குளித்து மகிழ்வதற்குள்ள அதைக் 'குற்றால அருவி' என்பர். அதைப் போலவே நீராடிக் குளிக்க 'ஒகேனக்கல்' அருவி நம்மை அழைக்கிறது.

'ஒகேனக்கல்' என்பது கன்னடப் பெயர். அதற்குப் 'புகை படர்ந்த கல்' எனப் பொருள். காவிரி கற்பாறைகளில் மோதி, அருவியாய் இறங்கும் இடத்தில், நீர்த் திவலைகள் உண்டாகி, அதனுல் அங்குப் புகை மண்டலம் உண்டாகிறது.

ஒகேனக்கல்லில் காவிரியின் ஒருகரை தமிழக எல்லை; மறுகரை மைசூர் மாநில எல்லை; இதை எண்ணிப் பார்க்கும் போது 'நயாகரா நீர்வீழ்ச்சி' நினைவுக்கு வருகிறது. அது கனடா நாட்டிற்கும் அமெரிக்க, ஐக்கிய நாட்டிற்கும் எல்லையாக உள்ளது. அதுபோல் இங்கு ஒகேனக்கல்லில் காவிரி தமிழகத்திற்கும், கருநாடக மாநிலத்திற்கும் எல்லையாக உள்ளது. ஆனல், அருவி அமைந்துள்ள இடம் முழுக்க முழுக்கத் தமிழகப் பகுதியில்தான்.

ஒகேனக்கல் அருவியில் நீராடுவதற்குத் தகுந்த முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோர் தனித்தனியாகக் குளிப்பதற்கு வேண்டிய அமைப்புகள் செய்யப்பட்டுள்ளன. இரும்புக் கம்பிகள், இரும்பு வளையங்கள், கைப்பிடிச்சுவர்கள் முதலியன பாதுகாப்பிற்காகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளன. ஆற்றங்கரையில் இருந்து அருவிக்குச் செல்லச் சிமெண்ட் தரைப் பாலமும் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு நீராடி மகிழ வருவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வருகிறது. ஆடிப் பெருக்குப் பெருவிழா (ஆடி 18-ஆம்) நாள் அன்று இங்குத் திரளான மக்கள் நீராடி மகிழ்வர்.

உல்லாசப் பயணிகள் தங்குவதற்கெனப் பயணிகள் விடுதிகள் இங்கு உள்ளன. இருப்பினும், நவீன முறையில் புதிய பயணிகள் விடுதி அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ரூ. 5 இலட்சம் செலவில் அழகிய பயணிகள் விடுதி இங்கு விரைவில் கட்டப்பட இருக்கிறது. சமீபத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் அதற்கான அடிக்கல்லை நாட்டியுள்ளார்.

இந்த அருவி தருமபுரியிலிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. தருமபுரியிலிருந்து ஒகேனக்கல்லுக்குச் செல்லப் பேருந்து வண்டி வசதிகள் நிறைய உண்டு.

ஒகேனக்கல் அருவியில் குளிப்பது இன்பம் பயக்கும். அதற்கு முன்பு—ஒகேனக்கல் பயணமே நம் மனத்திற்குக் கிளுகிளுப்பையூட்டும். தருமபுரியிலிருந்து உந்து வண்டியில் பயணம் செய்து, பெண்ணுகரம் வழியாக ஒகேனக்கல்லை அடைய வேண்டும். பெண்ணுகரத்திலிருந்து ஒகேனக்கல் 15 கிலோ மீட்டர் தூரமாகும். இந்த 15 கிலோ மீட்டர் தூரமும் மலைப் பாதை இறங்கு வழியாகும். வளைந்து வளைந்து மலைப் பாதையின் வழியே செல்லும்போது பசுமையான காடுகளின் அழகைக் கண்டு செல்லலாம்.

காடுகள் நிறைந்த வானளாவிய மலைகள்—அவற்றின் இடையே 'கலகலவென'ச் சிரித்து ஓடும் காவிரியின் பொலிவு—அடுக்கடுக்காய் அமைந்துள்ள அருவிகளின் அழகு—இவையெல்லாம் நம் மனத்தை மிகவும் கவர்ந்து விடும். இத்தகைய அழகுமிகு அருவிகளும், அதன் சுற்றுப்புறப் பொலிவும் பலதிரைப்படங்களில் இடம் பெற்றுள்ளது. எத்தனை முறை பார்த்தால் என்ன? எத்தனைக் கோணங்களில் பார்த்தால் என்ன? காணக் காணத் தெவிட்டாதது அல்லவா ஒகேனக்கல் அழகு!

—மு. தொ. ஸ்டாலின்



# வள்ளலே என்றும் வாழ்க!

பாசொலி

பன்னிரண் டாண்டிற் கொன்றே
 பழுத்திடும் கரிய நெல்லிக்
கன்னல்சேர் கனியைச் சாரல்
 கல்லிடை வண்டு காக்க
மன்னவன் வீரம் மிக்கோன்
 அதியமான் வள்ளல் கண்டான்;
அன்னதன் பெருமை தேர்ந்தே
 அரண்மனை கொணர்ந்தான் வேந்தன்.

உண்டவர் இளமை குன்று
 ஊழியோ டூழி வாழத்
தண்டமிழ் போலச் செய்யும்
 தகைமைசால் கனியை வள்ளல்
கண்டவர் மகிழ உண்டு
 களித்திடும் நிகழ்ச்சி நேரம்
அண்டவே மகிழ்ந்தார் மக்கள்
 'அதியமான் வாழ்க !' என்றார்.

இன்புறு கனியை மன்னன்
 எடுத்தனன் ; மெல்லப் போந்தே
அன்புறு தமிழ்த்தா யாகும்
 ஔவையின் கரத்தி லீந்தான் ;
மன்பதை வாழச் செய்யும்
 வண்மைசேர் கனிதான் ஈதே
என்பதை அறியா ஔவை
 எடுத்ததை உண்டு விட்டாள்.

கனியதை உண்டார் சாவின்
 கையகத் தாகார் என்னும்
இனியதோர் உண்மை தன்னை
 எடுத்தவன் உரைத்த போது
நனிவுறு துன்ப முற்றாள் ;
 நடுங்கினாள் ஔவைப் பாட்டி
இனியெது செய்வோ மென்ன
 ஏங்கியே நின்ற காலை

" அன்னையே ! தமிழின் வாழ்வே
 அருந்தமிழ் நீதித் தாயே !
மன்னியே நீவிர் இந்த
 மலர்தலை உலகில் வாழின்
பன்னரும் கவிதை வெள்ளம்
 பல்லூழி பெறுவர் மாந்தர்
மன்னவன் ஒருவன் மாளின்
 மண்ணுல கிழப்ப தென்னே ?

என்றவன் உரைத்த போதில்
 எழுந்தனள் தமிழ்மூ தாட்டி
"குன்றெனும் புயமார் வள்ளால் !
 குணக்கடல் ! தமிழின் பண்பே !
அன்றலர் மலரைப் போன்றே
 அருள்முகம் காட்டும் கோவே !
என்றுமே தமிழைப் போல
 இனிமையாய் வாழ்க" வென்றாள் !






தமிழரசு ஜனவரி முதல் தேதி இதழ் கண்டேன். அந்துடன் தரப்பட்ட இலவச வெளியீடான '' வெற்றி நமதே'' ஒரு அருமையான இலட்சியச் சொற்கோவை. பாகிஸ்தானின் தோல்வியை இனம் காட்ட '' இவையாவும் இழப்பின் ஆரம்பம்தான். இழப்பின் முடிவு எதுவாக இருக்குமோ? ஒரு வேளை பாகிஸ்தானாகவே இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை '' என முதல்வர் கையாண்டிருக்கும் சொல்லோவியங்கள் அவரை மேலைநாட்டு 'Statesman' அரசியல்வாதிகளுக்குச் சமதையாக்குகிறது. முதல்வரின் சிறப்பு மிக்க சொற்பொழிவுகள் ஒரு தொகுப்பாகி நூல்வடிவம் பெற்றால் நல்லது. கவிஞர் வேழவேந்தனின் கவிதை என் உள்ளத்தைத் தொட்டது.

நா. காமராசன், சென்னை-14.

## சுவையான இனிப்பு

ஒரு ரொட்டியின் கதை சுவையாக இருந்தது. அதை விடச் சுவையாக இருந்தது நீங்கள் கொடுத்துள்ள '' வெற்றி நமதே '' இணைப்பு.

தரு. அன்பரசன், அவனியாபுரம்.

## இரட்டை நன்றி !

அநேக ஏடுகள் ஒரே ஒரு இணைப்பை மட்டும் உரிமையாக்கி வரும்போது, நீங்கள் ஜனவரி முதல் இதழுடன், முதல்வரின் '' வெற்றி நமதே'' நூலையும், தமிழரசு நாட்காட்டியையும் இணைத்துத் தந்திருக்கிறீர்களே, உங்களுக்கு இரட்டை நன்றி.

ஆர். பரமசிவம், பசுமலை.

## புதிய கோணம் !

'இயற்கையே மனிதனைப் பாராட்டுகிறது' என்னும் வகையில் கவிஞர் கா. வேழவேந்தன் அவர்கள் எழுதியிருக்கும் கவிதை புதிய கோணத்தில் அமைந்திருப்பது பாராட்டுக்குரியது.

கவியன்பன், கோவை.

## வாரியத் தலைவர் வாழ்க !

குடிநீர் வடிகால் வாரியத் தலைவரின் பேட்டிக் கட்டுரை, பல அரிய செய்திகளை எல்லாம் தொகுத்துக் கூறும் அரும் பெட்டகமாக அமைந்திருக்கிறது. முதல்வரின் செயல்திறனின் மறுபதிப்புத்தான் குடிநீர் வடிகால் வாரியம் என்பதை மிக மிகத் தெளிவாகக் கூறியிருக்கும் வாரியத் தலைவர் பாராட்டுக்குரியவர்.

ஏ. தணிகாசலம், பூவிருந்தவல்லி.

## முத்தான முதல்வர்!

சட்டப் பேரவையில் தமிழரசு மூலம் அதன் நடுநிலை பிறழா நன்னெறித் தன்மையும், அது கொண்டுள்ள ஒளிமய எதிர்காலக் கோட்பாடுகளும் முதல்வர் கலைஞர் அவர்கள் உரைத்த விடைகளால் நாமறியுமாறு துலக்கப்பட்டிருக்கின்றன. முதல்வரின் முத்துக்கள் ஒன்பதும் விலை மதிப்பற்ற நம் சொத்தாகும்.

சா. ஆ. கேசவன், இனாம் மணியாச்சி.

## சித்தம் நிறை சிறுகதை !

ஏர்முனையில் போர்முனை— சிறுகதைதான் என்றாலும், அது சித்தத்தில் நிறைந்து விட்டது.

ஏ. கே. செண்பகசுந்தரம், திருப்பரங்குன்றம்.

## வங்கமும்—சிங்கமும் !

வங்கதேசத்தைப்பற்றிய கட்டுரைகள் சுவையாக இருந்தன. வங்கத்தின் வரலாறும் வங்கச் சிங்கத்தின் வரலாறும் எங்கள் இதயத்தை நனைத்துவிட்டன.

இ. தங்கத்துரை, மானாமதுரை.

## அந்தநாள் அந்தமானின் இந்தநாள் எழில் !

அந்தமான் சென்று வந்த அரிசனநல அமைச்சரின் சிறப்புப் பேட்டிக் கட்டுரையைப் படித்தேன். அந்த நாட்களில் ஆயுட் கைதிகளின் வாழ்விடமாகக் காணப்பட்ட பூமி, இன்று மேன்மையடைந்து வருவதையும், அங்குப்பல நாட்டுமக்களும் விருப்பத்துடன் குடியேறுவதையும் அறிந்து மகிழ்கிறோம். அதிலும், குறிப்பாகத் தமிழ் மக்களின் அருந்தொண்டினால் அந்தமான் நிக்கோபர் தீவுகள் இன்னும் வளம்பெறப் போகின்றன என்பதை எண்ணும்போதே உள்ளம் பூரிக்கிறது.

ஜே. குமார், அம்பத்தூர்.

## பயனுள்ள பல் !

'முத்துப்பல் முறுவலிக்க' பயனுள்ள கட்டுரை. இதைப் படித்துக் கொண்டாலே போதும், பற்களைப் பாதுகாக்க முடியும் என்பது புரிகிறது.

மீனாமணாளன், மதுரை.

## எங்களுக்கும் வேண்டும்!

'நடமாடும் மருத்துவமனை எங்கள் ஊருக்கு எப்போது வரும் என்று ஏங்கிக்கொண்டிருக்கிறோம். விரைவில் அனுப்பி உதவுக.

—எம்.எஸ். கணேசன், நெல்லை.

தமிழ் நாட்டில் முதன் முதலாகத் தருமபுரி மாவட்டத்தில்தான் கரும்பு சாகுபடி செய்யப்பட்டிருக்கும் என்று தெரிகிறது.

அமிழ்தினும் இனிய கரும்பை அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் அரசனே தமிழ் நாட்டிற்குக் கொண்டுவந்து பரவச் செய்ததாக ஔவையார் பாடியுள்ளார். எனவே, தமிழ் நாட்டில் முதன் முதலாகத் தருமபுரி மாவட்டத்திலேயே கரும்பு சாகுபடி செய்யப்பட்டிருக்கும் என்று கருதுவதில் தவறில்லை.

தருமபுரி மாவட்டத்தில் ஆண்டு தோறும் சுமார் 2,816 ஹெக்டேர் (6955·52 ஏக்கர்) நிலப்பரப்பில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஆயினும் அந்த மாவட்டத்தில் இதுவரை சர்க்கரை ஆலையே ஏற்படாதிருந்தது, உழவர் பெருமக்களுக்குப் பெருங்குறையாக இருந்தது. ஏனெனில், கரும்பு பயிரிடும் உழவர் பெருமக்கள் வெல்லத்தின் விலை ஏற்றத்தாழ்வு காரணமாக அல்லலுற்று வந்தனர்.

## தருமபுரி மாவட்டத்தில் சர்க்கரை ஆலை

அவர்களின் குறை போக்க முன்வந்தது தமிழ்நாடு அரசு!

வெல்லத்தின் விலைச் சரிவினால் தொல்லையடையும் தருமபுரி மாவட்டத்தில் கரும்பு பயிரிடும் உழவர்களுக்கு நிலையான வருவாய் கிடைக்க இனிப்பான செய்தி ஒன்றை அறிவித்தது தமிழ்நாடு அரசு!

"ஆம்! தருமபுரி மாவட்டத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அமைக்கப்படும்" என்று தமிழ்நாடு அரசு அறிவித்த செய்தி, தருமபுரி மாவட்ட உழவர்களுக்கு இனிப்பான செய்தியாகவே இருந்தது.

செய்தி, செயல்படும் நிலைக்கும் வந்து விட்டது.

ஆமாம்! தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு என்ற இடத்தின் அருகில் உள்ள திம்மனஹள்ளி கிராமத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நிறுவப்பட்டு வருகிறது. ஓரிரு திங்களில் வேலை முடிந்துவிடும்!

இந்தத் தொழிற்சாலை உற்பத்தி செய்யத் துவங்கிய பின்னர் நாளொன்றுக்குச் சுமார் 1,250 மெட்ரிக் டன் கரும்பை அரைத்துச் சுமார் 140 மெட்ரிக் டன் சர்க்கரையை உற்பத்தி செய்யும்.

தருமபுரி மாவட்டத்தில் சராசரியாக ஏக்கருக்கு 30 டன் கரும்பு விளைகிறது. எனவே, தருமபுரி மாவட்டச் சர்க்கரை ஆலை முழு அளவில் செயல்பட சுமார் 2¼ முதல் 2½ இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு தேவைப்படுகிறது. இந்த அளவு கரும்பு கிடைக்கவேண்டுமானல் சுமார் 7,500 முதல் 8,000 ஏக்கர் நிலப்பரப்பில் கரும்பு சாகுபடி செய்ய வேண்டும். சர்க்கரை ஆலை துவக்கப்படுவதற்கு முன்பே, தருமபுரி மாவட்டத்தில் 6,955.52 ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யப்படுவதால், இந்தச் சர்க்கரை ஆலைக்குத் தேவையான கரும்பு எளிதில் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

இக்கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்குச் சுமார் 245 இலட்சம் ரூபாய் செலவாகும் என்றும், அதில் இயந்திர சாதனங்களுக்கு மட்டும் ரூபாய் 121 இலட்சம் ஆகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. அமைப்பு வேலை நிறைவுறும் தறுவாயில் உள்ள இக்கூட்டுறவுச் சர்க்கரை ஆலை சுமார் 180 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஏற்படுவதால் உழவர் பெருமக்கள் உயர்வுபெற வழி பிறப்பதுடன், பல்லாயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கவிருக்கிறது. பின்தங்கிய நிலையில் உள்ள தருமபுரி மாவட்டம் விரைவில் முன்னேற, இக்கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வழிவகுக்கும் என்பது திண்ணம்!

1971–72-ஆம் ஆண்டு கரும்பு அறுவைப் பட்டத்தில் தருமபுரி மாவட்டச் சர்க்கரை ஆலை செயல்படத் துவங்கும்.

தருமபுரி மாவட்டத்திற்குத் தற்பொழுது ஆண்டு தோறும் சுமார் 1,700 மெட்ரிக் டன் சர்க்கரை வழங்கப்படுகிறது. இத்தேவையை, விரைவில் செயல்படவிருக்கும் சர்க்கரை ஆலை 12 நாட்களில் உற்பத்தி செய்து கொடுக்கும் என்பது தருமபுரி மாவட்ட மக்களுக்கு இனிக்கும் செய்தியன்றோ!


மிருகக் கொழுப்பு
கலவாதது
முழுக்க முழுக்கத் தாவர
எண்ணெய்த்
தயாரிப்பு

கோபுரம் சோப்

பொங்கும் நுரை தரும்
பொலிவான வெண்மை!
தும்பைப் பூப்போன்ற
தூய்மையான சலவை!

தமிழ்நாடு
கதர் கிராமத்துறையின்
தயாரிப்பு




# ஏழு நிலை மாடம்

கோவை இளஞ்சேரன்

மலைக்குகை மாந்தனது முதல் வீடு; மரக்கிளை அவனது மறுவீடு. கிளைகளில் கழிகளைப் போட்டுப் பரண் கட்டி இடம் அமைத்துக்கொண்டது அவனது முதல் கட்டு இடம்—கட்டடம். மேலே தழைத்து வளர்ந்த தழைகளே அக்கட்டடத்தின் மேற்கூரை. கூர் என்பதற்கு மிகுதி என்பது பொருள். தழைகளை மிகுதியாக உடையது கூரை எனப்பட்டது.

மரத்திலிருந்து மண்ணில் இறங்கியது அவனது மறு கட்டடம். மரத்தின் உச்சி முதல் தழைத்து வளர்ந்த தழை, தாழ்ந்து பரவி மழைக்கும் வெய்யிலுக்கும் காப்பாய் அமைந்ததைக் கண்டே தமிழ் மாந்தன் கூரை கட்டக் கற்றுக்கொண்டான்.

நிலத்தில் தழைகளால் கூரை கட்டிப் பக்கங்களில் கழிகளை நட்டுச் சுவராக்கி முதல் இல்லம் கண்டான் தமிழன். இத் தழைக் கூரையை இலக்கியம் ''உவலைக் கூரை'' என்று குறிக்கும். உவலை என்றால் தழைக்கொத்து. தமிழர் நாகரீக மடைந்த காலத்தும் இந்த உவலைக் கூரை அமைக்கும் பழக்கம் இருந்தது.

போருக்குப் படையெடுத்துச் சென்று காட்டுப் பகுதியில் பாடிவீடு அமைத்துக்



...டுவர். அதன் கூரைக்குக் காட்டுத் தழைகளை வேய்ந்தனர். அதற்குள் மறவர் இரவில் ஒடுங்கி உறங்குவர் :

" . . . . . . . . . . . கடுங்கண் மறவர்
உவலைசெய் கூரை ஒடுங்க "

—என்று புறப்பொருள் வெண்பா மாலை என்னும் இலக்கண நூல் பேசுகிறது.

இதுபோன்ற உவலைக் கூரைப் பாடிவீடுகள் பல தெருவாக அமைந்தனவாம். வீடுகள் எதிர் எதிரில் வரிசையாகவும் ஒழுங்காகவும் இருந்தன என்பதை,

" உவலைக் கூரை ஒழுகிய (ஒழுங்குபட்ட)
தெரு "

—என்று 'முல்லைப் பாட்டு' பாடுகிறது.

இலையும் தழையும் வேயப்பட்ட கூரை இடங்கள் ' குரம்பை ' எனப் பெயர் பெற்றன.

" இலைவேய் குரம்பை " (மதுரைக் காஞ்சி) " புல்வேய் குரம்பை " (மலைபடுகடாம்) யாக வளர்ந்தது.

வெண்மையான வஞ்சிமரக் கொம்பு, காஞ்சிமரக் கொம்புகளைக் கழிகளாக்கி, நாணல் தட்டைகளை வரிச்சுக் கம்புகளாக நிரைத்துத் தாழை நாரால் கட்டித் தருப்பைப் புல் வேயப்பட்ட குரம்பையைப் பெரும்பாணாற்றுப்படை காட்டுகிறது.

' புல்வேய் குரம்பை'யை அடுத்துத் தினைத் தட்டை வேயப்பட்ட, " இருவி (தினைத் தட்டை) வேய்ந்த குறுங்காற் குரம்பை " (குறிஞ்சிப் பாட்டு) உருவாகியது. இன்றும் தினைத்தட்டை வேயப்பட்ட சிறு இல்லங்களைத் தமிழகத்துத் தென் மாவட்டங்களில் காணலாம்.





பின் ஓலைக் குரம்பை பிறந்தது. ஈச்ச ஓலை வேயப்பட்டது. ஈச்ச ஓலை முள்ளோடு கூர்மையாகத் தோன்றிய கூரை, முள்ளம் பன்றியின் முதுகுபோன்று இருந்ததாகப் பெரும்பாணாற்றுப்படை ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் உவமை கூறியுள்ளார். ஓலைகளில் அகலமான பனைமட்டை வேயப்பட்டது. பனை மட்டை நீர் கசியாமல் ஓடி வழிய ஏதுவாய் அமைந்தது. பனையோலை வேயும் பழக்கம் இன்றும் பெருவாரியாக இருப்பதைக் காண்கின்றோம்.

அடுத்து, வளமான தென்னையினது பழுத்து வாடிய மடலாம் ஓலையைக் கீற்றுகப் பிளந்து பின்னி வேயும் பழக்கத்தைக் கொண்டனர் :

" வண்தோட்டுத் தெங்கின் வாடுமடல்
வேய்ந்த . . . . . . உழவர்
தனிமனைகள் " [பெரும்பாணாற்றுப்படை]
உருவாயின

இவ்வாறு குறிஞ்சி மலையில் தொடங்கிய குகைக்கூரை, முல்லைக் காட்டில் இலை, புல், தட்டைக் கூரையாய் வளர்ந்து மருத வயலில் தென்னங்கீற்று வேய்ந்த கூரையாயிற்று.

பசிய தழைகளால் ஆகிய குரம்பை ' குடில் ' என்றும், உலர்ந்த ஓலைகளால் ஆகிய குரம்பை ' குடிசை ' என்றும் காலப்போக்கில் வழங்கப்பட்டன.

இதற்குமேல், பொருந்தி வாழ (மன் - பொருந்துதல்) மன்-ஐ, மனை எழுந்தது. இது இடம் பெயர்தல் இன்றி நிலைத்த இடம் ஆனமையாலும் (மன்-நிலைத்தல்) மனை என்றாயிற்று.

இம்மனை சுடுமண்ணும் செங்கற்களால் நிலைப்பாய் உயரமாகக் கட்டப்பட்டுச், " சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைகளாக " (மணிமேகலை) வளர்ந்தன.

இவை யாவும் வாழும் இடம் என்னும் பொருளில் இல்லங்கள் ஆயின. மருட்டும் விலங்குகள், மழை, வெய்யில், புறத்தே செய்



யும் தொழில் முதலியவற்றினின்றும் விடுவிக்கும் உறையுள் என்னும் பொருளில் வீடுகள் (விடு-விடல்-வீடு) எனப்பட்டன.

## மாளிகை தோன்றியது

சுற்றிலும் அடைக்கப்பட்டு வாயிலைக் கொண்டதாய் எழுந்து வளர்ந்த இல்லம் வீடு-மனை பலவகைப் பகுதிகளை உடையதாய் வளர்ந்தது. முன் மண்டபம், தெற்றி (திண்ணை), கூடம், தாய்க்கட்டு, அடுக்களை என வகை பெற அமைக்கப்பட்டு வானத்தை அளாவியதாய் உயர்ந்து எழுந்தது. உள்ளே காற்றுக்கு வழி வகுக்கப்பட்டது. மெல்லிய காற்றை வாங்கி நல்லோசையோடு தரும் சிறு சிறு புழைகள்-துளைகள் அமைந்தன. இதனை மாங்குடி மருதனார்,

'' வகைபெற எழுந்து வானம் மூழ்கிச்
சில்காற் றிசைக்கும் பல்புழை நல்லில் ''

—என்று விளக்கியுள்ளார். ' வானம் மூழ்கும் ' என்பதற்கேற்ப,

'' பருந்து இருந்து உகக்கும் பல்மான் நல்லில் '' என மதுரைக் காஞ்சி கூறுகிறது. நல்லில் பலவகை மாட்சிகளும் பெறத் துவங்கியது.

இத்தகைய நல்லில்லும் மனைகளும் சுண்ணம் பூசப்பட்டும், வண்ணம் தீட்டப்பட்டும் காட்சிக்கினியவையாகச், சுற்றுச்சுவர் பெற்று வளமனையாகவும், அகழியும் அரணும் பெற்று அரண்மனையாகவும் விளங்கின.

வெள்ளிபோன்று விளங்கும் வெண்மையான சுண்ணம்பு வாரிப் பூசப்பட்ட சுவர்கள் உருவாயின. நீலமணி போன்று திரண்ட உறுதியான தூண்கள் நிறுத்தப்பட்டன. செம்பாலே செய்யப்பட்டது போன்று நெடிய சுற்றுச் சுவர்கள் எழுந்தன. நல்ல அழகான பல பூங்கொடிகள் ஓவியமாகத் தீட்டப்பட்டன. மூல அறையாகக் கருவறை (இதில் இல்லுறை தெய்வங்கள் இடம்பெறும் போலும்) ஒன்று அமைக்கப்பட்டது. இவ்வாறாக உருவான '' காண்பின் நல்லில்லை '' நக்கீரர் நெடுநல்வாடையில் விளக்கியுள்ளார். இம்மனைகளில் ஒப்பனைகள் செல்வ நிலைக்கேற்பப் பெருகின.

ஒரு திண்ணையைச் சிலப்பதிகாரம் பின் வரும் கருத்தில் வண்ணிக்கிறது.

' மரகத மணியும் வயிரக்கல்லும்
அழுத்திப் பதித்த
ஆயப்பலகை ; அதன்மேல் பவளத்தால்
திரண்டெழுந்த தூண் ;
பசும்பொன் பட்டை பெற்ற திண்ணை
மேடை '

—இவ்வகைச் செல்வச் செழிப்புடன் எழுந்த மனை, ' மாளிகை ' எனப் பெயர் பெற்றது. இம்மாளிகையின் வாயிலில் பொன்பூண் கட்டிய யானைத் தந்தங்கள் இணைக்கப்பட்டு, ஒளிவிடும் பருத்த முத்துமாலைகள் தொங்க விடப்பட்டு மங்கலம் பொறித்த மகர தோரணம் மாலைகளாக வளைவில் கட்டப்பட்டிருந்தனவாம். இது '' நெடுநிலை மாளிகை '' எனப்பட்டது.

இம்மாளிகைகளின் முகப்பு கண்கவர் சிற்பங்களைக் கொண்டு விளங்கின. அச்சிற்பங்கள் வெண் சுதையால் சிற்ப வல்லுநர்களால் செய்யப்பட்டவை. உலகத்து உயிர்களுக்கெல்லாம் உவமை காட்டுவதுபோல் ஊர்வன முதலாகத் தேவர் வரை பல்வகைப் பிறப்பின் வடிவங்கள் பொம்மைகளாகச் செய்யப்பட்டு அமைக்கப்பட்டிருந்தனவாம். இவ்வாறு மணிமேகலையில் சாத்தனார் விளக்கியுள்ளார். இன்றும் செட்டிநாட்டில் நகரத்தார் மனைகளின் முகப்பில் இதுபோன்ற சுதைப் பொம்மைகள் அமைக்கப்பட்டுள்ளன.

வாயிற் கதவுகள் பல்வகைக் கலைத் தொழிலோடு மிக உயரமாய், நெய் பூசப்பட்டு,

'' புரைதீர்ந்து ஐயவி அப்பிய நெய்யணி நெடுநிலைக் '' கதவுகளாய் விளங்கின.

வெளிப்புறம் இத்துணை செல்வச் செழிப்பைக் காட்டுவதாய் வனப்போடு அமைக்கப்பட்டது என்றால் உள்ளமைப்புகளின் சிறப்பை உணர்ந்துகொள்ளலாம்.

மேற்கூரையாக வளைந்த மண் ஓடுகள் (சுடப்பட்டவை) வேயப்பட்டன. உள்ளே காற்று வருவதற்கு இரண்டு மண் ஓடுகளை



மாற்றிப் பொருத்தி மான்கண் போன்று பல அடுக்குகளாகச் சாளரம் அமைத்தனர். அந்த மான்கண் காற்று வரும் வழியானமை யால் ''மான்கண் காதலர் '' (கால்-காற்று; அதர்-வழி) எனப்பட்டது.

'' மான்கண் காதலர் மாளிகை இடங்கள்'' (சிலப்பதிகாரம்) புகாரில் பெருகியிருந்தன வாம்.

காலப்போக்கில் ஓடுவேய்ந்த மனை 'மச்சு' என்றும் குடிசை 'குச்சு' என்றும் வழங்கப் பட்டன

பரவலாக இடம் கொள்ளும் பாங்கில் மனை களையும் மாளிகைகளையும் கண்ட தமிழனது உள்ளம் உயரப் போக்கிலும் உயரத் தொடங் கியது. சுடுமண்ணும் செங்கல் கொண்டு உயரமான தூண்களை அமைத்து அந்த நெடுநிலைக்கந்தில் (கந்து-தூண்) தெய்வ உரு வங்களைப் படைத்தான். அது '' கடவுள் எழுதிய நெடுநிலைக் கந்து '' (மணிமேகலை) எனப்பட்டது. இவ்வாறு உயரமாக எழுந் தவை பலவும் '' நெடுநிலை '' என்று இலக்கி யங்களில் குறிக்கப்படுகின்றன. நெடுமை என்பது உயர வளர்ச்சியைக் குறிப்பது. 'நெடு நெடு என்று வளர்ந்தது' என்று வழக்கில் பேசுவதையும் அறிவோம். சில இடங்களில் நீட்சியையும் குறிக்கும். இந் நெடுமை முயற்சியை அடுத்து,

''சுடுமண் நெடுமதில் சுற்று '' (புறப் பொருள் வெண்பாமாலை) உருவாகியது. '' சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பாம் '' (பெரும்பாணாற்றுப்படை) உயரமான அரணைச் சமைத்தனர்.

அரிய சான்றோர்க்கும், அரசர்க்கும், கண வருடன் மாய்ந்த கற்புடைப் பெண்டிர்க்கும், இறந்தோரிற் சிறந்தோர்க்கும், சிறு தெய் வங்களுக்கும் கல்லறைகளும் கோட்டங் களும்,

''குறியவும் நெடியவும் குன்றுகண் டன்ன

சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்ட ''

மாம் கட்டடங்கள் எழுந்தன.

அந்நெடுநிலையாகவே மண்ணால் பூத உரு வங்களை அமைத்தனர். இக்காலத்தும், ஐயனார் பிடாரி கோட்டங்களில் மண்ணால் அமைக்கப்படும் நெடுநிலை வடிவங்களைக் காண முடிகிறது.





## மாடம் எழுந்தது

இவ்வாறு வான் நோக்கி உயர்த்திக் கட்டு வதில் தமிழனது எண்ணம் வளர்ந்தது. அவ்வெண்ணத்தால் 'மாடம்' என்னும் கட்டட அமைப்பு பிறந்தது.

தழையையும் புல்லையும் ஓலையையும் வேய்ந்து கட்டிய மனைகள் நிற்க, ஒன்றும் வேயாது கட்டிய '' வேயா மாடம் '' தோன் றியது. வேயா மாடத்தைத்

'' தட்டு ஓடு இட்டுச் சாந்து வாரப் பட்டது ''—என்று அடியார்க்கு நல்லார் விளக்கியுள்ளார். 'கற்றை முதலியவற்றால் வேயாது சாந்திட்ட மாடம்' என்பது நச்சினார்க்கினியர் விளக்கம். புகார் நகரம்,

'' வேயா மாடமும், வியன்கல இருக்கையும்,
மான்கண் காலதர் மாளிகை இடங்களும்'
கொண்டு திகழ்ந்தது.

மாளிகை வேறு; மாடம் வேறு; மாளிகை வேயப்பட்டும் வேயப்படாமலும் அமையும் வளமான நல்லில்லம்; மாடம் வேயப்படாத ஒட்டுக் கட்டடம். நம் வீட்டு முன்வாயில் நிலையில் இரு பக்கங்களி லும் விளக்கு வைப்பதற்காக இரு புரைகள் இருக்கும். அவற்றிற்கு 'மாடப்புரை' என்று பெயர். மாடங்கள் என்றே வழங்கு வோம். மேல் வளைவாக ஒன்றுகூடும் கட்டட அமைப்பே 'மாடம்' எனப்படும்.

அக்காலத்தில் ஓர் ஊரின் சிறப்பு மாடத் தாலும் குறிக்கப்பட்டது.

'' மாடம் ஓங்கிய மல்லல் மூதூர் ''—என் றார் நக்கீரர். மாடத்திற் சிறந்த ஊர் மதுரை. இலக்கியங்கள் மதுரையை மாட அடைமொழியுடன் குறிக்கின்றன :

'' மாட மதுரையும் பீடார் உறந்தை
யும் ''—சிலப்பதிகாரம்.

'' மாட மதுரையும் தருகுவன் ''
—புறநானூறு.

'' மாடமலி மறுகிற் கூடல் ''
—திருமுருகாற்றுப்படை

'' நான்மாடக் கூடல் மகளிரும் மைந்த
ரும் ''—கலித்தொகை.

'' மாடம் பிறங்கிய மலிபுகழ்க்கூடல் ''
—மதுரைக் காஞ்சி.

'நான்மாடக்கூடல்' என்பது மதுரைக்கு ஒரு சிறப்புப் பெயர்.

(தொடரும்)

# தொழு நோயைக் குணப்படுத்தலாம்!



**தொ**ழுநோய் மெதுவாக வளரும் ஒருநோய். பெரும்பாலோருக்கு அது மிகச்சிறிய அளவில், சில அறிகுறிகளுடன் ஏற்பட்டு, படிப்படியாக நாளடைவில் பெரும்பாலும் பல்லாண்டுகளுக்குப் பிறகுதான்—அதுவும் நோய் கண்டவரின் அசட்டையின் காரணமாக— நாம் காணும் முற்றிய, பயங்கரமான நிலையை அடைகிறது.

சொற்பமான அறிகுறிகளுடன் காணப்படும் ஆரம்ப நிலையிலேயே, நாம் சிகிச்சையைத் தொடங்கி பிறகும் கவனத்துடன் நடந்து கொண்டால் இந்நோய் முற்றிப் பயங்கரமாக மாறும் நிலையை நாம் தடுத்து விடலாம். அறிகுறிகள் கண்டவுடனேயே சிகிச்சையைத் தொடங்கினால் தான் சீக்கிரமாக மிக நல்லமுறையில் நோயை நீக்க முடியும்; வெறுக்கத்தக்க தோற்றமோ, விரல்கள் மடங்குவது, புண்கள் உண்டாகி ஆறாமல் இருப்பது ஆகியவை ஏற்படாமலிருக்கும். ஆரம்ப நிலையிலேயே, சிகிச்சை பெறாததனாலும், கவனமின்மையினாலும்தான் இந்நோய் முற்றிப் பயங்கர வெளித்தோற்றத்தை ஏற்படுத்துகிறது.

இரண்டு வகைகள்.

1. தொத்தும் வகை.
2. தொத்தாத வகை.

### தொத்தும் வகை

தோலைப் பற்றும் வகையைச் சேர்ந்த—அதாவது தொத்தும் தன்மையுள்ள—நோயின் ஆரம்ப **அறிகுறிகள் :—இந்த** வகை நோய் கண்டவர்களுக்கு லேசாக **சிவந்த தேமல்** போன்ற படைகள், சிறிது சிறிதாக உடலின் பல பாகங்களிலும் உண்டாகும்.

மேல் தோற்றம் :—படைகளில் எண்ணெய் பூசியதுபோல் சிறிது பளப்பளப்பு இருக்கும். படைகள் லேசாக உப்பினது போலக் (எழும்பி) காணப்படலாம். சருமம் சொர சொரப்பாக இல்லாமல் சாதாரணமாக இருக்கும்.

ஓரம் :—படைகள் வட்ட வட்டமாக இருந்த போதிலும், படைகளின் ஓரங்கள் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் இருக்காது. படையின் மத்திய பாகம் மட்டுமே மிகத் தெளிவாகத் தெரியும். ஓரம் போகப்போகத் தெளிவு குறைந்து படையில்லாத நல்ல தோலுடன் கலந்துவிடும்.

உணர்ச்சி :—இந்தப் படைகளில் அநேகமாக சருமத்தில் காணும் உணர்ச்சிகள் பாதிக்கப் படுவதில்லை.

உடலெங்கும் பரவிய தொத்து வகை—

குறிப்பிட்ட இடங்களில் தோன்றாமல் உடலெங்கும் பரவியுள்ள தொத்து வகை ஒன்று உண்டு. இது கண்ணுக்குத் தெரியாததாயிருக்கலாம். ஒரு விதப் பளபளப்பு, மினுமினுப்பு உடலெங்கும் தோன்றும். சூரிய வெளிச்சத்தில் உற்றுப் பார்த்தால் இது நன்றாகப் புலப்படும். இந்த வகை நோயைக் கண்டு பிடித்து ஆரம்பத்திலேயே சிகிச்சை செய்ய வேண்டியது அவசியம்.

நோய் முற்றினால் (ஆரம்பத்திலேயே சிகிச்சை பெறாமல் வியாதி முற்றினால்) அதிகப் பளப் பளப்பு ஏற்படும். உடம்பு பூராவுமே சிறிது வீங்கினாற்போலப் பருமனாகக் காணப்படும். புருவங்களின் மயிர்கள் உதிர்ந்து விடும்; உடலில் தடிப்புகளும், சிறு சிறு கட்டிகளும் உண்டாகலாம்; காதுகளும் கன்னங்களும் தடிப்பது, மூக்கு அமுங்குவது, புண்கள் உண்டாவது ஆகியவை வியாதி முற்ற முற்ற ஏற்படும்.

### தொத்தாத வகை

நரம்பைப் பற்றும் வகையைச் சேர்ந்த—அதாவது தொத்தாத—நோயின் ஆரம்ப அறிகுறிகள் :

இந்த வகையில் முக்கியமாக இரண்டு உட்பிரிவுகள் இருக்கின்றன. ஒன்று படைகளுடன் ஆரம்பிக்கும்; மற்றொன்று படைகள் எதுவுமின்றி உணர்ச்சிக் குறைவை ஏற்படுத்திக் கொண்டு உண்டாகும்.

### படைகளுடன் உண்டாகும் வகை

நிறம் :—இந்த வகைப் படைகள் சற்று லேசாக வெளுத்தோ தாமிர நிறமாகவோ இருக்கும்.

மேல் தோற்றம் :—ஒருவகைப் படையில் மேற்புறம் சருமத்தோடு ஒட்டியதாய், அல்லது மற்றத் தோலோடு சமமாய் இருக்கும். மற்றொரு வகையில் படைகள் சருமத்தை விட்டு எழும்பிக்கரடு முரடாகவும், சொர சொரப்பாகவும், தடித்தும் இருக்கும். சில படைகளில் நடுப்பாகத்தில் பாதிக்கப்படாத நல்ல சருமமும் காணப்படலாம். படைகள் சிறியவைகளாகவும் இருக்கலாம். அல்லது ஓரளவு பெரியவைகளாகவும் ஆரம்பிக்கலாம். படைகள் வறட்சியாக இருக்கும்.

ஓரம் :—இப் படைகளின் வரம்பு மிகவும் திட்டமாகத் தெரியும். படையில்லாத நல்ல தோலுக்கும் படைகளுக்கும் இடையே முடிவு கட்டினதுபோல் தெரியும். சில படைகளுக்கு அருகில் இருக்கும் நரம்புகள் தடித்துக் காணப்படலாம்.

**உணர்ச்சி :—** சாதாரணமாகச் சருமத்தில் தெரியக்கூடிய உணர்ச்சிகள்—பஞ்சினால் தொட்டால்



தெரிவது, ஊசியால் குத்தினால் வலிப்பது; வெப்பம், குளிர்ச்சி தெரிவது-இப்படைகளில் பாதிக்கப்பட்டு இருக்கும். ஊசியினால் குத்தினாலும், நெருப்பினால் சுட்டாலும் கூடத் தெரியாமல் இருக்கலாம்.

ஆனால், சில சமயங்களில் படைகளின் மீது திடீரென்று ஏதாவது அடிபட்டோலோ அல்லது விரலினால் பலமாகத் தட்டினாலோ அதிகவலி உண்டாகும்.

படைகளில் வியர்வை சுரக்காது. மயிர்க்கால்களும் விழுந்து விடலாம்.

### படைகள் இல்லாமல் ஆரம்பிக்கும் வகை

இதில் படைகள் எதுவும் ஏற்படாது. ஆனால், உடலில் முக்கியமாகக் கை, கால்களின் விரல்கள், பாதம் ஆகிய இடங்களில் எங்காவது உணர்ச்சிக் குறைவு ஏற்படும். வியர்வை உண்டாகாது; படிப்படியாக உணர்ச்சிக் குறைவு அதிகமாவதுடன், அதிக பாகங்களுக்குப் பரவவும் செய்யும். உணர்ச்சிக் குறைவின் காரணமாக அந்தப் பாகங்களைக் கவனக் குறைவோடு உபயோகப்படுத்துவதால் புண்கள் ஏற்படும். விரல்கள் மடங்கவும் குறையவும் ஆரம்பிக்கும்.

**வியாதி முற்றினால் :—** நரம்பைப் பற்றும் வகையைச்சேர்ந்த நோயிலும் ஆரம்பத்திலேயே சிகிச்சை பெறாவிட்டால் படைகளும், உணர்ச்சிக் குறைவும் அதிகமாகி உடலில் பல இடங்களுக்கும் பரவலாம். உணர்ச்சி இல்லாது போவதால் வலி தெரிவதில்லை. அதனாலும், கவனக் குறைவினாலும், கை, கால்களில் அடிக்கடி அடிபட்டோ, சூடுபட்டோ புண்கள் உண்டாகின்றன. அடிக்கடி அடிபடுவதாலும் புண்கள் உண்டாவதாலும் விரல்கள் மடங்குவதும் உள்ளே அமுங்குவதும் ஏற்படுகிறது. புண்கள் ஏற்படுவதால் விரல்கள் குறைந்தும் போகின்றன. நாளடைவில் வித்தியாசமான தோற்றம் உண்டாகிறது. நாட்பட்ட அல்லது அடிக்கடி ஏற்படும் புண்கள் சீக்கிரம் ஆறுவது இல்லை. ஆறினாலும் மிக எச்சரிக்கையாக இல்லாவிட்டால் திரும்ப வந்து விடுகின்றன.

### ஆரம்பச் சிகிச்சையின் அவசியம்

தொழுநோய் ஆரம்பிக்கும் பொழுதே பயங்கரமாகவும், விரல்கள் மடங்கிக் கொண்டும், புண்களை ஏற்படுத்திக் கொண்டும் உண்டாவதில்லை என்பதை ஒவ்வொருவரும் அறிய வேண்டும். சொற்பமாகச் சாதாரணமான சில அறிகுறிகளுடன் ஆரம்பிக்கும் வியாதிதான் இது. நோயாளிகள் ஆரம்பத்திலேயே சரியான சிகிச்சை பெறாததனாலும், அவர்களுடைய கவனக் குறைவினாலும் அங்கக் குறைவை உண்டாக்குவதாகவும், அதிகமான தொல்லை தருவதாகவும் மாறுகிறது.



முன்காலத்தைப் போனில்லாமல் இப்பொழுது நவீன சிகிச்சைக்கான வசதிகள் எல்லா மருத்துவமனைகளிலும் இருக்கின்றன. 'ஸல்போன்' என்னும் மருந்தின் மூலம் இவ்வியாதியை முளையிலேயே கிள்ளி எறிந்து விட முடியும்.

### தொழு நோயைக் குணப்படுத்த முடியும்

இவ்வியாதி கண்டவர்கள் தங்களுடைய பொன்னை உடலையும், கை, கால்களையும் எவ்விதக் கேடும் அடையாமல் பாதுகாத்துக்கொள்ள முடியும். ஏற்கெனவே நோய் முற்றிவிட்டவர்களும், தொத்து நீங்கி, மேலும் உடல் நிலை கெடாமல் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

நோயின் ஆரம்ப அறிகுறி தென்பட்ட உடனேயே விரைவில் குணப்படுத்திக் கொள்ளுங்கள். ஓரளவு நோய் முற்றிவிட்டவர்களும் உடனே முறையான சிகிச்சைக்குச் செல்லுங்கள். சிகிச்சை பெறாமல் நோயை மறைத்து வைப்பதே நோய் அதிகமாவதற்கும் நோய் பரவுவதற்கும் காரணம்.

நோயாளிகள் சாதாரணமாக ஆரம்பத்தில் தங்கள் நோயை மறைத்து வைக்கிறார்கள். சில சமயம் அறியாமையால் அப்படிச் செய்கிறார்கள். ஆனால், பலர் தங்களுக்கு நோய் கண்டிருக்கிறதென்று உணர்ந்தும், சமூக அவமானத்திற்குப் பயந்து அதை மறைக்கிறார்கள். இந்நோயின் ஆரம்பமும் அதற்குச் சாதகமாக இருக்கிறது. ஏனெனில், ஆரம்பத்தில் தொழுநோயில் வலியில்லை, காய்ச்சலில்லை. சின்னங்களும் அநேகமாக வெளிப்படையாகத் தெரிவதில்லை. ஆகையினால் பொதுமக்களில் ஒவ்வொருவரும் இந்த நோயின் உண்மைகளை நன்குணர வேண்டும். நோய் வந்தவர்களைக் கண்டு வீண் பயம் கொள்ளக்கூடாது. அவர்களை வெறுக்கவும் கூடாது. அவர்களிடம் அன்பு கலந்த அனுதாபம் காட்ட வேண்டும். சமூகத்தின் மனம் மாறினால்தான் நோய் வந்த நண்பர்கள் ஆரம்பத்திலேயே மருத்து

குணமடைவார்கள்.

இந்நோயில் இரண்டு வகைகள் உண்டு: ஒன்று தொத்துவது, மற்றது தொத்தாதது.

இந் நோய் பரம்பரையாக வரும் நோய் இல்லை. துர் நடத்தையால் ஏற்படும் நோயுமல்ல. தொத்தும் நோயுள்ள உற்றார் உறவினருடனோ அல்லது மற்றவர்களுடனோ சிறுவர்கள் நெருங்கிப் பழகுவதாலேயே ஏற்படுகிறது. நோய் தொற்றிய பிறகு ஆறு மாதம் முதல் பல்லாண்டுகள் வரையில் உடலில் மறைந்திருந்து பிறகு வெளிப்படலாம்.

## தொழு நோய்

தொழு நோய் என்னும் வார்த்தையைக் கேட்டாலே மனிதர்களுக்குப் பயங்கரமும் அருவருப்பும் ஏற்படுகிறது. மத்திய ஆப்பிரிக்காவிற்கு அடுத்தாற்போல் இந்தியா தொழு நோய்க்குத் தாயகமாக இருக்கிறது. சலுகையும் வசதியும் வாய்ந்த செல்வந்தர்களைப்போலவே தொழு நோயாளிகளும் சமூகத்தில் உரிமையுள்ள குடிமக்கள் ஆவர். ஆனால் வலுவும் வசதியுமுள்ளவர்களுக்கே சமூகம் சலுகை காட்டுகிறது. இவர்களுக்குச் சலுகை தேவையில்லை. ஆனால் இவர்களுக்குத்தான் நாம் சலுகை காட்டுகிறோம். துயரத்திலும், தேவையிலும் மூழ்கிக் கிடக்கும் தொழு நோயாளியை முழு மனத்துடன் புறக்கணிக்கிறோம். அகிம்சா தத்துவத்தையொட்டிப் பார்த்தால், இவ்வித நடத்தை ஈவு இரக்கமற்றது என்றே சொல்ல வேண்டும்.

—காந்தியடிகள்

புதிய 'ஸல்போன்' என்னும் மருந்தின் மூலம் இந்நோயின் கிருமிகளை அழித்து இந்நோயைக் குணப்படுத்த முடியும்.

விரல்கள் மடங்குவது, குறைவது, புண்கள் உண்டாவது ஆகியவைகள் ஏற்படாமல் தடுக்க முடியும். கை, கால்களில் வெட்டுக் காயம், சுட்டுக் காயம் முதலியவைகள் ஏற்படாமல் அவைகளைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

## வறண்ட மண்; வறண்ட வாழ்வு

"நம்முடைய சமூக அமைப்பில் பல நூற்றாண்டுக் காலமாகவே சில சக்திகளும் நிர்ப்பந்தங்களும் இயங்கி வந்திருக்கின்றன. இவற்றால், வளமான பகுதிகளில் சமூகத் துறையில் பிற்பட்ட நிலையிலுள்ள வகுப்பினர்கள் மிகத் தாழ்மையான, அருவருக்கத்தக்க தொழில்களை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தப் பெற்றிருக்கின்றனர்; அவர்களிலேயே பல்லாயிரக்கணக்கானவர்கள் நிலமற்ற வறண்ட பிரதேசங்களுக்கு விரட்டப்பட்டு, அங்கு பரிதாபத்துக்குரிய நிலையில் வாழ்க்கை நடத்த வேண்டியிருந்தது. இவ்வுண்மையை யாரும் எளிதில் புரிந்துகொள்ளலாம். இதற்கு வரலாறு பூர்வமான காரணங்கள் யாவை என்பதனை ஆராய வேண்டிய அவசியம் இங்கு இல்லை. தென் ஆர்க்காடு, தருமபுரி மாவட்டங்களில் உள்ள வட்டங்களில் படையாச்சிகளும், ஒட்டர்களும் வாழும் கிராமங்களையும், இராமநாதபுர மாவட்டத்தில் மறவர்களும் வலையர்களும் வாழும் கிராமங்களையும், கோயம்புத்தூர் மாவட்டம் அவினாசி வட்டத்திலுள்ள ஒட்டர்கள், வலையர்கள், தொட்டிய நாயக்கர்கள் வாழும் கிராமங்களையும், வட ஆர்க்காடு மாவட்டத்திலும், காஞ்சிபுரத்தின் சுற்றுப்புறங்களிலும் இருக்கும் கைக்கோளர்கள் வாழும் சில கிராமங்களையும் சென்று பார்த்தால் வளங்குன்றிய நிலப் பகுதிகளுக்கும் பிற்பட்ட நிலையிலுள்ள மக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்னும் உண்மை வெளியாகும்.

உயர் ஜாதி வகுப்பைச் சேர்ந்தவர்கள் மண்வளம் குறைந்த வறண்ட பகுதிகளுக்குச் சென்று நிலங்களை வாங்குவது எல்லாம், அங்கு குறைந்த விலைக்கு நிலங்களை வாங்கி அங்குத் தாழ்ந்த நிலையில் வாழும் மக்களின் மேல் ஆதிக்கம் செலுத்தும் நோக்கத்துடன்தான். வசதிபடைத்த இந்த மேல் சாதியினர் வறண்ட பகுதிகளுக்குச் சென்று குடியேறும்போது அப்பகுதிகளும் செழிப்படைகிறது என்பது உண்மைதான். வறண்ட பகுதிகளிலே இவர்கள் குழாய்க் கிணறுகள், பம்பு செட்டுகள் அமைத்து, சந்தையில் நல்ல விலை போகும் வாணிபப் பயிர்களை விளைவிக்கிறார்கள் என்பதிலும் ஐயமில்லை. ஆனால் இவர்கள் மேற்கொள்ளும் இத்தகைய நடவடிக்கைகள் மூலம் அங்கு வாழும் பிற்பட்ட மக்களுடைய பொருளாதார நிலை உயர்ந்திருக்கிறதா என்றால் இல்லை. அங்கு வசித்து வந்த பிற்பட்ட வகுப்பினர்கள் தங்களுடைய நிலவுடைமைகளைப் புதிதாக வந்தவர்களுக்கு விற்று விட்டார்கள். தங்களுக்குச் சொந்தமான பழைய நிலங்களிலே தாங்கள் கூலிகளாக வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்த நிலையில் இருக்கிறார்கள். தாங்க முடியாத அளவிற்குக் கடன் சுமை அவர்களுடைய தலையில் ஏறியிருக்கிறது. இந்த நிலையில், அடிமைத்தளையிலிருந்து அவர்கள் விடுபட வழியே இல்லை."

—தமிழ் நாடு பிற்பட்டோர் நலக் குழு அறிக்கைப் பகுதி

# கோவில்பட்டியில் பருத்தி வளர்ச்சி

— கே. எம். இராசு —

... மாவட்டம், கோவில்பட்டிப் பகுதியில் 1971-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திலிருந்து தீவிரப்பருத்தி பெருக்குத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் பருத்தி மகசூலை அதிகப்படுத்துவது ஆகும். கோவில்பட்டிப் பகுதியில் புன்செய்ப் பகுதியில் 50,000 ஏக்கரில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின்கீழ் ரூ. 20·3 இலட்சம் செலவிடப்படும்.

இத்திட்டத்தின்படி கோவில்பட்டிப் பகுதியில், கோவில்பட்டி, கயத்தாறு, விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம், குருவிகுளம் வட்டாரங்களில் 50,000 ஏக்கர்களில் பருத்தியைக் கட்டுக்கோப்புடன் பயிர்செய்யப் பல சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

**விதை :** இந்திட்டத்தின் முக்கிய நோக்கம், ஏக்கர் மகசூலை அதிகப்படுத்துவதே! இதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பருத்தி விதையின் மூலம் பருத்தி மகசூலை அதிகப்படுத்தலாம். இதற்கு அமெரிக்கன் பருத்தியைச் சேர்ந்த ''பாரதி'' (எம்.சி.யூ. 6) பருத்தி விதை இப்பகுதிக்குச் சலுகை விலையில் கொடுக்கப்படும். மான்யத்துடன் கொடுக்க ரூ. 30,000 இத்திட்டத்தில் பண ஒதுக்கீடு இருக்கிறது.

**மருந்து தெளித்தல் :** தேர்ந்தெடுக்கப்பட்ட 50,000 ஏக்கர்களில் விமானம் மூலம் மருந்து தெளிக்கப்படும். விமானக் கட்டணம் முழுவதையும் இத்திட்டத்தின் மூலம் அரசே கொடுத்து விடுகிறது. தெளிக்கும் மருந்துக் கிரயத்தில் பாதி மட்டும் உழவர்கள் கொடுக்க வேண்டும். விமானம் மூலம் மருந்து தெளிக்க ரூபாய் 7 இலட்சமும், மருந்துக் கிரயத்தில் பாதி கொடுக்க ரூ.4,50,000-மும் இத்திட்டத்தில் பண ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் முதல் தடவையாகவும், ஜனவரி மாதத்தில் 2-வது தடவையாகவும் மருந்து தெளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**உரம் :** இப்பகுதியில் சாகுபடியாகும் பருத்தி, மழையை நம்பிச் சாகுபடி செய்வதாகும். பல ஆண்டுகளில் பெய்யும் மழை பருத்திச் சாகுபடிக்குப் போதாது. ஆகையால் மானாவாரிப் பருத்திக்கு அடி உரம் அதிகம் இடுவதை விட, யூரியா உரத்தை 2½ சதவிகிதத்தில் தண்ணீரில் கரைந்து 3 தடவை தெளித்தால், அதிக மகசூல் கிடைக்கிறது என்பது கண்டறிந்த உண்மை. அதற்கு வேண்டிய, ஏக்கருக்கு 16 கிலோ யூரியாவைப் பாதி விலையில் கொடுக்க ரூ. 3,60,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**கருவிகள் :** மருந்து தெளிக்கும் கருவிகளை 25 சதவிதச் சலுகையுடன், ஒரு கருவிக்கு ரூ. 200-க்கு மேற்போகாமல் கொடுப்பதற்கு, ரூ. 10,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. கருவிகளும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. தவிர, தலைமை இடத்திற்கு 50 மருந்து தெளிக்கும் கருவிகள் வாங்கப்பட்டு நக்கின்றன. இவை உழவர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படும்.

**களைக்கொல்லி மருந்து :** மானாவாரிப் பருத்தியில் களை எடுப்பதற்கு உழவர்கள் அதிகம் செலவு செய்கிறார்கள். அதற்குக் களைக்கொல்லி மருந்தை உபயோகித்துக் களைகள் இல்லாதபடி செய்துவிட்டால், பருத்தியில் அதிக மகசூல் எடுக்கலாம். இதற்காகத் திட்டத்தில் ரூ. 10,000 இருக்கிறது.

**செயல்விளக்கப் பாத்தி :** ஒவ்வொரு 1,000 ஏக்கருக்கும் 100 ஏக்கர் எடுத்து அதில் அலுவலர்களின் நேரடிப் பார்வையில் பருத்திச் சாகுபடி செய்யப்படுகிறது. இதற்காக ஏக்கருக்கு ரூ. 80-க்கு மேற்போகாமல் விதை, உரம், மருந்து ஆகியவைகள் இனமாகக் கொடுக்கப்படுகின்றன. மேற்படிச் செயல்முறைப் பாத்திகளில் கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளைக் கையாண்டு அதிக மகசூலைப் பெறமுடியும் என்பதை நேரிடையாகக் காண்பிக்கிறார்கள். இதற்காக 50—100 ஏக்கர் செயல் விளக்கப் பாத்திகள் தேர்ந்தெடுத்துக் கட்டுக்கோப்புடன் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இதற்காக ரூ. 4 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மேலே சொல்லியபடி பருத்தியைக் கட்டுக்கோப்பு முறைகளின்படி சாகுபடி செய்யப் பல சலுகைகள் இத்திட்டத்தின் மூலம் பெறுவதால் உழவர்கள் இத்திட்டத்தை ஆர்வத்துடன் மேற்கொண்டு வருகின்றனர்.

**மான்யங்களின் விவரம்**

| | திட்டம். | அரசினர் அளித்துள்ள நிதி. ரூ. |
|---|---|---|
| 1 | பொறுக்கு விதை விநியோகம். | 30,000 |
| 2 | விமானம் மூலம் மருந்து அடித்தல் (விமானக் கட்டணம்.) | 7,00,000 |
| | மருந்துக் கிரயம். | 4,50,000 |
| 3 | யூரியா உரம் (தண்ணீரில் கரைத்துத் தெளிக்க). | 3,60,000 |
| 4 | கருவிகள் தலைமை யிடம் | 70,000 |
| | தனிப்பட்ட உழவர்களுக்கு. | 10,000 |
| 5 | களைக் கொல்லி மருந்து விநியோகம் | 10,000 |
| 6 | செயல் விளக்கப் பாத்தி அமைத்தல். | 4,00,000 |
| | | 20,30,000 |

இத்திட்டம் மூன்று ஆண்டுக் காலத்திற்குத் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.




## 13. யார் அந்தப் பெண்?

தன்னையும் முந்திக்கொண்டு மாதவனோடு இன்னொரு பெண்ணும் இப்படித் தன்னந்தனியாகப் பேசிக்கொண்டு நிற்பாள் என்று தேன்மொழி எதிர்பார்க்கவே இல்லை.

இனம் விளங்காத ஓர் உரிமை உணர்வு அவளுடைய இதயத்தை அப்படியே இறுக்கிப் பிசைந்தது.

அகலமான தெரு ஒன்றிலிருந்து பிரியும் ஒரு சந்தின் முடிவில்தான் மாதவன் குடியிருக்கும் மொட்டை மாடி வீடு அமைந்திருந்தது. அதன் வாசலில் நின்று பார்த்தால் தெருவிலே செல்லும் வண்டி, வாகனங்கள், மனித நடமாட்டம் எல்லாமே நன்றாகத் தெரியும்.

சந்திற்கு நேராக அல்லாமல் சற்றுப் பின்னாலேயே தெரு ஓரத்தில் தன் காரை நிறுத்திவிட்டு அந்தச் சந்தினுள் நுழைந்த போதே மாதவன் ஒரு மங்கையுடன் உரையாடுவதைப் பார்த்துவிட்டாள், தேன்மொழி.

இருவரும் வாயில் படிக்கட்டுகளில் நின்றவாறுதான் பேசிக்கொண்டிருந்தார்கள். இவள் வந்ததைக் கவனிக்கவில்லை.

ஆனால், இவள் அருகில் நெருங்குவதற்குள் அந்த ஏந்திழை மாதவனிடம் விடைபெற்றுக்கொண்டு திரும்பிவிட்டாள்.

இரண்டு தளிர்க்கொடிகளும் எதிரும் புதிருமாகவே இடித்துக் கொள்ளாத குறையாகச் சந்தித்துக் கொண்டார்கள். ஒருவரையொருவர் விழுங்கி விடுவதைப்போல, அவர்களுடைய விழிகள் விரிந்தன ; நிலைகுத்தி நின்றன. ஏதோ வியப்பின் உந்தலால் உதட்டுக் கதவுகளும் கூட வெண்முத்துப் பற்கள் வெளியே தலைநீட்டும் அளவுக்குச் சற்றே திறந்து கொண்டன. எனினும் வார்த்தைகள் உள்ளேயே ஒடுங்கி முடங்கிவிட்டன. முன்பின் அறிமுகம் இல்லை அல்லவா ?

ஆனால், '...... இவளை எங்கோ பார்த்தமாதிரி இருக்கிறதே !' என்கிற உள்ளுணர்வு தேன்மொழியின் நெஞ்சில் மெள்ளத் தலைநீட்டாமல் இல்லை.

அந்தப் புதியவள் சந்தோடு நடந்து தெருவிலே சங்கமம் ஆகி மறைகிறவரை அவளைத் திரும்பிப் பார்த்த வண்ணமே நின்றிருந்தாள் தேன்மொழி.

தன்னுடைய காதலனைத் தனக்குக் கணவனாக வரப் போகின்றவனைத் — தனியாக வந்து சந்தித்துப் பேச அவளுக்கு எவ்வளவு துணிச்சல் இருக்க வேண்டும், என்னும் புகைச்சல் எழுந்தாலும் அதனூடேயே அவளுடைய எளிமைக் கோலத்தின் தனிப்பொலிவு இவளது இதயப் பரப்பில் பதியத் தவறவில்லை.

ஈரம் பளபளக்கும் அடர்த்தியான மேகக் கூந்தல் ; இடுப்புக்கும் கீழேகூட நீண்டு தொங்கிய அது, முக்கோண முறம் போல நுனியில் மட்டுமே முடிச்சேறியிருந்தது ; அதன் உற்பத்தியிடத்திலோ ஒய்யாரமாய்ச் சிரித்தது ஒற்றை ரோஜாப் பூ ! காது மடல்களில் 'அசோகச் சக்கரத்தின் சுருக்கம்'—எனச் சொல்லத் தக்க சின்னஞ்சிறு தோடு ; வேறு நகையேதும் மின்னாத வெறுங் கழுத்து ; பச்சைப் பாம்பு நெளிந்து கிடப்பதுபோலச் சற்று அகலமான கரைஅமைந்த வெள்ளைப்புடவை; அதற்கு இணையான சுண்ணாம்பு நிறச் சோளி ; இமயம்போல இடர்ப்பாடுகள் வந்து அழுத்தினாலும் தன் இதயத்தை இடிந்து போக விடாத-பதறிச் சிதறாத— மெதுவான வாத்து நடை...

அவளுடைய அந்த எளிமையான தோற்றத்திலும் எழில் வழிந்தது ; கவர்ச்சி மிளிர்ந்தது.

* * *

தேங்கி நின்றுவிட்ட தேன்மொழியைக் கேலி செய்வதைப் போல மாதவனின் கனைப்புக் குரல் ஒலித்தது.

தன் நினைவு வந்தவளாக அவள் முகத்தைத் திருப்பினாள். குளிர்ந்த பார்வையும் குறும்புச் சிரிப்புமாய் மலர்ந்த முகத்தோடு நிற்கும் தன் காதலனை நோக்கி நடந்தாள்.

'' என்ன தேன்மொழி ! இவ்வளவு அதிகாலையில் எதற்கு நீ இந்தப் பக்கம் வரவேண்டும் ?'' —என்று மேலும் ஏதோ அவன் சொல்லி முடிக்கிறவரை தேன்மொழியால் பொறுமையோடு இருக்க முடியவில்லை ; படபடவென்று எதிர்க் கேள்விகளை எழுப்பத் தலைப்பட்டுவிட்டாள்.

'' ஏன், நான் வந்தது தப்பா ? நான் வரவே கூடாதா ? வேறே யார் யாரோ உங்களைத் தேடி வருகிறபோது எனக்கு மட்டும் அந்த உரிமை இல்லையா ? சொல்லுங்கள் : எனக்கு அந்த உரிமை இல்லையா?''

'' அய்யய்யோ ! நான் அதற்காகச் சொல்லவில்லை, தேன்

மொழி! உனக்கு இல்லாத உரிமை வேறு யாருக்கு என்னிடம் இருக்க முடியும்?.... ஓர் ஆளை அனுப்பி இருந்தால் நானே உன்னிடம் ஓடி வந்திருப்பேனே! உன்னுடைய நிலைமைக்கு இந்தச் சந்திலும் பொந்திலும் வந்து தொல்லைப் பட வேண்டாமே என்றுதான் சொல்ல வந்தேன்?''

''ஓகோ! உங்களை வந்து பார்ப்பதையே 'தொல்லை' என்று நினைக்கிற அளவுக்கு நான் அவ்வளவு மட்டமானவளாக ஆகி விட்டேனா?''

''அடாடாடா!.... நான் ஒன்று சொன்னால் நீ ஒன்று எடுத்துக் கொள்கிறாயே?''

''பின்னே என்ன? சந்தோ, பொந்தோ, சகதியோ, சாக்கடையோ—நீங்கள் எங்கே இருந்தாலும் அங்கே வந்து தீர வேண்டியதுதானே என் கடமை; கணவன் இருக்கும் இடந்தானே மனைவிக்குச் சொர்க்கம், என்கிறேன்?''

''எனக்கு அந்தச் 'சொர்க்கத்'தைப் பற்றியெல்லாம் தெரியவும் தெரியாது; அது எட்டாக் கனியாகப் போய்விடுமோ என்கிற ஏக்கமும் எனக்குக் கிடையாது. இந்த நேரத்தில் எனக்குத் தெரிகின்ற ஒரே சொர்க்கம் என் கண்முன்னாலே நிற்கின்ற நீ ஒருத்திதான்!'' —என்று நகைத்தான் மாதவன்.

''போதும், போதும்; இந்த மாதிரி 'ஐஸ்' (பனிக்கட்டி) வைப்பதற்கெல்லாம் நான் ஒன்றும் குளிர்ந்தும் விடமாட்டேன்-ஏமாந்தும் போகமாட்டேன்!'' —செல்லமாகச் சிணுங்கினாள் தேன்மொழி.

''அப்படி ஏமாற்றங்களையெல்லாம் தாங்கக்கூடிய உள்ளத் திண்மை உள்ளவர்களுக்கு ஏக்கமோ ஆத்திரமோ ஏற்படவே கூடாதே! அது போகட்டும். 'கணவன் இருக்கும் இடந்தானே மனைவிக்குச் சொர்க்கம்' என்றாயே, ஆனால் நாம் இருவரும் நாலுபேர் அறிய இன்னும் கணவன் — மனைவி ஆகிவிடவில்லையே!''

''அடி அம்மாடி! அதற்குள்ளே எல்லாமே மறந்து போச்சா? இன்னும் கொஞ்ச நாள் போனால், 'உன்னை நான் எங்கே பார்த்தேன்?'—என்று என்னையே மறந்து விடுவீர்கள்போல் இருக்கிறதே! எவளோ சகுந்தலை என்பவள் தன் காதலனால் கைவிடப் பட்டுத் தவியாய்த் தவித்தாளாமே; அவளுடைய கதிதானா எனக்கும்?''

''நீ என்ன சொல்கிறாய் தேன்மொழி?''

—திகைத்துப்போய்க் கேட்டான் மாதவன். இரவிலே தூக்க மாத்திரைகளை விழுங்கி விட்டு அந்த உறக்க மயக்கம் தெளியாமல் தான் இப்படி உளறிக் கொட்டுகிறாளோ என்கிற ஐயப்பாடும் வந்து விட்டது அவனுக்கு.

''நாம் முன்பு மைசூருக்குப் போனோமே; பக்கத்தில் இருக்கிற கண்ணம்பாடி அணைக்கட்டையும் பார்த்தோமே; அதாவது நினைவு இருக்கிறதா?''

''ஏன், அதை எப்படி மறக்க முடியும்?''

''அங்கே நாலுபேர் என்ன, நாற்பதுபேர் அறியவே நான் உங்கள் கழுத்திலே மாலை சூட்டவில்லையா? அப்போதே நான் உங்கள் மனைவியாக ஆகிவிடவில்லையா?''

### வறட்சிப் பகுதிகள்

தமிழ் நாட்டுக்கான நான்காவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை வரைவு, மாவட்டங்களின் பரப்பில் சுமார் 40·85 சத விகிதம் பரப்புள்ள 31 வட்டங்கள் தீராத வறட்சியினால் பாதிக்கப்பட்டவை என்றும், குறிப்பிட்டுள்ளன. எனவே அவை பொருளாதாரத்தில் பின்னடைந்த பகுதிகள் என்றும் குறிப்பிட்டுள்ளன.

தருமபுரி மாவட்டத்தில் அத்தகைய வட்டங்களின் விவரம் கீழே தரப்படுகிறது:—

ஒசூர்

கிருஷ்ணகிரி

அரூர்

தருமபுரி

''ஓகோகோ! நீ அதைச் சொல்கிறாயா?''—என்று வாய் விட்டுச் சிரித்தான் மாதவன்.

''ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்? சிந்தனைச் சிற்பிகள்—சீர்திருத்தச் செம்மல்கள் — என்றெல்லாம் நீங்கள் பெருமிதத்தோடு வழி படுகின்ற தந்தை பெரியார்—அறிஞர் அண்ணா ஆகிய இவர்களுடைய எண்ணப்படிக் கூட மாலை மாற்றிக் கொண்டாலே போதாதா? தாலி கட்டிக் கொண்டால்தான் 'மனைவி' என்கிற தகுதியை ஒருத்தி பெற முடியுமா? அதுவே போகட்டும்; எந்தக் கணத்தில் உங்களிடம் என் உள்ளத்தைப் பறிகொடுத்தேனோ—என் இதயக் கடவுளாய் உங்களை ஏற்றுக் கொண்டேனோ—அந்தக் கணமே நீங்கள் என் கணவராகி விடவில்லையா? நான் உங்கள் மனைவி ஆகி விடவில்லையா?''

''நீ சொல்வதைப் பார்த்தால் இப்போதே நாம் இருவரும் தேனிலவு கொண்டாடக் கிளம்பி விடலாம் போல் இருக்கிறதே?''—என்று சிரித்தான் மாதவன்.

''வேண்டாம், வேண்டாம். இப்போ தேய்பிறைக் காலம்; இருந்திருந்து விடி நிலவிலா நம்முடைய தேனிலவைத் தொடங்குவது? வளர்பிறை வரட்டும்; அப்போ நல்ல நிலவாப் பார்த்து.....?''

''பலே! பலே! நன்றாகக் 'கட்' அடிக்கிறாயே—(வெட்டிப் பேசுகிறாயே)! ஆனாலும் தேன்மொழி, நான் ஒன்று சொன்னால் நீ தவறாக எடுத்துக் கொள்ள மாட்டாயே?''

''இதுவரைக்கும் நீங்கள் சொன்னது எதைத்தான் நான் தவறு என்று தள்ளியிருக்கிறேன்?''

''நான், அதற்குச் சொல்லவில்லை, தேன்மொழி. நான் கூறப் போவதைக் கொஞ்சம் பொறுமையாகத்தான் கேளேன்; என்னைப் பொறுத்தவரையிலே காலக் கோளாறினாலோ வேறு எந்தக் காரணத்தினாலோ நீயே என்னைப் புறக்கணிக்க நேர்ந்தாலும்—ஒதுக்கித் தள்ளவே துணிந்தாலும் — என்னுடைய ஒரே ஒரு வாழ்க்கைத் துணை—வழித்துணை — எல்லாமே, நீ

ஒருத்திதான் என்பது எப்போதோ உறுதிப் படுத்தப் பட்டுவிட்ட உண்மை. ஆம்; என் மன மாடத்தில் ஏற்றி வைக்கப் பட்டுவிட்ட ஒரே விளக்கு—ஒளி விளக்கு—நீ ஒருத்தியே தான்! அதிலே சந்தேகமே இல்லை....''

''இவ்வளவு உறுதியாக என் மீது அன்பு வைத்திருக்கிறேன் என்று சொல்கிற நீங்கள், அப்பா வெளிநாட்டுக்குப் போன பிறகு என்னை ஏன் வந்து பார்க்கவே இல்லையாம்? எத்தனையோ முறை போனிலே கூப்பிட்டும் கூட ஏன் அப்படித் தட்டிக் கழிக்க வேண்டுமாம்? எல்லாப் பொறுப்புகளையும் அப்பா எப்போது உங்களிடம் ஒப்படைத்தாரோ, அப்போதே நீங்கள் எங்களுடைய வீட்டுக்கே வந்துவிட வேண்டியது தானே? இன்னும் எதற்கு இங்கே தனிக் குடித்தனம் இருந்து அவதிப்பட வேண்டும்? ஓட்டல்களில் உண வருந்தி உடம்பையும் ஏன் கெடுத்துக் கொள்ள வேண்டும்? . . . ஒவ்வொரு நாளும் உங்கள் முகத்தைப் பார்க்க மாட்டோமா—ஒரு வார்த்தை பேச மாட்டோமா—என்று நான் எவ்வளவு ஏங்கியிருக்கிறேன் தெரியுமா? எவ்வளவு துடித்திருக்கிறேன் தெரியுமா? உங்களுக்கென்ன . . . ?''

—சட்டென்று கண்ணீர் பொங்கிவிட்டது தேன்மொழிக்கு. விம்மிப் புடைக்கும் தேம்பலை அடக்க முடியாமல் திணறிப் போனாள் அவள்.

''அடாடாடா! இது என்ன பைத்தியக்காரத்தனமாக இருக்கிறது? எதற்கு இப்படிக் கண் கலங்குகிறாய்? நான் இப்போது எங்கே ஓடிவிட்டேன்? ஆனால், நீ எதிர்பார்க்கிற மாதிரி நான் உணர்ச்சி வசப்பட்டு உன்னுடனேயே வந்து தங்காததற்கு ஒரு காரணமும் இருக்கிறது. அதைக் கேட்டால் நீ இந்தமாதிரியெல்லாம் வருந்தவே மாட்டாய்''

''ஏன், என்ன காரணமாம்?''

''உன் அப்பா இருக்கிறாரே அவர் சாதாரணமான ஆள் இல்லை. அவர் வெளிநாட்டிலே எங்கோ எட்டி இருந்தாலும், நான் இங்கே என்னென்ன



செய்கிறேன்—எப்படி எப்படி நடந்து கொள்கிறேன்—என்பதையெல்லாம் வேறு யார் மூலமாவது தெரிந்து கொள்ளாமல் இருக்கவே மாட்டார். அவர் தான் உரிமை கொடுத்து விட்டாரே என்று நான்தான் எப்படி என் இச்சைப்படியெல்லாம் நடக்க முடியும்? நம்பித்தான் ஒருவரிடம் நம் உடைமைகளை ஒப்படைக்கிறோம்; பாதுகாக்கச் சொல்கிறோம். அதற்காகத் தோட்டத்துக் காவலாளி அங்கே தொங்குகின்ற, பழங்களையெல்லாம் சுவைக்கலாமா? வீட்டுக்குக் காவலாளி வெல்வெட்டு மெத்தையிலே போய்ப் புரளலாமா? தனியாக இருக்கும் பொழுதும் நான் உன்னிடம் முறையாகத்தான் நடந்து கொண்டேன் என்பது தெளிவாகத் தெரிந்தால்தானே உன்னை எனக்குத் தருவதற்கு உன் அப்பாவும் தயங்காமல் ஒப்புக் கொள்வார்? மேலும், அவர் ஊரில் இல்லாத வேளையில் உன்னோடு நெருங்கிப் பழகி அதன் மூலம் உன் அப்பாவுக்குள்ள குடும்பப் பெருமையைக் குலைக்கவும் நான் தயாராக இல்லை. அதனால் தான் இப்போது என்னை நானே சிறை வைத்துக்கொண்டு சித்திரவதைப் படுகிறேனே அல்லாமல், உன் அழகு முகத்தைப் பார்க்கவேண்டும்—அன்புக் குரலைக் கேட்க வேண்டும்—என்கிற ஆசை வெள்ளம் எனக்கு மட்டும் இல்லையா? ''

'' ஆமாம், இப்படியே நாம் எத்தனை நாளைக்குத்தான் இந்தச் ' சாமியார் ' வாழ்க்கை வாழ்வது? என் அப்பாவுக்கு நானே கடிதம் எழுதி உடனே வந்து நம் திருமணத்திற்குஏற்பாடு செய்யச் சொல்லட்டுமா? ''

''பொறு, பொறு ; அதற்குள் அவசரப்படாதே. அங்கே போன இடத்தில் அவருடைய நிலைமை எப்படி இருக்கிறதோ? கடை நிருவாகம் என்ன ஆயிற்றோ? அவற்றையெல்லாம் கவனித்து ஒழுங்குபடுத்த அவருக்கு ஆறு மாத காலமாவது தவணை வேண்டாமா? ''

'' அய்யய்யோ ! அவ்வளவு காலத்திற்கா நாம் இப்படித் தனிமையிலே அவதிப்படணும்?''

—பெருமூச்செறிந்தாள் தேன்மொழி.

'' உன் அப்பா உன்னை 'உணர்ச்சிக் குழந்தை!'—என்று சொன்னது சரிதான் போல் இருக்கிறது. ''

**மகசூல் போட்டியில் இரண்டாம் பரிசு!**

**அனைத்து இந்திய நிலையில் 1968-69, 1969-70-ஆம் ஆண்டிற்காக நடைபெற்ற திராட்சை மகசூல் போட்டியில் தமிழ் நாட்டிற்கு இரண்டாம் பரிசு கிடைத்துள்ளது. தருமபுரி மாவட்டம், அதிகனூர் என்ற ஊரைச் சார்ந்த காலஞ்சென்ற திரு. கே. எம். பொன்னுசாமி செட்டியார் அவர்களுக்கு அப்பரிசு கிடைத்துள்ளது. அப்பரிசுக்குரிய சான்றிதழும் ரூபாய் 2,000 மதிப்புள்ள அரசுக் கடன் பத்திரங்களும் திரு. பொன்னுசாமி செட்டியாரின் மகனிடம் கொடுக்கப்பட்டுள்ளன.**

—கண்ணைச் சிமிட்டிக் கேலியாகச் சிரித்தான் மாதவன்.

''ஆமா கொஞ்சம் முன்னாலே''

'' கொஞ்சம் முன்னாலே ..?''.

'' ம்....ஒன்னும் இல்லே·!''

'' ஏன் சொல்ல வந்ததை மறைக்கறே?''

'' நான் ஒன்றும் மறைக்கலே''

'' அப்போ நான் சொல்லட்டுமா, நீ என்ன கேட்க நினைத்தாய் என்று?''

''என்ன கேட்க நினைத்தேனாம்?

'' கொஞ்சம் முன்னாலே, ஒரு பெண் வந்து பேசிவிட்டுப் போனாளே, அவள் யார் என்று தானே நீ கேட்க நினைத்தாய்? ''

'' அவள் யாராக இருந்தால் எனக்கு என்ன? ''

—விட்டுக் கொடுக்காமல் பேசினாள் தேன்மொழி. அவளுடைய உதடுகள் அமுங்கிக் கோணல் வாய் காட்டி அலட்சியத்தை வெளிப்படுத்தின.

'' அவளைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆர்வம் இல்லாத மாதிரி நீ வெளி மப்புக்குப் பேசினாலும் உள்ளூர நீ என்ன நினைக்கக்கூடும் என்று என்னால் ஊகிக்க முடியும். அது இயற்கை தானே? தனது காதலியோடோ மனைவியோடோ இன்னொரு ஆடவன் கொஞ்சம் சிரித்துப் பேசினாலே ஆண்கள் கொதிப்படைந்து விடுகிறார்கள் இல்லையா? ; அத்தகைய உரிமை உணர்ச்சி Possessive Instinct தானே பெண்களுக்கும்இருக்கும்? ஆகையாலே, நானே யார் அந்தப் பெண் என்று உனக்குச் சொல்லி விடுகிறேன் ; ஆனால் இப்போது இல்லை ; ஏனென்றால், அலுவலகத்துக்குப் போக நேரமாகிவிட்டது ; இனிமேல் நான் குளித்து விட்டுச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு கிளம்ப வேண்டும்....வேறு ஏதாவது முக்கியமான சேதி உண்டா?''

'' எனக்குப் பொழுதே போக மாட்டேன் என்கிறது. இன்றைக்கு ஒரு நாளாவது உங்களோடு சேர்ந்து திரைப்படம் எதற்காவது போகலாமா என்று பார்த்தேன் ''

'' அய்யய்யோ! அதற்கெல்லாம் எனக்கு நேரம் ஏது?...... அதோடு இன்னும் ஆறு மாதம் போகட்டும் ; ஆமாம்....ஆறு மாதம்· ''

—மாதவன் சிரித்தான்.

தேன்மொழியும் முறுவலை இழைய விட்டு அவனது முக எழிலைப் பருகினாள்.

* * *

ஆனால், மாதவன் குறிப்பிட்ட காலத் தவணை வரை தேன்மொழிக்குப் பொறுமையோடு இருக்க முடியவில்லை. அடுத்த வாரமே தன் தந்தைக்குத் தனது நிலைமையைத் தெளிவுபடுத்திக் கடிதம் எழுதிவிடுவது என்று முடிவு செய்து விட்டாள்.

அதற்கு முன்னர் டாக்டர் பூங்கொடியின் அறிவுரைகளையும் கேட்டுக் கொள்வோமே என்று அவளது இல்லத்திற்குச் சென்றாள் தேன்மொழி.

அவளுடைய கார் தொலைவில் வந்துகொண்டிருக்கும் பொழுதே மாதவன் டாக்டரின் இல்லத்திற்குள் நுழைந்துகொண்டிருந்தான்.

அவன் நடந்து சென்ற மிடுக்கிலிருந்து அவனுக்கு ஏதாவது நோயாக இருக்கும் என்று அவளால் நினைக்க முடியவில்லை.

' ஒருவேளை என்னைப்போலவே அவரும் ஏதாவது கலந்து பேசப் போகிறாரோ?'—இப்படி எண்ணும் பொழுதே, எதிரே, தான் அன்று மாதவன் வீட்டில் பார்த்த மங்கை பரபரப்போடு வருவது தெரிந்தது. (வளரும்)

# அதியமான் கோட்டையில்



தருமபுரியிலிருந்து 9 கிலோ மீட்டர் தொலைவில் சேலம் செல்லும் சாலையில் உள்ளது அதியமான் கோட்டை. தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அதியமானின் கோட்டை இருந்த ஊர் இது என்று சொல்லப்படுகிறது. ஆனால். இப்பொழுது அங்கு கோட்டை இருந்ததற்கான எந்தவித அடையாளச் சின்னங்களையும் காண முடியவில்லை.

அதியமான் கோட்டையில் வாழும் பெரியவர்களிடம் அதியமானின் கோட்டைக்குரிய அடையாளங்கள் ஏதேனும் உண்டா என்று விசாரித்ததில், முன்பு கோட்டையாக இருந்த பகுதிகள் இப்பொழுது காடு கழனிகளாக மாறிவிட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால், அவர்கள் கூட எந்த இடத்தில் கோட்டை இருந்ததென்று சுட்டிக்காட்ட முடியவில்லை.

நம் கண்ணுக்கு, அதியமான் கோட்டையில் தெரியும் ஒரே ஒரு புராதனச் சின்னம் சென்றாயசாமி கோவில்தான்.

விஜயநகர மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட இக்கோவில் இப்பொழுது மைய அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் பொறுப்பில் உள்ளது. இக்கோவிலின் முக்கியச் சிறப்பு, கோவில் உட்புறத்தின் விதானத்தில் இராமாயண, மகாபாரத நிகழ்ச்சிகள் வண்ண ஓவியங்களாக எழுதப்பட்டிருப்பதுதான்.

இக்கோவிலில் இடிந்து கிடக்கும் பகுதிகளைச் செப்பனிட மைய அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையினரிடம் அனுமதி வாங்கி வெளிப்புற மதிற்சுவர்களைக் கட்டும் பணி இப்பொழுது தொடங்கப்பட்டிருக்கிறது.

அதியமான் கோட்டைக்குப் புதிய சிறப்பு அங்குள்ள பயணிகள் விடுதி, மாவட்ட ஆட்சித் தலைவர் குடியிருப்பு, மாவட்டக்காவல் துறைத் தலைவர் குடியிருப்பு முதலியன.

## தருமபுரியின் செழுமைக்கான மூன்று வளங்கள்

தருமபுரி மாவட்டத்தில் சமூகக் கட்டுப் கோப்பு நிலைமை ஏறக்குறையச் சேலத்தில் இருந்தது போலவே உள்ளது. வன்னிய குல க்ஷத்திரியர், மக்கள் தொகை அதிகம் உள்ள சாதியினராக இருக்கின்றனர். கன்னடம் பேசும் சாதியினரும்; தெலுங்கு பேசும் சாதியினரும் இவர்களுடைய பிரதிநிதிகளைத் தவிர, லம்பாடி, நரிக்குறவர், மலையாளி ஆகிய பழங்குடி மக்களின் பிரதிநிதிகளும் இக் குழுவைச் சந்தித்தார்கள். பெரிய சாதிகளின் சார்பில் பெருமளவில் பிரதிநிதிகள் வந்தார்கள். சேலத்தைக் காட்டிலும் பின்னடைந்து இருப்பதாகக் கருதப்படும் இந்த மாவட்டத்தில் பல்வேறு பிற்பட்ட சாதியினரும், பிற்பட்ட வகுப்பினர் அல்லாத சாதியினரும் கூடச் சேலம் மாவட்டத்தில் உள்ள தங்கள் சாதியினரைவிட அதிகம் பின்னடைந்தவர்களாக இருப்பதாகப் புலப்பட்டது.

இந்தப் புதிய மாவட்டத்தில் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எங்களுடன் பேசிய பல்வேறு மாவட்ட அலுவலர்களும், இம்மாவட்டத்தில் செழுமை ஏற்படுவதற்கு உரிய வழிவகைகள் குறித்துப் பயனுள்ள தகவல்களைத் தெரிவித்தனர். வனப் பொருட்கள் புகையிலை, முசுக்கொட்டை வளர்ப்பு ஆகியவை இந்த மாவட்டத்தின் செழுமைக்கு நல்ல முறையில் உதவக் கூடியவை. இந்த மூன்று ஆதார வளங்களையும் தீவிர முறையில் பெருக்கத் திட்டங்கள் செயல்படுத்தப்படுமானால் மாவட்டத்தின் பொருளாதாரம் கணிசமான அளவில் மேம்படும். இந்த மாவட்டத்தில் காடுகள் அதிகம்; வனத்துறையினர் இங்கு விதிக்கும் கட்டு திட்டங்கள் பற்றிப் பலர் குறை கூறினர். அது குறித்து மறு பரிசீலனை அவசியம். பலதரப்பட்ட விவசாயம், இந்த மாவட்டத்தில் குறிப்பிடத் தக்க அம்சமாக உள்ளது. பரவலாக இருபோக நெல் பயிராகியுள்ளது. நிலக்கடலை, இதர எண்ணெய் வித்துக்கள், ராகி ஆகியவையும் பரவலாகப் பயிரிடப்படுகின்றன. முட்டைக் கோஸ், காரட், உருளைக்கிழங்கு முதலிய காய்கறிகள் பயிரிடவும் பொருத்தமான மண் வளம் இருக்கின்றது.

இந்த மாவட்டத்தின் பொருளாதார நிலை குறித்துத் தனி ஆய்வு மேற்கொண்டால், பெரிதும் பயனுடையதாக இருக்கும்.

*-பிற்பட்டோர் நலக்குழு அறிக்கை*

# போக்குவரத்துத் துறையில் புதிய வரலாறு



நிறுவனம் திறம்பட நடக்க வேண்டும்; அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும்; அப்போதுதான் சீரமைப்புள்ள நிருவாகம் கிடைக்கும் என்னும் அடிப்படையில் தமிழ்நாட்டுப் போக்குவரத்தில் அமைக்கப் பெறவிருக்கும் நான்கு போக்குவரத்துக் கழகங்களில் முதலாவதும் பெரியதுமான பல்லவா போக்குவரத்துக் கழகத்தை 3—1—1972-ல் முதல்வர் கலைஞர் அவர்கள், போக்குவரத்து அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் துவக்கி வைத்தார்கள். இதன் அடையாளமாக, ரூ. 38 ஆயிரம் செலவில் இருக்கை வசதிகளும், பிற வசதிகளும் கொண்டதாகப் பல்லவா போக்குவரத்துக் கழகத்தினர் கட்டி முடித்து அரசுக்கு அளித்த பேருந்து ஒன்றை முதல்வர் கலைஞர் அவர்கள் வெள்ளோட்டம் விட்டார்கள்.

''போக்குவரத்துத் துறையை நாட்டுடைமையாக்கும் திட்டம் இன்று நேற்று முளைத்ததல்ல—பொதுப்போக்குவரத்து சமுதாயத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றென்பதால் அதனைத் தனியார் துறையில் விட்டு வைக்க இயலாது என்ற கருத்து 50 ஆண்டுகளுக்கு முன்னமேயே ஏற்றுக்கொள்ளப் பட்டதாகும்.

பேருந்துகளை நாட்டுடைமை யாக்கும் கருத்து, இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழகத்தில்தான் அரும்பியது என்று நாம் பெருமையோடு கூறிக்கொள்ள முடியும்.

இந்தியா சுதந்திரம் பெற்ற பின், 1948-ல் சென்னை நகரப் பேருந்துகள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டன. தொடர்ந்து மாநிலத்தின் இதரப் பகுதிகளுக்கும் இது விரிவு படுத்தப்பட்டது.

1957-ல் 512 பேருந்துகளைக் கொண்டிருந்த 'தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறை' 1971-ஆம் ஆண்டு 2,212 பேருந்துகளைக் கொண்டதாக வளர்ந்தது. 1971-ஆம் ஆண்டு நிறைவேறிய தமிழ்நாடு பேருந்து நடத்துவோர்—பொதுப் பேருந்துச் சட்டம் 50 அல்லது அதற்கு மேலும் வைத்து நடத்தும் நிறுவனங்களை நாட்டுடைமையாக்க அரசுக்கு அதிகாரம் அளித்தது.

இப்பொழுது, 10 வழித் தடங்களுக்கு மேல் இருக்கக் கூடாதென்னும் உச்சவரம்பும், 50 பேருந்துகளுக்கு மேல் யாரும் வைத்திருக்கக் கூடாது-அப்படி வைத்திருந்தால் அவை நாட்டுடைமையாக்கப்படும் என்னும் நிலையும் உருவாகியுள்ளன.

இந்தத் திட்டத்தின்படி, இப்பொழுது தமிழ்நாடு அரசு செலுத்தியுள்ள 10 கோடி ரூபாய் பங்குத்தொகையை மூலதனமாகக் கொண்டு, பல்லவா போக்குவரத்து நிறுவனம் இயங்கும்.

பேருந்துகளை நாட்டுடைமை யாக்குவதென்பது தனியார் துறையைச் சீரழிக்க வேண்டுமென்பதற்காக அன்று-வெறும் இலாப நட்டத்தை மட்டும் கருதாமல் பொது மக்களின் வசதியையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலேயே மாறுதல்கள் செய்யப்படுகின்றன; பேருந்துகளை நாட்டுடைமையாக்குவதன் மூலம் அங்குப் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு முன்பிருந்த வசதி வாய்ப்புகள் கிடைக்குமா என யாரும் ஐயப்படவேண்டியதில்லை; அவர்கள்

பல்லவா போக்குவரத்துக் கழகம்
PALLAVA TRANSPORT CORPORATION

இதுவரை பெற்றுவந்த எந்தச் சௌகரியமும் கைவிடப்படாமல் மேலும் வசதிகள் செய்து தரப்படும்'' என்ற தெளிவான-உறுதியான விளக்கத்தை முதல்வர் கலைஞர் அவர்கள் தொடக்க உரையில் அளித்துள்ளார்கள்.

''நாட்டுடைமையான பேருந்துகளைச் சிறந்த வணிக நெறி முறைகளின்படித் திறமையோடும் சிக்கனத்தோடும் நடத்தவேண்டும்'' என்னும் கருத்தில்தான் முதன் முதலாகப் 'பல்லவா போக்குவரத்துக் கழகம்' துவக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, பாண்டியன்-சேரன்-சோழன் ஆகியோர் பெயர்களிலும் போக்குவரத்துக் கழகங்கள் அமையவிருக்கின்றன. இப்படிப் பெயர்கள் வைக்கப்படுவதற்கான காரணத்தை முதல்வர் கலைஞர் அவர்கள் விளக்குகையில், ''பெயர்கள் வைப்பதுதான் வேலையா? என்று கேட்பவர்களைப் பற்றி நாங்கள் அறியாமலில்லை. ஆனால், அதைப்பற்றியெல்லாம் கவலைப்பட்டால் வரலாற்று உண்மைகள் மடிந்துவிடும்-சரித்திரத்தின் சுவடுகள் நிச்சயம் அழிந்துவிடும். ஆகவேதான், இப்படிப்பட்ட மன்னர்களின் பெயர்களை நினைவுபடுத்துவதன் மூலம் நமக்கென்று ஒரு சரித்திரம்-நமக்கென்று ஒரு தனிப் பாரம்பரியம் உண்டு என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இது போன்ற பெயர்களை வைக்கிறோம்'' என்று குறிப்பிட்டார்கள்.

பல்லவா போக்குவரத்துக் கழகம் சென்னை-செங்கற்பட்டு மாவட்டப் பகுதியில் கிட்டத்தட்ட நாள் ஒன்றுக்கு 11 லட்சம் பயணிகளுக்குப் பயன்படும் வகையில் 294 வழித்தடங்களையும் 1,314 பேருந்துகளையும் கொண்டியங்கும். இந் நிறுவனத்தின் ஒருநாள் வருமானம் சுமார் 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை-செங்கற்பட்டுப் பகுதிகளில் அரசுப் போக்குவரத்துக்குச் சொந்தமான எல்லாச் சொத்துக்களையும் பல்லவா போக்குவரத்துக் கழகம் மேற்கொள்ளும். இப்பகுதியில் பணிபுரியும் அரசுப்போக்குவரத்து ஊழியர்கள் அனைவரும் இக் கழகத்தில் பணியாற்ற அரசினால் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களாகக் கருதப்படுவார்கள். பல்லவா போக்குவரத்துக் கழகம் தனக்கென விதி முறைகளை வகுத்துக்கொள்ளும் வரை இப்போதுள்ள நிலைமை நீடிக்கும்.

பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் தலைவராகத் தமிழக அரசு போக்குவரத்துத் துறைச் செயலாளர் திரு எம். எஸ். ராம், ஐ.ஏ.எஸ். அவர்களும், நிருவாக இயக்குநராக அரசுப் போக்குவரத்துத் துறை இயக்குநர் திரு கே. ஜே. எம். ஷெட்டி அவர்களும், நிருவாகக் குழு உறுப்பினர்களாகத்திருவாளர்கள் எஸ்.வெங்கடரமணன்ஐ.ஏ.எஸ்., சி. ஜி. ரங்கபாஷ்யம் ஐ.ஏ.எஸ்., பி. சிவலிங்கம் (தொழிற்கல்வி நெறியாளர்), பி.சி. சிரியாக், ஐ.ஏ.எஸ்., ஏ.பி. ஜம்புலிங்கம் (தொழிற்பள்ளி ஆசிரியர், கல்லூரி முதல்வர்) ஆகியோரும் பொறுப்பு வகிப்பார்கள்.

தமிழக வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைப் பல்லவா போக்குவரத்துக் கழகம் உருவாக்கும் என்பது உறுதி.



'சேலத்து மாம்பழம்—இந்தச் சொல்லை நாம் எல்லாரும் பயன்படுத்துகிறோம்.

ஆனால், சேலம் மாவட்டத்தை விடத் தருமபுரி மாவட்டத்தில் தான் மாங்கனிகள் அதிகம் என்று சொல்கிறார்கள். பிரிக்கப்படாத சேலம் மாவட்டத்தில், தருமபுரி மாவட்டத்தில் உள்ள பகுதிகள் அப்பொழுது இருந்ததால் இப்பெயர் வந்தது. இன்றைய நிலையில் தருமபுரி மாவட்டத்துக்குத்தான் இப்பெயர் பொருந்தும் என்கிறார்கள்.

* * *

தருமபுரி மாவட்டத்தின் பின்தங்கிய நிலையை—வாழ்க்கை நிலையைச் சுட்டிக்காட்டுவதற்குச் சுருக்கமாகப் பயன்படுத்தும் சொற்கள் களி, புளி, கம்பளி.

* * *

சேலத்து இரும்பு என்று சொல்கிறோம். அது பிரிக்கப்படாத சேலம் மாவட்டத்தையே குறிக்கும். ஏனெனில், இப்பொழுது தருமபுரி மாவட்டத்தில் அரூருக்கு எட்டு மைல் வடகிழக்கில் தனித்து நிற்கும் தீர்த்த மலையிலும், அதைச் சார்ந்த மலைப் பிரிவுகளிலும் உயர்தரமான இரும்புப் படுகைகள் உள்ளன.

* * *

பிச்சைக்காரர் மறுவாழ்வுக்காகத் தொழுநோயாளிகளுக்கு ஒரு காப்பகம் பருகூரில் கட்டப்பட்டு வருகிறது.

* * *

தருமபுரி மாவட்டத்தில் 2 கோடி ரூபாய் செலவில் சிறப்பு கிராம வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் நான்காண்டுகளில் நிறைவேற்றப்படும்.

* * *

தெலுங்கு, கன்னட மாநில எல்லைகள், தருமபுரி மாவட்டத்தைச் சுற்றி இருப்பதாலும் ஆங்கிலேய ஆட்சியின் ஆதிக்கத்தாலும், பல ஊர்களின் பெயர்கள் மருவி, அவைகளே பழக்கத்தில் உள்ளன. 'தேன்கனிக்கோட்டை' என்பது டெங்கனிக்கோட்டா என்றும், 'பொன்னகரம்' என்பது பென்னாகரம் என்றும் வழங்கப்படுகிறது. இது போன்று ஏராளமான சான்றுகளைக் காட்ட முடியும்.

* * *

தருமபுரி மாவட்டத்தில் ஊர்களின் பெயர்களில் உள்ள 'பட்டி' என்ற சொல் ஹள்ளி என்ற கன்னடப் பெயராக வழங்கப்படுகிறது. மைசூர்ப் படையெடுப்புகளால் பாதிக்கப்பட்ட தருமபுரி மாவட்டப் பகுதிகளில் கிராம அதிகாரிகளாகக் கன்னடக்காரர்களையே அந்தந்த மன்னர்கள் நியமித்ததன் விளைவால் இந்நிலை உருவாகியுள்ளது.

* * *

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒகேனக்கல் அருவியில் வீழும் காவிரியின் இன்னொரு கரை மைசூர் மாநிலத்தில் உள்ளது. பட்டுத் தொழிலில் புகழ்வாய்ந்த கொள்ளேகால் பகுதிதான் அது. முன்பு தமிழகத்தோடு இணைந்திருந்த அப்பகுதி மொழிவழி மாநிலப் பிரிவினைக்குப் பின்னர் மைசூர் மாநிலத்துடன் இணைந்து விட்டது.

* * *

கிருஷ்ணகிரிக்குப் பக்கத்தில் உள்ள ஓர் இடம் லண்டன் பேட்டை எனும் பெயரில் வழங்கப்படுகிறது. கிருஷ்ணகிரியில் இருந்து நகரப் பேருந்து அங்குப் போகிறது. லண்டன் போலத் தட்பவெப்ப நிலை இருந்ததாலோ அந்தக் காலத்தில் இப்பகுதியில் வெள்ளையர்கள் வாழ்ந்ததாலோ என்னவோ அப்பெயர் ஏற்பட்டு விட்டது.

* * *

ஒசூரிலிருந்து 27 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஊர் தளி. சனத குமார நதியிலிருந்து தோன்றும் ஓர் ஏரி இங்கு இருக்கிறது. முட்டைக்கோசு, பச்சைப் பட்டாணி, சீமை அவரை முதலியன அதிக அளவில் பயிராகும் இப்பகுதி அந்தக் காலத்தில் சின்ன இங்கிலாந்து என்று அழைக்கப்பட்டதாம்.

* * *

தகடூர் என்பதே தருமபுரி என்று மாறி வழங்கப்படுகிறது என்பதற்கு ஆதாரம்—சுந்தரர் தேவாரத்தில் காணப்படுகிறது.

* * *

அனுமந்த தீர்த்தம் என்ற இடத்தில் ஆற்றில் ஆர்ட்டிஷியன் ஊற்று ஒன்று உள்ளது. அங்கு எப்பொழுதும் தண்ணீர் ஊறிக் கொண்டே இருக்கும்.

* * *

சேலம் மாவட்டத்தின் பல பகுதிகள் 1792-ஆம் ஆண்டு முதல் வெள்ளையரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு இருந்தன. ஆனால், ஒசூர் பகுதிகள் மட்டும் திப்புசுல்தான் வசமே இருந்தன. திப்பு இறந்த பிறகுதான் வெள்ளையர் வசமாயிற்று இப்பகுதி.

* * *

கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனாரின் நண்பராகி, இளமையிலேயே துறவு பூண்டு இராஜத்துரோகக் குற்றத்துக்காகப் பத்தாண்டுச் சிறைத் தண்டனை அடைந்து சிறையில் தொழுநோயால் வாடி 1925—ஆம் ஆண்டு உயிர்நீத்த விடுதலை வீரர் சுப்பிரமணிய சிவாவின் கல்லறை உள்ள பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டத்தில் தான் உள்ளது.

. இங்கேதான் பாரதமாதாவுக்குக் கோவில் கட்டச் சுப்பிரமணிய சிவா முயற்சி எடுத்தார்.






# 24. தைமொழியைப் போற்றல் தலை

தலைநரைக்கா மைக்குத் தலைவி, தனயர்,
அலைக்கழிக்கா நல்ஆள், அரசு,—நிலைகுலையாத்
தூமொழியார் நல்வாய்ப்பே என்ற பிசிராந்
தைமொழியைப் போற்றல் தலை.

—சி. புனிதவதி, கீழ்நாயகன்பாளையம்.

காளை பிரிந்தான் களம்நோக்கி வாகையுடன்
நாளை வருவான் ! நறுமணத்தின்—வேளைவரும்
மெய்ம்மொழியே ! காத்திருப்பாய் ! என்றஉன் மேலாம், அத்
தைமொழியைப் போற்றல் தலை.

—செல்லம்பாண்டியன், மதுரை-1.

நற்றமிழைக் கற்றால்உன் நாவினிக்கும் நல்லகுணம்
உற்றவளைப் பெற்றால்உன் வாழ்வினிக்கும்—குற்றமில்லாச்
செய்இரண்(டு) என்றும் சிறப்பளிக்கும் செம்மைஇப்பா
தைமொழியைப் போற்றுதல் தலை.

—ப. வேங்கடாசலன், கருக்காடிப்பட்டி.

தத்தி நடந்து தளிர்க்கையால் தாவிவந்து
மெத்தென்ற தாய்மடியின் மேல்வீழ்ந்து—முத்தமழை
பெய்கின்ற அன்னையிடம் பேசும் சிறுகுழந்
தைமொழியைப் போற்றல் தலை.

—கோ. புகழேந்தி, புதுவை-4.

தத்தி வரும்குழவி தாயிடத்துப் பேசுகின்ற
முத்து மொழியும் தமிழன்றோ—சித்திரமாம்
செவ்வாய்யாழ் பெற்றநற் செல்வத்தின் சொல்லமு
தைமொழியைப் போற்றல் தலை.

—அரங்க. வேலுசாமி,சூரியநல்லூர்.

மாமாவும் பெண்கொடுக்க மாட்டேன்என் றாரவரே,
ஏமாறும் வண்ணத்தில் எப்படியோ—சீமாட்டி
மைவிழியை, யான்மணக்க மன்றாடி வென்றஅத்
தைமொழியைப் போற்றல் தலை.

—கோ. மதியப்பன், கோவில்பட்டி.

கடமைமுன் ! காதல்பின் ! கண்முன் நடக்கும்
கடும்போரைக் கொஞ்சம் கவனி!—கொடியோரை
நாம் வெல்வோம் ; தாய்மானம் காப்போம் ! நடஇப்பே
தைமொழியைப் போற்றல் தலை.

—மா. ஆறுமுகம், செங்கை.

பண்பாட்டை, நல்லொழுக்கப் பாதையினைத், தீயோரின்
பின்பாட்டைத் தீய்த்தெறியும் பீடுதனை—அன்பூட்டும்
மெய்வழியை, மேன்மையினை, மேதினியில் நம்தேசத்
தைமொழியைப் போற்றல் தலை.

—ம. சூரியதாசன், தில்லைநகர்.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:—

சி. புனிதவதி,

மே/பா துரைசாமி நாயகர்,

கீழ்நாயகன்பாளையம்,

வடகல்பாக்கம் (அஞ்சல்),

(வழி) மாமண்டூர், (வ.ஆ.).

மன்னும் புகழ்பெரிதாம் ! மாயுமுடல் இன்றென்ன
இன்னுமிருந் தென்னவென ஏற்றுகதீ !—துன்னுபகை
யையொழிக்கத் துள்ளுமிரு தோள்புடைக்க நாட்டகத்
தைமொழியைப் போற்றல் தலை.

—புலவர் பாளை. எழிலேந்தி, புதுவை.

மின்னல் வழிகாட்ட மீன்கள் திசைகாட்ட
கன்னல் மொழியாளின் கைபிடித்தே—இன்னலென
வைமொழியைப் பேசிடினும் வான்மொழியாய் வாழுமடந்
தைமொழியைப் போற்றல் தலை.

—சீனி. செம்பியன், திருவண்ணாமலை.

மூட வழக்கம் முறிந்தோட வைத்தறிவை
நாட வழிசொன்ன நல்லறிஞர்—நாடோறும்
தம் மொழியால் சீர்திருத்தம் செய்யும் பெரியார்தந்
தைமொழியைப் போற்றல் தலை.

—தி. முகுந்தன், எம். ஏ., திருவாரூர்.

தெள்ளுநடை துள்ளிவரத், தேன்தமிழன் உள்ளமது
விள்ளுமொரு நல்லகவி வெள்ளமதை—அள்ளி, இரு
கைமொண்(டு) அருந்திக் கனித்திடுவோர் அக்கவி
தைமொழியைப் போற்றல் தலை.

—நெல்லை எஸ். முத்து, திருநெல்வேலி.

சேமிப்போம் சீர்பெறுவோம் செந்தளிர்போல் செல்வங்கள்
நாமிருவர் போலே நமக்கிருவர்—பூமியிலே
உய்வழியைக் காண்போம் உயர்வோமே என்றகோ
தைமொழியைப் போற்றல் தலை.

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

கல்லறையின் மேலே 'தமிழ்மாணவன்' என்ற
சொல்லைப் பொறித்திடவே சொன்னதுமேன் ?
—மெல்லியலே !
தேமொழியை மாந்தித் திளைத்ததனல் ; அத்தகுவித்
தைமொழியைப் போற்றல் தலை.

—நாகு. ஆறுமுகம், அரிக்காரன்வலசு.

எதையும் பகுத்தறி ; இன்சொல் வழங்கு ;
புதுமை பரவப் புகழ்செய்—மதிவளர்வ
தைமகிழ்ந்து போற்றல் தலையாகும் என்னும்மே
தைமொழியைப் போற்றல் தலை.

—தமிழாலயன், எழும்பூர்.

செங்கதிரை வெண்மதியைத் தின்றுமிழும் பாம்பென்றே
இங்குரைப்பர் சோதிடர்கள் என்தோழா—இங்கவரின்
பொய்மொழியை நீமறுத்தப் பொய்யா அறிவியல்மே
தைமொழியைப் போற்றல் தலை.

—கரு. சிவப்பிரகாசம், நாட்டரசன்கோட்டை

நெஞ்சம் மகிழ்வடைய நின்றே உறவாடி
மிஞ்சும் சுகம்தந்த மீன்விழியே—அஞ்சுகமே
உய்த்துணரும் 'நம்கலைஞர்' உள்ளத்து நற்கருத்
தை,மொழியைப் போற்றல் தலை.

—காதல்தாசன், கீழச்சிவல்பட்டி

கூற்றே பகைத்தாலும் கூடி எதிர்க்கும்நல்
ஆற்றல் படையென்றார் நம்முன்னோர்—மாற்றார்ப
கையொழித்து நாடுதனைக் காக்கவே நாம்நம்முந்
தைமொழியைப் போற்றல் தலை.

—அ. சற்குணராசு, தலைஞாயிறு.

பணிவான அன்பும் பளிங்கனைய கற்பும்
அணியான பண்புச் சிரிப்பும்—துணிவான
தீமொழியைச் சாற்றாத வாய்மையுடன் கொண்டநற்கோ
தைமொழியைப் போற்றல் தலை.

—கா. இரா. ஔவைத்திருமகள், காக்கணம்பாளையம்

குருதிதானம் செய்வோம், குவிப்போம் நிதியை,
விரைந்திடுவோம் நாடுகாக்க வந்த—நெருக்கடியால்
கைவிடுவோம் வீண்செலவை, என்ற கலைஞராம்மே
தைமொழியைப் போற்றல் தலை.

—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

தொல்லையின்றி நாம்வாழத் தூய்மனத்தால் இவ்வுலகில்
நல்ல கருத்தை நயமாகச்—சொல்லுகின்ற
மெய்நண்பன், நல்லாசான், மேன்மக்கள், தாயொடுதந்
தைமொழியைப் போற்றல் தலை.

—அ. லலிதா, கோயம்புத்தூர்-1.

பூவில் நகையெடுத்து பொன்னில் நிறமெடுத்து
நாவில் மழலை நடமாட—ஓவியமாய்
மைவிழி ஆட மயக்கிடும் நற்குழந்
தைமொழியைப் போற்றல் தலை.

—கலாவதி தென்னவன், பெரியகுளம்.

கையிரண்டால் அள்ளிக் கவினெழுகச் சோறுதனை
மெய்யெல்லாம் பூசி மினுமினுக்கச்—செய்யுமதன்
மெய்தீண்டின் இன்பம் மிகுவதனுல் கொஞ்சுகுழந்
தைமொழியைப் போற்றல் தலை.

—சிவராம நமசிவாயம், திருச்சி-15.

பெற்று வளர்த்துப் பிரியமாய்க் காத்துநிதம்
உற்ருர் உலகோர் உனைவிரும்பும்—குற்றமற்ற
மைவிழியாள் விட்ட மகனே உனதுதாய்தந்
தைமொழியைப் போற்றல் தலை.

—மு. நாராயணன், சத்திரப்பட்டி.

கண்ணைக் கயலாக்கிக் கற்பனையால் மானுக்கி
விண்ணைத் துளைத்துவிடும் வேலாக்கி—வண்ணமகள்
மைவிழியை மென்மை மலராக்கும் பொங்குகவி
தைமொழியைப் போற்றல் தலை.

—சி. செள. கருப்பன்செட்டி, திருச்சி-15.

கள்ளமிலா அன்பும் கடும்உழைப்பும் பால்போன்ற
தெள்ளறிவும் நல்லுள்ளத் தேவையிதை—உள்ளத்தே
வைமகனே என்று வழிகாட்டும் நற்ருய்தந்
தை,மொழியைப் போற்றல் தலை.

—சு. நாராயணசுவாமி, திருச்சி-3.

நையப் புடைப்பாரை நண்பராக்கி, நண்ணுரைப்
பையத் திருத்திநற் பண்புறுத்தி—வையத்தில்
வைதல் விலக்கிட வேண்டிய அண்ணு 'மே
தைமொழியைப் பேற்றல் தலை'.

—வித்துவான் க. வேங்கடசாமி, செங்கற்பட்டு-2.

நாடும் மொழியும் நமதிருகண் ! தீங்கெனில்நெஞ் (சு)
ஓடும் ; உணர்வெழுஉம் ; உள்துடிக்கும் !—பாடிடும், தத்
தைமொழியே ! பல்வளமும் சாரும் தமிழ்ஞாலத்
தைமொழியைப் போற்றல் தலை.

—புலவர் த. வாசுதேவன், பி. ஏ., நயினுர்பாளையம்.

தமிழரசின் வெண்பா தவழ்ந்துவரல் கண்டோர்
அமிழ்தனைய பாவனுப்ப லானுர்—தமிழரசார்
தைக்கின்ற பாவின் தளைதந்தால் அக்கவி
தைமொழியைப் போற்றல் தலை.

—புலவர் தி. பிச்சை, ஆத்தூர்.

போர்முனைக்குச் சென்ருன் புலியனையான்—மன்விழியே!
நீர்நனைத்தாய் காதல் நினைவால்கண்—தார்புனையா
மைவிழியே என்றன் மகன்வருகைக் காற்றெனும்அத்
தைமொழியைப் போற்றல் தலை.

—பி. பாண்டியன், பி. ஏ., பி.டி. மதுரை-2.

சிந்தனையால் சீர்பெறுவோம் சிக்கனமாய் வாழ்ந்தாலே,
இந்நிலத்து மாண்புறுவோம் இன்புறுவோம்—நந்தமிழாம்
தேமொழியில் இக்கருத்தைச் செப்பியுள்ளார்! நல்லொழுக்கத்
தை, மொழியைப் போற்றல் தலை.

—பண்பழகன், சென்னை-14.

ஆர்லந்தோ நீருற்றை அக்கறையாய்க் கண்டவுடன்
ஆர்வமுடைக் கவிதை அங்கெழுதிப்—பேர்கொண்டார்!
வைவிழிச் சர்க்கரையாய்ப் பாய்ந்துவரும் அக்கவி
தைமொழியைப் போற்றல் தலை.

—வித்துவான் மா. சுப்பாராஜ், குமாரபுரம்.

எங்களுயிர் வெல்லமல்ல என்றுபெய்து செங்குருதி
பொங்கி வரும்பகைக்கோ பொங்கலிங்கே—வங்கமக்கள்
கைமொழி தாமிழந்தும் கால்கொள் சுதந்திரத்
தைமொழியைப் போற்றல் தலை.

—து. சிவசுபரமணியன், பி.ஏ., பி.டி., அச்சம்பட்டி.

தமிழத்தான் தன்னரிய தாய்மொழியைப் போற்ற
அமிழ்தொத்த பாட்டியற்றி அன்று—தமிழ்ப்பகையை
எய்யவந்த ''பாவேந்தன்'' என்னும் தமிழ்ச்சிறுத்
தை,மொழியைப் போற்றல் தலை.

—ச. சாத்தப்பன், எருக்கலக்கோட்டை.

அடிமை அரசை அகற்றிநம் நாட்டில்
குடியரசை மக்களால் கொண்டே—அடிமையை
வையகமே நீக்கிட வாழ்ந்திட்ட நாட்டின்தந்
தைமொழியைப் போற்றல் தலை.

—நாராயணன், பெருமாள் தேவன்பட்டி.

குற்ருலத் தேனருவி கொட்டும் இசைஇன்பம்
பெற்ருேமே அண்ணுவின் பேருரையில்—கற்ருேர்கள்
கைகூப்பும் காஞ்சிக் கதிரவனும் நல்லம்மே
தைமொழியைப் போற்றல் தலை.

—க. தியாகராசன், பி.ஏ., நெய்வேலி-2.

நல்லனவ நாடின் நலம்பெருகும் அல்லவை
நல்லார் ஒருபோதும் நாடாரே—பொல்லாரின்
பொய்மொழியைப் போற்ருது புண்ணியர் தாம்செய்த
தைமொழியைப் போற்றல் தலே.

—வி. ஏ. மாணிக்கராசு, எம்.ஏ., பி.டி., கொட்டாரம்.

தங்கச்சம் பாவிலேயும் ; '' தைபிறந்தால் நல்வழியாம் ''
பொங்குதமிழ்ப் பெண்ணுலகம் பூரிக்கும்—எங்கணுமே
தைமொழியாம் நல்லவனேத் தாரணியே போற்றுங்கோ
தைமொழியைப் போற்றல் தலே

—ஆ. பொன்னேயன், குளமங்கலம் வடக்கு.

திருமந் திரத்தைத் திருவா சகத்தைக்
கருதரிய தெய்வக் கவினுர்—திருக்குறளே
மைவண்ணக் கண்ணன் வழங்கு பகவத்கீ
தைமொழியைப் போற்றல் தலே.

—அ. குமரப்பன், சீர்காழி.

அன்னமே ! ஆரணங்கே ! ஆருயிரே ! அன்பேகேள் !
மென்குழல் யாழிசையும் மேன்மையே—என்ருலும்
மைவிழியே போற்ருேம் மழலேக்கேட் பின்குழந்
தைமொழியைப் போற்றல் தலே.

—செல்வ. தில்லேசம்பந்தன், சிதம்பரம்.

பெற்றெடுத்த தாய்நாட்டைப் பேணும் தமிழ்மொழியைப்
பற்றுடனே காதலித்துப் பல்லறிஞர்—கற்பித்த
கைமறவாத் தன்மை தமிழ்மறவ ! நீகாத்தெந்
தைமொழியைப் போற்றல் தலே.

—சு. தமிழரசி, மதுரை-1.

குழலே விழலாக்கும் ! கூட்டமுதம் தோற்கும்
எழிலேப் பெருக்கி இறைக்கும்—மழலேயெனும்
மெய்மொழியால் இன்பம் மிளிர்ந்திடவே நம்குழந்
தைமொழியைப் போற்றல் தலே.

—பூ. அ. இரவீந்திரன், கோவை-2.

வாளெடுத்துப் போரிட்டு வஞ்சகரின் கொட்டத்தைத்
தாள்பணிய வைக்கும் தடந்தோளா—ஞாலத்தில்
கைநிறையப் பெற்றிங்குக் கச்சிதமாய் வாழவனி
தைமொழியைப் போற்றல் தலே.

—புலவர். காந்திதாசன், பல்லவராயன்பட்டி.

முன்னேப் பழமொழியை மூத்தோர்தம் நல்லுரையைத்
தன்னிக ரில்லாத் தமிழ்மறையை—நன்னூலாம்
தேமொழியைத் தெள்ளத் தெளிவாய்த் தெளிந்துமுந்
தைமொழியைப் போற்றல் தலே.

—தி. செ. இராமசாமி, எம்.ஏ., பி.டி., நாமகிரிப்பேட்டை.

எளிதாய் இனிதாய் எழிலாய்ச் சுவையாய்க்
களியாய்க் கருத்துக் களனுய்த்—தெளியுமுன்
மைமொழியாம் வள்ளுவர்நூல் வாய்ந்தொளிருஞ் செந்தமிழ்
முந்
தைமொழியைப் போற்றல் தலே.

—ஐ. கோ. இராமநாதன், கோயம்புத்தூர்-2.

எம்மொழியைப் போற்றிடினும் போற்ரு விடினுமே
நம்மொழியைப் பேசுகின்ற நன்மக்கள்—உண்மையில்
மெய்குளிர வைக்கும் மழலேகேள் அக்குழந்
தைமொழியைப் போற்றல் தலே.

—தா. உ. சுப்பையன், விஜயநகரம்.

மந்திரம் வேதம் மறையிவற்றின் சொற்படியே
எந்திரம் போலொன்றும் எண்ணுமல்—முந்தறங்கள்
செய்வழியைக் கற்பதினும் செல்வன்றன் ஈன்றதந்
தைமொழியைப் போற்றல் தலே !

—கங்கை. இயேசுபாதம், எம்.ஏ., சென்னே-30.

எத்தனேதான் இன்மொழிகள் ! என்ருலும் இத்தரையில்
தத்திவரும் மென்மழலேத் தண்செவ்வாய்—முத்துதிர்கொச்
சைமொழிக் கீடாமோ ? தேனமுதாய்ப் பெற்றகுழந்
தைமொழியைப் போற்றல் தலே.

—எழில்வேந்தன், சென்னே-28.

பழச்சொல் மனேபோற்றல் பாங்கமைநல் வாழ்வாம்,
மழலே மொழிபோற்றல் மாண்பாம்;—அழகுதமிழ்
ஐயமறக் கற்ருேர் அருவியெனப் பாடுகவி
தைமொழியைப் போற்றல் தலே.

—புலவர் கோம்பைச்சிரான், கோம்பை.

# இந்தியாவிலேயே முதல் அச்சியல் பள்ளி!



கண்ணைக் கவரும் வண்ண வண்ணப் படங்கள் உள்ள புத்தகங்கள் சிறுவர்களை மட்டுமல்ல, பெரியவர்களையும் கவரவல்லதாக இருக்கின்றன. இதற்குக் காரணம் அழகான அச்சு அமைப்பு என்று சொல்லலாம்.

அச்சுக்கலை, உச்சிக் கிளையில் உள்ள இன்றைய உலகில் எத்தனை வகையான புத்தகங்கள்; எத்தனை வகையான பத்திரிகைகள்! அத்தனையும் நாம் பார்க்கும்போது, விஞ்ஞானத்தின் விந்தையைக் கண்டு நம்மால் வியக்காமலிருக்க முடியவில்லை. இன்று எந்தத் துறையை நாம் எடுத்துக் கொண்டாலும் எல்லாம் இயந்திர மயமாகவே காட்சியளிப்பதைக் காண்கிறோம்; கணக்குப் போடுவதிலிருந்து களைபிடுங்குவது வரை இன்று கருவிகள் வந்து விட்டன! இத்தகைய விஞ்ஞான வளர்ச்சிக் காலத்தில் அச்சுக்கலையும் மிக வேகமாக வளர்ந்துவரும் பாங்கினை நாம் பார்க்கிறோம்.

மேலை நாட்டினர் அச்சுத்துறையில் முன்னேடியாகத் திகழ்ந்து, பல புதிய புதிய கண்டுபிடிப்புகளை உலகுக்கு அளித்துக் கொண்டே இருக்கிறார்கள். மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்கு அச்சுக் கலையின் வளர்ச்சியும் ஒரு மூலகாரணம் என்று உறுதியாகச் சொல்லலாம். இந்த வளர்ச்சி இல்லாமல் பண்டைய இலக்கியங்கள் ஏட்டு வடிவிலேயே இருந்திருந்தால் இந்த அளவுக்கு நாம் ஏற்றம் பெற்றிருப்போமா? ஆகவே, அச்சு முறையைக் கண்டுபிடித்த அந்த முதல் விஞ்ஞானிக்கு நாம் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வோமாக!

கல்வி, மருத்துவம், பத்திரிகை இப்படிப் பலதுறைகளில், ஒவ்வொருவருக்கும் ஒருதுறை பிடித்திருக்கும்; அந்தந்தத் துறையில் அவரவர் சேர்ந்து படிப்பதற்கான வாய்ப்புகள் இன்று தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும் நிறைய இருக்கின்றன. சென்னையில் எத்தனையோ வகையான தொழில் நுட்பக் கல்விக் கூடங்களை நாம் பார்க்கிறோம்; இவைகளில் சில மற்ற மாநிலங்களில் இல்லாத அளவுக்குச் சிறந்தும் விளங்குகின்றன; அவற்றிலே ஒன்றுதான், இந்தியாவிலேயே முதலாவதாகத் திகழும் மண்டல அச்சியல் பள்ளி (Regional School of Printing).

சென்னை அடையாறில் உள்ள இந்தப் பள்ளி, 1926-ஆம் ஆண்டு நிறுவப்பட்டதாகும் அப்போது. அதற்குப் பெயர், சென்னைத் தொழிற் பள்ளி (Madras Trade School). என்பதாகும். பிறகு இந்தப் பள்ளியின் பெயர் அவ்வப்போது மாற்றமடைந்து இறுதியாக 1955-ல் மண்டல அச்சியல் பள்ளியாக இன்றளவும் விளங்கிவருகிறது. இப்பழம்பெரும் பள்ளியின் பரப்பளவு 54,000 சதுரஅடி. நல்ல காற்றோட்டமான, அமைதியான சூழ்நிலையில் இந்தப்பள்ளி அமைந்திருப்பதை இங்குக் குறிப்பிடவேண்டும்.

இந்தப் பள்ளியில் இரண்டு விதமான கல்விப் பிரிவுகள் உள்ளன. 1. 'டிப்ளமா' பிரிவுகள், (Diploma Courses), 2. சான்றிதழ்ப் பிரிவுகள் (Certificate Courses). எழுத்துக் கோத்தல், படிதிருத்துதல், அச்சு அமைப்பு, படஅச்சு (Block making) தயாரித்தல், அச்சடிக்கும் இயந்திர வேலை, புத்தக 'பைண்டிங்', அச்சக நிருவாகம், லித்தோ அச்சு வேலைகள், புகைப்படமெடுத்தல், சித்திர வேலைப்பாடுகள், 'ஆப்செட்' அச்சு முதலியன இங்குக் கற்றுத் தரப்படுகின்றன. இப்பொழுது 296 மாணவர்கள் இங்குப் படிக்கிறார்கள். வெளி மாநிலங்களிலிருந்தும் சிலமாணவர்கள் இத்துறையில் பயிற்சி பெறுகிறார்கள். சிக்கிம், பூடான், அசாம், இலங்கை, மலேசியா, ஆந்திரம், கேரளம், மைசூர் ஆகிய மாநிலங்களிலிருந்து வந்த மாணவர்கள் இங்கு அச்சுக் கலை பயில்கிறார்கள். இவர்களெல்லாம் தங்குவதற்காக அழகான விடுதி ஒன்றும் அருகிலேயே இருக்கிறது.

இங்குப் படிக்கும் தகுதி மிக்க மாணவர்களுக்கு, உபகாரச் சம்பளமும் அளிக்கப்படுகிறது. சென்னையில் உள்ளது போல அலகாபாத்திலும், பம்பாயிலும் 'மண்டல அச்சியல் பள்ளிகள்' உள்ளன. இவற்றில் சென்னையில் உள்ள பள்ளியே முதலாவதாக நிறுவப்பட்ட பழைய பள்ளியாகும்.

இந்தப் பள்ளியில் பல பிரிவுகள் உள்ளன. அவை 1. எழுத்துக் கோக்கும் பிரிவு, 2. லைனோ பிரிவு, 3. இயந்திரப் பிரிவு, 4. பட அச்சுப் (பிளாக்) பிரிவு, 5. லித்தோ 'பிளேட் மேக்கிங்' பிரிவு, 6. லித்தோ இயந்திரப் பிரிவு, 7. பைண்டிங் பிரிவு.

இதில் பயிற்சி பெறும் மாணவர்கள் அச்சுத் துறையில் மெச்சத் தகுந்த முறையில் சிறந்து விளங்குவதை, அவர்கள் செய்துள்ள அச்சு வேலைகளைப் பார்க்கும்





# நவ இந்தியா

மதுரையின் புகழ்மிக்க மீனாக்ஷி கோயிலுக்கு ஒரு மைல் தூரத்தில், இந்தியாவின் சிறப்புமிக்க பஞ்சாலைகளில் ஒன்று உள்ளது.

இப்பஞ்சாலை இந்தியாவின் பழமைக்கும், நவீனத்துக்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. சென்ற சில பத்தாண்டுகளில் இந்தியா கண்டுள்ள பொறியியல் வளர்ச்சி மற்றெந்தத்துறையையும்விட பஞ்சாலை துறையில் தான் அதிகம் பிரதிபலிக்கிறது. மதுரை மில்ஸ் இத்துறையில் மற்றெந்த ஒரு கம்பெனியையும் விட சிறப்பானது.

மதுரை மில்ஸ் தயாரிக்கும் பலவிதமான தொழில்துறை மற்றும் பொதுஜன உபயோகத்துக்கான நூல்களும், துணிவகைகளும் இந்தியாவிலும் வேறுபல நாடுகளிலும் விரும்பி வாங்கப்படுகின்றன. நேரடி ஏற்றுமதி வியாபாரத்தின் மூலம் ஆண்டுதோறும் சுமார் 7 கோடி ரூபாய் அந்நியச்செலாவணி ஈட்டுத்தருகின்றன.

மதுரை மில்ஸ் தயாரிக்கும் நூல்களும், துணிவகைகளும் கணக்கற்ற சிறிய, பெரிய சார்புத் தொழில்களுக்கு அத்தியாவசியமான மூலப்பொருள்களாகின்றன. இவைகள், போட்டிமிக்க ஏற்றுமதி வியாபாரச் சந்தைகளுக்கேற்ற உயர்ரக பொருள்களை உற்பத்தி செய்ய இந்திய உற்பத்தியாளர்களுக்கு உதவுகின்றன.
நவீன யந்திர சாதனங்களாலும், தரக்கட்டுபாடு முறைகளாலும், மேம்பட்ட உற்பத்தி முறைகளில் இடைவிடாத ஆராய்ச்சி செய்தும், பஞ்சு மற்றும் செயற்கை நூல்களை நல்ல முறையில் பயன் படுத்தியும் மதுரை மில்ஸ் தங்கள் தர மரபை நீடித்து நிலை நாட்டி வருகிறார்கள்.

18,000 நபர்களுக்குமேல் வேலை அளித்திருப்பதோடல்லாமல், மதுரை மில்ஸ் எப்பொழுதும் தங்கள் தொழிலாளர்களின் நல்வாழ்வில் பிரத்யேக அக்கறை காட்டி வருகிறார்கள். பலவித நல்வாழ்வுத்திட்டங்களில், க்ஷேமநல பள்ளிகள், வீடுகட்ட கடன்கள், மருத்துவ பராமரிப்பு, வேலை ஓய்வு பெற்றபின் பெறும் நலன்கள் முதலியன சில. ஆகவே மதுரை மில்ஸில் வேலை செய்வது என்பது அநேகம் தொழிலாளர்களுக்கு தந்தைக்குப்பின் தனயன் அடையும் உரிமை போல் உள்ளது என்பதில் ஆச்சரியம் ஏதுமில்லை

**மதுரை மில்ஸ்** மதுரை, தென்னிந்தியா.

Bensons 1724-TAM



போது நன்கு புலப்படுகிறது. உதாரணமாக, ஒரு விளம்பரம். அந்த ஒரு விளம்பரத்தையே 23 விதங்களாகப் பல்வேறு அச்சு எழுத்துக்களைக் கொண்டு, மிக அழகாக அமைத்திருக்கும் முறையைப் பார்த்தால் அவர்களது திறமை நன்கு புலப்படுகிறது. ஒரு தனியார் அச்சகத்தில் அனுபவம் வாய்ந்த ஒரு அச்சுக்கோப்பாளர் செய்வதை விட, மிக அழகாக அவர்கள் அமைக்கும் அந்த அச்சு அமைப்பு (Display) கண்ணையும் கருத்தையும் கவரும் படியாக இருக்கிறது. ஒரு 'விசிட்டிங் கார்டை' எடுத்துக் கொண்டால் அதில் எத்தனை வகை! எத்தனை வடிவம்!

புதிய புதிய அமைப்புகளில் நூற்றுக்கணக்கான 'விசிட்டிங் கார்டு'களை அங்குப் பார்க்கும் போது அவர்களுக்கு உள்ள தொழில் நுணுக்கத்தை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இந்தக் கார்டுகளில் உள்ள அச்சு எழுத்துக்கள், அமைப்பு முறை, வண்ணங்கள், அச்சடிப்பு அனைத்தும் மிகத் துல்லியமாக, மற்ற அச்சகத்தினருக்கும் ஒரு முன் மாதிரியாக விளங்குகின்றன. இதேபோலத்தான் 'லெட்டர் ஹெட்களும்' (Letter-Heads) அழைப்பிதழ்களும். இங்குப் பயலும் மாணவரிடம் ஒரு அழைப்பிதழுக்கான விவரத்தைக் கொடுத்துவிட்டு, இதை இந்த அளவுள்ளதாக அச்சிட வேண்டும் என்று சொல்லிவிடுவார்கள். அந்த மாணவனே அதற்கான அச்சு எழுத்தைப் பொறுக்கி எடுத்துக் கோத்து அமைத்துச் சுத்தமாக அச்சிட்டுக் காட்ட வேண்டும். இப்படி எல்லாப் பிரிவுகளிலும் இந்தச் செய்முறைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்படிப் பயிற்சி அளிப்பதற்காக இந்தப் பள்ளியில், ஒன்பது விரிவுரையாளர்களும், மூன்று துணை விரிவுரையாளர்களும், பதினெட்டு செய்முறைக் காட்சியாளர்களும் பணியாற்றுகிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் இந்தப் பள்ளியிலேயே படித்து, இந்தப் பள்ளியிலேயே ஆசிரியராக வேலை பார்ப்பவர்கள்.

உழைப்பும், சுறுசுறுப்பும் இருந்தால் எந்தக் காரியத்தையும் சுலபமாகச் செய்து முடித்துவிடலாம் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு: சென்னைக் கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவ மனையின் நூற்றாண்டு விழா மலர் ஒன்று அவசரமாக அச்சிட வேண்டியிருந்தது. முந்நூறு பக்கங்களுள்ள அந்த மலரைத் தனியார் அச்சகத்தில் தந்தால் சிக்கிரம் கிடைக்குமா? ஆகவே, இந்தப் பள்ளியில் கொடுத்துப் பார்த்தார்கள். பன்னிரண்டே நாட்களில் அச்சிட்டுத் தந்துவிட்டார்கள் இந்த மாணவர்கள். மலரைப் பார்த்தால் அவசரக் கோலமாக இல்லை. மிக்க அழகாக இருந்தது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் 360 பக்கமுள்ள பொறியியல் புத்தகத்தை ஐந்தே நாட்களில் அச்சிட்டுத் தந்துவிட்டார்கள் இந்த அசகாயச் சூரர்கள்.

இம்மாணவர்களால் தயாரிக்கப்பட்ட அழகான புத்தகப் பைண்டிங், பைல்கள், காலண்டர்கள், புகைப்பட ஆல்பம் போன்றவைகளெல்லாம் மிக நேர்த்தியாகவும், புதிய முறையிலும் செய்யப்பட்டிருக்கின்றன.

இங்கு ஒரு நூலகமும் இருக்கிறது. இதில் 1,100 புத்தகங்கள் இருக்கின்றன. அச்சுத் துறை பற்றிய மேலைநாட்டு நூல்களும் பொதுவான நூல்களும் உள்ளன. மாணவர்கள் ஓய்வு நேரங்களில் இந்நூல்களைப் படித்துப் பயன் பெறுகிறார்கள்.

இப்பள்ளியிலுள்ள சில அச்சு இயந்திரங்களை இலண்டனும், ஜெர்மனியும், கிழக்கு ஆசியாக் கம்பெனியும் இலவசமாக வழங்கியுள்ளன. இந்தப் பள்ளி மாணவர்களால் ஆண்டுதோறும் "கிராபிக் ஸ்டூடண்ட்" என்னும் ஒரு பத்திரிகை நடத்தப்பட்டு வருகிறது. இதிலுள்ள படங்களும், அச்சு அமைப்புகளும் கண்களைக் கவருவனவாக உள்ளன. இந்தப்பத்திரிகையைப் பிரிட்டன் அதிகாரி ஒருவரும், கனடா பேராசிரியர் ஒருவரும் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

இந்த மண்டல அச்சியல் பள்ளியில் படித்து விட்டு ஒருவன் வெளியே வரும்போது, அவன் ஓர் அச்சகத்திலுள்ள வேலைகளை மட்டுமல்ல, அச்சக நிருவாகத்தையே மேற்கொள்ளும் அளவுக்குத் தகுதி பெற்றிருப்பான்.

தமிழ்நாடு அரசினரின் இந்தப் பள்ளி, ஒவ்வோர் ஆண்டும் எத்தனையோ மாணவர்களைத் தயார் படுத்தி அனுப்பிக் கொண்டேயிருக்கிறது. இங்குப்படித்தவர்கள் மற்ற மாநிலங்களில் அச்சகங்களை நிருவகித்து, அச்சுத் துறையில் சிறந்து விளங்குகிறார்கள். தில்லி, மணிப்பூர், நாகாலாந்து, ஆகிய நகரங்களில், இப்பள்ளியில் படித்தவர்கள் மிக உயர்ந்த பதவியில் இருக்கிறார்கள். சென்னை அரசினர் அச்சகத்திலும், பிற இடங்களிலும் உள்ள பெரிய அச்சகங்களில் இப்பள்ளி மாணவர்களே பெரும்பாலும் பணியாற்றுகிறார்கள். ஆகவே, தமிழ்நாட்டின் பெருமை நாடும் ஏடும் புகழும் வண்ணம் அமைந்திருக்கிறதென்றால் அதற்கு இப்பள்ளியும் ஒரு காரணம் என்று நிச்சயம் சொல்லலாம்.





# அந்நியச்செலாவணி தரும் அழகு ரோஜா



'பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை' என்பர் தமிழ்ப் புலவர்; ஆதி கிரேக்க ரோமானியப் புலவர்கள் மலர்களுக்கெல்லாம் அரசியாக ரோஜாப் பூவையே கண்டனர்; அன்று முதல் இன்றுவரை, எல்லாருமே ரோஜாவை மலர்களின் அரசியாகவே பாடிப் பாராட்டிப் போற்றுகின்றனர்.

'ரோஜா' என்னும் பெயர், ரோஜாச் செடிக்கு நீண்ட நெடுங்காலமாகவே வழங்கப் பெற்று வரும் இலத்தீன் மொழிச்சொல். ரோஜாச் செடிகள் மிகவும் அழகானவை. ரோஜாக் குடும்பம், ஏறத்தாழ 100 சாதிகளையும், 2,000 இனங்களையும்தன்னகத்தே கொண்டு விளங்கும் ஒரு இரட்டை விதையிலைத் தாவரக் குடும்பம். இந்தத் தாவரக் குடும்பத்தில் மிகவும் பரவியுள்ள ஒரு சாதிதான் ரோஜா.

ரோஜா இனங்கள், வட துருவத்தின் மிதப் பகுதிகளிலும் குளிர்ப்பகுதியிலும்ஏறக்குறையச் சமமாக வளர்ந்துள்ளன. ஆப்பிரிக்காவில் அபிசீனியா வரையிலும், அமெரிக்காவில் வட மெச்சிகோ வரையிலும் இவை காட்டுச் செடிகளாக வளர்கின்றன எனினும், உலகின் பல்வேறு நாடுகளிலும் ரோஜாச் செடிகளை விரும்பி வளர்க்கின்றனர்.

பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்தில் வங்காஸ்டிரியர்களுக்கும், யார்க்கிஸ்டுகளுக்கும் இடையே ஓர் உள்நாட்டுப் போர் நடைபெற்றது. அப்போருக்குப் பெயர், 'ரோஜா யுத்தம்' என்பது. போரில் 'யார்க்'குகள் வெள்ளை ரோஜாவையும், வங்காஸ்டிரியர்கள் சிவப்பு ரோஜாவையும் தத்தமது சின்னமாக அணிந்திருந்தமையாலேயே அந்தப் போருக்கு இப்பெயர் ஏற்பட்டது என்பர் வரலாற்றாசிரியர்கள்.

ரோஜாப் பூக்களில் கருஞ்சிவப்பு, இரத்தச் சிவப்பு, வெண்சிவப்பு, மஞ்சள், வெண்மை முதலிய பல நிறங்கள் உள்ளன. இவற்றில் மணமற்றவைகளும் உண்டு; எனினும் பெரும்பாலானவை நல்ல—இதமளிக்கும் மணம் உடையன.

நேருவுக்கு ரோஜாப்பூவின் மீது பெரும் விருப்பம் உண்டு. அவர், நாள்தோறும், தமது சட்டையில் ரோஜா மலரைச் செருகிக் கொள்வார். நேருவின் கல்லறையைச் சுற்றிலும், 15 ஆயிரம் ரோஜாச் செடிகள் நடுவது என்னும் திட்டத்தின் கீழ், ஏற்கெனவே 12 ஆயிரம் செடிகள் வைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு (1971) நேருவின் நினைவு நாளில் 3 ஆயிரம் செடிகள் நடப்பட்டன.

ரோஜா மலர்களிலிருந்து அத்தரும் பன்னீரும் தயாரிக்கிறார்கள்; ரோஜா மலர்கள் குல்கந்து செய்யவும் சர்பத் தயாரிக்கவும் பயன்படுகின்றன.

தற்போது தமிழ்நாட்டிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு ரோஜா மலர்களை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் ஆராயப்படுகின்றன.



ரோஜா மலர்களுக்கு—குறிப்பாகச் சூப்பர் ஸ்டார் என்னும் ரகத்திற்கு ஐரோப்பிய நாடுகளில் குளிர் காலத்தில் நல்ல கிராக்கியுள்ளது. குளிர் காலத்தில், அங்குத் தரையைக் குளிர் பனி உறைந்து மூடிக் கொள்வதால் பயிர்கள் விளைவதில்லை. இந்தக் காலத்தில் அங்கு, ஒரு ரோஜாவின் விலை ரூ. 1.50 வரை விற்கிறதாம்.

கடந்த ஆண்டில் முன்மாதிரியாக ரோஜா மலர்கள் கொஞ்சம் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால், அவற்றின் தரம் பற்றிப் புகார் வந்ததால், இவ்வாண்டு, நீண்ட காம்பு கொண்ட—தரமான ரோஜா மலர்களை உற்பத்தி செய்யுமாறு தமிழ்நாடு அரசின் விவசாயத் துறை, மலர் உற்பத்தியாளர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

ஏற்றுமதிக்கான மலர்கள் உதகையிலும் கொடைக்கானலிலும் வளர்க்கப்படுகின்றன. அங்குள்ள தட்ப வெட்ப நிலை இதற்கு உகந்ததாக உள்ளது. எனவேதான், இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி, உதகையில் இந்தோ-ஜெர்மன் திட்டத்தின் கீழ் ஒரு மிகப் பெரிய மலர்ப் பண்ணை ஆரம்பிக்கப் பெற்றுள்ளது. தற்போது உதகையில் உற்பத்தியாகும் மலர்கள் பம்பாய்-டில்லி ஆகிய இடங்களுக்கு விமான மூலம் அனுப்பப்படுகின்றன. தமிழ்நாடு விவசாயத் துறையின் வேண்டுகோளுக்கிணங்க நீண்ட காம்புள்ள ரோஜா மலர்கள் பெரும் அளவில் உற்பத்தி செய்யப்பெறுமானால், ரோஜா மலர்களால் தமிழ் நாட்டுக்கு நல்லதொரு அந்நியச் செலாவணி கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.



# தருமபுரி மாவட்டத்தில் மண்வளப் பாதுகாப்புத் திட்டம்

விவசாய நிலங்களில், குறிப்பாகச் சரிவுள்ள இடங்களில் பெரும் மழையினாலும், காற்றினாலும் மேல்மண் கரைந்து காட்டாறுகளிலும், ஓடைகளிலும் குழம்பாக ஓடி வீணாகிறது. நிலத்தின் மேலே உள்ள முதல் 6 அங்குல மண்தான் பயிர்களின் வளர்ச்சிக்கு வேண்டிய எல்லா உணவுப் பொருட்களையும் கொண்டதாகும். பல விளைவுப் பயிர்கள் நல்ல மகசூல் கொடுக்காததற்குக் காரணம் இந்த மண் அரிப்பே. அமெரிக்கா, எகிப்து, ஆப்கானிஸ்தானம், பெல்சியம் முதலிய பல நாடுகளில் விவசாயம் இம்மண்ணரிப்பால் சீரழிந்து விவசாயக் குடும்பங்கள் இலட்சக்கணக்கில் நிலத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. ஓர் அங்குல மேல்மண் இயற்கையில் உற்பத்தியாகச் சுமார் 50 முதல் 500 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் ஒரே ஆண்டில் 2 சதவிகிதம் சரிவுள்ள பயிரிடப்பட்டுள்ள ஓர் ஏக்கர் நிலத்திலிருந்து சுமார் 30 டன் மண் மழையினாலும், காற்றாலும் வெளியே அரித்துக் கொண்டு செல்லப்படுகிறது.

முதலில் மழைத்துளிகள் வேகமாக மண்மேல் விழுந்து அங்குள்ள மண் துகள்களைச் சிதறடிக்கிறது. சிதறடிக்கப்பட்ட மண் துகள்கள் மழைநீரில் கரைந்து கீழே அடித்துச் செல்லப்படுகின்றன. இதனால், ஆங்காங்கே சிறு பள்ளங்கள் ஏற்படுகின்றன. ஆதலால், விவசாயிகள் முன் எச்சரிக்கையாக மண் அரிப்புத் தடுப்பு முறைகளைக் கையாளுவது மிக அவசியம். இல்லாவிடில் மேட்டு வேளாண்மைகள் அதிக நஷ்டமடைந்து விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள்.

மழையினால் ஏற்படும் மண்ணரிப்பைத் தடுக்கச் சரிவுக் குறுக்கில் வரப்புகள் போடவேண்டும். சமமேட்டு இடங்களை இணைத்து வரப்புப் போடுவதைத்தான் ''காண்டூர்'' வரப்புகள் என்கிறோம். சம உயர இடங்களை வரப்பின் மூலம் பிணைப்பதால் மழைநீர் வேகம் தடுக்கப்பட்டு நீர் ஒரே சீராக ஓடும். நிலத்திலும் தேங்க ஏதுவாகும்.

இத்திட்டம் தருமபுரி மாவட்டத்தில் முதன் முதலில் 1960-ஆம் ஆண்டு ஊத்தங்கரையில் தொடங்கப்பட்டுப் பிறகு மற்ற இடங்களில் பரவியுள்ளது. இத்திட்டம் இப்பொழுது இம்மாவட்டம் முழுவதும் இயங்கி வருகிறது. சம உயர வரப்புகள் துறையினால் முதலில் போடப்பட்டுப் பின்பு இதற்குண்டான மொத்தத் தொகையில் 75 சதவிகிதம் விவசாயிகளிடமிருந்து 10 ஆண்டுத் தவணைகளில் வசூலிக்கப்படுகின்றது. சம உயர வரப்புப் போட்டு, 2 ஆண்டு கழித்து இதனைக் கந்தாயத்தோடு வசூலிக்கப்படுகின்றது. ஓர் ஏக்கர் வரப்புப்போட மண் தரத்தைப் பொறுத்து சுமார் ரூ. 50 முதல் 60 வரை செலவாகும். இந்த வரப்பினால் பின்னால் அதிக இலாபத்தைக் கணக்கிடும் போது இச்செலவு மிகக் குறைவே ஆகும். வரப்புப் போடும் செலவு தவிர, ஆண்டு தோறும் அரசு செலவிலேயே நிலங்களில் போடப்பட்ட வரப்புகளையும், கலிங்குகளையும், தடுப்பு அணைகளையும் பாழ்படுத்தாமல் கண்காணிக்கப் 'பராமரிப்புப் பிரிவு' என்ற தனி ஒரு பிரிவு ஏற்பட்டு வேலை செய்து வருகிறது.

இந்தத் திட்டத்தால் கீழ்க் கண்ட நன்மைகளை விவசாயிகள் அடைகிறார்கள்.

1. காட்டு நிலங்களில் மழை நீர் தேங்கி மண் வளமடைகிறது.
2. நீரும், வளமும், மண்ணும், நன்முறையில் இருப்பதால் மகசூல் அதிகம் பெருகுகின்றது.
3. பூமிக்கடியில் நீர்த்தேக்கம் அதிகரிக்கிறது. இதனால் கிணறுகளில் அதிகத் தண்ணீர்த் தேக்கம் கிடைக்கிறது.
4. ஏராளமான பணச்செலவில் கட்டப்படும் அணைகளில் வண்டல் படிந்து அணைகள் மேடாகா வண்ணம் காக்கப்படுகின்றன.
5. புஞ்சை தானிய உற்பத்தி கூடுதலாகிறது.
6. மண்வளத்தைப் பாதுகாத்தால்தான் உற்பத்தி பெருகும்.

1962–63 முதல் 1970–71 வரை வரப்புப் போடப்பட்ட பரப்புப் பின்வருமாறு:—

1967–68, 1968–69-ஆம் ஆண்டுகளில் ஒசூர் தாலுக்காவில் உள்ள மாருஹள்ளி என்ற கிராமத்திலும், கிருட்டிணகிரி தாலூக்காவில் உள்ள ஜிட்டாண்டஹள்ளி என்ற கிராமத்திலும் ஒவ்வொரு கசிவுக் குட்டைகள் கட்டப்பட்டுள்ளன. இதனால் அக்கிராமத்தில் அக்குட்டைகளுக்குக் கீழ்ப் பக்கத்திலுள்ள எல்லாக் கிணறுகளிலும், நீர்த் தேக்கம் அதிகமாகக் கிடைக்கப் பெறுகிறது. கால்நடைகளுக்குக் குடிநீராகவும் பயன்படுகிறது.

**மண்வளப் பாதுகாப்புத் திட்டம் (ஆய்வு):**—1959-வது ஆண்டின் தமிழ்நாடு நிலச் சீர்திருத்த மசோதாவிற்கு அப்பாற்பட்ட பகுதிகளில் புதியதாக மண்வளப் பாதுகாப்புத் திட்டப் பணிகளை மேற்கொள்ளத் தகுதியுள்ள நிலங்களைத் தேர்ந்தெடுத்து அதற்குரிய முன்னோடி வேலைகளைச் செய்து அதற்குரிய மதிப்பீடுகளைத் தயார் செய்து அரசாங்க அங்கீகாரம்பெற அவைகளை உரிய வழிமூலம் அனுப்பிக் கலப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த மாவட்டத்தில் 175 மதிப்பீடுகள் அரசாங்க அங்கீகாரம் பெறப்பட்டு மாவட்ட அரசிதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**மண்வளப் பாதுகாப்புத் திட்டம் (பராமரிப்பு):**—இது இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்று மண்வளப் பாதுகாப்புத் திட்டப் பணிகள் முடிவடைந்தது முதல் இரண்டு ஆண்டுகள் வரை துறைத்தனத்தினராலேயே பழுதடைந்த பணிகளைப் பழுதுபார்ப்பது. இரண்டு திட்டம் முடிவடைந்த மூன்றாவது ஆண்டிலிருந்து விவசாயிகளினாலேயே இத்துறைத் தனத்தினரின் தொழில் நுட்ப அறிவுரைகளின்படி பழுது பார்ப்பது ஆகும்.

**பணிகள்:**—(1) பழுதடைந்த சம உயர வரப்புகளையும் அதனைச் சார்ந்த கட்டட வேலைகளைப் பழுதுபார்ப்பது. (2) சம உயர வரப்பின் மட்டத்தை மேடுபள்ளங்களின்றிச் சரிபார்ப்பது. (3) சமஉயர வரப்பில் இருபக்கங்களின் சரிவுப் பகுதிகளைச் சரிசெய்தல்.

செய்த வேலைகள்

| வருடம். | ஏக்கர். |
|---|---|
| 1967–68 | 2,404.17 |
| 1968–69 | 2,674·39 |
| 1969–70 | 2,183·38 |

விவசாயிகளின் சமஉயர வரப்புகள் போடப்பட்ட நிலங்களைப் பார்த்து அறிவுரைகள் வழங்கியது 6,000·20 ஏக்கர்.

**நீர்ப்பரப்பு களர் நிலச் சீர்திருத்தத் திட்டம்**—இந்த திட்டத்தில் நிலங்களில் உள்ள களர் தன்மையைப் போக்கும் சிறந்த முறைகள் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப் படுகின்றது. வயல்களின் குறுக்கே கால்வாய்கள் வெட்டி, ஜிப்சம் போட்டு, நீர்ப்பாசனத்திற்குத் தகுதியுள்ள நீரைப் பயன்படுத்த உழுது, பயிருக்கு உதவாத உப்புக்கள் வடிகால் மூலம் வெளியேற்றப்படுகிறது. பின்பு தக்கைப் பூண்டு விதைத்து மிதம் உள்ள களர் தன்மை போக்கப்படுகிறது. இதன் மூலம் நிலம் வளமடையவும் உற்பத்தி பெருகவும் ஏதுவாகிறது.

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தின் ஆயக்கட்டுப் பகுதிகளில் கணிசமான பரப்புள்ள நிலங்கள் களர்தன்மையடைந்து, விவசாயத்திற்குத் தகுதியற்றவைகளாக மாறிவருகின்றன. குறிப்பாகச் சுய்டேகுப்பம் கிராமத்தில் இது அதிக அளவில் பரவியுள்ளது. இதை அகற்ற சென்ற ஆண்டில் அதாவது 1970–71-ல் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், கிருஷ்ணகிரி வட்டம், சுய்டேகுப்பம் கிராமத்தில் 90·53 ஏக்கர் நிலத்தில் இம்முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்பட்டு நல்ல முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

---

அருளாளர், அறிஞர்கள் நாவில் தவழ்ந்த தமிழ், மூதவர், குமரகுருபரர் முதலியோர் கூறியவை 400 நூல்களினின்றும் எடுக்கப் பெற்றவை.

இசைத் தமிழ்.
இசை மலிந்த தமிழ்.
ஏழிசை இன்றமிழ்.
ஏறு பல்பொருள் முத்தமிழ்.
கலைமலி தமிழ்.
கலை மலிந்த தமிழ்.
கலை முத்தமிழ்.
கொழி தமிழ்.
தெளி தமிழ்.
தென்னன் தமிழ்.
திருநெறித் தமிழ்.
திரு நெறிய தமிழ்.
செஞ் சொற்றமிழ்.
நலங்கொள் தமிழ்.
நன்மைபுரி தமிழ்.
நடை வல்ல தமிழ்.
பண்ணாரின் தமிழ்.
பண்ணாருந் தமிழ்.
பண்ணிடைத் தமிழ்.
பண்ணி நேர் தமிழ்.
பண்ணியல் தமிழ்.
பண்ணுலாம் அருந்தமிழ்.
பண்பொலி தமிழ்.
பந்தமார் தமிழ்.
பல் ஓசைத் தமிழ்.
பல்பொருள் முத்தமிழ்.
பாடலாந் தமிழ்.
பாமரு செந்தமிழ்.
பாவாணர்த் தமிழ்.
பாரினர் தமிழ்.
பாரின் மலிகின்ற புகழ்நிறை தமிழ்.
பாவின் தமிழ்.
பாவுற்ற தமிழ்.
பிள்ளைத் தமிழ்.
பிறங்கு தமிழ்.




புகழ் நின்ற தமிழ்.
புகழ் நிறைத் தமிழ்.
புகழ் வண்டமிழ்.
பூந்தமிழ்.
பெருகிய தமிழ்.
பெருந் தமிழ்.
பேரியல் இன்றமிழ்.
பைந்தமிழ்.
பொங்கு தமிழ்.
பொதிகைத் தமிழ்.
மதுரத் தமிழ்.
மதுரமொழுகிய தமிழ்.
மருவிய தமிழ்.
மல்லல் நெடுந்தமிழ்.
மறை வளந்தமிழ்.
மன்னு தமிழ்.
மன்னு தீந்தமிழ்.
மிகுதலை தமிழ்.
முடிவின் நன்றமிழ்.
முதிய மெய்த் தமிழ்.
முது தமிழ்.
முத்தமிழ்.
முத்துப் பொருதமிழ்.
மும்மைத் தமிழ்.
மூவாத் தமிழ்.
மெய்க் கவிஞர் தமிழ்.
வடி தமிழ்.
வண்டமிழ்.
வயங்கு தமிழ்.
வளர் தமிழ்.
வார்தேன் ஏரார் தமிழ்.
வியன் தமிழ்.
வெண்டமிழ்.




தருமபுரி மாவட்டத்தில் காவிரி ஆறு ஓடியும் அதனுல் எவ்விதப் பயனையும் விவசாயிகள் பெற வழி இல்லை. ஆனுல், அதைவிடச் சிறிய நதியாகிய பெண்ணை ஆற்றின் குறுக்கே கிருஷ்ணகிரிக்குச் சுமார் 6 மைல் மேற்கே 1958-ஆம் ஆண்டுக் கட்டப்பட்டுள்ள கிருஷ்ணகிரி நீர்த் தேக்கமும் ஓரளவிற்கு நீர்ப் பாசனக் குறையைத் தீர்த்து வருகின்றது. இத்தேக்கத்தின் மூலம் 9,000 ஏக்கர் பாசன வசதியை அடைந்துள்ளது.

இதைத் தவிரச் சின்னுறு, என்கிற சன்னத்குமார் நதியிலும் பெண்ணை ஆற்றிலும், வாணியாறு, மத்தூர் ஆறு, பூலாப்பட்டி ஆறு இவைகளின் குறுக்கேயும் ஆங்காங்குக் கட்டியுள்ள சிறு அணைக்கட்டுகள் மூலம் பாசன வசதிபெற்று வருகின்றது. இம்மாவட்டமானது குன்றுகளும் மலைகளும் நிறைந்த பகுதியாக அமைந்து உள்ளதாலும், போதுமான அளவிற்கு வற்ருத நதிகள் இல்லையென்ருலும் பெரும்பான்மை விவசாயப் பெருங்குடி மக்கள் பருவ மழையையும், ஏரி குளங்களையும் நம்பி வேளாண்மை செய்து வருகிருர்கள். இயற்கையாக அமைந்துள்ள பல பள்ளத் தாக்குகளில் மழைக் காலங்களில் வரும் நீரை ஆங்காங்குச் சிறிய ஏரிகள் குட்டைகள் கட்டி அதன் மூலம் பாசன வசதியைப் பெருக்குவதே தற்போதுள்ள சிறப்பு நீர்ப்பாசனத் திட்டத்தின் நோக்கமாகும்.

தற்சமயம் மாவட்டத்தில் 49 பெரிய ஏரிகள் மூலமும், 1,475 சிறிய ஏரிகள் மூலமும் விவசாயம் நடைபெற்று வருகிறது.

இம்மாவட்டத்தில் ஒரு இலட்ச ரூபாய் மதிப்பீட்டிற்குமேல் 11 புதிய ஏரிகளும் 3 உடைந்து போன ஏரிகளும், புதியதாகச் சீரமைத்துக் கட்டியும், 3 புதிய அணைக்கட்டுகளும் கட்டப்பட்டு மொத்தம் 3,083 ஏக்கர் நிலங்களுக்குச் சென்ற ஆண்டு முதல் தண்ணீர் தேக்கிப் பாசன வசதிகள் அளிக்கப்பட்டு உள்ளது.

இவைகள் அண்மையில் மொத்தம் 36·25 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட 16 வேலைகளும் (புதிய அணைக்கட்டு, புதிய ஏரி அமைக்கும் திட்டம், ஏரியைப் புதுப்பிக்கும்திட்டம், குட்டை கட்டும் திட்டம்) ஆகியவைகள் நடைமுறையில் இருந்து வருகிற இந்தத் திட்டங்கள் முடிக்கப்பட்டால் 2,205·01 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இதனுல் அதிகப்படியாக 1,321:10 டன் உணவு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது நடைமுறையில் சிறிய (புதிய குட்டை கட்டும் திட்டம், ஏரிகளைப் புதுப்பிக்கும் திட்டம், ஏரிகளுக்குச் சிறப்பு மராமத்துத் திட்டங்கள்) 101 வேலைகள் நடைமுறையில் உள்ளன. இவற்றிற்கு இதுகாறும் ரூபாய் 3,03,75 செலவழிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டம் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுஎனக்கருதிச் சிறப்புக் கிராமப் பணிஇயல் திட்டத்தின் கீழ் 38 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில் 30 வேலைகள் துரித நிலை செயற்படுத்தப்பட்டு 1972-73க்குள் முடிக்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட 30 வேலைகளின்பேரில் இதுகாறும் ரூபாய் 7,98,697 செலவழிக்கப்பட்டுள்ளது.

1—4—1968 முதல் இக் கோட்டத்தினரால் எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகளில் இதுகாறும் 91 வேலைகள் முடிவு பெற்றுள்ளன. இதற்காக ரூ. 1,388·35 செலவழிக்கப்பட்டுள்ளது.

மேலும், இம்மாவட்ட நீர்ப் பாசன வசதியைப் பெருக்கப் பல திட்டங்கள் ஆய்வு செய்வதற்கென்றே தனியாக ஒரு நிருவாகப் பொறியாளர் சேலத்தைத் தலைமையாகக்கொண்டு, சேலம்-தருமபுரி மாவட்டத்திற்காகச் செயல்பட்டு வருகிருர். இந்த ஆய்வுக் கோட்டத்தின் கீழ் தருமபுரியில் ஒரு கிளைக் கோட்டமும், கிருஷ்ணகிரியில் ஒரு கிளைக்கோட்டமும் முறையே தருமபுரி-அரூர் வட்டத்திற்கும், கிருஷ்ணகிரி மற்றும் ஓசூர் வட்டத்திற்கும் செயல்பட்டுவருகிறது.

அண்மையில் நடுநிலையான திட்டங்களையும் பெரிய பாசன வசதிகள் செய்யும் நீர்த் தேக்கத் திட்டங்களையும் ஆய்வு செய்வதற்காகத் தனிப்பட்ட ஓர் மேற்பார்வை வட்டச் செயலகம் திருச்சியில் இயங்கி வருகிறது. அதன்கீழ் ஆய்வு வேலைகளைப் பார்க்கத் தனியே ஒரு நிருவாகப் பொறியாளர் அலுவலகம் சேலம்-தருமபுரி மாவட்டத்திற்காகச் சேலத்தில் செயல்பட்டு வருகிறது.



# விடுதலைக்காவியத்தின் விடிவெள்ளி

"என்னண்ணா, செய்திப் பத்திரிகையிலே? ரொம்ப நேரமா படிக்கிறீங்களே? என்றுக் கேட்டுக் கொண்டே வந்தாள் கண்ணகி.

"போரிலே வீர மரணம் அடைந்த வீரர்களைப் பற்றித் தான் படித்துக் கொண்டிருக்கிறேன். இதைப்படிக்கும் போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது" என்றார் செய்தித்தாளை மடித்தவாறே இளங்கோ.

"கதையா? சொல்லுங் கண்ணு?" என்று துரிதப்படுத்தினாள் கண்ணகி.

இளங்கோ சொல்ல ஆரம்பித்தான்: "கண்ணகி! இது உண்மைக்கதை. அதுவும் ஒரு வீராங்கனை பற்றிய—நடந்த கதை......"

"பிரதமர் இந்திரா காந்தியைப்பற்றிய கதையா?"

"அவரைப் போன்ற ஒரு வீரப் பெண்மணியின் கதை தான் இது.

**நாளையத் தலைமுறை**

"கொஞ்சம் இருங்கள். எதிர் வீட்டிலிருந்து என் தோழிகளை அழைத்து வருகிறேன். அவர்களும் கதை கேட்க வேண்டும் என்று சொன்னார்கள்" என்று கண்ணகி எதிர்வீட்டிற்கு ஓடினாள். சில நிமிடங்களில் நான்கைந்து சிறுமிகளுடன் விரைந்து வந்தாள் கண்ணகி. இளங்கோ, ஜோன் என்னும் அந்த வீரப் பெண்ணின் படத்தை அனைவருக்கும் காட்டினார். பிறகு கதை சொல்ல ஆரம்பித்தார்.

" நானூறு ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கிடையே பெரும்போர் நடந்து கொண்டிருந்தது. இந்தப் போர் ஏறத்தாழ நூருண்டுகள் நடந்ததால், இதை நூற்ருண்டுப் போர் என்று அழைத்தார்கள். இந்தப் போரில் இங்கிலாந்தைச் சேர்ந்த ஆங்கிலேயர்களின் கையே ஓங்கி வந்தது. பிரான்சு அதாவது பிரெஞ்சு பின்வாங்க நேர்ந்தது. இதனால் எதிரியின் கையில் பிரான்சின் தலைநகரான பாரீஸ் பிடிபட்டது"

"வங்காள நாட்டின் தலைநகர் டாக்காவைப் போல இல்லையா அண்ணா.?"

ஆமாம். பிரான்ஸ் மன்னன் ஒரு கோழை. எதிரிகளை எதிர்த்துப் போரிடாமல் ஓடி ஒளிந்து கொண்டான். இளவரசனை சார்லஸ் என்பவன் மன்னனுக்குப் பிரதிநிதியாக ஆட்சி செலுத்தினான். ஆனாலும், பகைவரை எதிர்க்க முடியவில்லை. முடிவில் பிரெஞ்சு மக்களுக்கு மன்னன் மேல் உள்ள நம்பிக்கை அற்றுப்போய் விட்டது. ஆங்கிலேயப்படை மேலும் மேலும் முன்னேறிக் கொண்டிருந்தது.

''ஆங்கிலேயப் படையின் தளபதி, பாரிசில் தன் தலைமை அலுவலகத்தை அமைத்துக் கொண்டு, ஓர் ஆற்றின் கரையிலுள்ள ஆர்லியன்ஸ் என்னும் நகரத்தை முற்றுகையிடத் தீர்மானித்தான். ஆர்லியன்ஸ் நகரம் பாரிசிற்குச் சுமார் நூறு மைல் தொலைவில் இருந்தது. இந்த நகரம் பகைவன் கையில் சிக்கிவிட்டால், பிரெஞ்சு நாடு முழுவதும் பகைவனுக்குக் கிடைத்தது போலாகிவிடும். இத்தகைய கீழான நிலை வராமலிருக்கவும், தங்கள் தாய் நாட்டின் சுதந்திரம் பறிபோகாமல் இருக்கவும் பிரெஞ்சுப் படை தம்மாலான முயற்சிகள் செய்தது.

''ஜோன் என்பவர் யார்? அவரைப்பற்றிச் சொல்லவில்லையே!'' என்றாள் ஒருத்தி.

''பிரான்ஸ் நாட்டின் வடகிழக்குப் பகுதியிலே உள்ள ஒரு கிராமத்தில் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவள்தான் ஜோன். ஜோன் நல்ல உழைப்பாளி, அதற்கேற்ற நல்ல உடல் உரமும் பெற்றிருந்தாள். ஆடு மாடுகளை மேய்த்து வருவாள்; வீட்டு வேலைகளைச் சலிப்பில்லாமல் செய்வாள். கொஞ்சங்கூடச் சோம்பல் இல்லாமல் கடமையைத் தவறாமல் செய்துவந்தாள். ஒரு சமயம் இவள் ஆடுகளை மேய்த்துவிட்டு ஒரு மரத்தடியில் உட்கார்ந்து இருந்தாள். அப்போது மாலை வேளை. கோயில் மணி பல முறை ஒலித்துக் கொண்டிருந்தது.



''நாடு பகைவனிடம் சிக்கிக் கொண்டிருப்பதை அறிந்திருந்த ஜோனுக்கு அந்த மணியோசை எதையோ கூற வந்தது போல இருந்தது. 'உன் தாய் நாடு பகைவனிடம் அகப்பட்டுத் தவிக்கின்றது. தலைநகரமோ அவன் கைப்பிடியில் உள்ளது. ஆர்லியன்ஸ் நகரத்துக்கு எந்த நேரமும் ஆபத்து வரலாம். ஆகவே, நாட்டைக் காக்கும் பொறுப்பு உனக்கும் இருக்கிறது. புறப்படு உடனே புறப்படு! ஆர்லியன்ஸ் நகரை முற்றுகையிடும் ஆங்கிலேயப் படையைத் துரத்த இப்போதே புறப்படு!' என்று அந்த மணியோசை சொன்னதாக அவளுக்குப் பட்டது. எழுந்தாள் ; நேரே வீடுசென்றாள்; தன் பெற்றோரிடம் தன் நிலைமையை எடுத்துச் சொன்னாள். ஆனால் அதற்குப் பெற்றோர்கள் சம்மதிக்கவில்லை.

''நீ ஒரு பெண் என்பதை மறந்துவிட்டாயா? ஒரு பெண்ணால் பெரும் படையை எதிர்த்துப் போராட முடியுமா' போடி, பைத்தியக்காரி!' என்று பெற்றோர்கள் அவளைப் போக விடாமல் தடுத்தனர். ஆனால், மனவுறுதி மிக்க ஜோனின் எண்ணமே இறுதியாக வெற்றி பெற்றது. தாய் நாட்டுப் பாசம் அவளை ஓர் ஆண்மகனைப் போல வீறுகொள்ளச் செய்தது. உடனே அவள் ஆண் உடை உடுத்திக்கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டாள்!.

''அருகிலுள்ள கோட்டையில் பிரெஞ்சுப் படைத்தலைவனின் அலுவலகம் ஒன்று இருந்தது. பிரெஞ்சுப் படையில் சேர விரும்புவோர் இவன் அனுமதி பெற்றாக வேண்டும். அந்த இடத்திற்கு ஜோன் வந்தாள். உடனே படைத் தலைவனிடம், ஒரு பெண் ஆண் உடையில் வந்திருப்பதாகச் சொன்னார்கள். தலைவன் அவளை வரச்சொன்னான். ஜோன் தான் போர்க்களம் போவதாக மிக்கத் துணிவோடு சொன்னாள். முதலில் அதற்கு மறுத்த அந்தத் தலைவன், பிறகு அவளது மன உறுதியைக் கண்டு சம்மதம் தெரிவித்தான்.

''உடனே ஜோனோடு இரண்டு வீரர்களை அனுப்பி இளவரசன் சார்லசைப் பார்க்கும்படி சொன்னான். மூவரும் குதிரை மேல் ஏறிக்கொண்டு இளவரசன் உள்ள நகரத்திற்கு வந்தனர். வீரர்கள் ஜோன் வந்திருப்பதைச் சொன்னார்கள். உடனே அங்கிருப்பவர்கள் 'ஆண் உடையில் வந்திருக்கும் இவளை நம்பக்கூடாது' என்றனர். சிலர், 'நாட்டைக் காக்க வந்திருக்கும் இவள் துணிவைப் பாராட்டவேண்டும்' என்றனர். இளவரசனுக்கு ஒன்றுமே புரியவில்லை. எப்படியோ எதிரியை முறியடித்தால் சரி என்று ஜோனைப் பார்க்கச் சம்மதித்தான்; போர்முனைக்குப் போக அனுமதியும் தந்தான்''.

''தாய் நாட்டுப் பற்று என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும். இந்த வீரப் பெண்ணின் கதையைக் கேட்க எங்களுக்கு எல்லாம் பெருமையாக இருக்கிறது!'' என்றாள். கண்ணகி.

"ஜோன் ஒரு வெள்ளைக் குதிரையில் ஏறிக் கொண்டு, படைவீரர்கள் புடைசூழ ஆர்லியன்ஸ் நகரை நோக்கிப் புறப்பட்டாள். அந்தச் சமயம் ஆர்லியன்ஸ் நகரை ஆங்கிலேயர்கள் முற்றுகையிட்டிருந்தனர். பிரெஞ்சுப்படை நகருக்குள் சிக்கிக் கொண்டிருந்தது. எதிரியை முறியடித்தாலன்றித் தன் படைகள் தப்ப வழியில்லை என்றறிந்தாள் ஜோன். ஆனால், வழியில் உள்ள ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றைக் கடக்கவும் வழியில்லை. எந்தச் சமயமும் ஆங்கிலேயர் கைக்கு ஆர்லியன்ஸ் நகரம் அகப்பட்டு விடும் என்ற நிலை இருந்தது.

"அப்போது பிரெஞ்சுப் படைக்குத் தலைவனாயிருந்த துனாய் என்பவன் ஆங்கிலேயப் படையை எதிர்த்துச் சமாளிக்க முடியாமல் இருந்தான். இந்தச் சமயத்தில் ஜோன் தன் படை வீரர்களுடன் அங்கு வந்து சேர்ந்தாள். ஜோன் போர் முறைகளை முறைப்படி கற்றவளில்லை என்றாலும், படைத் தலைவனுக்கும் எட்டாத சில போர்த் தந்திரங்களை எடுத்துச் சொன்னாள். அவற்றை நம்பிக்கையுடன் கேட்ட படைத் தலைவன் துனாய் மேலும் மனத் துணிவு பெற்றவனாய்ப் பகைவரை எதிர்க்க முற்பட்டான்.

"ஜோன் வந்த நல்லவேளை, ஆற்றில் கொஞ்சம் கொஞ்சமாக வெள்ளம் வடிந்தது. போர் வீரர்கள் படகுகள் மூலம் ஆற்றைக் கடந்து சென்றார்கள். ஜோன் வெள்ளைக் குதிரையின் மீதேறி வீரர்கள் பின்பற்றிவர வீறுநடைபோட்டுச் சென்றாள். ஓர் இளம் பெண் கையில் வாளேந்தி, மிக்கத் துணிவோடு தம்மை எதிர்க்க வருவதைக் கண்டு ஆங்கிலேயர் சிறிது அச்சமுற்றனர். அவளுக்குப் பின்னால் படைவீரர்கள் புடைசூழவந்து கொண்டிருந்தனர். பிரெஞ்சுப் படை பொங்கி எழுந்தது. நாலு பக்கமும் சூழ்ந்து தாக்குதல் நடத்தியது. ஆங்கிலேயர் எதிர்த்து நிற்க முடியாமல் பின்வாங்கினர்; ஜோன் வீரர்களுக்கு உற்சாக மூட்டினாள். பகைவரை ஓட ஓட விரட்டினாள். வெண்குதிரை கனைத்துக் கொண்டு போர்க்களத்தில் பறவைபோலப் பறந்து பறந்து வந்தது. ஜோன் வீரத்தைக் கண்ட எதிரிகள் தோற்று அஞ்சி ஓடினர். பெரும்போருக்குப்பின் ஆர்லியன்ஸ் நகரம் பகைவரிடமிருந்து விடுவிக்கப்பட்டது."

"அப்பாடா! பகைவர்கள் ஒழிந்தார்களா?" என்று கண்ணகி உட்பட எல்லாச் சிறுமிகளும் கேட்டனர்.

"பகைவர்கள் ஓரளவு ஒழிந்தார்கள். ஆனால், ஜோனை ஒழித்துக்கட்ட அவர்கள் சமயம் பார்த்து இருந்தார்கள். இதற்கிடையில் பிரெஞ்சு விடுபட்டதை மக்கள் குதூகலத்துடன் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். வீராங்கனை ஜோனை இளவரசன் உட்பட மக்கள் போற்றிப் புகழ்ந்தார்கள். இளவரசன் சார்பில் சுக்குரீம்ஸ் நகரிலுள்ள பெரிய கோயிலில் ஜோன் முடி சூட்டினாள். அது முதல் அவ்விளவரசன் ஏழாம் சார்லஸ் என்னும் பட்டத்தோடு பிரெஞ்சு மன்னனானான்.



**இதன் நுண் மயிரோடு கூடிய தோலை கோட்டுகள், ஆடைகள் முதலியன தயாரிக்கவும், பலவித அழகுச் சாமான்கள் செய்யவும் பயன்படுத்துகின்றனர்.**

"தோற்றுப்போன ஆங்கிலேயர் பெருத்த அவமானத்துக்குள்ளானார்கள். ஜோனை உயிரோடு பிடித்து வந்து பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தனர். அவளைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குப் பரிசு தருவதாகப் பறைசாற்றினார்கள்."

"ஜோன் அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டாளா?" கண்ணகி பதட்டத்துடன் கேட்டாள்.

"தன் நாட்டிலேயே காட்டிக் கொடுக்கும் துரோகிகள் இருப்பது ஜோனுக்கு எப்படித் தெரியும்? ஜோனின் வெற்றியைக் கண்டு பொறாமை கொண்ட அந்தத் தாய் நாட்டுத் துரோகிகள், அவளை வெள்ளையரிடம் பிடித்துக் கொடுக்கச் சதி செய்தனர். ஆங்கிலேயப் படைத் தளபதிகளைச் சந்தித்துப் பேசுவதற்காக நடந்த அவர்கள் சதிக்கு, ஒன்றும் அறியாத ஜோன் இணங்கினாள். ஜோன், படைத் தளபதிகளோடு பேசிக்கொண்டிருக்கும் போது நயவஞ்சகமாகக் கைது செய்யப்பட்டாள்.!"

"ஐயோ பாவம்! அவளை அவர்கள் என்ன செய்தார்கள்" ஒருத்தி வருத்தத்துடன் கேட்டாள்.

"ஜோனை எப்படியாவது ஒழித்துவிட வேண்டும் என்று அவள் மீது இல்லாத குற்றத்தையெல்லாம் சுமத்தினார்கள். அப்போது ஜோனுக்குப் பத்தொன்பது வயதிருக்கும். அவள், தான் ஒரு குற்றமும் செய்யவில்லை என்றும், நாட்டு விடுதலைக்குப் போராடியதாகவும் சொன்னாள். ஆனால், அந்த வெறியர்கள் அதைக் கேட்பதாக இல்லை. அவர்கள் அவளை ஒரு தீய சக்தியாகக் கருதியதே அதற்குக் காரணம். இறுதியில் அந்தக் கொடியவர்கள் ஊர் நடுவே ஒரு பெரிய கம்பத்தை நட்டு, அதில் அவளைக் கட்டி வைத்துத் தீமூட்டி விட்டனர். விடுதலைக்காகப் போராடிய அந்த வீரவுடலைச் செந்தீ வாட்டி வதைத்துச் சாம்பலாக்கியது. தாய் நாட்டுக்காக, அவள் தன் உயிரையே தந்து வீர மரணம் அடைந்த செய்தி பிரஞ்சு மக்களைக் கொதித்தெழச் செய்தது. அதன் விளைவு? ஒரு வெள்ளையன் கூடப் பிரெஞ்சு மண்ணில் கால் வைக்காதபடி ஓட ஓட விரட்டி அடிக்கப்பட்டார்கள். பெண்ணாக இருந்தாலும், துணிவையே துணையாகக் கொண்டு, நாட்டுக்காகப் போராடிய அவளைத் தாய்க்குலம் இன்றளவும் எண்ணி எண்ணிப் பெருமையடைகிறது- போற்றிப் புகழ்கிறது" என்று இளங்கோ சொல்லி முடித்ததும், 'வாழ்க ஜோன்' என்று சிறுமிகள் சேர்ந்து முழக்கமிட்டனர்.



# நீதி மூலம்

புலவர் சி. துரைசுவாமி

1 அன்பும் அறனும் இன்புறச் செய்யும்.
2 ஆசை மிகுமேல் மோசம் விளைக்கும்.
3 இனிது மொழியின் பணியும் உலகு.
4 ஈட்டல் மிகுமெய்ப் பாட்டில் விளையும்.
5 உண்ணும் அகத்தில் பண்ணும் விருந்து.
6 ஊக்கம் படைப்பின் ஆக்கம் பெருக்கும்.
7 எண்ணும் நினைவில் உண்மை உயர்வாம்.
8 ஏர்வளங் குன்றின் பார்வளங் குன்றும்.
9 ஐயம் புகமேல் செய்யத் துணியேல்.
10 ஒத்தக நட்பே நத்தும் துணையாம்.
11 ஓதும் ஒழுக்கம் சாதலில் மறவேல்.
12 ஔடத மென்கொல் அருந்திரு மறைகள்.
13 கல்வியில் உயர்ந்தமெய்ச் செல்வமும் இல்லை.
14 காண்பதில் எல்லாம் வீண்மனங் கொள்ளேல்.
15 கிழமை எனவே பழைமை இகழேல்.
16 கீர்த்தியை விளைக்கும் காத்திடும் பணிவு.
17 குறிப்பறிந் தாற்றல் நெறிப்பயன் காட்டும்.
18 கூறும் வழியில் தேறும் வழிசொல்.
19 கெட்டார் என்பது நட்டோர்க் கில்லை.
20 கேண்மை அமையின் பூண்அணி பொன்னும்.
21 கையுழைப் பல்லது மெய்யுண வில்லை.
22 கொலைமேற் கொண்டு புலைமேற் கொள்ளேல்.
23 கோழைத் தனமேல் வாழ்வைச் சிதைக்கும்.
24 சத்தியம் தவறின் பத்தியம் போற்கொல்.
25 சாதியின் பிரிவு நீதியில் இல்லை.
26 சினமகந் தணியின் மனநிலை தெளியும்.
27 சீரும் சிறப்பும் பேருக் கணியாம்.
28 சுத்தம் அல்லது வித்தகம் இல்லை.
29 சூட்சம் அறியின் மோட்சம் அருகில்.
30 செல்லும் இடத்தே வல்லோர் துணைகொள்.
31 சேதி உரைக்க நீதியைப் பயிலு.
32 சொல்லும் பிறர்சொல் வெல்லும் படிசொல்.
33 சோகம் அடையின் பாகம் தவிர்க்கும்.
34 தலைமை பெறுந்தன் நிலையைப் பொறுத்து.
35 தாழ்ச்சி அடைதல் சூழ்ச்சியின் பயனே.
36 திறமகங் கொள்வோர்க் கறமது துணையாம்.
37 தீயோர் சிறப்பில் தோயார் நல்லோர்.
38 துக்கமும் சுகமும் பக்கம்பக் கடுத்தே.
39 தூய்மை யுடையோர் வாய்மை அணியாம்.
40 தெரிவதில் தெளிந்து அரியது கொள்ளும்.
41 தேட்டங் கொண்டோர் வாட்டங் களைமேல்.
42 தைரியம் கொள்ளல் வைரத்தின் விளைவாம்.
43 தொட்டிற் பழக்கம் எட்டும் ஈமம்.
44 தோழமை தன்னில் ஏழ்மையென் றில்லை.
45 நல்லோ ரவராம் பொல்லா தொழிப்பர்.
46 நாட்டுக் குடையது திட்டும் அறிவு.
47 நித்தக் கடனில் சுத்தம் பெரிது.
48 நீதி விடுப்பின் பீதி அடுக்கும்.
49 நுண்ணிய அறிவே எண்ணிய வெய்யும்.
50 நூலின் அறிவு பாலின் உணவாம்.
51 நெஞ்ச மதிலே வஞ்சம் நினையேல்.
52 நேர்மை என்பது கூரிய வாளாம்.
53 நைந்தோர் அடுப்பின் செய்வதில் நலம்செய்.
54 நொடிப்பொழு தாயினும் மடிமையில் கழியேல்.
55 நோக்கம் அனைத்தும் ஆக்கம் பொருந்தும்.
56 பகைபட வாழினும் நகைபட வாழேல்.
57 பாதகச் செயலால் வேதனை விளையும்.
58 பிச்சையுட் படினும் இச்சையுட் படியேல்.
59 பீதி என்பது ஓதினூர்க் கில்லை.
60 புகழ்பட வாழினும் இகழ்வதைத் தாங்கு.
61 பூக்குடை கொளின்மேல் நோக்குடன் ஆளும்.
62 பெரியோர் செயலே அரிதாய்ப் புவிகொள்.
63 பேசும் மொழியில் நேசம் படைப்பாய்.
64 பைய ஒழுகல் ஐயந் தவிர்க்கும்.
65 பொய்மை இகழாம் மெய்மை புகழாம்.
66 போக மிகநல் தேகம் சிதைக்கும்.
67 ஞயமுடன் உறைதல் பயநில தவிர்க்கும்.
68 ஞானத் தவரே தானத் தவராம்.
69 மழைவான் பொய்ப்பின் தழையா துலகு.
70 மானம் அழியா ஞானம் பெரிது.
71 மிச்சப் படுத்தி பிச்சை இடுமேல்.
72 மீண்டார் என்பது வேண்டா விடுத்தல்.
73 முதியோர் உயர்சொல் நிதியினும் மேலாம்.
74 மூடமை அகல நாடகம் செய்யும்.
75 மெலிந்தோ ரிடமுன் வலிமையைக் காட்டேல்.
76 மேலோர் என்பது கீழோர் வணங்கல்.
77 மையல் உலகு வைப்பதில் வையும்.
78 மொழியும் நாடும் விழிபோல் காப்பாய்.
79 மோசச் செயல்கள் நாசம் விளைக்கும்.
80 மௌனம் அறிவு ஔடத நூலாம்.
81 யமனும் வரினும் தமராய்ப் பழகு.
82 யாசிப் பதிலும் பேசும் பணிவாய்.
83 யுத்த களத்தும் சித்தம் குலையேல்.
84 யௌவனம் தன்னில் மௌனம் துணைகொள்.
85 இரத்தினம் எல்லாம் புத்தியில் அடக்கம்.
86 வருமெது வரினும் திருமதி பிறழேல்.
87 வாழ்வில் அனைத்திலும் தாழ்வுயர் வுண்டு.
88 வித்தை அழியினும் புத்தி அழியேல்.
89 வீணர் நட்பு நாணத் தகும்பின்.
90 வெறுவாய் மொழியின் வருவாய் ஒழியும்.
91 வேட்கை உள்ளம் ஆட்கொளல் தீது.
92 வையம் போற்றச் செய்வன செய்முன்.
93 ஆவதும் அழிவதும் மேவிடும் வினைப்பயன்.





அண்ணன் காட்டிய வழி
14
கதை: நம்பியின்தம்பி
படம்: குமார்
வாங்க ஐயா! எங்கே இவ்வளவு தூரம்?
மிக முக்கியமான விஷயம்..... நீங்க மறுக்கக் கூடாது!
ஐயா! நல்லது சொல்லி நான் கேட்காமே இருப்பேனு?
நீங்க முத்துவுக்குப் போட்டிருக்கும் தடையெல்லாம் நீக்கணும்!
என்ன சொல்றீங்க?
முத்துவை மறுபடியும் மாணவர் மன்றச் செயலாளராக இருக்கும்படி அனுமதிக்கணும். ஆனால்..... அன்று நீங்க சொன்னதையெல்லாம் சரின்னு கேட்டேன்.....
இப்ப ஏன் மாத்திக்கிட்டீங்க!
தவறு செய்றவுங்களைத் திருத்த ஒரு வாய்ப்புக் கிடைச்சுதேன்னு சரின்னு சொன்னேன்..... முத்துவுக்கு எந்தப் பொறுப்பும் கொடுக்காமே இருந்தா மற்றவுங்க திருந்துவாங்கனு நினைச்சேன்..... அது தவறாப் போச்சு... இப்ப முத்துவை வச்சு அவுங்களைத் திருத்தணும்!
ஐயா உங்க வார்த்தையை என்றுமே நான் மீறினதில்லே... ஆனா... இந்த விஷயத்தில் என்னை மன்னிச்சிடுங்க!
முத்துவின் அப்பா ஏன் இப்படிப் பிடிவாதமாக இருக்கிறார்..... முதலில் அவர் சொன்னபோது மறுக்காமல் இருந்ததினாலா?
அண்ணு வேலனைக் கூப்பிட்டு வரச் சொன்னார், ஆனா வேலனைக் காணோம் செல்வத்தின் வீட்டிலயும் இல்லே.....
வேலன் முத்துவைப் பார்க்க இப்பத்தானே போனான்
அதோ முத்துவும் வேலனும் வர்ராங்க!
தொடரும்

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்)
# வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

## சின்னமனூர் பேரூராட்சி

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கு மூடி முத்திரையிடப் பட்டுள்ள ஷெட்யூல்டு ஒப்பந்தப் புள்ளி அடியிற் கையொப்ப மிடப்பட்டிருப்பவரால் 19—1—1972 ஆம் நாள் புதன்கிழமை மாலை 4-00 மணி வரை சின்னமனூர் பேரூராட்சி அலுவல கத்தில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளி கொடுப் பவர்கள் கட்டுத் தொகையை இவ்வலுவலகத்தில் செலுத்தி அதற்குரிய ரசீதையும் ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4-30 மணிக்கு வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். காலம் கடந்து வரும் ஒப்பந்தங் களும், கட்டுத் தொகை செலுத்தப் பெறாத ஒப்பந்தங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஒப்பந்தப் புள்ளி சம்பந்த மான ஏனைய விதி முறைகளை அலுவலகத்தில் அலுவல் நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். ரூ. 3·00 செலுத்தி ஷெட்யூல்டு பாரம் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஷெட்யூல்டு பாரத்திற்கு விற்பனை வரி தனி.

**வேலை விவரம்**—பேருந்து நிலையம் கட்டுதல்.
**மதிப்பீட்டுத் தொகை**—ரூ. 1,70,000.
**கட்டுத்தொகை**—ரூ. 4,250.
**முடிக்க வேண்டிய காலம்**—ஒன்பது மாதம்.

டாக்டர் **என். சுப்ரமணியம், L.I.M.** — தலைவர்.
**எஸ். நடராசன்,** — நிருவாக அதிகாரி.

சின்னமனூர் பேரூராட்சி.
24—12—1971
(த. 4)

---

## மறு ஏலம்

## கடையநல்லூர் நகராட்சி

இந்நகராட்சிக்குச் சொந்தமான நகராட்சி தினசரி சந்தை யில் வியாபாரம் செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை அனுபவிக்கும் உரிமையை 10—1—1972-ஆம் நாள் திங்கட்கிழமை காலை 11 மணிக்கும் அதிலிருந்து ஒத்திபோடும் தினங்களிலும் நகர்மன்ற அலுவலகத்தில் வைத்து ஆணை யர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் எல்லாரும் அறிய மறு ஏலம் விடப்படும்.

| குத்தகைக் காலம். | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|
| 1—2—1972 தேதி முதல் 31—3—1973 முடிய. | 300 |

மற்ற ஏல நிபந்தனைகள் முதலியவற்றை நகராட்சி அலு வலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பழ. நடேசன்,**
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
23—12—1971.
(த.5)

---

## ஏல விற்பனை

## காஞ்சிபுரம் நகராட்சி

நகராட்சிக்குச் சொந்தமான எம்.டி.எச். 2344 பார்கோ 1958-ஆம் வருட மாடல் ஓடாத நிலையிலுள்ளதை 27—1—1972 வியாழக் கிழமை மாலை 3—00 மணிக்கு காஞ்சிபுரம் நகராட்சி ஆணையர் அவர்களால் நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாய் ஏலம் போடப்படும். அலுவலக வேலை நேரங்களில் ஊர்தியைப் பார்வையிடலாம். ஏலம் கேட் பவர்கள் ரூபாய் 500 கட்டுத் தொகை செலுத்தி ஏலம் கேட்க வேண்டும். கட்டுத் தொகை செலுத்தாதவர்கள் ஏலத்தில் பங்குகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஏலம் முடிந்த உடன் உச்ச ஏலதாரர் ஏலத் தொகையில் 25 சதவீதத்தை ஏலக் கட்டுத் தொகை ரூ. 500 போக மீதியும் உடனே கட்டிவிட வேண்டும். அப்படிக் கட்டத் தவறினால் அவர்களது கட்டுத் தொகை ரூ. 500 நகராட்சியால் பறிமுதல் செய்து மறு ஏலம் விடப்படும். ஏலம் முடிந்தவுடன் ஏலம் கேட்காதவர்களுக்கு உடனே கட்டுத் தொகை ரூ. 500 திருப்பித் தரப்படும்.

மேற்படி ஏலம் தமிழ்நாடு போக்குவரத்து ஆணையர் அவர்களால் உறுதி செய்யப் படும். உறுதி உத்தரவு ஏலதார ருக்கு அனுப்பிய தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் மீதித்தொகை பூராவையும் செலுத்த வேண் டும். பிறகு தான் ஊர்தி பட்டு வாடா செய்யப்படும். தவறினால் ஏலதார் கட்டியுள்ள 25 சத வீதத் தொகை நகராட்சிக்குச் சேர்ந்துவிடும். மறு ஏலம் விடப் படும். மறு ஏலத்தில் ஏற்படும் நஷ்டம் முதல் ஏலதாரரிட மிருந்து வசூல் செய்யப்படும்.

மேற்படி ஏலமானது தமிழ் நாடு போக்குவரத்து ஆணையர் அவர்களால் உறுதி செய்யப்படா விட்டால் ஏலதாரர் கட்டியுள்ள 25 சதவீதத் தொகை ஏலதார ருக்குத் திருப்பி அளிக்கப்படும்.

**த. ஆ. சிவசுப்பிரமணியன்,**
ஆணையர்.

29—12—1971.
(த.1.)

ஒப்பந்தப் புள்ளி

## திருச்சி மின் திட்டம்

கீழ்க்காணும் பொருள்களை வழங்குவதற்கான முத்திரையிட்ட தனித்தனி விலை ஒப்பந்தங்கள் (Separate Sealed Tenders) அடியிற் கையொப்பம் இட்டவர்களால் வரவேற்கப்படுகின்றன. விலை ஒப்பந்தங்கள் கீழே குறிப்பிட்டுள்ள முடிவுத் தேதிகளில் பிற்பகல் 1 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும் ஒப்பந்த எண்ணும். | சாமான்களின் விவரம். | வழங்க வேண்டிய இடம். | தேவையான எண்ணிக்கை. | முடிவுத் தேதி. |
|---|---|---|---|---|
| 1 டி.ஆர்.பி. 30/71–72 .. | ஃபோர்ஜ்டு ஜி.ஐ.எல்டி. பின்கள். | கரூர் .. | 2,000 டசன் | 20– 1–1972 |
| 2 ,, 31/71–72 .. | டிை | திருச்சி .. | 2,000 டசன் | 20– 1–1972 |
| 3 ,, 32/71–72 .. | டிை | புதுக்கோட்டை. | 2,000 டசன் | 20– 1–1972 |
| 4 ,, 33/71–72 .. | டிை | அரியலூர் .. | 2,000 டசன் | 20– 1–1972 |
| 5 ,, 34/71–72 .. | டிை | துறையூர் .. | 2,000 டசன் | 20– 1–1972 |
| 6 ,, 35/71–72 .. | டிை | பெரம்பலூர் | 2,000 டசன் | 20– 1–1972 |
| 7 ,, 36/71–72 .. | 11 கி.வோ. ஜி.ஐ. பின்கள். | திருச்சி .. | 10,000 நம்பர்கள். | 21– 1–1972 |
| 8 ,, 37/71–72 .. | டிை | கரூர் .. | 10,000 நம்பர்கள். | 21– 1–1972 |
| 9 ,, 38/71–72 .. | டிை | புதுக்கோட்டை. | 5,000 நம்பர்கள். | 21– 1–1972 |
| 10 ,, 39/71–72 .. | டிை | அரியலூர் .. | 5,000 நம்பர்கள். | 21– 1–1972 |
| 11 ,, 40/71–72 .. | டிை | மணப்பாறை | 5,000 நம்பர்கள். | 21– 1–1972 |
| 12 ,, 41/71–72 .. | டொமஸ்டிக் சர்வீஸ் கனெக்ஷன் பைப்புகள். | கரூர் .. | 3,000 நம்பர்கள். | 22– 1–1972 |
| 13 ,, 42/71–72 .. | டிை | அரியலூர் .. | 3,000 நம்பர்கள். | 22– 1–1972 |
| 14 ,, 43/71–72 .. | டிை | புதுக்கோட்டை. | 3,000 நம்பர்கள். | 22– 1–1972 |
| 15 ,, 44/71–72 .. | அக்ரிகல்சரல் சர்வீஸ் கனெக்ஷன் பைப்புகள். | கரூர் .. | 3,000 நம்பர்கள். | 22– 1–1972 |
| 16 ,, 45/71–72 .. | டிை | அரியலூர் .. | 3,000 நம்பர்கள். | 22– 1–1972 |
| 17 ,, 46/71–72 .. | இ.எஸ்.சி. பல்புகள் 40 வாட் 250 வோல்ட். | கரூர் .. | 20,000 நம்பர்கள். | 24– 1–1972 |

| வரிசை எண்ணும் | ஒப்பந்த டி.ஆர்.பி. எண்ணும். | சாமான்களின் விவரம். | வழங்கப்பட வேண்டிய இடம். | தேவையான எண்ணிக்கை. | முடிவுத் தேதி. |
|---|---|---|---|---|---|
| 18 | ,, 47/71–72 .. | இ.எஸ்.சி. பல்புகள் 40 வாட், 250 வோல்ட். | புதுக்கோட்டை. | 20,000 நம்பர்கள். | 24– 1–1972 |
| 19 | ,, 48/71–72 .. | ஷை | மணப்பாறை. | 10,000 நம்பர்கள். | 24– 1–1972 |
| 20 | ,, 49/71–72 .. | ஷை | திருச்சி .. | 20,000 நம்பர்கள். | 24– 1–1972 |
| 21 | ,, 50/71–72 .. | எம்.எஸ். பேக் கிளாம்புகள் ஆர்டினரி 24' ஆர்.சி.சி. போலுக்கு. | திருச்சி .. | 10,000 நம்பர்கள். | 25– 1–1972 |
| 22 | ,, 51/71–72 .. | ஷை | கரூர் .. | 5,000 நம்பர்கள். | 25– 1–1972 |
| 23 | ,, 52/71–72 .. | ஷை | பெரம்பலூர். | 5,000 நம்பர்கள். | 25– 1–1972 |
| 24 | ,, 53/71–72 .. | ஷை | அரியலூர் .. | 5,000 நம்பர்கள். | 25– 1–1972 |
| 25 | ,, 54/71–72 .. | ஷை | துறையூர் .. | 5,000 நம்பர்கள். | 25– 1–1972 |
| 26 | ,, 55/71–72 .. | ஷை | புதுக்கோட்டை. | 5,000 நம்பர்கள். | 25– 1–1972 |
| 27 | ,, 56/71–72 .. | ஷை | மணப்பாறை | 5,000 நம்பர்கள். | 25– 1–1972 |
| 28 | ,, 57/71–72 .. | எம்.எஸ். பேக் கிளாம்புகள் 24' ஆர்.சி.சி. போலுக்கு. (ஸ்பெஷல்) | திருச்சி .. | 10,000 நம்பர்கள். | 27– 1–1972 |
| 29 | ,, 58/71–72 .. | ஷை | அரியலூர் .. | 10,000 நம்பர்கள். | 27– 1–1972 |
| 30 | ,, 59/71–72 | ஷை | மணப்பாறை | 5,000 நம்பர்கள். | 27– 1–1972 |
| 31 | ,, 60/71–72 .. | ஷை | துறையூர் .. | 5,000 நம்பர்கள். | 27– 1–1972 |
| 32 | ,, 61/71–72 .. | ஷை | கரூர் .. | 5,000 நம்பர்கள். | 27– 1–1972 |
| 33 | ,, 62/71–72 .. | ஷை | புதுக்கோட்டை | 5,000 நம்பர்கள். | 27– 1–1972 |
| 34 | ,, 63/71–72 .. | ஷை | பெரம்பலூர். | 5,000 நம்பர்கள். | 27– 1–1972 |
| 35 | ,, 64/71–72 .. | எம்.எஸ்.பேக் கிளாம்புகள் (ஆர்டினரி) 27' ஆர்.சி.சி. போலுக்காக. | திருச்சி .. | 10,000 நம்பர்கள். | 28– 1–1972 |
| 36 | ,, 65/71–72 .. | ஷை | அரியலூர் .. | 10,000 நம்பர்கள். | 28– 1–1972 |
| 37 | ,, 66/71–72 .. | ஷை | புதுக்கோட்டை. | 5,000 நம்பர்கள். | 28– 1–1972 |
| 38 | ,, 67/71–72 .. | ஷை | கரூர் .. | 5,000 நம்பர்கள். | 28– 1–1972 |
| 39 | ,, 68/71–72 .. | ஷை | துறையூர் .. | 5,000 நம்பர்கள். | 28– 1–1972 |
| 40 | ,, 69/71–72 .. | ஷை | மணப்பாறை. | 5,000 நம்பர்கள். | 28– 1–1972 |
| 41 | ,, 70/71–72 .. | ஷை | பெரம்பலூர். | 5,000 நம்பர்கள். | 28– 1–1972 |

| வரிசை எண்ணும் ஒப்பந்த டி.ஆர்.பி. எண்ணும். | சாமான்களின் விவரம். | வழங்க வேண்டிய இடம். | தேவையான எண்ணிக்கை. | முடிவுத் தேதி. |
|---|---|---|---|---|
| 42 ,, 71/71-72 | எம்.எஸ்.பேக் கிளாம்ப்கள் (ஸ்பெஷல்) 27' ஆர்.சி.சி. போலுக்காக. | திருச்சி .. | 10,000 நம்பர்கள். | 29- 1-1972 |
| 43 ,, 72/71-72 .. | ஷை | அரியலூர் .. | 10,000 நம்பர்கள். | 29- 1-1972 |
| 44 ,, 73/71-72 .. | ஷை | புதுக்கோட்டை. | 5,000 நம்பர்கள். | 29- 1-1972 |
| 45 ,, 74/71-72 .. | ஷை | கரூர் .. | 5,000 நம்பர்கள். | 29- 1-1972 |
| 46 ,, 75/71-72 .. | ஷை | துறையூர் .. | 5,000 நம்பர்கள். | 29- 1-1972 |
| 47 ,, 76/71-72 .. | ஷை | மணப்பாறை. | 5,000 நம்பர்கள். | 29- 1-1972 |
| 48 ,, 77/71-72 .. | ஷை | பெரம்பலூர். | 5,000 நம்பர்கள். | 29- 1-1972 |
| 49 ,, 78/71-72 .. | எம்.எஸ்.பேக் கிளாம்புகள் (ஆர்டினரி) 30' ஆர்.சி.சி. போலுக்காக. | திருச்சி .. | 8,000 நம்பர்கள். | 31- 1-1972 |
| 50 ,, 79/71-72 .. | ஷை | கரூர் .. | 5,000 நம்பர்கள். | 31- 1-1972 |
| 51 ,, 80/71-72 .. | ஷை | அரியலூர் .. | 5,000 நம்பர்கள். | 31- 1-1972 |
| 52 ,, 81/71-72 .. | எம்.எஸ்.பேக் கிளாம்புகள் (ஸ்பெஷல்) 30' ஆர்.சி.சி. போலுக்காக. | திருச்சி .. | 5,000 நம்பர்கள். | 31- 1-1972 |
| 53 ,, 82/71-72 .. | ஷை | அரியலூர் .. | 5,000 நம்பர்கள். | 31- 1-1972 |
| 54 ,, 83/71-72 .. | ஷை | கரூர் .. | 5,000 நம்பர்கள். | 31- 1-1972 |
| 55 ,, 84/71-72 .. | எம்.எஸ். கை கிளாம்புகள் (ஆர்டினரி) 24' ஆர்.சி.சி. போலுக்காக. | அரியலூர் .. | 10,000 ஜதைகள். | 1- 2-1972 |
| 56 ,, 85/71-72 .. | ஷை | அரியலூர் .. | 10,000 ஜதைகள். | 1- 2-1972 |
| 57 ,, 86/71-72 .. | ஷை | மணப்பாறை. | 10,000 ஜதைகள். | 1- 2-1972 |
| 58 ,, 87/71-72 .. | ஷை | கரூர் .. | 10,000 ஜதைகள். | 1- 2-1972 |
| 59 ,, 88/71-72 .. | ஷை | புதுக்கோட்டை | 5,000 ஜதைகள். | 1- 2-1972 |
| 60 ,, 89/71-72 .. | ஷை | துறையூர் .. | 5,000 ஜதைகள். | 1- 2-1972 |
| 61 ,, 90/71-72 .. | எம்.எஸ். கை கிளாம்புகள் (ஆர்டினரி) 27' ஆர்.சி.சி. போலுக்காக. | அரியலூர் .. | 10,000 ஜதைகள். | 1- 2-1972 |
| 62 ,, 91/71-72 .. | ஷை | மணப்பாறை. | 10,000 ஜதைகள். | 1- 2-1972 |

| வரிசை எண்ணும் ஒப்பந்த டி.ஆர்.பி. எண்ணும். | | | சாமான்களின் விவரம். | வழங்கவேண்டிய இடம். | தேவையான எண்ணிக்கை. | முடிவுத் தேதி. |
|---|---|---|---|---|---|---|
| 63 | ,, | 92/71-72 .. | எம்.எஸ்.கை கிளாம்புகள் (ஆர்டினரி) 27' ஆர்.சி.சி. போலுக்காக. | கரூர் .. | 10,000 ஜதைகள். | 1- 2-1972 |
| 64 | ,, | 93/71-72 .. | டிஷ | புதுக்கோட்டை. | 5,000 ஜதைகள். | 1- 2-1972 |
| 65 | ,, | 94/71-72 .. | டிஷ | பெரம்பலூர். | 5,000 ஜதைகள். | 1- 2-1972 |
| 66 | ,, | 95/71-72 .. | டிஷ | துறையூர் .. | 5,000 ஜதைகள். | 1- 2-1972 |
| 67 | ,, | 96/71-72 .. | எம்.எஸ். கை கிளாம்புகள் (ஸ்பெஷல்) 24' ஆர்.சி.சி. போலுக்காக. | அரியலூர் | 5,000 ஜதைகள். | 2- 2-1972 |
| 68 | ,, | 97/71-72 .. | டிஷ | கரூர் .. | 5,000 ஜதைகள். | 2- 2-1972 |
| 69 | ,, | 98/71-71 .. | டிஷ | மணப்பாறை. | 5,000 ஜதைகள். | 2- 2-1972 |
| 70 | ,, | 99/71-72 .. | டிஷ | புதுக்கோட்டை. | 5,000 ஜதைகள். | 2- 2-1972 |
| 71 | ,, | 100/71-72 .. | டிஷ | பெரம்பலூர். | 5,000 .. ஜதைகள். | 2- 2-1972 |
| 72 | ,, | 101/71-72 .. | டிஷ | துறையூர் .. | 5,000 ஜதைகள். | 2- 2-1972 |
| 73 | ,, | 102/71-72 .. | டிஷ | திருச்சி .. | 10,000 ஜதைகள். | 2- 2-1972 |
| 74 | ,, | 103/71-72 .. | எம்.எஸ். கை கிளாம்புகள் (ஸ்பெஷல்) 27' ஆர்.சி.சி. போலுக்காக. | திருச்சி .. | 10,000 ஜதைகள். | 3- 2-1972 |
| 75 | ,, | 104/71-72 .. | டிஷ | அரியலூர் .. | 5,000 .. ஜதைகள். | 3- 2-1972 |
| 76 | ,, | 105/71-72 .. | டிஷ | கரூர் .. | 5,000 ஜதைகள். | 3- 2-1972 |
| 77 | ,, | 106/71-72 .. | டிஷ | மணப்பாறை. | 5,000 ஜதைகள். | 3- 2-1972 |
| 78 | ,, | 107/71-72 .. | டிஷ | பெரம்பலூர். | 5,000 .. ஜதைகள். | 3- 2-1972 |
| 79 | ,, | 108/71-72 .. | டிஷ | புதுக்கோட்டை. | 5,000 ஜதைகள். | 3- 2-1972 |
| 80 | ,, | 109/71-72 .. | டிஷ | துறையூர் .. | 5,000 ஜதைகள். | 3- 2-1972 |
| 81 | ,, | 110/71-72 .. | எம்.எஸ். ஃபார்ம் பாக்சுகள் 24' ஆர்.சி.சி. போலுக்காக. | திருச்சி .. | 50 நம்பர்கள். | 4- 2-1972 |
| 82 | ,, | 111/71-72 .. | எம்.எஸ். ஃபாரம் பாக்சுகள் 27' ஆர்.சி.சி. போலுக்காக. | திருச்சி .. | 40நம்பர்கள். | 4- 2-1972 |

மேற்படி பொருட்களைப் பற்றிய குறிப்புகள் ஏனைய நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தப் பிரதிகள் (Tender Specification Forms) பிரதி ஒன்றுக்கு ரூபாய் 5·00 (ரூபாய் ஐந்து வீதம்) (திருப்பித் தரத்தக்கதல்ல) தலைமைக் கணக்காயர், செலவினப் பிரிவு, திருச்சி மின் திட்டம், மன்னார்புரம், திருச்சி-1 அவர்களிடம் ரொக்கமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ (கூப்பனில்

குறிப்பு எண்ணைக் குறிப்பிட்டு) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கூப்பனில் தேவையான சாற்றுக் குறிப்பு எண் தெளிவான முகவரியோடு குறிப்பிடாமல் இருப்பின் மணியார்டர் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தபாலில் வரும் பொழுது பிரதிகள் தவறிவிட்டால் அதற்கு இந்தக்குழு பொறுப்பேற்காது. மேற்படி பொருட்களைப் பற்றிய குறிப்புகள் முடிவுத் தேதிக்குக் குறைந்தது நான்கு நாட்கள் முன்னதாக வரவேண்டும். விலை ஒப்பந்தங்கள் குறிப்பிட்டுள்ள முடிவுத் தேதியன்று பிற்பகல் 3 மணிக்கு அச்சமயம் வந்திருக்கும் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் விலை ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேற்கண்ட பொருட்களை வழங்குவதற்கான உத்திரவை ஒருவருக்கோ அல்லது பலருக்கோ கொடுக்கவும், எந்த ஒருவருடைய விலை ஒப்பந்தத்தையோ அல்லது அத்தனை பேர்களுடைய விலை ஒப்பந்தங்களையோ நிராகரிக்கவும் அடியில் கையொப்பம் இட்டவருக்குப் பூரண உரிமை உண்டு.

**மேற்பார்வை மின் பொறியாளர்,**

திருச்சி மின் திட்டம், திருச்சிராப்பள்ளி.

(த-11)

---

## ஒப்பந்தப் புள்ளி

## பொள்ளாச்சி நகராட்சி

பொள்ளாச்சி நகராட்சிக்குக் கீழே கண்ட பொருட்கள் விநியோகம் செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே குறிப்பிட்டுள்ள அந்தந்தத் தேதிகளில் 4·00 மணிவரை ஆணையர் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். முழு விவரம் அடங்கிய ஒப்பந்தப் புள்ளிப் படிவங்கள் விண்ணப்பங்களின் பேரில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| | | | கட்டுத் தொகை. | முடிவுத் தேதி. | ஒப்பந்தப் புள்ளி திறக்கும் நேரம். |
|---|---|---|---|---|---|
| | | | ரூ. | | |
| 1 | இ3/15769/71 .. | மரம் மற்றும் ஹார்டுவேர் சாமான்கள் விநியோகம் செய்ய. | 20 | 28—1—1972 | 4-30 மாலை. |
| 2 | இ3/19907/71 .. | தண்ணீர் விநியோகம் வார்ப்பு இரும்புத் தளவாடங்கள் விநியோகம் செய்ய. | 125 | 29—1—1972 | 4-45 மாலை. |
| 3 | இ3/4337/70 .. | ஆறு குதிரை வேகமுள்ள ஆயில் இன்ஜின் விநியோகம் செய்வதோடு அதை அலுவலகத்தில் உள்ள காங்கிரீட் மிக்சர் பிளேண்ட்டோடு பொருத்தவும். | 150 | 28—1—1972 | 4-45 மாலை. |
| 4 | இ3/19189/71 .. | மின்மோட்டாரும் தண்ணீர் விநியோகத் தளவாடங்களும் விநியோகம் செய்ய. | 200 | 29—1—1972 | 4-30 மாலை. |

**ஆணையர்,**

பொள்ளாச்சி நகராட்சி.

20—12—1971.

(த-2)

---

## இராசிபுரம் நகராட்சி

இராசிபுரம் நகராட்சியின் பொதுச் சுகாதார உபயோகத்திற்கான 60 குப்பைத் தொட்டிகள் விநியோகம் செய்ய இராசிபுரம் நகராட்சி ஆணையராலோ அல்லது அவர் அங்கிகாரம் பெற்றவராலோ 18—1—1972-ஆம் தேதி மாலை 4—00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிக்கான நிபந்தனைகள் கீழ்க் கையொப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**வெ. பாலசுப்ரமணியன்,**
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
22—12—1971.

(த-3)

## ஒப்பந்தப் புள்ளி

### பொள்ளாச்சி நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கு ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனி உறைகளில் மூடி முத்திரை யிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையர் அவர்களால் அவரது அலுவலகத்தில் 29—1—1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்றே மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் விதிமுறைகள் வேண்டுவோர் முதல் வேலைக்கு ரூ. 5-00-ம் விற்பனை வரி ரூ. 3½ சதவீதமும் மற்ற வேலைகளுக்கு ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 2-00-ம் விற்பனை வரி ரூ. 3½ சதவீதமும் நகராட்சிக் கருவூலத்தில் செலுத்திச் செலுத்துச் சிட்டுடன் நகராட்சி மராமத்துப் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்து 28—1—1972 ஆம் தேதி வரை பெற்றுக்கொள்ளலாம். மற்ற விவரங்களுக்கு நகராட்சி மராமத்துப் பொறியர் அலுவலகத்தில் வேலை நேரங்களில் விசாரிக்கவும்,—

| | வரிசை எண்ணும் கட்டின் நடப்பு எண்ணும். | | வேலையின் விவரம். | மதிப்பீடு தொகை. ரூ. | முன்வைப்புத் தொகை. ரூ. | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|---|---|---|
| 1 | இ1/23452/70 | .. | காந்தி சந்தையில்மாடுவதைக் கட்டடம் கட்டுதல். | 20,387 | 510 | 3 மாதம். |
| 2 | இ1/529/71 | .. | வடுகபாளையம் நகராட்சிப் பள்ளியின் கிழ்ப்புற, தென் புற சுற்றுச் சுவரை புதுப்பித்துக் கட்டுதல். | 8,283 | 207 | ஷை |
| 3 | இ1/13042/71 | .. | மரப்பேட்டை சுண்ணும்புக் காளவாய் இட்டேரி ரோடுக்கு ஓடையிலிருந்து தெற்கே ரயில்வே லைன் வரை கருங்கல் கப்பி போட்டுத் தார்த் தளம் போடுதல். | 8,510 | 213 | ஷை |
| 4 | இ1/19498/70 | .. | வடுகபாளையம் இடையர் வீதிக்குத் தார்தளம்போடு தல் மற்றும் ஒரு சிறு பாலம் கட்டுதல். | 13,942 | 349 | ஷை |
| 5 | இ1/14386/71 | .. | கோட்டூர் வழி நடுநிலைப் பள்ளியில் சிறுநீர் மற் றும் மலக் கழிப்பிடம் கட்டுதல். | 8,143 | 204 | ஷை |
| 6 | இ1/14387/71 | .. | தெப்பக்குளம் வழி நடுநிலைப் பள்ளியில் சிறுநீர் மற்றும் மலக்கழிப்பிடம் கட்டுதல். | 8,143 | 204 | ஷை |
| 7 | இ1/7695/71 | .. | தரைமட்ட தண்ணீர் கிடங் கில் காவலாளி குடி யிருப்பு மற்றும் ஆபீஸ் அறை கூரைகளைப் பிரித்து விட்டு சிமெண்ட் காங் கிரீட் கூரை போடுதல் மற்றும் தளவாட அறைக் கட்டுதல். | 13,893 | 348 | ஷை |
| 8 | இ1/7719/70 | .. | ஜூபிலி கிணறு இடத்தில் தண்ணீர்த் தொட்டி மோட்டார் ரூம் கட்டுதல் கம்பி அளி போடுதல், மற்றும் கிணறு ஆழப் படுத்துதல். | 8,686 | 217 | ஷை |

**பி. கே. முகம்மதுஅலி,**
ஆணையர்.

பொள்ளாச்சி,
21—12—1971.
(த-8)

## சிறைத்துறை

1972—73-ஆம் ஆண்டிற்குக் கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு உணவுப் பொருட்கள் முதலியன வழங்குவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1—3—1972 தேதி பிற்பகல் 3·00 மணி வரை தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும், அவர்களின் சார்பாகவும் வரவேற்கப் படுகின்றன. விலைகள் மெட்ரிக் அளவைகளில் மட்டுமே குறிப்பிடப்பட வேண்டும்.

நிறுவனங்கள்:—சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, சேலம், மதுரை, கோயம்புத்தூர், பாளையங்கோட்டை, முதலிய இடங்களிலுள்ள மத்திய சிறைகள், புதுக்கோட்டை யிலுள்ள பார்ஸ்டல் பள்ளி மற்றும் பல்லாவரத்திலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம்.

ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறை களின் ஒப்புகைப் பதிவஞ்சலில் (By Registered Post Ack. due) மட்டுமே அனுப்பப்படவேண்டும். உறையின் மேல் ''.... ....''க்கு (இங்கு எந்த நிறுவனத்திற்கான ஒப்பந்தப் புள்ளியோ அந்த நிறுவனத்தின் பெயரைக் குறித்து) உணவுப் பொருட்கள் முதலியன வழங்குவதற்கான ஒப்பந்தம்'' என்று தவறாமல் எழுதி, தமிழ்நாடு சிறைத் துறைத் தலைமைப் பார்வையாளர் அவர்களின் பெயருக்கு அனுப்பவேண்டும்.

ஒப்பந்தங்கள் சிறைத் துறைத் தலைமைப் பார்வையாளர் அலுவலகத்தில் 2—3—1972 முற்பகல் 10.30 மணிக்குள் திறக்கப்படும்.

ஒப்பந்த நமூனக்கள், ஒப்பந்த விதிகள், வழங்க வேண்டிய உணவு, இதர பொருட்களின் விவரக் குறிப்பீடுகள் முதலி யவைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கண்காணிப்பாளரி டமிருந்து மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு செலுத்தப் பட்டக் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

**பி. குப்புசாமி,**

சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர்,
'குறளகம்', 5வது மாடி, சென்னை—1.

22—12—1971.
(த. 15)

## பொதுப் பணித் துறை

வேலையின் பெயர்:—சென்னை மெரினுவில் பாரன்சிக் விஞ் ஞான ஆய்வகக் கட்டடத்தின் மேல் மூன்ருவது மாடி கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்கள் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக மேற்பார்வைப் பொறியாளர் பொ. ப. து. சென்னை, செங்கற்பட்டு வட்டம், சென்னை—5 அவர்களால் சென்னை—5, சேப்பாக்கத்திலுள்ள அவர்கள் அலுவலகத்தில் 28—1—1972 பிற்பகல் 3.00 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப் படும். ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை-செங்கற்பட்டு வட்டம், பொ. ப. து. சென்னை—5 அவர்களால் அதே நாளில் பிற்பகல் 3.15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப் படும்.

1. ஒப்பந்தவடிவம்.—மொத்தத்தொகை.
2. கட்டுத்தொகை.—ரூ. 6,800
3. வேலைமுடிக்கவேண்டிய காலம்.—6 மாதங்கள்
4. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை ரூபாய் 20.. (ரூபாய் இருபது மட்டும்) கருவூலத்திலோ (அ) இந்திய ரிசர்வ் பாங்கியிலோ '' Public Works Remittances III Other Remittances '' என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர் கட்டடக் கோட்டம் 1, சேப்பாக்கம், சென்னை-5 அவர்கள் கணக்கில் செலுத்தப்படல் வேண்டும்.
5. விற்பனை வரி ரூ. 0.70 (எழுபது காசுகள் மட்டும்) அதே செலானில் குறித்துக் கருவூலத்திலோ (அ) இந்திய பாங்கியிலோ '' XII '' விற்பனை வரி 'B' மாநில விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் வரவினம்'' என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்.
6. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் அலுவலக நேரத்தில் விற்பனையாகும் தேதி : 20—1—1972 முதல் 27—1—1972 முடிய.
7. ஒப்பந்தப் புள்ளித் தேதி:—28—1—1972 (பிற்பகல் 3.00 மணி)

மேற்கண்ட விவரங்களை மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொ. ப. து. சென்னை—செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம் சென்னை—5ல் அலுவலக நாட்களில் வேலை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். எந்த ஒப்பந்தப் புள்ளியையும் (அ) எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எவ்விதக் காரணமும் கூறாமல் நிராகரித்துவிட மேற்பார்வைப் பொறியாளர், சென்னை செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை—5 அவர்களுக்கு உரிமை உண்டு.

**பி. கே. கந்தசாமி,**
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை செங்கற்பட்டு வட்டம்.

16—12—1971
(த. 12)

## விற்பனை

### வேளாண்மைத் தொழிற் கழகம்

கிண்டி, சென்னை—32

அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கீழ்க்கண்ட டிராக்டர்கள் தமிழ்நாட்டு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு விற்பனைக்குக் கிடைக்கும்.

| | உத்தேச விலை. |
|---|---|
| 1. செட்டாரி 5,511 (55 குதிரைத் திறன்) செக்கோஸ்லாவேக்கியத் தயாரிப்பு. தண்ணீரால் குளிரும் இன்ஜின்; கரும்பு சாகுபடிக்கும், கடுமையான விவசாயத்திற்கும் மற்றும் இழுத்துச் செல்லும் வேலைகளுக்கும் ஏற்றது. | ரூ. 32,000 (வரியுட்பட) விற்பனைக்குத் தயாராக உள்ளது. |
| 2. செட்டார் 2,011 ரைஸ் ஸ்பெஷல் (25 குதிரைத் திறன்) செக்கோஸ்லாவேக்கியத் தயாரிப்பு. எல்லாவிதமான விவசாய வேலைகளுக்கும் இழுத்துச் செல்லும் வேலைகளுக்கும் ஏற்றது. நஞ்சை சாகுபடிக்கு என்றே தயாரிக்கப் பட்டது. | ரூ. 25,000 (வரியுட்பட) (இன்னும் ஒரு மாதத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 3. ஆர்எஸ்ஓ 9 (20 குதிரைத் திறன்) காற்றினால் குளிர்விக்கக் கூடியது. கிழக்கு ஜெர்மனி தயாரிப்பு, நவீனமானது, பலவகையான உபயோகத்திற்கு ஏற்றது. மிகக் குறைந்த விலை. | ரூ. 11,601 (வரியுட்பட) விற்பனைக்குத் தயாராக உள்ளது. |

மேலே குறிப்பிட்டுள்ள டிராக்டர் வகைகளை வாங்க விரும்பும் விவசாயிகள் கீழ்க்கண்ட எங்களது கிளை அலுவலகங்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| முகவரி. | கவனிக்கப்படும் மாவட்டங்கள். |
|---|---|
| 1. சிறு காவேரிப்பாக்கம், காஞ்சிபுரம். | செங்கற்பட்டு, வடஆர்க்காடு. |
| 2. போக்ஸ் காம்பவுண்டு, சேலம்—1. | சேலம், கோயம்புத்தூர், தருமபுரி, நீலகிரி. |
| 3. 219, நேருஜி ரோடு, விழுப்புரம். | தென் ஆர்க்காடு. |
| 4. தொழிற் குடியிருப்பு, திருச்சி—10. | திருச்சி, தஞ்சாவூர். |
| 5. தொழிற்பேட்டை, மதுரை-7. | மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்யாகுமரி. |

துணைக்கூடங்கள், செங்கை மாவட்டத்தில் பொன்னேரியிலும், மதுராந்தகத்திலும் இயங்கி வருகின்றன. விரைவில் ஒவ்வொரு கூடத்தின் கீழும் மூன்று துணைக்கூடங்கள் அமைக்கப்பட இருக்கின்றன.

(த. 9)

## ஒப்பந்தப் புள்ளி

1972–73-ஆம் ஆண்டிற்குக் கீழ்க்கண்ட நிறுவனங்களுக்குக் கச்சாப் பொருட்கள் வழங்குவதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 16–2–1972 தேதி பிற்பகல் 3–00 மணி வரை தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும், அவர்களின் சார்பாகவும், வரவேற்கப்படுகின்றன.

நிறுவனங்கள் :— சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, சேலம், மதுரை, கோயம்புத்தூர், பாளையங்கோட்டை முதலிய இடங்களிலுள்ள மத்தியச் சிறை மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி, சென்னை பல்லாவரத்திலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம்.

ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளின் ஒப்புகைப் பதிவஞ்சலில் ( By Registered Post Ack. Due ) மட்டுமே அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல் "............க்கு இங்கே எந்த நிறுவனத்திற்கான ஒப்பந்தப் புள்ளியோ அந்தந்த நிறுவனத்தின்பெயரைக்குறித்துக் கச்சாப் பொருட்கள் வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளி" என்று தவறாமல் எழுதித் தமிழ்நாடு சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர் அவர்களின் பெயருக்கு அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகள் சிறைத் துறைத் தலைமைப் பார்வையாளரின் அலுவலகத்தில் 17–2–1972 முற்பகல் 10-30 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்த நமூனாக்கள், ஒப்பந்தப் புள்ளி விதிகள், வழங்க வேண்டிய கச்சாப் பொருட்களின் விவரக் குறிப்பீடுகள் முதலியவைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு செலுத்தப்பட்ட கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

**பி. குப்புசுவாமி,**

சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர், 'குறளகம்' 5-வது மாடி, சென்னை-1.

22–12–1971.

(த.13)

இயக்குநரின் ஒப்பந்தப் புள்ளி அறிக்கை எண் : V 9/71–72

வேலையின் பெயர்—டீசல் டிராக்டர்—2 Nos. வழங்குதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில், நிலநீர் இயக்குநர் அவர்களால் மேலே குறிக்கப்பெற்றுள்ள வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்கண்ட அலுவலகத்தில் 28—1—1972 அன்று மாலை 3 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் நிலநீர் இயக்குநரால் மேற்கண்ட அலுவலகத்தில் அதே தேதியில் மாலை 3-30 மணிக்கு அச்சமயம் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

1. முன் வைப்புத் தொகை — ரூபாய் 3,500

2. ஒப்பந்தப் புள்ளி பத்திரங்களின் விலை. ரூபாய் 5·00
விற்பனை வரி ... ரூபாய் 0·20

3. வேலையை முடிக்கவேண்டிய காலம். .. 2 மாதங்கள்.

4. ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் கிடைக்கும் காலம். 27—12—1971 முதல் 23—1—1972 முடிய.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (எச்சூழ்நிலையிலும் திருப்பியளிக்கவியலாது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "Public Works remittances III other remittances" என்று தலைப்பிடப்பட்டு, நிருவாகப் பொறியாளர், நிலநீர்க் கோட்டம், சென்னை-17, அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரித் தொகையானது, அதே சலானில் "XII Sales Tax (b) receipts under State Sales Tax Act—General Sales Tax" என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலத்தில் அல்லது ரிசர்வ் வங்கியில் செலுத்தப்பட வேண்டும். மேற்குறித்த சலானைக் கொடுத்த பின்புதான், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

நில நீர் இயக்குநர்.

10, தண்டபாணி தெரு,
சென்னை-17.

(த. 18)

## பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 9—2—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். ...

1. வேலையின் பெயர்: சாக்கோட்டையில் விதை பதனிடும் இரு கிடங்குகட்குக் கட்டடம் கட்டுதல்
2. ஒப்பந்த வகை மொத்தத் தொகை.
3. பிணைப் பணம் (செலுத்துச் சீட்டு மூலம் பெற்றுக் கொள்ளப்படும்). ரூ. 6,500 ...
4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (கருவூலத்தில் பொ. ப. செலுத்துத் தொகை III மற்றைய செலுத்துத் தொகை என்னும் தலைப்பில் செயற் பொறியாளர் கட்டடக் கோட்டம் திருவாரூர், அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும்). ... ரூ. 30·00
5. விற்பனை வரி .. .. ரூ. 1·05 (அரசினர் கருவூலத்தில் XII விற்பனை வரி பி. பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி என்ற தலைப்பில் செலுத்துதல் வேண்டும்.)
6. கால அளவு .. ஆறு மாதங்கள்.
7. ஒப்பந்தப் பத்திரம் கிடைக்க ஆரம்பிக்கும் நாள். 17—1—1972

**ஆர். வேணுகோபால்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த.ஆர்.5)

## ஒப்பந்தப் புள்ளி

கோயம்புத்தூர் கோட்டம்

கோயம்புத்தூர் நெடுஞ்சாலைக் கிராமப் பணித்துறைக் கோட்டப் பொறியாளர் (டிவிஷனல் இன்ஜினியர்) அவர்களால் 1972–73-ஆம் வருடத்திய அரசாங்கச் சாலைகள் பராமரிப்பு வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கோயம்புத்தூர் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் 21—1—1972-ஆம் நாள் பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் 21—1—1972-ஆம் நாள் பிற்பகல் 3-15 மணிக்குக் கோயம்புத்தூர் கோட்டப் பொறியாளர் அலுவலக்த்தில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கோயம்புத்தூர் நெடுஞ்சாலைக் கோட்டப் பொறியாளர் அலுவலக மேலாளர் அவர்களிடம் ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 3-11 வீதம் (விற்பனை வரி உட்பட) கட்டணம் செலுத்தி அலுவலக நாட்களில் 10—1—1972 முதல் 20—1—1972 வரை விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது. 21—1—1972 ஒப்பந்தப் புள்ளிகள் பெறும் தினத்தன்று எக்காரணத்தை முன்னிட்டும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கொடுக்கப்படமாட்டாது. முன்பண வைப்புத் தொகையைக் கோயம்புத்தூர் கோட்டப் பொறியாளரின் பெயரில் அரசினர் கருவூலத்தில் ''வருவாய் வைப்புத் தொகைக்கு'' (ரெவின்யூ டெபாசிட்) செலுத்தி அதற்கான செல்லுச் சீட்டை (செலவான) அல்லது கோடிட்ட (கிராஸ்டு) பேங்க் டிராப்ட் ஒப்பந்த அறிவிப்புப் பத்திரத்துடன் இணைக்க வேண்டும். மேற்படி முன்பண வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாகத் தள்ளுபடி செய்யப்படும். வருமான வரி, விற்பனை வரி செலுத்தியதற்கான அத்தாட்சிப் பத்திரங்கள் ஒப்பந்த அறிவிப்புப் பத்திரத்துடன் இணைக்க வேண்டும். பாங்க் காரண்டி முன் வைப்புத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமேயானால் ரிசர்வ் பாங்க் காரண்டிக்கு உண்டான ஒப்புதலையும் ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கான முன்பண வைப்புத் தொகை, ஒப்பந்தப் புள்ளிகள் பற்றிய நிபந்தனைகள் முதலிய முழு விவரங்கள் அடங்கிய விளம்பர அறிக்கையைக் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில், மற்றும் இக்கோட்டத்தைச் சேர்ந்த உதவிப் பொறியாளர் மற்றும் பிரிவு அலுவலர் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**கு. வெங்கட்ராம்,**
கோட்டப் பொறியாளர்,
(நெ.கி.ப.)
கோயம்புத்தூர்.

(த. ஆர். 3)

## ஏல விற்பனை

### நாகர்கோவில் நகராட்சி

வடசேரி எம்.எஸ். ரோட்டில் நாயனுர் நினைவுக் கட்டடத்திலுள்ள 18 கடைகளை 1—3—1972 முதல் மூன்று ஆண்டுகளுக்கு அனுபவிக்கும் உரிமையை 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11-00 மணியிலிருந்தும் அதன் பின்னர் ஆணையரால் மாற்றி வைக்கப்படும் நாட்களிலும் நகராட்சி அலுவலகத்தில் பலரும் அறிய ஏலத்தில் விடப்படும். மேற்கொண்டு விவரங்களுக்கு அலுவலக நேரத்தில் நேரிலோ அல்லது கடிதம் மூலமோ தெரிந்து கொள்ளலாம்.

**பி. தங்கவேலு,**
**ஆணையர்.**

நாகர்கோவில் நகராட்சி
29—12—1971
(த.22)

## ஏல விற்பனை

பழுதடைந்த நிலையிலுள்ள அரவாக்குறிச்சி வட்டார ஜீப் எம். எஸ். ஒய். 2156, 27—1—1972-ஆம் தேதி 11 மணிக்குத் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளர் (பஞ்சாயத்து வளர்ச்சி) அவர்களால் அரசின் விதிமுறைகளின்படி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலம் சம்பந்தமான விவரங்களை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் (பஞ்சாயத்து வளர்ச்சிப் பிரிவு) அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். மோட்டார் வாகனத்தை நேரில் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
திருச்சிராப்பள்ளி.

(த.21)

## ஏல விற்பனை

### நாகர்கோவில் நகராட்சி

1972–73-ஆம் ஆண்டிற்கு நகராட்சிக்குச் சொந்தமான சந்தைகள், இறைச்சிக் கடைகள், ஆடு மாடு அடிக்கும் சாலைகள், வாடகைக்கார் நிற்கும் நிலையங்கள், கக்கூசு, குளிக்கும் அறைகள் ஆகியவற்றின் அனுபவிக்கும் உரிமையையும், கட்டணம் வசூலிக்கும் உரிமையையும் 1972-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ஆம் தேதி புதன்கிழமை காலை 11 மணியிலிருந்தும், அதன் பின்னர் ஆணையரால் மாற்றி வைக்கப்படும் நாட்களிலும், நகராட்சி அலுவலகத்தில் பலரும் அறிய ஏலத்தில் விடப்படும். கூடுதல் விவரங்களுக்கு அலுவலக நேரத்தில் நேரிலோ அல்லது கடிதம் மூலமோ தெரிந்து கொள்ளலாம்.

**பி. தங்கவேலு,**
**ஆணையர்.**

நகராட்சி அலுவலகம்,
29—12—1971
(த. 20)

## தொழிற் கல்வித் துறை

தோல் தொழில் நுட்ப நிறுவனம், சென்னை-20க்கும், தமிழ் நாட்டிலுள்ள மற்ற அரசுத் தொழில் உயர்நிலைப் பள்ளிகளுக்கும், தேவையான கருவிகளும், இயந்திரங்களும் வழங்குவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 31—1—1972 மாலை 4-00 மணி வரை வரவேற்கப் படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், மற்ற விவரங்களுக்குத் தொழில் கல்வி இயக்குநர், அலுவலகம், சென்னை-25-ல் இரண்டு தனித்தனியான கருவூலச் செலான்களில், ஒன்றில் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை ரூ. 10 தமிழ்நாடு அரசின் கணக்கிலும் ''XXIII—Education R. Technical Education—a fees and other Charges'' என்ற தலைப்பிலும் மற்றொன்றில் விற்பனை வரி 0·30 காசு தமிழ்நாடு அரசின் கணக்கில் '' XII Other Taxes and Duties '' என்ற தலைப்பிலும் செலுத்திச் செல்லுச் சீட்டை கொடுத்துப் பெறலாம்.

எந்தச் சூழ்நிலையிலும், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை திருப்பித் தரப்படமாட்டாது. வேறு வழியில் செலுத்தப்படும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**தொழிற்கல்வி இயக்குநர்.**

(த.10)

---

## பவானிசாகர் நகரியக் குழு

இந் நகரிய அலுவலக உபயோகத்திற்குத் தமிழ் தட்டெழுத்து இயந்திரம் (பாளரி சைஸ்) ஒன்று வழங்க அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 26—1—1972 அன்று பிற்பகல் 4 மணிக்கு அப்பாற்படாமல் சேரும் படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின்மீது, ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிடவேண்டும்.

பெறப்படும் ஒப்பந்தங்கள் 26—1—1972 அன்று பிற்பகல் 4-15 மணிக்கு, வந்திருக்கக் கூடிய, ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்கவோ, ஏற்றுக் கொள்ளவோ நிருவாக அதிகாரிக்கு உரிமையுண்டு.

**ச. ராமசாமி,**

நிருவாக அதிகாரி
பவானிசாகர் நகரியம்.

24—12—1971

(த.23)

---

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

திருநெல்வேலி தெற்குக் கோட்டம் (இருப்பு)
பாளையங்கோட்டை

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் திருநெல்வேலி தெற்கு (நெ.கி.ப.து.) கோட்டப்பொறியாளர் அவர்களால் திருநெல்வேலி தெற்குக் கோட்டத்திற்குட்பட்ட அரசினர் சாலைகளின் 1972–73-ஆம் ஆண்டுப் பராமரிப்பு வேலைகளுக்கு அரக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் பாளையங் கோட்டையிலிருக்கும் அவர்களுடைய அலுவலகத்தில் 28—1—1972 வெள்ளிக்கிழமை மாலை 2-00 மணி வரை (அலுவலகக் கடியாரப்படி) பெற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனிக் கவரில் வேலையின் பெயரை எழுதிக், கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை, திருநெல்வேலி தெற்கு (இருப்பு) பாளையங்கோட்டை என்ற விலாசம் எழுதி ஒப்பந்தங்கள் கொடுக்கப்பட வேண்டும். கிடைத்த ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 2-15 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்டவர்கள் முன்னிலையில் கோட்டப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் நமூனுக்கள் முதலியன அலுவலக நேரங்களில் மேலாளரிடமிருந்து 29—12—1971 முதல் 27—1—1972 வரை ரூ. 5·18 (வரி உட்பட) ஒவ்வொன்றுக்கும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை எக் காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

முன் வைப்புத்தொகைக்கான சான்றுகள் இணைக்கப்படாத ஒப்பந்தங்களும், காலதாமதமாக வரும் ஒப்பந்தங்களும் கோட்டப் பொறியாளர் பெயருக்கு மாற்றப்படாத, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரங்களுடன் வரும் ஒப்பந்தங்களும் தள்ளுபடி செய்யப்படும்.

வேலைக்குரிய முன் வைப்புத் தொகை அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி திருநெல்வேலி தெற்குக் கோட்ட எல்லையிலுள்ள அரசினர் கருவூலத்தில் '' வருவாய் வைப்புத் தொகை '' என்ற தலைப்பில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைக்கவேண்டும். முன் வைப்புத் தொகைக்காக டிமாண்ட் டிராப்ட் இணைக்கப்படுவதாயிருந்தால் அவை திருநெல்வேலி ஸ்டேட் பாங்கில் மாற்றத் தக்கதாக இருக்க வேண்டும். இது தவிர முன் வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படுகின்ற வங்கி உத்தரவாதத்துடன் ரிசர்வ் வங்கியின் அங்கீகாரமும் பெற்று, அவ்விரண்டையும் இணைக்கப்பட வேண்டும். இவ்விதம் ரிசர்வ் வங்கியில் அங்கீகாரம் இணைக்கப் படாத ஒப்பந்தங்கள் தள்ளுபடி செய்யப்படும். பரிசுப் பத்திரங்கள் முன் வைப்புத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**எஸ். கிருஷ்ணவிஜயன்,**

கோட்டப் பொறியாளர் (நெ.கி. ப.து.) திருநெல்வேலி தெற்கு.

பாளையங்கோட்டை,
18—12—1971.

(த.ஆர்.6)

## ஒப்பந்தப் புள்ளி

### சிறைத் துறை

1972—73-ஆம் ஆண்டிற்குக் கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு தேக்கு மரச் சட்டங்கள், பலகைகள் முதலியவை வழங்கு வதற்காக மூடி முத்திரையிடப் பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 18–2–1972-ஆம் தேதி பிற்பகல் 3—00 மணி வரை தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும், அவர்களின் சார்பாகவும் வர வேற்கப்படுகின்றன. விலைகள் மெட்ரிக் அளவைகளில் மட்டுமே குறிப்பிடப்பட வேண்டும்.

நிறுவனங்கள்.— சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, சேலம், மதுரை, கோயம்புத்தூர், பாளையங்கோட்டை முதலிய இடங்களிலுள்ள மத்தியச் சிறை கள் மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி, சென்னை பல்லாவரத்திலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம்.

ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத் திரையிடப்பட்ட உறைகளில் ஒப்புகைப் பதிவஞ்சலில் ( By Registered Post Ack. Due ) மட்டுமே அனுப்பப் பட வேண்டும். உறையின் மேல் "..........க்கு (இங்கே எந்த நிறுவனத்திற்கான ஒப்பந் தப் புள்ளியோ அந்தந்த நிறுவ வனத்தின் பெயரைக் குறித்து) தேக்கு மரச் சட்டங்கள், பலகை கள் முதலியன வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளி" என்று தவறு மல் எழுதித் தமிழ்நாடு சிறைத் துறைத்தலைமைப் பார்வையாளர் அவர்களின் பெயருக்கு அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகள் சிறைத் துறைத்தலைமைப் பார்வையாள ரின் அலுவலகத்தில் 19–2–1972 முற்பகல் 10–30 மணிக்குள் திறக் கப்படும்.

ஒப்பந்த நமூனுக்கள் ஒப்பந்தப் புள்ளி விதிகள் வழங்க வேண்டிய மர வகைகளின் விவரக் குறிப் பீடுகள் முதலியவைகள் சம்பந் தப்பட்ட நிறுவனங்களின் கண் காணிப்பாளர் அவர்களிடமிருந்து மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்திப் பெற் றுக் கொள்ளலாம். இவ்வாறு செலுத்தப்பட்ட கட்டணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட் டாது.

**பி. குப்புசாமி,**
சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர் ' குறளகம் ', 5-வது மாடி, சென்னை-1.

22–12–1971
(த.14)

---

## பயிற்சி

### மீன் துறை
### நாகப்பட்டினம்

கடலில் போய் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு இயந்திரப் படகு கள் உபயோகிப்பது, சிறிய படகு களைப் பராமரிப்பது, மரைன் எஞ்சின்களுள்ள இயந்திரப் படகுகள் மூலம் மீன் பிடித்தல் —அவைகளில் பத்து மாத காலத் திற்குப் பயிற்சி பெறுவதற்காக, அதற்காக உள்ள மனுக்களில் விண்ணப்பங்கள் கோரப்படு கிறது.

விண்ணப்பதாரர்கள், 1972ஆம் ஆண்டு பிப்ரவரி 1-ஆம்தேதி 35 வயதுக்கு மேற்படாதவர்களாக வும், 18 வயதுக்குக் குறையாத வர்களாகவும், குறைந்தது ஐந்து வருடம் கடலில் போய் அனுப வம் உள்ளவர்களாகவும், எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாகவும், நல்ல தேக ஆரோக்கியமுள்ளவர் களாகவும் இருக்க வேண்டும்.

பயிற்சிக் காலத்தில், தேர்ந் தெடுக்கப்பட்டவர்களுக்கு மாதம் ரூ. 50 (ரூபாய் ஐம்பது) வீதம் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இந்த இலாகாவுடன் ஓர் ஒப் பந்தம் செய்து கொள்ள வேண் டும்.

இந்தப் பயிற்சி, தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர் களுக்கு மட்டும்தான் கொடுக்கப் படும்.

விண்ணப்ப மனுக்களும், சேர் வதற்கான தகவல் குறிப்பீடு களும் வேண்டியவர்கள், உதவி மீன்துறை இயக்குநர் அலுவ லகம், தஞ்சாவூர், அல்லது 'நாகப் பட்டினம் மீனவர் பயிற்சி நிலை யம்' இவைகளிலிருந்து கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

பயிற்சிக் காலத்தில், மீன்பிடிப் பதற்காகப் படகுகளில் போகும் போது ஏற்படக்கூடிய எதிர் பாராத விபத்துக்களுக்கு அர சாங்கம் பொறுப்பல்ல.

விண்ணப்பங்கள், உதவி மீன் துறை இயக்குநர் (மீனவர் பயிற்சி நிலையம்) நாகப்பட்டினம், தஞ்சாவூர் மாவட்டம்' என்ற விலாசத்திற்கு 1972-ஆம் ஆண்டு ஜனவரி 20-ஆம் தேதி மாலை 5 மணிக்குள் கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டும்.

நேரிடைப் பேட்டிக்கு வருவ தற்கும், பயிற்சியில் சேர வரு வதற்கும் பிரயாணச் செலவு ஒன் றும் கொடுக்கப்பட மாட்டாது.

**துணை இயக்குநர்,**
மீன் துறை,
(மண்டலம்) சென்னை-6.

(த. 17)

---

## ஒப்பந்தப் புள்ளி

### வனத்துறை

கன்னியாகுமரி மாவட்டத்தி லுள்ள கீழ்க்கண்ட மைலார் இரப்பர் கூப்புகளிலிருந்து அவை களுக்கெதிரே குறிப்பிட்டுள்ள கனமீட்டர் தடிகளை ஏற்றி நாகர் கோவிலிலுள்ள அரசு விற்பனை மண்டிக்குச் சேர்ப்பிக்க அரசுக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி கள் 20—1—1972-ஆம் நாள் மதியம் 12·00 வரை பாளையங் கோட்டையிலுள்ள திருநெல் வேலி தென் பிரிவு மாவட்ட வன அலுவலரால் கோரப்படுகின்றன. இதன் பேரில் விவரங்களுக்குக் குலசேகரத்திலுள்ள மரவெட்டுப் பிரிவு வனச்சிறக அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

| கூப்பு எண். | கன மீட்டர். |
|---|---|
| மைலார் 63 | 400 |
| மைலார் 64 .. | 350 |

**எஸ். கொண்டாஸ்,**
மாவட்ட வன அலுவலர்,
திருநெல்வேலி தென்பிரிவு.

(த. 16)

## இராசிபுரம் நகராட்சி

கீழ்க்கண்ட பணியைச் செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ஆம் தேதி செவ்வாய்க் கிழமை மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும்.

| வேலையின் பெயர். | மதிப்பீட்டுத் தொகை. ரூ. | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1. பேருந்து நிலையத்தில் பிரயாணிகள் தங்கும் விடுதி கட்டுதல். | 99,400 | 3,950 |
| 2. வி. நகர் 5, 6, 7 தெருக்களுக்குத் தார் போடுதல். | 24,000 | 600 |
| 3. கோனேரிப்பட்டி எக்ஸ்டன்ஸன் I & II சபாபதி மில் தெரு, செட்டியண்ண நாயக்கன் தெரு, கோனேரிப்பட்டி ஆதிதிராவிடர் தெரு தார் போடுதல். | 24,000 | 600 |
| 4. வாரச் சந்தையில் 5 கடை கட்டுதல் முதல் பிளாக். | 14,000 | 350 |
| 5. வாரச்சந்தையில் 5 கடைகள் கட்டுதல் இரண்டாவது பிளாக். | 14,000 | 350 |

இன்னும் இதர 14 வேலைகள் சாக்கடை கட்டுதல், தார் ரோடு போடுதல், மராமத்து செய்தல் முதலியன. மொத்த வேலைகளின் மதிப்பீடு ரூ. 2,27,005 மற்ற விவரங்களுக்கு அஞ்சல் மூலமோ அல்லது நேரிலோ அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(த. ஆர். 4)

வெ. பாலசுப்ரமணியன்,
ஆணையர்.

---

## பொதுப்பணித்துறை

வேலையின் பெயர்:—வட ஆர்க்காடு மாவட்டம், செங்கத்தில் அரசினர் மருத்துவ பணிக் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 29—1—1972 வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. 29—1—1972 மாலை 3-00 மணிவரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதே நாள் 3-15 மணிக்கு அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 12—1—1972 முதல் 28—1—1972 வரை அலுவலக நேரங்களில் விற்கப்படும். மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதுமில்லை.

க. சு. இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம்
வேலூர்-1.

(த. ஆர். 1)

---

## குடிநீர் வடிகால் வாரியம்

### வீராணம் திட்டம்

வேலையின் பெயர் :—அழுத்தப்பட்ட கான்கிரீட் குழாய்களைத் தென் ஆர்க்காட்டிலுள்ள வெல்லாறு மேலாகத் தூக்கிப்பிடிக்க அழுத்தப்பட்ட கான்கிரீட்டினால் ஒரு பாலம் கட்டுதல்.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், மேலே கூறப்பட்டுள்ள வேலைக்காக, பொதுப் பணித்துறை அல்லது மற்ற அரசுத்துறைகள் பெரிய நிறுவனங்களில் பதிவு செய்து கொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்ததாரர்களிடமிருந்து, தனித்தலைமைப் பொறியாளர், வீராணம் குடிநீர் வழங்கு திட்டம் மற்றும் கூவம் மேம்பாட்டுத் திட்டம், வீராணம் சேப்பாக்கம், சென்னை-5 அவர்தம் அலுவலகத்தில் 19—1—1972 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை—ரூ. 10,000.
3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 10 ; விற்பனை வரி ரூ. 0·37.
4. வேலை முடிக்க வேண்டிய காலம்—10 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை "III Suspense-G. Remittance-(iii) Other Remittances-TWAD Board Funds" என்ற தலைப்பில் அரசுக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவிலோ, மேற்பார்வைப் பொறியாளர், வீராணம் திட்டக் கோட்டம், வடக்கு, அவர்தம் கணக்கில் செலுத்த வேண்டும். ஒப்பந்தப் புள்ளிப் படிவம், தனித்தலைமைப் பொறியாளர், வீராணம் குடிநீர் வழங்கு திட்டம், சென்னை-5, அவர்தம் அலுவலகத்தில் 3—1—1972 முதல் 17—1—1972 வரை தொகை செலுத்திய செல்லுச் சீட்டைக் கொடுத்துப் பெறலாம்.

தனித்தலைமைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம்.

(த. ஆர். 2)

உறுதியான கட்டடங்கள்: *கிராமங்களில்-1*

SANKAR I C CEMENT




காலநடைகளுக்கும் நவீன கொட்டில்கள் தேவை

# சங்கர் சிமெண்ட்

IS: 269 ISI

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது
ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2

25 ஆண்டுகள் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!

இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்', சென்னை-18

FDSIC-1446TM-R

## பல்லவபுரம் நகராட்சி
### சென்னை-43

பல்லவபுரம் நகராட்சி அலுவலகத்திற்கு அடியிற்கண்ட பொருட்கள் வழங்க 12—1—72-ஆம்தேதி புதன்கிழமை காலை 12-00 மணி வரையில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு 12-00 மணிக்கு வருகை தந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் கட்டுத் தொகை ரொக்கமாகச் செலுத்தி ரசீதுடன் கொடுக்கப்பட வேண்டும். இது சம்பந்தப்பட்ட இதர ஒப்பந்தப் புள்ளி விவரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

| வரிசை எண்ணும் விவரமும். | தேவைப்படும் எண்ணிக்கை. | கட்டுத் தொகை. |
|---|---|---|
| | | ரூ. |
| 1. கொசு ஒழிப்பு மருந்து நிரப்பி மருந்து தெளிக்க உபயோகிக்கப்படும் கருவிகள் வழங்க. | 5 | 50 |

**டி. எஸ். சிவசாமி,**
தனி அலுவலர்,
பல்லவபுரம் நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
27—12—71.

(ந. 19)

## பவானிசாகர் நகரியக் குழு
### கோயம்புத்தூர் மாவட்டம்

கீழ்க்கண்ட சாலைகளை, தூசியற்ற சாலைகளாக மாற்ற (1971-72) முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவரால் 25—1—1972 அன்று பிற்பகல் 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது, ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

| எண், வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு. | கட்டுத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1. வெளி வளைவு சாலைக்கும் முருக்கந்துறைக்கும் இடையே உள்ள சாலைக்குத் தார் போடுதல். | 3,600 | 180 |
| 2. பவானி இல்லத்திற்கும் அரசினர் மனைக்கும் இடையே உள்ள சாலைக்குத் தார் போடுதல். | 3,700 | 185 |

ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகளையும், விண்ணப்பங்களையும் கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 15—1—1972 முதல் 24—1—1972 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 25—1—1972 அன்று பிற்பகல் 4-15 மணிக்கு வந்திருக்கக்கூடிய, ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்கவோ, ஏற்றுக் கொள்ளவோ நிருவாக அதிகாரிக்கு உரிமையுண்டு.

**ச. இராமசாமி,**
நிருவாக அதிகாரி,
பவானிசாகர் நகரியம்.

பவானிசாகர்,
24—12—1971.

(ந. 24)

## அரசினர்
## பொது மருத்துவமனை
### சென்னை-3

சென்னை மாநில அரசினர் பொது மருத்துவ மனையைச் சேர்ந்த செவிலியர் உணவு விடுதியை 1–4–1972 முதல் 31–3–1972 வரை ஓர் ஆண்டுக்கு நடத்தும் ஒப்பந்தத்திற்கான மனுக்கள் 31–1–1972 பிற்பகல் 3 மணி வரை அரக்கு முத்திரையிட்ட உறைகளில் கோரப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிக்கான நிபந்தனை அடங்கிய அட்டவணை மனுக்களைச் சென்னை மாநில அரசினர் மருத்துவ மனைத் தலைவர் அவர்களின் அலுவலகத்தில் அடியிற்கண்டுள்ள இடங்களுள் ஒன்றில் ரூ. 5 'XXIII Medi J. Miscellaneous' என்னும் தலைப்பின் கீழும் விற்பனை வரி $3\frac{1}{2}$ சதவீதமும் உபரித்தொகை ரூ. 5 வீதமும் 'S. T. XII Sales Tax' என்ற தலைப்பின் கீழ்க் கட்டப்பெற்ற செலுத்துச் சீட்டை சமர்ப்பிப்பதின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

1 இந்தியன் ரிசர்வ் பாங்கு சென்னை. (The Reserve Bank of India, Madras).

2 இந்திய மாநில பாங்கு (The State Bank of India, Madras).

3 அரசாங்கக் கருவூலம் (Treasury).

குறிப்பு:—இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி தரப்படமாட்டா.

**எம். நடராசன்,**
B.A., M.B. Mch. (ortho)
FRCS (England)
தலைவர்,
அரசாங்கப் பொதுமருத்துவமனை

20–12–1971.

(ந. 26)

## ஒப்பந்தப் புள்ளி

### ஈரோடு கோட்டம்

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் சார்பாக, ஈரோடு நெடுஞ்சாலை கிராமப்பணித்துறைக் கோட்டப் பொறியாளர் அவர்களால் 1972 73-ஆம் வருடத்திய அரசாங்க சாலைகள்பராமரிப்பு வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், ஈரோடு கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) அலுவலகத்தில் 2–2–1972-ஆம் நாள் பிற்பகல் 2-00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் 2—2—1972-ஆம் நாள் பிற்பகல் 2-15 மணிக்கு ஈரோடு கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் ஈரோடு நெடுஞ்சாலை கோட்டப் பொறியாளர்அலுவலகமேலாளர் அவர்களிடம் ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 3.11 வீதம் (விற்பனை வரி உட்பட) கட்டணம் செலுத்தி அலுவலக நாட்களில் 24-1-1972 முதல் 1—2—1972 வரை விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரமாட்டாது. ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளும் தினமாகிய 2–2–1972-ஆம் அன்று எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தப் பத்திரங்கள் கொடுக்கப்படமாட்டாது. முன் பண வைப்புத் தொகையை ஈரோடு கோட்டப் பொறியாளரின் பெயரில் அரசினர் கருவூலத்தில் வருவாய் வைப்புத்தொகை (ரெவின்யூ டிபாசிட்) செலுத்தி அதற்கான செல்லுச்சீட்டை (செலான்) அல்லது கோடிட்ட (கிராஸ்டு) பேங்க் டிராப்டை ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்துடன் இணைக்கப்படவேண்டும். மேற்படி முன் வைப்புத்தொகை இணைக்கப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாகத் தள்ளுபடி செய்யப்படும். வருமான வரி, விற்பனைவரி செலுத்தியதற்கான அத்தாட்சிப் பத்திரங்கள் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். பாங்க் கேரண்டி முன் வைப்புத் தொகையை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவின் ஒப்புதலுடன் சேர்த்து இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கான முன் வைப்புத்தொகை, ஒப்பந்தப் புள்ளிகள் பற்றிய நிபந்தனைகள் முதலிய முழு விவரங்கள் அடங்கிய விளம்பர அறிக்கையை கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் மற்றும் இக்கோட்டத்தைச் சேர்ந்த உதவிப் பொறியாளர் அலுவலகம் மற்றும் பிரிவு அலுவலர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**சா. கிருஷ்ணசாமி ராஜா,**

கோட்டப் பொறியாளர்
(நெ.கி.ப.),
(த.49) ஈரோடு.

---

மதுரை மாவட்டக் கூட்டுறவு
விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட்
நிர். ஏ—1437

31, வெங்கலக்கடைத் தெரு,
மதுரை-1.

மதுரை மாவட்டத்தில், மதுரை மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கத்தில் அரசினர் கணக்கில் இருக்கும் இரசாயன உரத்தை ரிபேக் செய்ய ஒரு தரம் உபயோகப்படுத்தப்பட்ட (Second Hand Gunnies) காலிச் சாக்குகள் மற்றும் புதிய பாலித்தின் பைகள் சப்ளை செய்ய சீலிட்ட முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் கோரப்படுகின்றன.

மதுரை மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம், 31, வெங்கலக் கடைத்தெரு, மதுரை தலைமை அலுவலகத்தில் 1972 ஆம் ஆண்டு சனவரி 31-ஆம்நாள் மாலை 3 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப் படும். பெற்றுக்கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு ஆட்சித் தலைவர் அவர்களால் முடிவு செய்யப்படும்.

ஒப்பந்தப் புள்ளி கொடுப்பவர்கள் ஷை சங்க அலுவலகத்தில் ரூ. 500 கட்டுத் தொகை செலுத்தி, ஒப்பந்தத்துடன் ரசீதையும் சேர்த்தனுப்பவேண்டும்.

சாக்குகள் அல்லது பாலித்தின் பைகள் அல்லது இரண்டிற்கும் ஒப்பந்தப் புள்ளிகள் கொடுக்கலாம். ஒப்பந்தப் புள்ளியுடன் சாக்கு, பாலித்தின் பை, மாதிரிகள் சேர்த்து அனுப்ப வேண்டும். கோரும் விலையில், வரி, பாக்கிங் செலவு முதலியவை இச்சங்கத்தின் தேனி, திண்டுக்கல், பழனி கிளைகள் சம்பந்தமாக அந்தந்த இடங்களுக்கு ஒப்படைக்கும்வரை ஏற்படும் செலவும், மதுரையைப் பொறுத்த வரையில் மதுரை கோச்சடைக் கிட்டங்கியில் ஒப்படைக்கும் செலவும் அடங்க வேண்டும்.

சாக்குகளும் பாலித்தின் பைகளும் மாதிரி காட்டியபடியே இருக்க வேண்டும். தரம் குறைவாக இருந்தால் தள்ளுபடி செய்யப்படும்.

ஒப்பந்தப் புள்ளி ஒப்புக் கொண்டதிலிருந்து 10 தினங்களுக்குள் சப்ளை செய்துவிட வேண்டும். தவறினால் ஒப்பந்தப் புள்ளி கட்டுத் தொகை பறி முதல் செய்வதோடு மறு ஒப்பந்தப் புள்ளி போடுவதால் ஏற்படும் செலவு, விலை வித்தியாசம் முதலியவற்றால் ஏற்படும் நஷ்டத்திற்கும் பொறுப்பாவார்.

ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் ஒப்புக் கொண்டதிலிருந்து 3 தினங்களுக்குள் ரூ. 2.25 ஸ்டாம்பு பத்திரத்தில் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அக்ரிமெண்டு எழுதிக் கொடுக்கவேண்டும்.

தேவைப்படும் சாக்கு ரகம் தான் வாங்கப்படும். எந்த அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும்எவ்விதக்காரணமும் காட்டாமல் தள்ளுபடிசெய்யக் கலெக்டர் அவர்களுக்கு உரிமையுண்டு.

**தனி அலுவலர்.**

(த. 38)

## நில நீர் இயக்குநர் அலுவலகம்

அறிக்கை எண் 4/71-72.

ஒப்பந்தப் புள்ளிகள் விற்பனைக்கும், பெறுதலுக்குமான கால வரம்பு நீடிப்பு.

வேலையின் பெயர்:—36 அங்குலம் உள்விட்டம் அளவுள்ள முன்னதாக அழுத்த மேற்றப்பட்ட கான்கிரீட் குழாய்களும், தனி, அமைப்புகளும் (Prestressed Concrete Pipes and Specials) தயாரித்து, அவற்றை வேலை இடத்திற்குக் கொண்டு சென்று சரியான வரிசைப்படியும் சரிவுப்படியும் வைத்து, ரப்பர் வளைய இணைவுகளாகப் பொருத்துதல்.

மேற்குறித்த வேலைக்காக, நிலநீர் இயக்குநர் அலுவலகத்தில், முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கான காலவரம்பு 21-2-1971 மாலை 3-00 மணிவரை நீடிக்கப்படுகிறது.

ஒப்பந்தப் புள்ளிகள் நிலநீர் இயக்குநரால் அவருடைய அலுவலகத்தில் 21-2-1972 அன்று மாலை 3-30 மணிக்கு, அச்சமயம் வந்திருக்கும், ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் 18-2-1972 வரை கிடைக்கும். மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதுமில்லை.

ச. பஞ்சநதம்,
நிலநீர் இயக்குநர்.

நிலநீர் இயக்குநர் அலுவலகம்,
10-ஏ, தண்டபாணி தெரு,
சென்னை-17.

(த.27)

---

அறிவிப்பு எண் 7/71-72.

வேலையின் பெயர்:—சென்னை நிலநீர்க்கோட்டத்திற்குத் தேவையான வார்ப்பு இரும்புக்குழாய்கள்(C.I. Pipes) இணைக்க உபயோகிக்கும் கார் ஈயக் கட்டிகள்-(Pip Lead) வழங்குதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில் நிலநீர் இயக்குநர் அவர்களால் மேலே குறிப்பிட்டுள்ள வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள்மேலே குறித்துள்ள அலுவலகத்தில் 17-2-1972 அன்று மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் நிலநீர் இயக்குநர் அவர்களால் கீழே குறிப்பிட்டுள்ள அவருடைய அலுவலகத்தில் 17-2-1972 அன்று மாலை 3-30 மணிக்கு அச்சமயம் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| | |
|---|---|
| ஒப்பந்த வடிவம் ... ... | கே 2 |
| முன்வைப்புத் தொகை .. | ரூ. 5,900 |
| ஒப்பந்தப்பத்திரங்களின் விலை. | விலை ரூ. 10 (ரூபாய் பத்து மட்டும்), விற்பனை வரி ரூ. 0·40 (நாற்பது காசுகள் மட்டும்). |
| வேலை முடிக்கவேண்டிய காலம். | 3 மாதங்கள். |
| ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கிடைக்கும் காலம். | 18-12-1971 முதல் 14-2-1972 முடிய. |

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை எந்தச் சூழ்நிலையிலும் திருப்பியளிக்க இயலாது. அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "Public Works Remittances III Other Remittances" என்ற தலைப்பிட்டு நிருவாகப் பொறியாளர், நிலநீர்க் கோட்டம், சென்னை-17, அவர்களின் கணக்கில் செலுத்தப்படவேண்டும். விற்பனை வரி மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே சலானில் "XII Sales Tax(b) Receipts Under State Sales Tax Act—General Sales Tax" என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் செலுத்தப்பட வேண்டும். மேற்குறித்த சலானைக் கொடுத்த பின்புதான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

ச. பஞ்சநதம்,
இயக்குநர்,

10-ஏ, தண்டபாணி தெரு, நிலநீர் இயக்குநர் அலுவலகம்,
சென்னை-17.

(த.28)

---

## புளியங்குடி நகராட்சி

அடியிற் கண்ட வேலைக்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி 25-1-1972-ஆம் நாள் மாலை 4-00 மணி வரை புளியங்குடி நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். அன்று மாலை 4-30 மணிக்கு ஒப்பந்தங்கள் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். மற்றும் இது சம்பந்தமான தகவல்கள் அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

| வேலை விவரம். | மதிப்பீடு தொகை. | கட்டுத் தொகை. |
|---|---|---|
| 1 தினசரி சந்தையும், கடைகளும் கட்ட. | ரூ. 98,000 | ரூ. 4,900 |

கே. கே. அப்துல் சுக்கூர்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
புளியங்குடி,
29-12-1971.

(த.25)

## ஏலம்

### காஞ்சிபுரம் நகராட்சி

காஞ்சிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்காணும் பயன்படுத்திக்கொள்ளும் உரிமைகளை 31—1—1972-ஆம் தேதி, திங்கட்கிழமை காலை 9 மணிக்குக் காஞ்சிபுரம் நகராட்சி அலுவலகத்தில் அனைவரும் அறிய ஏலம் விடப்படும்.

பிற தகவல்களுக்கும், ஏலக் கட்டுப்பாடுகட்கும் நகராட்சி ஆணையருக்கு எழுதியோ அல்லது நேரிலோ தெரிந்துகொள்ளலாம்.

1—4—1972 முதல் 31—3—1973 வரை முடிய உள்ள நிதி ஆண்டுக்கான குத்தகைகள்.

1. நகராட்சி ராஜாஜி சந்தை (மீன் கடைகள் நீங்கலாக) நகராட்சி ராஜாஜி மீன் சந்தை, நகராட்சி ஜவஹர்லால் சந்தை (மீன் சந்தை உட்பட) நகராட்சி காமராஜ் சந்தை (மீன் சந்தை உட்பட) ஆடு அறுக்குமிடம் பேருந்து நிலையம், மதுராந்தோட்டத்திலுள்ள வண்டிமேடு, காவலான் சுங்கச்சாவடி அருகிலுள்ள வண்டிமேடு, நகராட்சி ராஜாஜி சந்தை, அருகிலுள்ள மிதிவண்டி நிற்குமிடம் ஆகியவைகளில் கட்டணங்கள் தண்டும் உரிமை.

2. ஆவாகுட்டை, ஒக்கப்பிறந்தான் குளம், உப்பேரிகுளம், மொட்டைக்குளம் ஆகியவைகளில் மீன் பிடித்துக்கொள்ளும் உரிமை.

3. நரசிங்கராயர் தெருக் கோடியிலுள்ள சாக்கடை நீரைப் பயன்படுத்திக்கொள்ளும் உரிமை.

4. பேருந்து நிலையத்திலுள்ள வெற்றிலை பாக்குக் கடை, பழக் கடை, அரக்கோணம் வழிச் சுங்கச்சாவடி, காவலான் கேட் அருகிலுள்ள பம்புசெட் கட்டடம் ஆகியவைகளை வாடகைக்கு எடுத்துக்கொள்ளும் உரிமை.

5. மொட்டைக்குளம் வடிகால் தோட்டத்தில் கால்நடைகளுக்கான புல் பயிரிடும் உரிமை.

6. பேருந்து நிலையத்திலுள்ள வெற்றிலைப் பாக்குக் கடை, பழக் கடை இவைகள் நீங்கலாக மற்ற தற்காலிக கடைகளுக்குக் கட்டணங்கள் தண்டும் உரிமை.

7. மர விளைவுகள் முதலியன. 1—4—1972 முதல் 31—3—75 வரை உள்ள நிதி ஆண்டுக்கான குத்தகைகள்.

1. ஜவஹர்லால் நகராட்சி சந்தை அருகிலுள்ள வடிகால் தோட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை.

2. பேருந்து நிலையத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை கட்டடத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் உரிமை

3. சங்கீத வித்துவான் நயினாப் பிள்ளைத் தெரு, கதவு எண் 28 வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள காலி மனையைப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை.

**த. ஆ. சிவசுப்ரமணியன்,**
**ஆணையர்.**

நகராட்சி அலுவலகம்,
காஞ்சிபுரம்-2,
3—1—1972.

(த. 32)

---

### செங்கோட்டை நகராட்சி

#### திருத்தம்

1—1—1972-ஆம் தேதிய தமிழரசு இதழின் (தமிழ்ப் பதிப்பு) 90-ஆம் பக்கத்தில் கண்டுள்ள இவ்வலுவலக விளம்பரத்தில் 27—1—1972 வியாழக்கிழமை என்று எங்கெங்குக் காணப்படுகிறதோ அங்கெல்லாம் ''28—1—1972 வெள்ளிக்கிழமை'' என்று திருத்தி வாசித்துக் கொள்ளவும்.

**ஆணையர்.**

செங்கோட்டை. நகராட்சி.

(த. 30)

---

## புதிய திட்டம்

### வீட்டு வசதி வாரியம்

சேமிக்கும் அனைவருக்கும் வீடுகள்

அனைவரும் வாரீர்!
அழகு மனைகள் பெறுவீர்!!

நாளொன்றுக்கு ரூ. 1-க்கு (ரூபாய் ஒன்றுக்கு) குறையாமல், தவறாமல், சேமிப்பீர். ஒவ்வொரு வாரம், அல்லது மாதச் சேமிப்பை வாரியத்தில் சேர்த்திடுவீர்.

5 ஆண்டுகள் முடிவில் சேமித்த அளவில் நான்கு மடங்கு மதிப்புள்ள மனையோ, வீடோ வேண்டியதை மகிழ்வுடன் பெறுவீர். மிகுதியைத் தவணை முறையில் செலுத்திடலாம். வசதி யில்லையெனில் சேமிப்பினை மீட்டுக் கொள்வீர்.

சேமிப்புக்குக், காலாண்டுக்கொரு முறை 3 சதவீதம் வட்டியும் சேர்க்கப்படும். விவரம் அறிந்து, மனுக்கள் பெற்று உடனே விரைந்து திட்டத்தில் சேர்ந்திடுவீர். என்றும் வரலாம். எவரும் வரலாம்.

விவரம் அறியும் முகவரி:—
**தலைவர்,**
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,
நந்தனம்,
சென்னை-35.

(த. 29)

---

## ஏலம்

தமிழ்நாடு தனிக் காவலர் 4-வது பட்டாளியனின், 1960 மாடல் எம்.டி.எச். 2974, எம்.டி.எச். 2990 ஆகிய இரண்டு லாரிகளும், தமிழ்நாடு தனிக்காவலர், திருச்சி முகாமில் 2—2—1972 காலை 11 மணிக்குப் பொது ஏலத்தில் விற்கப்படும்.

மற்ற விவரங்கள், கீழே கையொப்பமிட்டவருக்கு, அஞ்சலக வில்லைகள் ஒட்டப்பட்ட தன் விலாசமிட்ட உறை ஒன்றை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

**பி. எஸ். விஸ்வநாதன்,**
கமாண்டன்ட்,
தமிழ் நாடு தனிக்காவலர்,
4-வது பட்டாளியன்,
ஆவடி, சென்னை-54.

(த. 45)

---

## ஒப்பந்தப் புள்ளி

### கொடைக்கானல் நகரியம்

கொடைக்கானல் கடைவீதி சாலையின் தார் தளத்தை ரூ. 9,600 மதிப்பீட்டில் புதுப்பிப்பதற்கு முன் பாதுகாப்பு கட்டுத் தொகை ரூ. 480 செலுத்தி மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 20—1—72-ஆம்தேதிமாலை 4 மணிக்குள் அடியிற் கையொப்பமிட்டவரால் பெற்றுக்கொள்ளப்படும்.

நகரியக் கருவூலத்தில் ரூ. 5.15 செலுத்தி ஒப்பந்தப் புள்ளிஷெட்யூலும், மற்ற விவரங்கள் நகரியப் பொறியாளரிடம் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**டி. எம். சிவகுருநாதன்,**
நிருவாக அதிகாரி

கொடைக்கானல்,
24-12-71.

(த. 33)

## பொள்ளாச்சி நகராட்சி

### மின்துறை

பொள்ளாச்சி நகராட்சியில் கீழ்க்கண்ட வேலைகளுக்கான தனித்தனியே மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையர் அவர்களால் 28—1—1972 மாலை 4-00 மணிவரை வரவேற்கப்படுகின்றன. வேலை விவரங்கள் வேண்டுவோர் நகராட்சி மின் பொறியாளர் அவர்களுக்கு விண்ணப்பித்தோ, நேரிலோ பெற்றுக் கொள்ளலாம்.

| விவரம். | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|
| 1. நகர எல்லைக்குள் பல்லடம் சாலையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 32 விடுகளுக்கும் மின் வடங்கள் அமைத்து விளக்குகள் போடுதல். | 370 |
| 2. நகர மன்ற அலுவலகத்தில் தண்டலர்களுக்கான வரி வசூலிக்கும் கட்டடத்திற்கு மின்விசிறிகள் அமைத்து விளக்குகள் போடுதல். | 75 |

ஆணையர்.

(த. 37)

## நிலநீர் இயக்குநர் அலுவலகம்

இயக்குநரின் ஒப்பந்தப் புள்ளி அறிக்கை எண் 8/71—72.

வேலையின் பெயர்.—''நடமாடும்'' மின்-உருக்கி-இணைப்பான்-2Nos வழங்குதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில், நிலநீர் இயக்குநர் அவர்களால் மேலே குறிக்கப்பட்டுள்ள வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மேலே குறிக்கப்பட்டுள்ள அலுவலகத்தில் 25—1—1972 அன்று மாலை 3.00 மணிக்குள், வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் நிலநீர் இயக்குநர் அவர்களால் மேலே குறித்துள்ள அலுவலகத்தில் அதே தேதியில் மாலை 3.30 மணிக்கு அச்சமயம் வந்திருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்:

1 முன்வைப்புத்தொகை ரூ. 2,500

2 ஒப்பந்தப்பத்திரங்களின் விலை .. ரூ. 5

விற்பனை வரி .. .. ரூ. 0.20 காசு.

3 வேலை முடிக்கவேண்டிய காலம் இரண்டு மாதங்கள்.

4 ஒப்பந்தப்பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கிடைக்கும் காலம். 25—12—71 முதல் 22—1—72 முடிய

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (எச்சூழ்நிலையிலும் திருப்பியளிக்க இயலாதது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் Public Works—Remittances — Other Remittances என்று தலைப்பிட்டு நிருவாகப் பொறியாளர், நிலநீர்க் கோட்டம் சென்னை—17, அவர்களின் கணக்கில் செலுத்தப்படவேண்டும். விற்பனை வரித் தொகையானது செலுத்தப்பட்ட அதே சலானில் XII Sales Tax—(b) Receipts under State Sales-tax Act—General Sales-tax என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலத்தில் அல்லது ரிசர்வ் வங்கியில் செலுத்தப்படவேண்டும். மேற்குறித்த சலானைக் கொடுத்த பின்புதான், ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

ஆர்தர் சாமுவேல்,
இயக்குநர்.

10-A, தண்டபாணி தெரு,
தி. நகர், சென்னை-17.

(த. 40)

## பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்:—(1) சைதாப்பேட்டை வட்டம், வெளாச்சேரியில் 1 உதவி ஆய்வாளர், 2 தலைமைக் காவலர் 9 காவலர் குடியிருப்புக் கட்டுதல்;

(2) சைதாப்பேட்டை வட்டம், திருவான்மியூரில் 1 உதவி ஆய்வாளர், 1 தலைமைக் காவலர், 13 காவலர் குடியிருப்புக் கட்டுதல்.

மேற்கண்ட வேலைகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கான கடைசி நாள் 28—12 1971 என்ற கெடு 25—1—1972 மாலை 3-மணி வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட வேலைகளுக்கான ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் 17—1—1972 முதல் 24—1—1972 வரை பெற்றுக்கொள்ளலாம்.

மற்ற நிபந்தனைகளில் எந்த மாறுதலும் இல்லை.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை, செங்கற்பட்டு மாவட்டம்

(த. 44)

## பொதுப்பணித் துறை.

செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

வேலையின் பெயர்—வடஆர்க்காடு மாவட்டம், செங்கம் வட்டத்திலுள்ள வரட்டாறு ஆற்றின் குறுக்கே, போந்தை கிராமத்திற்கு அருகே ஒரு அணைக்கட்டு கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப்பணித்துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்தும், ஆயக்கட்டுதாரர்களிடமிருந்தும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காகச் செங்கற்பட்டு -வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 28—1—1972 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு, அப்பொழுது வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை—கே.2.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூ. 20·00.

முடிக்கவேண்டியகாலம் ஒப்பந்தப் புள்ளி—12 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப்பத்திரங்கள் வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 12—1—1972 தேதி முதல் 25—1—1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத்தொகை ரூ. 20·00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது), கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் "P. W. D Remittances, III Other Remittances" என்ற தலைப்பின் கிழ் நிருவாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை, திருவண்ணாமலைக் கோட்டம், திருவண்ணாமலை என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0·70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales-Tax (b) Receipts, Under State Sales Tax Act. General Sales-Tax" என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள முன் வைப்புத் தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ, தேசியச் சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்டு டிராப்டாகவோ" ஏற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படும் ஷெடியூல்டு பாங்குகளின் டிமாண்ட் டிராப்டுகள்' செயற் பொறியாளர், பொ.ப.து. திருவண்ணாமலைக் கோட்டம், திருவண்ணாமலை அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவிகிதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்பு நற்சான்றுப்பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**கே. எஸ். ராமசாமி,**
மேற்பார்வைப் பொறியாளர்,
பொ.ப.து., செங்கற்பட்டு-வடஆர்க்காடு
பெருவட்டம், வேலூர்-1.

(த.56)

## ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு

### பொதுப்பணித்துறை

வேலையின் பெயர்—கட்டடங்கள்—வடஆர்க்காடு மாவட்டம்— வாலாஜாபேட்டை அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித்தேதி 28—1—1972 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. 28—1—1972 மாலை 3 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதே நாள் மாலை 3-15 மணி அளவில், அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், 12—1—1972 முதல் 24—1—1972 வரை அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றமேதுமில்லை.

**க. சு. ராமசாமி,**

மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.
செங்கற்பட்டு-வடஆர்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(த-52)

தென் ஆர்க்காடு விவசாய விளைபொருள் விற்பனைக் கழகம், கடலூர்-1.

கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட தனித் தனி ஒப்பந்தப் புள்ளிகள் அடியிற் கையொப்பமிட்டவரால் 2—2—1972 (1972ஆம் வருடம் பிப்ரவரி மாதம் இரண்டாம் நாள்) மாலை 4-00 (நான்கு) மணிக்குள் பெற்றுக்கொள்ளப் பெறும். ஒப்பந்தப் புள்ளிக் குறிப்புகளும் இதர ஒப்பந்த வரையறைகளும் 19—1—1972 முதல் 31—1—1972 வரை உள்ள எல்லா அலுவலக நாட்களிலும் இவ்வலுவலகத்தில் காலை 11-00 மணி முதல் மாலை 4-00 மணி வரையிலும் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம். மேற்கொண்டு விவரங்கட்குச் செயலாளரை அணுகவும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | வேலையின் உத்தேச மதிப்புத் தொகை. ரூ. | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ஒரு புதிய ஏலக் கொட்டகை அமைத்தல். | 37,800 | 945 |
| 2 கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ஒரு புதிய ஏலக் கொட்டகை அமைத்தல். | 43,900 | 1,098 |
| 3 விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ஒரு புதிய ஏலக் கொட்டகை அமைத்தல். | 36,100 | 903 |
| 4 கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் பம்பாய் கழிவிடம் ஒன்று கட்டுதல். | 3,200 | 80 |
| 5 கள்ளக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைகூடத்தில் காய்வுக் கழிவிடங்கள் இரண்டு அமைத்தல். | 6,500 | 163 |
| 6 பண்ணுருட்டி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் காய்வுக் கழிவிடங்கள் இரண்டு அமைத்தல். | 6,600 | 165 |
| 7 கடலூர் முதுநகர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் காய்வுக் கழிவிடங்கள் இரண்டு அமைத்தல். | 6,800 | 170 |
| 8 விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வட புறம் ஏலக் கொட்டகையைச் சிரமைக்கும் வேலை. | 13,900 | 348 |
| 9 விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் தென் புற ஏலக்கொட்டகையைச் சீரமைக்கும் வேலை. | 11,400 | 285 |
| 10 விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் 2-வது ஏலக் கொட்டகையைச் சீரமைக்கும் வேலை. | 22,800 | 570 |
| 11. விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் அதிகப் படி மின் இணைப்பு வசதி செய்தல். | 5,600 | 140 |

அ. சுப்பராயன்,
செயலாளர்—பொறுப்பு,
தென் ஆர்க்காடு மாவட்ட விவசாய விளைபொருள் விற்பனைக்கழகம்.

(த.34)

## போக்குவரத்துத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காக, ஆளுநர் சார்பில் நிருவாகப் பொறியாளர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை, சென்னை—2 அவர்களால் வரும் மூன்று வருடத்திற்குக் கீழ்க் கண்ட ஸ்டால் குத்தகைக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், அண்ணா சாலை, சென்னை-2-ல் உள்ள போக்குவரத்து இல்லத்தில், நிருவாகப் பொறியாளர் அலுவலகத்தில் 20—1—1972, 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

மந்தைவெளி பேருந்து நிலையத்தில் உள்ள 2-வது நெம்பர் ஸ்டால்—பலவகை பொருள்கள் விற்றல் (General Merchant).

ஒப்பந்தத்திற்கான விதிகள் நிபந்தனைப்பத்திரங்கள் முதலியவற்றை, நிருவாகப் பொறியாளர், போக்குவரத்து இல்லம், சென்னை—2 அவர்களிடம் ரூ. 1.04 கட்டி எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். எக்காரணத்தைக் கொண்டும், இந்தப் பணம் திருப்பித்தரமாட்டாது.

இயக்குநர்.

(த.55)

## ஒப்பந்தப் புள்ளி

## பொதுப்பணித் துறை

பார்வை : ந.எ. 2668/66/வ 8 நாள் 24—12—1971.

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப் பணித் துறை காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தனி மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 29—1—1972 மாலை 4-00 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பதிவு செய்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்த வகை—கே 2.

| வரிசை | வேலையின் விவரம். | பிணைப் பணம். | ஒப்பந்தப் பத்திரங்களின் விலை. | விற்பனை வரி. |
|---|---|---|---|---|
| | கோடி விநாயகநல்லூர் வாய்க்கால் விரிவு படுத்துதல். | | | |
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 1. | கோடி விநாயக நல்லூர் வாய்க்காலுக்கு இணையாகப் புதிய வாய்க்கால் வெட்டுதல். | 2,150 | 10·00 | 0·35 |

நிபந்தனைகள்—

1. ஒப்பந்தப் பத்திரங்கள் 10—1—1972-க்குப் பிறகு கிடைக்கும்.

2. பிணைப்புப் பணம் (இ.எம்.டி.) நிருவாகப் பொறியாளர், திட்ட ஆய்வுக் கோட்டம் திருத்துறைப்பூண்டி அவர்களின் கணக்கில் அரசாங்கக் கருவூலத்தில் ரெவின்யூ டெபாசிட் என்ற தலைப்பில் கட்டப்படவேண்டும்.

3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசாங்கக் கருவூலத்தில் "பொ. ப. III மற்றைய செலுத்துத் தொகை என்னும் தலைப்பில் நிருவாகப் பொறியாளர், திட்ட ஆய்வுக் கோட்டம், திருத்துறைப்பூண்டி என்ற கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

4. விற்பனை வரை அரசாங்கக் கருவூலத்தில் "XII விற்பனை வரி பி. வரவுகள் மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி" என்னும் தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

5. ஒப்பந்தப் பத்திரங்களுக்கான விண்ணப்பம் 27—1—1972 மாலை 5-00 மணிக்குள் தனி மேற்பார்வைப் பொறியாளர் நேர் உதவியாளர், காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர் என்ற முகவரிக்குக் கிடைக்குமாறு அனுப்பப்படவேண்டும்.

**அ. சேஷாத்திரி,**
தனி மேற்பார்வைப் பொறியாளர்,
காவிரி வளர்ச்சிப் பணி வட்டம்,
தஞ்சாவூர்.

24—12—1971

(த.39)

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால் வாரியம்), பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண் 17, சர் பி.டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல்துறை மேற் பார்வைப் பொறியாளர் அவர்களால், 25—1—1972 பிற் பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—சிவகங்கை குடிநீர்த் திட்டம்—மூன்றும் நிலை—தலைமை நீரேற்று நிலையம்—நீரேற்றிகள் அளித்தல், நிர்மாணித்தல்—சம்பந்தமாக.

ஒப்பந்த வகை : மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை:—ரூ. 5,500 (ரூபாய் ஐயாயிரத்து ஐந்நூறு)

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசீய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப் பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு—ஆறு மாதம்.
ஒப்பந்தப் படிவங்களின் விலை—ரூ. 20·74 (விற்பனை வரி உட்பட). (ரூபாய் இருபதும், காசு எழுபத்திநான்கு மட்டும்.)

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளரிட மிருந்து, 48, கல்லூரிச் சாலை, சுப்பிரமணியபுரம், என்ற முகவரிக்கு அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 21—1—1972 மாலை 5 மணி வரை யில் ஒப்பந்தம் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம், குடிநீர் வடிகால் வாரியம்.

மதுரை-2,
15—12—1971.

(த.53)

---

## கல்வித் துறை

தமிழ்நாடு கல்வித் துறையின் சார்பில், மூடி முத்திரை யிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையில் முதன்மைக் கல்வி அலுவலர், பனகல் கட்டடம், தஞ்சாவூர்-1 (குறிப்பு எண் 296-பி3.71) எனவும் ஒப்பந்தக்காரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க்கையொப்பமிட்டவரால் 25—1—1972 காலை 11-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப் பந்தங்கள் 27—1—1972 அன்று காலை 11 மணிக்கு வந்தி ருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

(அ) 8·2 கி.கி. வெள்ளைத் தாள் (டி.எஃப். கி.) அரசினர் தேர்வுகட்காக அளிக்கப்படவேண்டும்.

(ஆ) ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப் புள்ளி அனுப்பும் பொழுது நூறு ரூபாய் செலுத்த வேண்டும்.

(இ) தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர் பெயர் அறிவிக்கப்பட்டதும் உடனடியாக மேலும் ரு. 100 செலுத்திக் குறிப்பிட்ட படிவத்தில் ஒப்பந்தம் செய்து உறுதி அளிக்க வேண்டும்.

(ஈ) ஆணை கிடைக்கப்பெற்ற ஐந்து நாட்களுக்குள் பிற செலவினங்களின்றி ஒப்பந்தக்காரர் தமது சொந்தச் செலவில் அனுப்ப வேண்டுமெனக் கூறப்படும் இடங்களுக்கு வெள்ளைத் தாள் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

(உ) டி.எஃப்.சி. வெள்ளைத்தாள் எல்லாவிதக் கட்டணங்களையும் சேர்த்து ஒரு ரீலுக்கு எவ்வளவு எனக் குறிப்பிட வேண்டும்.

(ஊ) ஒப்பந்தங்களில் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்க கீழ்க் கையொப்பமிட்டவர் உரிமையுடையவர்.

**கோ. சு. சீனிவாசன்,**
முதன்மைக் கல்வி அலுவலர்,
தஞ்சாவூர்.

(த.58)

## பயிற்சி

### ஆதாரமுறையல்லாத ஆசிரியர் பயிற்சிப் பள்ளி இறுதிச் சான்றிதழ் தேர்வு. ஏப்ரல் 1972

1971 அக்டோபரில் நடைபெற்ற ஆதார முறையல்லாத ஆசிரியர் பயிற்சிப் பள்ளித் தேர்வு எழுதி தேர்வு பெறுதவர்கள் அல்லது விண்ணப்பித்துத் தேர்வு எழுதாதவர்கள் மற்றும் 1971 அக்டோபரில் நடைபெற்ற இடைநிலைப் பள்ளி இறுதிச் சான்றிதழ் தேர்வில் கலந்து கொண்டு ஆதார முறையல்லாத ஆசிரியர் பயிற்சிப் பள்ளித் தேர்வுக்குத் தனியாராகச் செல்ல தமிழகக் கல்வி விதி 138-ல் வரையறுக்கப்பட்ட மதிப்பெண் பெற்றவர்கள் ஆகியோர் 1972 ஏப்ரலில் நடக்கவிருக்கும் ஆதார முறையல்லாத பயிற்சிப் பள்ளித் தேர்வுக்குக் கட்டணம் செலுத்தக் கடைசி நாள் 31—1—1972 ஆகும். அதன் பின்னர் செலுத்தப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலே குறிப்பிடப்பட்டவர்கள் தவிர மற்றவர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சென்னை நகரைச் சார்ந்த விண்ணப்பதாரர்கள் தேர்வுக் கட்டணத்திற்கு உரிய தொகைக்கு இந்திய அஞ்சல் ஆணைகளை " அரசாங்கத் தேர்வு ஆணையரின் செயலாளர், சென்னை-6 " அவர்கட்கு மேல் குறிப்பு இட்டு அனுப்பிவைக்க வேண்டும். மற்றைய இடங்களைச் சார்ந்த விண்ணப்பதாரர்கள் அரசாங்கத் தேர்வு ஆணையரின் அலுவலகத்தில் வழங்கப்படும் விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட்டுள்ள செலுத்துச் சீட்டுகளைக் கொண்டுதான் அரசுக் கருவூலங்களில் தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டும். தமிழகக் கல்வி விதி 138-ன்படி தனியாராக விண்ணப்பிக்கும் ஆசிரிய விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வியலுவலர் அல்லது மகளிர் பள்ளி ஆய்வாளர் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். இவ்வலுவலகத்திற்கு நேரடியாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. உரிய விண்ணப்பங்கள் வேண்டுவோர் 20 காசு அஞ்சல்தலையிட்ட தனது முகவரி எழுதப்பட்ட உறையுடன் இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பித்தால் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும். அல்லது சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வியதிகாரிகளிடமோ அல்லது மகளிர் பள்ளி ஆய்வாளர்களிடமோ பெற்றுக் கொள்ளலாம்.

பயிற்சிப் பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளிகள் மூலம் தேர்வுக்கு அனுப்பி தேர்வு பெறுத மாணவர்கள் சார்பாக உரிய கட்டணத்தை மேற்குறிப்பிடப்பட்ட தேதிக்குள் இவ்வலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ள செலுத்துச் சீட்டில் கட்டணம் செலுத்தி பெயர் பட்டியலுடன் 5—2—1972-ஆம் தேதிக்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

கு. ஆ. சுவாமிநாதன்,
செயலாளர்.

அரசாங்கத் தேர்வு ஆணையர் அலுவலகம், சென்னை-6.
31-12-1971.

(த. 31)

---

## ஏலம்

### சேலம் நகராட்சி

1972-ஆம் ஆண்டு ஜனவரி 20-ஆம் நாள் வியாழக் கிழமை காலை 11 மணிக்கு சேலம் நகராட்சி கிருஷ்ணராஜேந்திரா தங்கல் மனையின் கீழ்ப்புறமுள்ள 5 கடைகளையும் (கடை எண் 1, 2, 4, 5, 6) 1–4–1972 முதல் 31–3–1975 முடிய உள்ள காலத்திற்குக் குத்தகைக்கு வைத்துக் கொள்ள நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பலரறிய ஏலத்தில் விடப்படும். இதர விவரங்களுக்கு ஆணையரை அணுகவும்.

பெ. ரெங்கசாமி,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
சேலம்,
23–12–1971.
(த. 35)

---

## ஏலம்

### கோவை நகராட்சி

கோவை நகராட்சிக்குச் சொந்தமான 500 மின் கம்பங்களில் 3' × 2' அளவுள்ள போர்டுகள் அமைத்து 1–4–1972 முதல் 31–3–1975 வரை 3 ஆண்டுகளுக்கு விளம்பரம் செய்யும் உரிமையை 31–1–1972-ஆம் தேதி காலை 11–00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும். கட்டவேண்டிய கட்டுத் தொகை ரூ. 100. மற்ற நிபந்தனைகளை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

ஆணையர்,
(த. 57) கோவை நகராட்சி.

---

## ஏல விற்பனை

### காவல் துறை

வாரிசுதார் இல்லாத சொத்துக்கள், 1972-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 29-ஆம் தேதி, சனிக்கிழமை காலை 10–30 மணியளவில் என்னுடைய அலுவலகத்தில் பகிரங்கமான ஏலத்தில் விற்கப்படும். பொருள்களின் பட்டியலை 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ஆம் தேதி வியாழக்கிழமையன்றும், 1972-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28-ஆம் தேதி வெள்ளிக்கிழமையன்றும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

ஆணையர்,
காவல் துறை.

சென்னை-8,
29–12–1971.

### திருத்தம்

1—1—1972 தமிழரசு இதழில் 119-ஆம் பக்கத்தில் 'பல்லாவரம் நகராட்சி' என்று அச்சாகியிருக்கும் தலைப்புக்குப்பதிலாக 'பல்லவபுரம் நகராட்சி' என்று திருத்தி வாசித்துக்கொள்க.

## நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 25–1–72 மாலை 3 மணி வரை கீழ்க் கண்ட வேலைக்குப் பெற்றுக்கொள்ளப்படும்.

| வ. எண். | வேலை விவரம். | முன்வைப்புத் தொகை. |
|---|---|---|
| 1 | தேசிய நெடுஞ்சாலை எண் 4-ல் ஸ்ரீபெரும்புதூர் துணைவழிச் சாலையில் கி.மீ. 0/2-ல் ஒரு பாலம் கட்டுதல். | ரூ. 2,840 |

ஒப்பந்தப் புள்ளிகள் 25–1–1972 அன்றே மாலை 3.15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப் படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள், வரைப்படங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ), தேசிய நெடுஞ்சாலை கோட்டம் எண் 1, இரண்டாவது மாடி குறளகக் கட்டடம் சென்னை 1 அலுவலகத்தில் 17–1–1972 முதல் 24–1–1972 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 25.88 கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெ), தேசிய நெடுஞ்சாலை கோட்டம் எண் 1, சென்னை-1 அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் ''ரெவின்யு டெபாசிட்'' என்ற தலைப் பின் கீழ், கோட்டப் பொறியாளர் (நெ), தேசிய நெடுஞ் சாலை கோட்டம் எண் 1, சென்னை-1 பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது, அல்லது வங்கிப்பொறுப்புறுதி யாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத்தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டா.

**தி. மு. ஆ. ஜெயராமன்,**
மேற்பார்வைப் பொறியாளர் (நெ)

(த.41.)

## குடிநீர் வடிகால் வாரியம்

வேலையின் பெயர்:—வலுவேற்றப்பட்ட கான்கிரீட் குழாய்க்குள் தாங்கும் வண்ணம் வலுவேற்றப்பட்டு கான்கிரீட் பாலம், சென்னை அடையாறு ஆற்றுக்குக் குறுக்கே கட்டுதல்.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், மேலே கூறப்பட்டுள்ள வேலைக்காக, பொதுப் பணித்துறை அல்லது மற்ற அரசுத்துறைகளை பெரிய நிறுவனங்களில் பதிவு செய்து கொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்ததாரர்களிடமிருந்து, தனித் தலைமைப் பொறி யாளர், வீராணம் குடிநீர் வழங்கு திட்டம் மற்றும் கூவம் மேம்பாட்டுத் திட்டம், சென்னை–5 அவர் தம் அலுவலகத்தில் 2—2—1972 மாலை 2-00 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்த வடிவம் .. .. மொத்தத் தொகை.

2. கட்டுத் தொகை .. .. ரூ.10,000.

3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்.. ரூ. 10 மற்றும் விற்பனை களின் விலை. வரி ரூ. 0-37.
4. வேலை முடிக்கவேண்டிய காலம்.. 8 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை '' III Suspense G. Remittance (iii) Other Remittances— TWAD Board Funds'' என்ற தலைப்பில் அரசுக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் பேங் ஆப் இந்தியாவிலோ, மேற்பார்வைப் பொறியாளர், வீராணம் திட்டக் கோட்டம், சென்னை-5. அவர் தம் கணக்கில் செலுத்தவேண்டும், ஒப்பந்தப் புள்ளிப் படிவம், தனித் தலைமைப் பொறியாளர், வீராணம் குடிநீர் வழங்குதிட்டம் சென்னை-5 அவர் தம் அலுவலகத்தில் 17—1—1972 முதல் 1—2—1972 வரை தொகை செலுத்திச் செல்லுச் சீட்டைக் கொடுத்துப் பெறலாம்.

**தனித்தலைமைப் பொறியாளர்.**
குடிநீர் வடிகால்வாரியம்.

(த.51)

## ஏல விற்பனை

பொது (செய்தி மற்றும் மக்கள் தொடர்பு)த் துறையைச் சேர்ந்த எம். எஸ். என். 5637 (1965 மாடல்) ஜீப், 29–1–1972 தேதி 11-00 மணிக்கு மத்திய தொழிற் கூடம், நந்தனம், சென்னை-32 என்ற இடத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

ஏலம் கேட்கக் கருதுபவர்கள் மேற்படி துறையின் அரசு உதவிச் செயலாளர் அவர்களிடம் அனுமதி பெற்று அலுவலகவேலை நேரங்களில் மேற்படி வண்டியைப் பார்வையிடுவதுடன் விற்பனை நிபந்தனைகளையும் தெரிந்து கொள்ளலாம்.

**ஆர். நாகராஜன்,**
இயக்குநர்.

(த.54)

## நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 25—1—1972 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கு பெற்றுக்கொள்ளப்படும்.

| வ. எண். | வேலை விவரம். | முன் வைப்புத் தொகை. |
|---|---|---|
| 1 | தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் (மைசூர் எல்லையிலிருந்து சேலம் கிருஷ்ணகிரி பகுதியில்) (1) கி.மீ. 152/8லும் (2) கி. மீ. 159/2லும் பாலங்களைப் புதுப்பித்துத் திரும்பக் கட்டுதல். | ரூ. 3,650 |

ஒப்பந்தப் புள்ளிகள் 25—1—1972 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள் வரைபடங்கள் முதலிய வற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் எண் 1 இரண்டாவது மாடி குறளகக் கட்டடம் சென்னை-1, அலுவலகத்தில் 17—1—1972 முதல் 24—1—1972 முடிய விற்பனைவரியுட்பட ரூ.51-75 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் எண் 1; சென்னை-1, அதிகார எல்லைக்குட்பட்ட அரசாங்கக் கருவூலத்திலேனும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலைக் கோட்டம் எண் 1, சென்னை-1 பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

**தி.மு.ஆ. ஜெயராமன்,**
மேற்பார்வைப் பொறியாளர்.

(த-46)

## பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—மதுரை மாவட்டம்—உத்தமபாளையம் வட்டம்—கோம்பை—ஒரு காவல் தலைமைசேவகர், ஐந்து காவல் சேவகர் ஆகியோருக்கான இருப்பிடக் கட்டடம் அமைத்தல்.

தமிழக ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற்பார்வைப் பொறியாளர், மதுரை வட்டம், மதுரை-2 அவர்களால் மேற்கண்ட வேலைக்கான முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 2—2—1972 மாலை 3-00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்பட்டு மாலை 4-00 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி தஸ்தாவேஜுகள் 24—1—1972 முதல் 31—1—1972 வரை விற்பனைக்கு கிடைக்கும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.
கட்டுத் தொகை—ரூ. 1,600.
வேலை முடிவுக்கெடு—ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளி தாஸ்தாவேஜுக்கு விலையான ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்) தொகையை அரசினர் கருவூலம் ஒன்றிலோ அல்லது ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவிலோ ''P. W. Remittance III O. R.'' என்ற தலைப்பில், நிருவாகப் பொறியாளர்-பெரியகுளம் கோட்டம், பொதுப்பணித்துறை, பெரியகுளம், அவர்கள் கணக்கில் வரவு செய்யும்படியாகவும், ரூ. 0-75 விற்பனை வரியை '' XII Sales Tax (d) Miscellaneous '' என்ற தலைப்பிலுமாக ஒரே சலானில் செலுத்தப்பெற்ற, சலானைத் தாக்கல் செய்து, ஒப்பந்தப் புள்ளி தஸ்தாவேஜுகள் பெற்றுக்கொள்ளலாம். சலானை தாக்கல் செய்த பிறகே ஒப்பந்தப் புள்ளி தஸ்தாவேஜுகள் வழங்கப்படும்.

சலான்கள் அல்லது ஷெட்யூல் பாங்கின் '' Deposit Call '' ரசீது அல்லது மாநில அரசாங்க செக்யூரிடிகள் அல்லது ஷெட்யூல் பாங்குகளின் டிமாண்ட்டு டிராப்டுகள் அல்லது தேசிய மயமாக்கப்பட்ட 14 பாங்குகளின் உத்தரவாதம் ஆகிய உருவிலேயே கட்டுத் தொகை ஏற்றுக் கொள்ளப்படும். தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்கள், மற்றும் தேசிய சேமிப்பு சர்டிபிகேட்டுகளும் கூட மார்க்கட் மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். மற்ற எந்த வகையில் செலுத்தினாலும் ஏற்கப்படமாட்டாது.

**சி. தேசிகசங்கர்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
(பொ.ப.து.) மதுரை வட்டம், மதுரை-2.

(த.50)

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவுபெற்ற உரிய வகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து எண் 17, சர்.பி.டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 4-2-1972 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்:—சங்கரன் கோவில் புளியங்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டம்—அழுத்த ஏற்ற நிலையத்திற்கு நீரேற்றிகளும் அதன் சாதனங்களும் அளித்தல்—நிர்மாணித்தல்—சம்பந்தமாக.

ஒப்பந்த வகை—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை:—ரூ. 1,500 (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருநெல்வேலி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு:—ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை:—ரூ. 15.56 (விற்பனை வரி உட்பட) (ரூபாய் பதினைந்தும் காசு ஐம்பத்தி ஆறு மட்டும்)

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருநெல்வேலி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து 15/2, பிரசன்ன விநாயகர் கோவில் தெரு, பாளையங்கோட்டை, நெல்லை-2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 31-1-1972 திங்கட்கிழமை மாலை 5 மணிவரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம்,
குடிநீர் வடிகால் வாரியம்.

மதுரை-2,
25-12-1971.
(த.85)

## வனத் துறை

மத்திய கோவை மாவட்டம்

தமிழ்நாடு அரசு ஆளுநருக்காக மத்திய கோவை மாவட்ட வன அலுவலரால் 20-1-1972-ஆம் தேதி மாலை 3 மணி வரை போலாம்பட்டி சரகத்தில் கீழ்க்கண்ட வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வேலை பற்றிய குறிப்புகள்:—

பாதை அமைத்தல், கீழ்க்காணும் தேர்வு செய்யப்பட்ட மரங்களை வெட்டுதல், துண்டுகளாக்குதல், செதுக்குதல், எண்ணிடல், சுமார் மூன்று பர்லாங்கு தூரம் இழுத்து வந்து பின்னர் அவற்றை இருட்டுப்பள்ளம், அலுவலகத்தருகில் உள்ள மரக்கிடங்கிற்குக் கொண்டு வந்து சேர்க்கும் வேலை. போலாம்பட்டி தேர்வு மர வெட்டுக் கப்பு **எண் 1—**

| | மரங்கள். | சுமார் அளவு. (கனமீட்டர்) |
|---|---|---|
| வேங்கை .. .. .. | 44 | 72 |
| தேக்கு .. .. .. | 19 | 38 |
| வெண் தேக்கு .. .. .. | 16 | 25 |
| தடசு .. .. .. | 7 | 7 |
| பில்லமருது .. .. .. | 2 | 3 |
| செலவாகை .. .. .. | 2 | 5 |
| ஈட்டி .. .. .. | 9 | 10 |
| மொத்தம் .. | 99 | 160 |

ஒப்பந்தங்கள் மத்திய கோவை மாவட்ட வன அலுவலரால் அப்போது குழுமியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். இதர விவரங்கள் பெற வேண்டுமெனில் மாவட்ட வன அலுவலர், மத்திய கோவை பிரிவு, கோவை என்ற முகவரிக்கு தொடர்புத் கொள்ளவும்.

**எம். ஏ. அப்துல்கரீம்,**
மாவட்ட வன அலுவலர், மத்தியகோவை.

(த.65)

## நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை

### தூத்துக்குடிக் கோட்டம்

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தூத்துக்குடி (நெடுஞ்சாலை, கிராமப் பணித்துறை) கோட்டப் பொறியாளர் அவர்களால் தூத்துக்குடிக் கோட்டத்திற்குட் பட்ட அரசினர் சாலைகளின் 1972–73-ஆம் ஆண்டு பராமரிப்பு வேலைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் தூத்துக்குடிக்கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் 28—1—1972-ஆம் நாள் பிற்பகல் 2-00 மணி வரை (அலுவலகக் கடிகாரப்படி) பெற்றுக்கொள்ளப்படும். அன்று பிற்பகல் 2-15 மணிக்கு ஒப்பந்தங்கள், ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட ஏஜெண்டுகள் முன்னிலையில் கோட்டப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்த விவரங்களும், குறிப்பிட்ட நமூனுக்களும், நிபந்தனைகளும், கோட்டப் பொறியாளர் அலுவலக மேலாளரிடமிருந்து 17—1—1972 முதல் 27—1—1972-ஆம் தேதி முடிய எல்லா அலுவலக நேரங்களிலும் ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 3·12 (விற்பனைவரி உட்பட) செலுத்தி, விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது. ஒப்பந்தத் தேதியான 28—1—1972 அன்று எக்காரணத்தைக்கொண்டும் ஒப்பந்த நமூனுக்கள் விற்பனை செய்யப்படமாட்டாது.

முன்வைப்புத் தொகைக்கான சான்றுகள் இணைக்கப் படாத ஒப்பந்தங்களும், காலதாமதமாய் வரும் ஒப்பந்தங் களும், கோட்டப் பொறியாளருக்கு மாற்றப்படாத, அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரங்களுடன் வரும் ஒப்பந்தங்கள் தள்ளுபடி செய்யப்படும். அப்படி மாற்றப் பட்ட பத்திரங்களைக் கோட்டப் பொறியாளர் அலுவலகத் தலைமை எழுத்தரிடம் கொடுத்து அதற்கான ரசீதைப் பெற்று அந்த ரசீதை மட்டும் ஒப்பந்தங்களுடன் வேலையின் பெயர் விவரத்துடன் இணைக்கவேண்டும். இது தவிர முன் வைப்புத் தொகைக்காக கொடுக்கப்படுகின்ற வங்கி உத்தர வாதத்துடன் ரிசர்வ் வங்கியின் அங்கீகாரம் பெற்று அவ் விரண்டையும் இணைக்கப்படவேண்டும். அவ்விதம் ரிசர்வ் வங்கியின் அங்கீகாரம் இணைக்கப்படாத ஒப்பந்தங்களும் தள்ளுபடி செய்யப்படும். பரிசுப் பத்திரங்கள் முன் வைப்புத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**என். சுவாமிநாதன்,**
கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராமப் பணித்துறை).

தூத்துக்குடி-2.
(த.36)

## பொள்ளாச்சி நகராட்சி

பொள்ளாச்சி நகர மன்ற மின்துறைக்கு 30 அடி நீளமுள்ள 50 சிமெண்ட் கான்கிரீட் கம்பங்கள் வழங்க மூடி முத்திரை யிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 5–2–1972 மாலை 4 மணி வரை நகரமன்ற ஆணையர் அவர்களால் வரவேற்கப்படு கின்றன. ஒப்பந்தப் புள்ளி யின் நிபந்தனைகள், விவரங்கள் வேண்டுவோர் நகரமன்ற மின் பொறியர், பொள்ளாச்சி அவர் களுக்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

**ஆணையர்,**
(த. 64) பொள்ளாச்சி நகராட்சி.

## அரசினர் ஏர்ஸ்கின் மருத்துவ மனை, மதுரை

மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனையில் பயன்படுத்தப் பட்ட எக்ஸ்ரே பிலிம்களையும், ஹைபோசெல்யூஷனையும் 1972-73-ஆம் ஆண்டு முழுவதும் எடுத் துக் கொள்வதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் வேண்டப்படுகின்றன. படிவத்தின் விலையான ரூ. 5·00ஐ 'XXIII Medical J. Miscellaneous' என்ற தலைப்பிலும், விற்பனை வரி சர்சார்ஜ் 0·20 காசுகள் "XII Sales tax—Receipt under the Sales tax Act. General Sales tax" என்ற தலைப்பிலும், அரசாங்கக் கருவூலத்தில் செலுத்தி அதற்கான ரசீதுகளை மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை முதல் வருக்கு அனுப்பி, படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம். ஒப் பந்தப் புள்ளிகளை மதுரை அர சினர் எர்ஸ்கின் மருத்துவமனை முதல்வருக்கு முத்திரையிடப் பட்ட உறைகளில் 21–2–1972 மாலை 2 மணிக்குள் வந்து சேரும் படி அனுப்பி வைக்க வேண்டும்.

**முதல்வர்,**
அரசினர் எர்ஸ்கின் மருத்துவ மனை, மதுரை.

30–12–1971.
(த. 66)

## மீன் துறை

தமிழ் நாட்டில் உள்ள ஏதாவது பாலிடெக்னிக்கில் பயின்று எல்.எம்.இ. டிப்ளோமா பெற்றவர்களிடமிருந்து சென்னையில் உள்ள மத்திய மீன் துறை பயிற்சி நிலையத்தில் (சென்ட்ரல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஃபிஷரீஸ் ஆபரேடிவ்ஸ்) என்ஜின் டிரைவர் பயிற்சிக்கு அனுப்ப 24–1–1972 பிற்பகல் 3-00 மணிவரை மனுக்கள் கோரப்படுகின்றன. இப்பயிற்சிக் காலம் 48 மாதங்கள் ஆகும். பயிற்சியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 135 வீதம் உதவித் தொகை அளிக்கப்படும். விண்ணப்பதாரர்களில் பிற் பட்ட வகுப்பினர் மற்றும் மீனவ வகுப்பைச் சேர்ந்தவர்கள் 1–7–1972-ல் 28 வயதுக்குட் பட்டும், இதர இனத்தைச் சேர்ந்தவர்கள் 1–7–1972-ல் 25 வயதுக்குட்பட்டும் இருக்க வேண்டும்.

இதுகுறித்து இதர விவரங்கள் வேண்டுவோர் முகவரியிட்ட 25 காசு தபால் தலை ஒட்டிய உறையுடன் "மீன்துறை இயக்குநர், சென்னை-6" என்ற முக வரிக்கு எழுதவும்.

**இயக்குநர்,**
மீன்துறை.

நிருவாக அலுவலகக் கட்டடங்கள்—
தேனாம்பட்டை,
சென்னை-6.
(த. 68)

## காஞ்சிபுரம் நகராட்சி

நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற வரால் தமது அலுவலகத்தில் 25—1—1972 மாலை 4 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வேலையின் பெயர். | வேலையின் தன்மை. ரூ. | வைப்புத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 உடன் தணிக்கை ஆய்வாளர் பிரிவிற்கு இட வசதி செய்ய ஓர் அறை கட்ட. | 10,500 | 525 |
| 2 குமாரி செட்டித் தெருவிலுள்ள தாய்சேய் நல விடுதியைப் பழுது பார்க்க. | 6,700 | 335 |
| 3 ஒலிமுகமதுபேட்டை தாய் சேய் நல விடுதிக் கட்டடத்தை விரிவுபடுத்த. | 9,000 | 450 |
| 4 நகரமன்ற நூற்றாண்டு விழா மண்டபக் கட்டடத்தில் மின்சார ஒயரிங் செய்ய. | 8,000 | 400 |
| 5 நகராட்சி அலுவலகத்தில் மின்சார ஒயரிங் செய்ய. | 5,000 | 250 |
| 6 ஜவஹர்லால் நகராட்சி சந்தையின் பின்புறம் பெண்கள் மல அரைக்குப் பக்கத்தில் 10 கடைகள் கட்ட. | 6,300 | 315 |
| 7 மதங்கீஸ்வரர் கோயில் தெருவிலுள்ள நகராட்சி பயணிகள் தங்கும் விடுதி மனையில் மேலும் இரு அறைகள் கொண்ட பயணிகள் தங்கும் விடுதி ஒன்று கட்ட. | 19,500 | 975 |

த. ஆ. சிவசுப்ரமணியன்,
ஆணையர்.

காஞ்சிபுரம்,
4—1—1972.
(த. 61)

## நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 9—2—1972 மாலை 3 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கு பெற்றுக் கொள்ளப்படும்.

| வேலையின் பெயர். | பிரிவு. | முன்வைப்புத் தொகை. ரூ. |
|---|---|---|
| தே. நெ. எண் 7, சேலம்-திண்டுக்கல் சாலையில் கி.மீ. 206·75-ல் இருந்து 252·20 முடிய பாதையை அகலப்படுத்திப் பலப்படுத்துதல். | சேலம் ... | 1,06,620 |

ஒப்பந்தப் புள்ளிகள் 9—2—1972 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனக்கள், வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலை கோட்டம், சிறப்புக் கோட்டம், சேலம் அலுவலகத்தில் 10—1—1972 முதல் 8—2—1972 முடிய விற்பனை வரியுட்பட 51·75 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

மேற் குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் சேலம் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலை கோட்டம், சேலம் பெயரில் செலுத்திச் செல்லுச்சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டா.

தி. மு. ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.).

(த. 74)

## ஏலம்

பொது (செய்தி மற்றும் மக்கள் தொடர்பு)த் துறையைச் சேர்ந்த எம். எஸ். 5639 ஜீப் 24—1—1972-ஆம் தேதி 12 மணிக்கு தமிழக அரசு தலைமைச் செயலகம், செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9 என்ற இடத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

ஏலம் கேட்கக் கருதுபவர்கள் மேற்படித் துறையின் அரசு உதவி செயலாளர் அவர்களிடம் அனுமதி பெற்று அலுவலக வேலை நேரங்களில் மேற்படி வண்டியை பார்வையிடுவதுடன் விற்பனை நிபந்தனைகளையும் தெரிந்து கொள்ளலாம்.

**ஆர். நாகராஜன்,**
இயக்குநர்.

(த. 76)

## ஒப்பந்தப் புள்ளி

### அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை–20.

மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனைக்கு 1-4-1972-ஆம் தேதி முதல் 30-9-1972-ஆம் தேதி முடிய தேவையான மருந்து வகைகள், அறுவை சிகிச்சைக் கருவிகள், எக்ஸ்ரே மருந்துகள் ஆகியவற்றை ஒப்பந்த முறையில் வாங்குவதற்கான விலைப்பட்டியல் மூடி முத்திரையிடப்பட்ட நிலையில் மருத்துவமனை முதல்வர் (டீன்) அவர்களால் 14-2-1972-ஆம் தேதி மாலை 2-00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகள், விநியோகம் செய்ய வேண்டிய மருந்துகள், கருவிகளின் பட்டியல், ஒப்பந்தப் படிவங்கள் ஆகியவற்றை மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை முதல்வர் அவர்களுக்கு, காசோலை மூலமாகவோ, அல்லது அவர்களது அலுவலகத்தில் நேரிலோ ரூ. 5.20 (ரூபாய் ஐந்தும் காசுகள் இருபது, (படிவத்தின் விலை ரூ. 5.00 விற்பனை வரி, சர்சார்ஜ் ரூ. 0.20) மட்டும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் படிவங்களைக் கோரும் விண்ணப்பத்துடன் சுய முகவரியுடன் கூடிய ரூ. 3·00 மதிப்புள்ள அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட நீண்ட சதுர உறையுடன் அனுப்பப்பட வேண்டும்.

**முதல்வர்,**
அரசினர் எர்ஸ்கின்
மருத்துவமனை, மதுரை.

மதுரை-20,
30—12—1971.

(ந. 77)

## ஏல விளம்பரம்

தருவைக்குளம் சூரன்குடி சாலையில் வைப்பார் கிராமத்தில் பக்கம் மைல் 16/5 உள்ள ஓடு பாலத்தில் 1—4—1972 முதல் 31—3—1973 வரையுள்ள காலத்திற்குச் சுங்க வரி வசூல் செய்யும் உரிமை 23—2—1972-ஆம் தேதி பிற்பகல் 3-00 மணிக்கு விளாத்திகுளம் தாசில்தார் அலுவலகத்தில் வைத்து கோவில்பட்டி கோட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பகிரங்கமாக ஏலம் விடப்படும். கட்டண விவரமும், மற்றும் ஏல நிபந்தனைகளையும் விளாத்திகுளம் தாசில்தார் அலுவலகத்திலும், கோவில்பட்டி கோட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

**து. ஜெயராமன்,**

கோவில்பட்டி, கோட்டாட்சித்
1—1—1972. தலைவர்,

(த. 82)

## ஏல விளம்பரம்

### குடிநீர் வடிகால் வாரியம்

அடியிற்கண்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் சொந்தமான கண்டனம் செய்யப்பட்ட லாண்ட் ரோவர் ஊர்தி ஒன்று உள்ளது உள்ளபடியே 1972-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 14-ம்நாள் (14-2-1972) அன்று கும்பகோணம் பொதுச் சுகாதாரப் பொறியியல் உட்கோட்டம், உதவிப் பொறியாளர் அவர்களால், 6-ஆம் இலக்கமிட்ட கல்யாணராமன் தெருவில் அமைந்துள்ள, பொதுச் சுகாதாரப் பொறியியல் உட்கோட்ட அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

லாண்ட் ரோவர்—ஊர்தி எண். எம். எஸ். ஒய். 1649—1953-ஆம் ஆண்டின் மாதிரி—பெட்ரோல் எஞ்சின்—ரோவர் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டது.

மேற்படி ஊர்தியை அது வைக்கப்பட்டுள்ள இடத்தில் (கும்பகோணம்) அலுவலக வேலை நேரத்தில் சென்று ஆய்வு செய்யலாம். பிணைத் தொகை மற்றும் தேவைப்பட்ட விவரங்களைக் கும்பகோணம் உதவிப் பொறியாளரிடமிருந்து அறிந்து கொள்ளவும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
பொதுச் சுகாதாரப் பொறியியல்
வட்டம், குடிநீர், வடிகால்
வாரியம், எழும்பூர், சென்னை8.

(த. 84)

## ஒப்பந்தப் புள்ளி

### கோபிசெட்டிபாளையம் நகராட்சி

(கோவை மாவட்டம்)

கோபிசெட்டிபாளையம் நகராட்சி MDC 5942 லாரிக்குத் தேவையான சாதனங்கள் (Spare Parts) போட்டு நல்ல நிலையில் பழுது பார்த்துக் கொடுக்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 20—1—1972-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 3 மணி வரை நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 3-30 மணிக்கு வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஏனைய நிபந்தனைகளை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**ஆணையர்,**
கோபிசெட்டிபாளையம்
நகராட்சி.

4-1-1972.
(த. 60)

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரியவகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து எண் 17, சர். பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 2-2-1972 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் :—மதுரை வடிகால் திட்டம்—வைகை வடகரை—முதல் நிலை—நீரேற்று குழாய்ப் போக்கிற்கென 700 மி. மீ. வார்ப்பிரும்பு குழாய்களைப் பதித்தலும் இணைத்தலும்.

ஒப்பந்த வகை :—மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை :—ரூ. 4,250 (ரூபாய் நான்காயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசீய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் மதுரை பொதுச் சுகாதாரப் பொறியியல்துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குறிய கால அளவு :—ஒன்பது மாதங்கள். ஒப்பந்தப் படிவங்களின் விலை:—ரூ. 10·35 (விற்பனைவரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் மதுரை பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து 14, இராமமூர்த்தி தெரு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 31-1-1972 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**

மதுரை-2, பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம்.

(த. 75)

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து எண் 17, சர் பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 4—2—1972 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் : பள்ளப்பட்டி குடிநீர்த் திட்டம்—மூன்றாம் நிலை (நிறைவு) பகிர்வு முறைக்கென வார்ப்பிரும்பு, ஆஸ்பெஸ்டாஸ் குழாய்களைப் பதித்தலும் இணைத்தலும்.

ஒப்பந்த வகை : மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை: ரூ. 1,770 (ரூபாய் ஆயிரத்து எழுநூற்று எழுபது மட்டும்).

இத்தொகை கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசீய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு : ஒன்பது மாதங்கள்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை: ரூ. 10.35 (விற்பனை வரி உட்பட.)

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறைக் கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து பி-15, தில்லைநகர், மெயின் ரோடு திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 2—2—1972 புதன்மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**

மதுரை-2, பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம்
26—12—1971. குடிநீர், வடிகால் வாரியம்.

(த. 83)

**ஒப்பந்தப் புள்ளி**

## குந்தா நீர் மின் திட்டம்

### புந்தம் புதிய டயர்களும் டியூபுகளும் இதர பொருட்களும்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக கீழ்க்காணும் பொருட்கள் அவை இருக்கும் நிலையிலேயே வாங்குவதற்கான மூடி முத்திரையிட்ட தனித்தனி விலையொப்பந்தங்கள் (Tenders) கீழே குறிப்பிட்ட நாட்களில் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. தனித்தனி உறைகளில் சாற்றுக் குறிப்பெண்ணும் முடிவுத்தேதியும் குறிப்பிட்டு மேற்பார்வைப் பொறியாளர் மின் உற்பத்தி வட்டம், நீர்மின் நிலையங்கள்—குந்தா பாலம் அஞ்சல், குந்தா, நீலகிரி என்ற அவர்களது அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

| வரிசை எண்ணும் சாற்றுக் குறிப்பு எண்ணும். | | பொருட்களின் விவரம். | கட்டுத் தொகை. ரூ. | இறுதி நாள். |
|---|---|---|---|---|
| 1 கே.ஜி.சி. | XXXI .. | பெரிய சைஸ் டயர்களும், டியூப்களும். | 1,500 | 16- 2-1972 |
| 2 கே.ஜி.சி. | XXXII .. | உபயோகமற்ற வான்கள், ஜீப்புகள். | 500 | 17- 2-1972 |
| 3 கே.ஜி.சி. | XXXIII .. | ஆயுள்டாங்குகள் .. .. | 200 | 18- 2-1972 |
| 4 கே.ஜி.சி. | XXXIV .. | போக்கோ .. .. | 1,000 | 18- 2-1972 |

மேற்கூறிய ஒப்பந்தச் சாற்றுக் குறிப்புப் பிரதிகள் வேண்டுவோர், பிரதி ஒன்றுக்கு ரூ. 2 (ரூபாய் இரண்டு) வீதம் தலைமைக் கணக்கர், குந்தா நீர்மின் உற்பத்தி வட்டம், குந்தா பாலம் அஞ்சல், நீலகிரி என்ற முகவரிக்குப் பண அஞ்சல் மூலமாகவோ, நேரிலோ செலுத்தி 25-1-1972 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பெற்றுக்கொள்ளலாம்.

இத் தொகையைப் பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர், தமது முகவரியையும், தேவையான பிரதிக்குரிய, சாற்றுக் குறிப்பு எண்ணையும், தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலம்தான் அனுப்பப்படும். அவை உரியவருக்கு அஞ்சல் மூலம் சேரா விட்டால் மின்சார வாரியம் பொறுப்பு அல்ல.

ஒப்பந்தப் படிவங்கள் மாற்றிக் கொள்ளதக்கவை அல்ல. குறித்த காலத்திலும், தேதியிலும் வராத ஒப்பந்தப் புள்ளி நிராகரிக்கப்படும். ஒப்பந்தப் படிவங்களில் விவரிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் படியேதான், மேற்கூறிய பொருட்களின் விற்பனை மேற்கொள்ளப்படும்.

ஒவ்வொரு சாற்றுக் குறிப்பிற்கும் குறிப்பிட்ட கட்டுத் தொகையை ஒப்பந்தப் படிவங்கள் அனுப்பும் போது கண்டிப்பாக கட்டி இருக்க வேண்டும். கட்டுத் தொகையைக் கட்டாத ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முத்திரையிட்ட விலை ஒப்பந்தங்கள் குறிப்பிட்ட முடிவுத் தேதிகளில் மாலை 4 மணி அளவில் விரும்பி வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

**மேற்பார்வை மின் பொறியாளர்,**

*24-12-1971* குந்தா பாலம், நீலகிரி.

(த.71)

## ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்காக, குடிசை மாற்று வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து, வேலையின் பெயரும் ஒப்பந்தப் புள்ளி அனுப்புகிறவரின் பெயரும் உறைமீது எழுதப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம்-6, சென்னை-28 அவர்களால் 28-1-1972 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் மாலை 3-05 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்ததாரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர், கோட்டம்-6, அவர்களால் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | வேலையின் சுமார் மதிப்பு. | ஒப்பந்த வடிவம். | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை மற்றும் விற்பனைவரி. |
|---|---|---|---|---|
| | ரூ | | ரூ. | ரூ. |
| குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், எல்லீஸ்புரம் நேருநகர், பிரிவில் ஐந்து அடுக்குக் குடியிருப்புக்கள் உள்ள ஒன்றில் 40 உள்ள ஒரு பிளாக்கும், ஒன்றில் 20 உள்ள ஒரு பிளாக்கும் கட்டுதல். | 3.30 இலட்சம். | மொத்தத் தொகை. | 4,950 | 15.00 விலை<br>0.53 விற்பனைவரி<br>0.01 சர்சார்ஜ்<br>15.54 |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், மேற்பார்வைப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம்-6 அவர்தம் அலுவலகத்தில் 20-1-1972 முதல் 27-1-1972 வரை எல்லா வேலை நாட்களிலும் காலை 11-00 மணி முதல் மாலை 3-00 மணிவரை ஒப்பந்தப் புள்ளி விலை விற்பனை வரி செலுத்தப்பட்ட செல்லுச் சீட்டைக் கொடுத்துப் பெறலாம்.

வாரியத்திலிருந்து வழங்கப்பட்ட, குறிப்பிடப்பட்ட பாரத்திலேயே ஒப்பந்தங்கள் கொடுக்கப்பட வேண்டும். தாமதமாக அல்லது தவறி விடுகின்ற ஒப்பந்தங்களுக்கு வாரியம் பொறுப்பாளியல்ல.

ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் காரணம் கூறாமல் நிராகரிக்க அதிகாரம் உண்டு.

**ஜே. பிரமாநந்தராவ்,**
மேற்பார்வைப் பொறியாளர், கோட்டம், எண் 6,
குடிசை மாற்று வாரியம்.

(தி. 48)

---

## குடிசைப் பகுதி மாற்று வாரியம்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்றும் வாரியத்திற்காகவும் அதன் சார்பாகவும் திருமங்கலம் (கோயம்பேடு) என்கிற இடத்தில் பல அடுக்குக் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 20-1-1972 அன்று பிற்பகல் 3-00 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிடவேண்டும்.

| வரிசை எண். | பிரிவு எண்ணும் வேலையின் பெயரும். | வேலையின் தோராய மதிப்பு. ரூ. | [illegible] தொகை. ரூ. | விலை (திருப்பித் தர மாட்டாது.) ரூ. |
|---|---|---|---|---|
| 1 | III. 24. குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி8, பி9, பி10 (தரைமட்டத்திற்கு மேல்). | 3,00,000 | 4,500 | 15 மற்றும் விற்பனை வரி. |
| 2 | V. 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி 14, பி15. | 2,30,000 | 3,450 | 15 மற்றும் விற்பனை வரி. |

ஒப்பந்தப் பத்திரங்களைக் கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 10-1-1972 முதல் 19-1-1972 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்த ஒரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்கவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ நிருவாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

**நிருவாகப் பொறியாளர்,**
கோட்டம் எண் 3, சென்னை-10.

தாண்டவராயச் சத்திரம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.
(த. 81)

## குடிசை மாற்று வாரியம்

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்காக, குடிசை மாற்று வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து, வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளி அனுப்புகிறவரின் பெயரும் உறையின்மீது எழுதப்பட்ட, மூடி முத்திரையிட்ட தனித்தனி ஒப்பந்தப் புள்ளிகள், மேற்பார்வைப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம்-6, சென்னை-28 அவர்களால் 28-1-1972 மாலை 3-00 மணிவரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள், அதே நாள் மாலை 3-05 மணிக்கு அந்த சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர், கோட்டம்-6 அவர்களால் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | வேலையின் சுமார் மதிப்பு. ரூ. | ஒப்பந்த வடிவம். | கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை; மற்றும் விற்பனைவரி ரூ. |
|---|---|---|---|---|
| 1. செல்வராஜபுரம், பட்டினப் பாக்கத்தில், குடியிருப்பு பிளாக்குகள் (பல அடுக்கு) ஒன்றில் 30 குடியிருப்புகள் கொண்ட இரண்டு பிளாக்குகள் கட்டுதல். | 3.60 இலட்சம். | மொத்தத் தொகை. | 5,400 | 15·00 விலை<br>0.53 விற்பனை வரி<br>0.01 சர்சார்ஜ்<br>15.54 |
| 2. செல்வராஜபுரம், பட்டினப் பாக்கத்தில், குடியிருப்பு பிளாக்குகள் (பல அடுக்கு) ஒன்றில் 12 குடியிருப்புகள் கொண்ட 3 பிளாக்குகள் கட்டுதல். | 2.16 இலட்சம். | மொத்தத் தொகை. | 3,240 | 15·00 விலை<br>0.53 விற்பனைவரி<br>0. 01 சர்சார்ஜ்<br>15.54 |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், மேற்பார்வைப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம் கோட்டம்-6 அவர்தம் அலுவலகத்தில் 20-1-1972 முதல் 27-1-1972 வரை எல்லா வேலை நாட்களிலும் காலை 11-00 மணி முதல் மாலை 3-00 மணி வரை ஒப்பந்தப் புள்ளி விலை, விற்பனை வரி செலுத்தப்பட்ட செலுத்துச் சீட்டைக் கொடுத்துப் பெறலாம். வாரியத்திலிருந்து வழங்கப்பட்ட குறிப்பிடப்பட்ட பாரத்திலேயே, ஒப்பந்தங்கள் கொடுக்கப்பட வேண்டும். தாமதமாக அல்லது தவறி விடுகின்ற ஒப்பந்தங்களுக்கு வாரியம் பொறுப்பாளியல்ல.

ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் காரணம் கூறுமல் நிராகரிக்க அதிகாரம் உண்டு.

**ஜே. பிரமாநந்த ராவ்,**
மேற்பார்வைப் பொறியாளர், கோட்டம் எண் 6,
குடிசை மாற்று வாரியம்.

(த. 47)



16 1—13-எ

## பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை, தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 25—2—1972 மாலை 3 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

| வேலையின் பெயர். | ஒப்பந்த வகை. | பிணைப்பணம் (செலுத்துச் சீட்டுமூலம் பெற்றுக் கொள்ளப் படும்). | ஒப்பந்தப் பத்திரங் களின் விலை. | விற்பனை வரி. | கால அளவு. |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | |
| 1. நாகப்பட்டினத்தில் மாவட்ட பதிவாளருக்கு அலுவலகங்கள் கட்டுதல் பற்றி. | மொத்தத் தொகை. | 4,000 | 30. (ரூபாய் முப்பது மட்டும்) அரசினர் வங்கியில் ''பொ. ப. து.'' செலுத்துத்தொகை iii மற்றைய செலுத்துத் தொகை எனும் தலைப்பில், நிருவாகப் பொறியாளர், வெண்ணாறு கோட்டம், தஞ்சை அவர்களின் பெயரில் செலுத்தப்பட வேண்டும். | 1.05 (ரூபாய் ஒன்று, காசு ஐந்து மட்டும்) அரசினர் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் ''XII விற்பனை வரி (பி) பற்றுச்சீட்டு மாநில விற்பனைவரிச் சட்டத்தின்கீழ் பொது விற்பனை வரி'' என்ற தலைப்பில் செலுத்தல் வேண்டும். | 10 மாதங்கள். |
| 2. தஞ்சாவூரில் கல்லூரி மாணவர்களுக்கு அரசினர் விடுதி கட்டுதல் பற்றி. | மொத்தத் தொகை. | 4,000 | ரூ. 30 (ரூபாய் முப்பது மட்டும்) அரசினர் வங்கியில் ''பொ. ப. து.'' செலுத்துத் தொகை iii மற்றைய செலுத்துத் தொகை எனும் தலைப்பில் நிருவாகப் பொறியாளர், கல்லணைக் கால்வாய் கோட்டம், தஞ்சை. | 1.05 (ரூபாய் ஒன்று, காசு ஐந்து மட்டும்) அரசினர் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் ''XII விற்பனை வரி (பி) பற்றுச்சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் பொது விற்பனை வரி'' என்ற தலைப்பில் செலுத்தல் வேண்டும். | 10 மாதங்கள். |

ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்க ஆரம்பிக்கும் நாள் 9—2—1972.

28—12—1971

**ஆர். வேணுகோபால்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சை வட்டம், தஞ்சாவூர்.

(த. 69)

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

''தேசிய நெடுஞ்சாலை வேலைகள்'' (மதுரை வட்டம்.)

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தப் புள்ளிகளை மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை அவர்கள் நெ. 11, ஔவையார் தெரு, நரிமேடு, மதுரை-2 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 29-1-1972 (சனிக்கிழமை) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் (அலுவலகக் கடியாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதியன்று பிற்பகல் 3-45 மணிக்குத் திறக்கப்படும்.

| | வேலையின் பெயர். | கட்டுத் தொகை ரூ. | ஒப்பந்த ஷெட்யூல் கிடைக்கும் விலாசம். |
|---|---|---|---|
| 1 | மதுரை-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை-7, கி.மீ. 157—170 சாலையை அகலப்படுத்திப் பலப் படுத்துதல். | 28,900 | கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), மதுரை-2. |
| 2 | சேலம்-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை கி.மீ. 278·6—345·2 சாலையில் உள்ள வளைவுகளைச் சீராக்குதல். | 44,650 | கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) திருச்சி கோட்டம்-2, திருச்சி-1. |
| 3 | சேலம்-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை-7, கி.மீ. 355—375 சாலையை அகலப்படுத்திப் பலப் படுத்துதல். | 48,000 | ஷை |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனைவரி உட்பட ரூ. 20·70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) மதுரை-2, மேலும் கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) திருச்சிக்கோட்ட எண் 2 விலாசத்திலிருந்து 21-1-1972 முதல் 28-1-1972 வரையிலான வேலை நாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவரங்கள், நிர்ணயப் பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

மாற்றிய வடிவமைப்புக்கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத்தொகை டெபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (தேசிய நெடுஞ்சாலை அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இதுதவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும், 12 வருட தேசியத் தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் கியாரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு இரசீதுகளும் கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்கு கியாரண்டிகளைச் சமர்ப்பிக்கும் பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத்தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**பி. ஜெயராமன்,**
மேற்பார்வைப் பொறியாளர்.
(தேசிய நெடுஞ்சாலை)

மதுரை-2.
(ந. 80)

## ஒப்பந்தப் புள்ளி

### வீட்டு வசதி வாரியம்—மத்தியக் கோட்டம்

கீழ்க்கண்ட வேலைகளுக்காக உறையின்மீது வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் எழுதப்பட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 20—1—1972 மாலை 3 மணிக்கு முன்பே கீழே கையொப்பமிட்டவருக்குச் சேருமாறு அனுப்ப வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-05 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | சுமார் மதிப்பு ரூ. | ஒப்பந்த வடிவம் கட்டுத் தொகை. | ஒப்பந்தப் பத்திரத்தின் விலை (திருப்பித்தரப் படமாட்டாது). |
|---|---|---|---|
| 1. பிளவு 'டி' யில், டி.டி. 124ஏ/70-ன்படி 3 எம்.ஐ.ஜி. பிளாக்குகள் கட்டுதல். | 2,22,922 | மொத்தத் தொகை ரூ. 3,345. | 15-ம் விற்பனை வரி. |
| 2. பிளவு 'யி' யில் டி.டி. 124ஏ/70-ன்படி 3 எம்.ஐ.ஜி. பிளாக்குகள் கட்டுதல். | 2,22,922 | மொத்தத் தொகை ரூ. 3,345. | 15-ம் விற்பனை வரி. |
| 3. பிரிவு 'எப்'-ல், டி.டி. 1244/70-ன்படி 2 எம்.ஐ.ஜி. பிளாக்குகள் கட்டுதல். | 1,48,615 | மொத்தத் தொகை ரூ. 2,230. | 10-ம் விற்பனை வரி. |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், மற்றும் இதர விவரங்கள், நிருவாகப் பொறியாளர் (மத்தியக் கோட்டம்), தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அவர்கள் அலுவலகத்தில் 5—1—1972 முதல் எல்லா அலுவல் நாட்களிலும், காலை 11 மணி முதல் மாலை 2 மணி வரை, ஒப்பந்தப் பத்திரத்தின் விலை, விற்பனை வரியுடன் செலுத்திய செல்லுச்சீட்டைக் கொடுத்துப் பெறலாம்.

36, அண்ணாசாலை,
சென்னை-35.

**மே. ஜார்ஜ்,**
நிருவாகப் பொறியாளர் (மத்தியக் கோட்டம்).

(த. 79)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப் பணித்துறை

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கோயம்புத்தூர், நீலகிரி வட்டம், கோயம்புத்தூர் அவர்களால் 9—2—1972 மாலை 3 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்: நீலகிரி மாவட்டம், குளிகல் அரசு உயர்நிலைப்பள்ளிக்குத் துணைக் கட்டடங்கள் கட்டுதல்.

(அ) ஒப்பந்த வடிவம் .. .. மொத்தத் தொகை.
(ஆ) கட்டுத் தொகை .. .. ரூ. 3,000
(இ) ஒப்பந்தப்பத்திரங்கள் விலை .. ரூ. 10·35
(ஈ) வேலை முடிக்க வேண்டிய காலம். 6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், மேலாளர், மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், கோயம்புத்தூர் கோட்டம், கோயம்புத்தூர்—அவர்களிடத்தில் 20—1—1972 முதல் எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் மேலே குறிப்பிட்டுள்ள தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் (தொகை திருப்பித்தரப்படமாட்டாது).

**எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,**
மேற்பார்வைப்பொறியாளர், பொதுப்பணித்துறை,
கோயம்புத்தூர், நீலகிரி வட்டம், கோயம்புத்தூர்.

(த. 73)

## ஒப்பந்தப் புள்ளி

### விவசாயத் துறை

மதுரை, டிராக்டர் பணிக்கூடத்திற்கு, காற்றழுத்தப் பொறி (Carrage Air Compressor) ஒன்று வழங்குவதற்குக் குறிப்பிட்டுள்ள பாரத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், தமிழ்நாடு அரசுக்காகவும், அதன் சார்பாகவும், 5—2—1972 மாலை 5 மணிக்கு முன்னர் கீழே கையொப்பமிட்ட அதிகாரிக்கு வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிப் படிவங்கள் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் வழங்குவதற்கு, பத்திரத்தின் விலை ரூ. 0-50 காசு விற்பனை வரி ரூ. 0-03 காசு மணியார்டர் மூலம் பெற்றுக்கொண்டு வழங்கப்படும்.

5—2—1972 மாலை 5 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பெறப்பட்ட, முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், 7—2—1972 காலை 11 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில், டிராக்டர் பணிக்கூட அலுவலகம், விவசாயக் கல்லூரி அஞ்சல், மதுரையில், பொது மேற்பார்வையாளர், டிராக்டர் பணிக்கூடம், மதுரை அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஒருவரால் திறக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மெசின் மதிப்பில் 10 சதம் தொகையைக் காப்புத் தொகையாகக் கட்ட வேண்டும்.

பொது மேற்பார்வையாளர், டிராக்டர் பணிக்கூடம், மதுரை, அவர்களுக்கு, காரணம் கூறாமல் எந்த ஒப்பந்தத்தையும் ஏற்றுக் கொள்ளவோ நிராகரிக்கவோ உரிமை உண்டு.

**ஆர். அழகர்சாமி,**
பொது மேற்பார்வையாளர்.

(த.72)

## ஒப்பந்தப் புள்ளி

### தேனி-அல்லிநகரம் நகராட்சி

(மதுரை மாவட்டம்)

இந்நகராட்சியின் பொதுச் சுகாதாரப் பிரிவின் உபயோகத்திற்கு 450 லிட்டர் பினையல் வழங்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 28—1—1972-ஆம் தேதி மாலை 4 மணி வரை நகராட்சித் தனி அலுவலர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். வந்துள்ள ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஏனைய விவரங்கள் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

சா. முகம்மது இப்ராஹிம், பி. ஏ.
தனி அலுவலர்.

(த. 59)

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

சாத்தூர்க் கோட்டம்

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பிலும் அவரது கட்டளை ஆணையின்படியும் மேற்கு இராமநாதபுரம் நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறைக் கோட்டப் பொறியாளர், சாத்தூர் அவர்களால் 1972—73-ஆம் ஆண்டு வருடாந்திர அரசு சாலைகள் பராமரிப்பு வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் சாத்தூர் கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் 9—2—1972-ஆம் நாள் புதன்கிழமை பிற்பகல் 3-00 மணி வரையில் (அன்னாரது அலுவலகக் கடியாரப்படி) பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 3-15 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் அல்லது ஒப்பந்ததாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும்.

ஒப்பந்த விவரங்களும் குறிப்பிட்ட நமூனுக்களும் நிபந்தனைகளும் கோட்டப் பொறியாளர் அலுவலக மேலாளர் அவர்களிடமிருந்து அலுவலக நேரங்களில் 24—1—1972 முதல் 8—2—1972 வரை (விடுமுறை நாட்கள் தவிர) ஒன்று ரூ. 3·11 வீதம் (விற்பனை வரி உட்பட) செலுத்தி விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். இந்தப் பணம் எக்காரணத்தை முன்னிட்டும் 8—2—1972-க்குப் பின்னல் விற்பனை செய்யப்பட மாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிகளில் உறையின் மேல் ஒப்பந்ததாரரின் முழு முகவரியுடன் கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை, கிராமப் பொறியியல் பணித்துறை, மேற்கு இராமநாதபுரம் கோட்டம் (இருப்பு) சாத்தூர் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

வேலைகளின் விவரங்களையும் அவ்வேலைக்காக செலுத்தப்பட வேண்டிய முன்வைப்புத் தொகையும் இவ்வலுவலகத்திலிருந்து பின்னர் அறிவிக்கப்படும். முன் வைப்புத் தொகை இக்கோட்டத்தின் எல்லைக்குட்பட்ட ஏதாவது ஒரு அரசினர் கருவூலத்தில் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின் கீழ் செலுத்தி அதற்கான செல்லுச் சீட்டை ஒப்பந்தப் புள்ளிகளோடு இணைத்து அனுப்ப வேண்டும். அப்படி இணைக்கப்படாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

கோட்டப் பொறியாளர்,
(நெ.கி.ப.) சாத்தூர்க் கோட்டம்.

(த. 63)

## ஒப்பந்தப் புள்ளி

### திருப்பூர் நகராட்சி நடுவர் நியமனம்

இந்த நகராட்சியில் நகரமைப்புத் திட்டம் அனுமதிக்கப்பட்டிருப்பதால் நடுவர் பணியாளர் ( Arbitrator) தேவைப்படுகிறது. ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகள், கோட்டாட்சித் தலைவராகப் பணியாற்றியவர்கள் ஆகியோர் நியமனத்திற்குத் தகுதி வாய்ந்தவர்கள். செய்பணிக்கு ஊதியம் மொத்தத் தொகையாக வழங்கப்படும்.

21-1-1972-க்கு முன்னர், கீழே கையொப்பமிட்டவருக்கு மனுக்கள் அனுப்ப வேண்டும்.

நிர்வாகப் பொறுப்பாளர்.

(த.62)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

பொதுப்பணி பணிக்கூடங்கள் மற்றும் ஸ்டோர்கள்.

டீசல் எஞ்ஜினால் ஓடக்கூடிய கான்கிரீட் மிக்சர் சாய்த்துக் கொட்டக்கூடிய டைப் 10/7 CAP-10 Nos. வழங்குவதற்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், கீழே கையொப்பமிட்டவரால், 28-1-1972 மாலை 1-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. தேவையான ஒப்பந்தப் புள்ளி விவரம் மற்றும் நிபந்தனைகள் ஆகியவைகளைகீழேகையொப்பமிட்டவரின் நேர்முக உதவியாளரிடமிருந்து கட்டணமின்றிப் பெறலாம்.

எஸ். சச்சிதானந்தம்,
பொது மேற்பார்வையாளர்,
பொதுப்பணிக் கூடங்கள்,
மற்றும் ஸ்டோர்கள், சென்னை-1.

(த.42)

## வேலைவாய்ப்பு

### சானார்பட்டி ஊராட்சி ஒன்றியம்

சிலுவத்தூர் கிராமிய மருந்தகம்

சானார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிலுவத்தூர் கிராமிய மருத்துவ மனையில் கிராமிய மருத்துவராகப் பணியாற்ற விருப்பமுள்ள "ஏ" கிளாஸ் பிராக்டீஷனர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விதிகளின்படி உரிய அரசினர் மான்யம் ரூ. 100-ம், அத்துடன் 50 சதவிகித ஊராட்சி ஒன்றிய மான்யம் ரூ. 50-ம் ஆக ரூ. 150 வழங்கப்படும்.

எல் வி. சுகதேவ்,
ஆணையர்.

சானார்பட்டி,
20-12-1971.

(த.86)

அரசு மருத்துவ நிறுவனம். சென்னை மாநகர், காச நோய் சேனடோரியம், தாம்பரம் ஆகியவற்றில் 1972—73-க்கு பயன்படுத்தப்பட்ட எக்ஸ்ரே பிலிம்கள், சேதமான ஹைபோசொலுசன் ஆகியவற்றை வாங்கி அகற்றுதல்.

அரசு மருத்துவ நிறுவனம், சென்னை மாநகரம், காசநோய் சேனடோரியம், தாம்பரம் ஆகியவற்றில், 1972 ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் அல்லது ஒப்பந்தம் அங்கீகரிக்கும் தேதியிலிருந்து 1973 மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி வரை, பயன்படுத்தப்பட்ட எக்ஸ்ரே பிலிம்கள், சேதமான ஹைபோ சொலுசன் ஆகியவற்றை வாங்கி அகற்றுவதற்கு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தலைமைக் கணக்கு அலுவலர், கல்லூரி கல்வித் துறை இயக்குநர் அவர்தம் அலுவலகத்தில், 1972 பிப்ரவரி 26-ஆம் தேதி மாலை 2-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகளின் பிரதி, தேவையான பொருட்களின் அட்டவணை, ஒப்பந்தப் புள்ளிப்பத்திரம் ஆகியவற்றைக் கல்லூரிக் கல்வித்துறை இயக்குநர், சென்னை-5 அவர்தம் அலுவலகத்திற்கு மனுச்செய்து பெறலாம். ஒப்பந்தப் பத்திரத்தின் விலை ரூ. 5-ம் விற்பனை வரிக்குத் தனியாக 3½ சத வீதமும், ரிசர்வ்பாங்க் ஆப் இந்தியாவிலோ அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் எந்தக் கிளையிலோ அல்லது ஏதேனும் அரசுக் கருவூலத்திலோ, தமிழ்நாடு அரசின் கணக்கில் முறையே,

"XXIII Medical—J. Miscellaneous—Director of Medical Education."

"XII. Sales Tax—b. Receipts under the State Sales Tax Act—General Sales Tax."

என்ற தலைப்பின்கீழ் செலுத்த வேண்டும். ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவில் செலுத்தியிருந்தால், உண்மை சலான் கொடுக்கப்பட வேண்டும். கருவூலத்தில் செலுத்தியிருந்தால், செலான் நம்பரும், தேதியும், செலுத்திய தொகையும், ஒப்பந்ததாரரின் பெயரும், தொகை செலுத்தப்பட்ட வங்கி அல்லது கருவூலத்தின் பெயரும், மனுவில் குறிப்பிட்டுப் பெறலாம். எச்சூழ்நிலையிலும் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

ஒவ்வொரு ஒப்பந்தத்துடனும், 1971-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 1-ஆம் தேதிக்குப்பின் தாசில்தார் கையொப்பமிட்ட, ஒப்பந்தம் கொடுக்கப்படும் சாமான்களின் மதிப்பு ரூ. 10,000க்கு மேற்பட்டால் வருமானவரி பாக்கியில்லாமல் செலுத்தியதற்குரிய அத்தாட்சியும், ரூ. 1,000-க்கு மேற்பட்டால் விற்பனைவரி கட்டிமுடித்த அத்தாட்சியும், தேசிய இனச் சான்றும், அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் அளித்த அத்தாட்சியின் உண்மை நகலும் ஒப்பந்தத்துடன் வைத்து அனுப்ப வேண்டும்.

**ஆர். பசுபதி,**
தலைமைக் கணக்கு அலுவலர்,
மருத்துவக் கல்வித்துறை
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-5.

(த.78)

வேலைவாய்ப்பு பயிற்சித்துறை
சென்னை-5.

**1961 வேலை வாய்ப்புச் சட்டத்தின் கீழ் வேலை கற்றுக் கொடுக்கும் பயிற்சி.**

வேலை கற்பவர் சட்டம் 1961-ன் ஆதிக்க வரம்பின்கீழ் இன்ஜினியரிங், கெமிக்கல்ஸ், டெக்ஸ்டைல்ஸ், பிரிண்டிங், கேட்டரிங் ஆகிய 195 வகைத் தொழிற்சாலைகளும், 56 தொழில்களும் வேலை கற்றுக் கொடுக்கும் பயிற்சிக்காக இதுவரை நியமிக்கப்பட்டுள்ளன. வேலை கற்றுக்கொடுக்கும் பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வசதியுள்ள நிறுவனங்கள் வேலை கற்பவர் சட்டம், பிரிவு 8 (3)இன் படி வேலை கற்றுக் கொடுப்பது பற்றி, மாநில ஆலோசகர் குறிப்பிடும் எண்ணிக்கையளவில் வேலை கற்பவர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளிக்க வேண்டும். பயிற்சிபெற வேண்டிய கால அளவு பெரும்பாலான தொழிலில் மூன்று ஆண்டுகளாக உள்ளது. வேலை கற்றுக் கொள்ளும் பயிற்சிக் காலத்தில், வேலை கற்பவர்களுக்கு வேலை கற்றுக் கொடுக்கும் விதிகளில் குறிப்பிட்டுள்ள குறைந்த அளவுத் தொகைக்குக் குறையாமல் உதவித் தொகை வழங்கப்படும். தொழிற்பயிற்சி நிறுவனங்களிலிருந்து, தேசியத் தொழில் சான்றிதழ் தேர்வு எழுதி, வெற்றி பெற்றவர்களைப் பொறுத்த வரையில், வேலை கற்றுக்கொள்ளும்பயிற்சிக் காலத்தில் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்ற கால அளவை எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ளப்படும். குறைந்த பட்சம் கல்வித் தகுதி மெட்ரிக்குலேசன் தேர்வுக்கு 2 வகுப்புகள் குறைவாக அல்லது அதற்குச் சமமாகத் தேர்வு பெற்றிருக்க வேண்டும். குறைந்த அளவு வயது 14 ஆக இருக்க வேண்டும்; ஆனால் வயதிற்கு உயர்ந்தபட்ச வரம்பு இல்லை; வேலை கற்றுக் கொடுக்கும் விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ள உடல்தரமும் பெற்றிருக்க வேண்டும்.

அடுத்த பயிற்சி பிப்ரவரி மார்ச்சு 1972-ல் சேர்த்துக் கொள்ளப்படும். தேசியச் சான்றிதழ் தகுதி பெற்றுள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களின் முன்னாள் பயிற்சியாளர்களும் தேவையான தகுதி பெற்றுள்ள மற்றவர்களும், தங்கள் வகைக்கேற்ப மாவட்ட வேலை வாய்ப்பு தேடித்தரும் அலுவலர் அவர்களையோ அல்லது தொழிற்பயிற்சி நிறுவனங்களின் முதல்வரையோ அணுக வேண்டுமென்று இதன் மூலம் அறிவுரை கூறப்படுகிறது. இவ்வாறு செய்தால் அவர்கள் வேலை காலியுள்ள அல்லது வேலை காலியாகும் நிலையில் உள்ள நிறுவனங்களுக்கு வேலை கற்றுக் கொள்ள விரும்புகின்றவர்களை வேலை கற்றுக் கொடுக்கும் பயிற்சிக்காக அனுப்பி வைக்க ஆவன செய்வார்கள்.

**இயக்குநர்,**
மற்றும் வேலை கற்றுக்கொடுப்பது
பற்றிய மாநில ஆலோசகர்,
வேலைவாய்ப்புப் பயிற்சி.

(த.70)

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணா சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-2.